# உதயன்

31 °C I °F
தெளிவான
வானம்

சுடர் 30 | கதிர் 294 | வள்ளுவர் ஆண்டு 2046 | ஆவணி 30, புதன்கிழமை 16.09.2015


## திலீபனின் நினைவு

யாழ்ப்பாணம், செப். 16
திலீபனின் நினைவு நாள் நேற்று செவ்வாய்க்கிழமையே ஆரம்பமாகியது. திலீபனின் நினைவு நேற்றுமுன்தினம் ஆரம்பமாகியதாக, உதயனில் நேற்று வெளியான செய்தி தவறானதாகும்.

பக்கம் 24.....

# அதிகாரப் பகிர்வுக்கு புதிய அரசமைப்பு

## புதுடில்லியில் ரணில் தெரிவிப்பு

புதுடில்லி, செப்ரெம்பர் 16
புதிய அரசமைப்பொன்றின் மூலம் ஒன்றிணைந்த இலங்கைக்குள் எவ்வாறு அதிகாரத்தைப் பகிர்ந்தளிப்பது என்பது தொடர்பில் ஆராய்ந்து வருவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதுடில்லியில் தெரிவித்துள்ளார்.
3 நாள் பயணமாக இந்தியா சென்றுள்ள ரணில் விக்கிரமசிங்க நேற்று முற்பகல் அந்த நாட்டுப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசினார்.
புதுடில்லியில் உள்ள பிரதமரின் ஹைதராபாத் இல்லத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், தமிழக மீனவர்கள் பிரச்சினை, இலங்கை ஐ.நா மனித உரிமைகள் நடவடிக்கைகள், இரு தரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு முக்கிய அம்சங்கள் பற்றி விவாதிக்கப்பட்டதாக இந்தியப் பிரதமர் அலுவலகச் செய்திகள் தெரிவிக்கின்றன.
இதனையடுத்து இரு நாட்டுப் பிரதமர்களும் பங்



பக்கம் 24.....

## விசாரணை அறிக்கைக்கு உரிய பதில் வழங்கப்படும்

### ஆணையாளரிடம் இலங்கை உறுதி

கொழும்பு, செப். 16
ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்தால் இன்று வெளியிடப்படவுள்ள விசாரணை அறிக்கைக்கு உரிய பதில் அளிக்கப்படும் என்று மனித உரிமைகள் ஆணையாளருக்கு இலங்கை அரசு உறுதியளித்துள்ளது.
இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கை

பக்கம் 24.....

## இலங்கை பொறுப்புக் கூறினால் அது உலகுக்கு முன்மாதிரியாகும்

### ஐ.நாவின் நிபுணர் நேற்றுத் தெரிவிப்பு



ஜெனிவா, செப்.16
இலங்கை பொறுப்புக்கூறல் விடயங்களின் போது அடிப்படைக் கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டும் என ஐ.நாவின் மனித உரிமைகள் நிபுணர் பாப்லோ டெ கெரெய்ப் வலியுறுத்தியுள்ளார்.

பக்கம் 23.....

## ஒக்ரோபரில் யாழ்.வருகிறார் மைத்திரிபால

யாழ்ப்பாணம், செப். 16
சர்வதேச சிறுவர் தின நிகழ்வின் தேசிய நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
யாழ்.மாவட்டச் செயலகத்தில் அரச அதிபர் ந.வேதநாயகன் தலைமையில், மாதாந்த சிறுவர் அபிவிருத்தி தொடர்பான கலந்

பக்கம் 23.....

## தெளிவில்லாத நிலையில் போர்க்குற்ற விசாரணை

பக். 16

## 2016 ஆம் ஆண்டில் எரிக்கும் வெயில்



12

# சர்வதேசப் பங்களிப்புடன் ஐ.நாவின் பரிந்துரைகளை செயற்படுத்த அழுத்துங்கள்

## பிரி. வெளிவிவகார அமைச்சரிடம் சுமந்திரன் எம்.பி வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், செப். 16
சர்வதேச ஈடுபாட்டுடன், ஐ.நா. விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று, பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார்.
இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஜெனிவாவில் இடம்பெற்றுள்ளது. ஜெனிவா மனித உரிமைகள் அமர்வில் பங்கேற்கச் சென்றுள்ள, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், பிரிட்டனின் வெளியுறவு மற்றும் பொதுநலவாய இராஜாங்க அமைச்சர் ஹுகோ சுவையரோடு சந்திப்பு நடத்தினார். இந்



தச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.
இலங்கையில் பொறுப்புக்கூறல் சம்பந்தமாக ஏற்படுத்தவுள்ள சர்வதேசப் பொறிமுறைகளிலும் முழுமையான சர்வதேச ஈடுபாடு இருக்க வேண்டும் என்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்

பக்கம் 24.....

# இலங்கையில் தமிழ் மக்கள் கௌரவமாக வாழவேண்டும்

## வழியை ஏற்படுத்துமாறு ரணிலிடம் மோடி கோரிக்கை

புதுடில்லி, செப். 16
இலங்கையில் தமிழர்கள் கௌரவமாக வாழ வழிவகை செய்ய வேண்டும் என ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளேன்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி.
இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசிய பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அங்கு மேலும் கூறியதாவது:-
இலங்கைப் பிரதமரையும் அவருடன் வந்திருக்கும் குழுவினரையும் இந்தியாவுக்கு வரவேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இலங்கைத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற்றமைக்கு எனது வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.
அவர், பிரதமராக பதவியேற்ற பின்னர் முதல் வெளிநாட்டுப் பயணத்துக்கு இந்தியாவை தேர்வு செய்ததில் பெருமிதம் கொள்கிறேன். ரணில் முதல்

பக்கம் 24.....

## இலங்கை-இந்தியா இடையே நேற்று 4 ஒப்பந்தங்கள்

கொழும்பு, செப். 16
பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்திய பயணத்தில் இரு நாடுகளுக்குமிடையே நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.
பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - இந்தியப் பிரதமர்

பக்கம் 24.....

# ஐ.நா. பொதுச் சபையில் ஜனாதிபதி விசேட உரை

## எதிர்வரும் 30ஆம் திகதி நிகழ்த்துகிறார்

கொழும்பு, செப்.16
அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்க உள்ளார்.
ஐக்கிய நாடுகள் அமைப்பின் 70ஆவது பொதுச் சபைக் கூட்டம் நாளை அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் அமைந்துள்ள அமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.
இந்தக் கூட்டத்தொடரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன 30ஆம்

பக்கம் 24.....

## வித்தியாவின் சடலத்திலிருந்த திரவம் மரபணுச் சோதனைக்கு

யாழ்ப்பாணம், செப். 16
புங்குடுதீவு மாணவி கூட்டு வன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில், மாணவியின் சடலத்தில் இடது பக்கக் கண்ணுக்கு அருகாக இருந்து எடுக்கப்பட்ட விந்து எனச் சந்தேகிக்கப்படும் திரவத்தை மரபணுப் பரிசோதனைக்கு அனுப்ப நீதிமன்று நேற்றுப் பணித்துள்ளது.
சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கமராவுடன் கூடிய கையடக்கத் தொலைபேசி, மடிக்கணினி, ரப் என்பனவற்றைப் பரிசோதனைக்கு அனுப்பிப் ஒளிப்படம், வீடியோ எடுக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி ஆராயவும் நீதிமன்று நேற்றுக் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குப் பணித்துள்ளது.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் எஸ்.லெனின்

பக்கம் 24.....

# மங்களவின் ஜெனிவா உரை இனிப்புத் தடவிய பண்டம்

## கூறுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

யாழ்ப்பாணம், செப். 16
வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர வின் ஜெனிவா உரை இனிப்புத் தடவிய பண்டம். அந்த உரையில் - அறிக்கையில், சொல்லப்பட்ட விடயங்களை இந்த அரசு நடை முறைப்படுத்தினால், தென்னிலங்கையில் இரத்த ஆறு ஓடும் நிலை ஏற்படக்கூடும். இவ்வாறு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

நீர்வேலியில் உள்ள கூட்டமைப்பின் அலுவலகத்தில் நேற்று மதியம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
ஜெனிவாவில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர நேற்று (நேற்று முன்தினம்) நீண்ட உரை

பக்கம் 24.....






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையினரைக் காப்பாற்ற நாடாளுமன்றில் தீர்மானம்

## கொண்டுவரப்படும் என்கிறார் உதய கம்மன்பில

ஜெனிவா, செப்.16
ஐ நா மனித உரிமைகள் சபையில் இலங்கை இராணுவத்தினர் மீது குற்றம் சுமத்தப்படுமாயின், அவர்களைக் காப்பாற்ற நாடாளுமன்றத்தில் தனிநபர் தீர்மானம் கொண்டுவரப்படும் என பவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் நேற்று ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்துள்ளதாவது:-
இலங்கையின் இறுதிக்கட்டப்போரின் போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள அறிக்கை இன்று வெளியாகவுள்ளது.
இந்த அறிக்கையில் கண்டறியப்பட்டுள்ள விடயங்கள் மிகவும் பாரதூரமானவையாக இருக்கின்றன என்று ஐ. நா. மனித உரிமைகள் சபையின் ஆணையர் நேற்று முன்தினம் தெரிவித்திருந்தார்.



இன்று வெளியாகும் அறிக்கையில் படையினருக்கு எதிராக குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்டால், இராணுவத்தினரின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி அவர்களைக் காக்கும் நோக்கில் தனிநபர் தீர்மானமொன்று நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும்.
இவ்வாறானதொரு தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டால், போரில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.
சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கள–முஸ்லிம் கலவரம் ஏற்பட்டபோது குற்றஞ்சாட்டப்பட்ட பொலிஸ் மற்றும் இராணுவத்தினரைக் காப்பாற்றுவதற்கு இப்படியான தீர்மானமொன்றும், பின்னர் 1983ஆம் ஆண்டு கலவரங்கள் ஏற்பட்டபோதும் இராணுவத்தினரைக் காப்பாற்ற ஐக்கியத் தேசிய கட்சி அரசின் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன என்றும் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.(ற–வ)

# நீண்ட காலத்துக்குப் பின்னர் பறவைக்குளம் புனரமைப்பு



யாழ்ப்பாணம், செப்.16
நீண்டகாலத்தின் பின்னர் திருநெல்வேலி பறவைக்குளம் புனரமைக்கப்பட்டு வருகின்றது. வடக்கு மாகாண விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. யாழ்ப்பாணம் திருநெல்வேலிப் பகுதியில் சிவன், அம்மன் ஆலயங்கள் என இரு ஆலயங்களை அருகருகே கொண்டு வயல் மற்றும் இயற்கை மரங்கள் நிறைந்த பகுதியில் அமைந்துள்ள பறவைக்குளம் நீண்டகாலமாக புனரமைப்பின்றி சிதைவடைந்தது. பலரும் அதைச் சுட்டிக்காட்டியதை அடுத்து வடமாகாண விவசாய அமைச்சின் 4 மில்லியன் ரூபா நிதி ஒதுக் கீட்டில் குறித்த குளம் புனரமைக் கப்படுகின்றது. எதிர்காலத்தில் இதன் சுற்றுப்புறச் சூழலும் அழகுபடுத்த நடவடிக்கை மேற்கோள்ளப் படவுள்ளது என்று வட மாகாண விவசாய அமைச்சர். பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார். (ற–101)

# துட்டகைமுனு மன்னன் போன்று செயற்பட தவறியது மகிந்த அரசு

## சாடுகின்றார் டியூ குணசேகர

கொழும்பு, செப்.16
30 வருட கால போர் நிறைவடைந்ததன் பின்னர் அப்போதைய அரசு, மாறுபட்ட மக்களின்மணங்களைக் குணப்படுத்தத் தவறிவிட்டது என்று இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் டியூ. குணசேகர தெரிவித்துள்ளார்.



துட்டகைமுனு மன்னன், எல்லாள மன்னனை தோற்கடித்தபின்னர் இனங்களின் மனதை குணப்படுத்தினான் என்று அவர் சுட்டிக்காட்டினார்.
எனினும், 30 வருட போர் முடிவுக்கு வந்த பின்னர், துட்டகைமுனு மன்னனைப்போல், மகிந்த இனங்களின் மனதை குணப்படுத்தியிருந்தால், மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருக்காது என்றும் கூறினார்.
இது குறித்து தொடர்ந்து குறிப்பிட்ட அவர், துட்டகைமுனு மன்னன், எல்லாள மன்னனை தோற்கடித்த பின்னர், இனங்களுக்கு இடையில் ஒற்றுமையை ஏற்படுத்தியதாகவும், இதன்போது எல்லாள மன்னனுக்கு நினைவு தூபியை எழுப்பி அதற்கு அனைவரும் மரியாதை செலுத்த வேண்டும் என்ற [illegible]டத்தை நடைமுறைப்படுத்தினான் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.
எனினும் விடுதலைப் புலிகளுடனான போரை நிறைவுக்கு கொண்டு வந்த மகிந்த அரசு, அவ்வாறான இணக்கப்பாட்டை ஏற்படுத்த தவறிவிட்டது என்றும் குற்றம் சுமத்தினார். (ற)

# அறுகம்பே பாலத்தில் சடலம் மீட்பு

அம்பாறை, செப்.16
பொத்துவில் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அறுகம்பே பாலத்தினுள் ஆணின் சடலமொன்று நேற்று செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளது.
குறித்த சடலம் ஹிக்கடுவையைச் சேர்ந்த இலண்டன் பிரஜையான விசாந்த சுப்பரமணியம்(வயது–24) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது என்று பொத்துவில் பொலிஸார் தெரிவித்தனர்.
குறித்த நபர் நேற்று திங்கட்கிழமை பொத்துவில் அறுகம்பையிலுள்ள 'லோங்க் பீச்' எனும் சுற்றுலா விடுதியின் இரண்டாம் இலக்க அறையில் இவர் தனியாகவே தங்கியிருந்துள்ளார். இவர் தங்கியிருந்த அறையிலிருந்து கைக்கடிகாரம் ஒன்றும் இலங்கைப் பணம் 41 ஆயிரம் ரூபாவும் 10 கிராம் அபின் போதைப்பொருளும் கொமர்சியல் வங்கி விசா கிரடிற் கார்ட்டும் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கண்டெடுக்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொத்துவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# நகை கடன்வாங்கி வெளிநாடு பறந்தவர் நல்லூரில் சிக்கினார்

யாழ்ப்பாணம் செப்.16
திருப்பி தருவதாக கூறி குடும்பப் பெண் ஒருவரிடம் தங்க நகைகளை வாங்கி பின்னர் அவற்றை திருப்பிக் கொடுக்காமல் வெளிநாட்டுக்குச் சென்ற ஒருவர் இம்முறை நல்லூர் திருவிழாவுக்கு வந்தபோது பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.
2013ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதமளவில் கொழும்பு, வெள்ளவத்தைப் பிரதேசத்தில் குடும்பப் பெண்ணொருவரிடம்உயரப்புலம், ஆனைக்கோட்டையை சேர்ந்த பிராமணரொருவர் 10 பவுண் பெறுமதியான நகைகளை திருப்பி தருவதாக தெரிவித்துப் பெற்றுள்ளார். எனினும் குறித்த நகைகளை திருப்பிக் கொடுக்காமல் அவர் நாட்டை விட்டு வெளியேறி பிரான்ஸ் சென்றுள்ளார்.
இந்தநிலையில் தற்போது நாடு திரும்பியிருந்த பிராமணர் கடந்த வாரம் நல்லூர் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக அவர் ஆலயத்துக்கு வந்துள்ளார். அதேசமயம் நகைகளைக் கொடுத்த குடும்பப்பெண்ணும் நல்லூர் திரு விழாவுக்கு வந்துள்ளார். சந்தேகநபரை கோயிலில் கண்ட பெண் உடனடியாக இதுபற்றி சாதுரியமாக பொலிசாருக்கு தெரியப்படுத்தியுள்ளார்.
அதையடுத்து பொலிசாரும் விரைந்து செயற்பட்டு சந்தேகநபரை கைது செய்ததுடன் அவரை கடந்த 7ஆம் திகதி யாழ். நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினர். நீதிமன்றில் சந்தேகநபர் மறு தவணைக்குள் முழு நகைகளையும் கொடுப்பதாக உறுதியளித்ததையடுத்து அவரை கடுமையாக எச்சரித்த நீதவான் பெ.சிவகுமார் 5 இலட்சம் பெறுமதியான இரண்டு ஆட்பிணையாளிகளின் பிணையில் விடுவித்ததுடன் சந்தேகநபரின் கடவுச்சீட்டையும் நீதிமன்றில் ஒப்படைக்குமாறு கட்டளையிட்டிருந்தார்.
வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சந்தேகநபர் முழு நகைகளையும் புதிதாக வாங்கி குறித்த பெண்ணிடம் ஒப்படைத்தார். அதனைத்தொடர்ந்து அவரை கடுமையாக எச்சரித்த நீதிமன்றம் கடவுச்சீட்டையும் விடுவித்தது.(ற–103)

# கொட்டதெனியாவ சிறுமியுடைய புகைப்படங்களை வெளியிடாதீர்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவுறுத்து

கொழும்பு, செப்.16
கம்பஹா கொட்டதெனியாவ பகுதியில் சடலமாக மீட்கப்பட்ட ஐந்து வயது சிறுமியின் புகைப்படங்கள் மற்றும் காணொலிகளை ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியிடுவதை தவிர்க்குமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.
கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த வேளை காணாமல் போன 5 வயது சிறுமி ஞாயிற்றுக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்டார்.
குறித்த சிறுமியின் உடைகள் கலைந்த நிலையில் வீட்டிலிருந்து சுமார் 300 மீற்றர் தூரத்திலிருந்து சடலமாக மீட்கப்பட்டார். [illegible] சம்பவம் நடந்த வேளை, வீட்டில் சிறுமியின் பெற்றோர், சகோதரன், தாத்தா மற்றும் பாட்டி ஆகியோர் இருந்த நிலையில் வீட்டின் ஜன்னலின் ஊடாக சிறுமி கடத்திச் செல்லப்பட்டிருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டிருந்தனர்.
உடற்கூற்றுப் பரிசோதனைகளிலிருந்து சிறுமி பாலியல் துஷ் பிரயோகப்படுத்தப்பட்டு கழுத்து நெரித்துக் கொலை செய்யப் பட்டுள்ளார் என்று தெரியவந்துள்ளது. குறித்த சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
இந்த நிலையிலேயே சிறுமியின் புகைப்படங்கள் மற்றும் காணொலிகளை ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் வெளியிடுவதை தவிர்க்குமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது.
இதேவேளை, 2010ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 16ஆம் திகதி பிறந்த குறித்த சிறுமியின் 5ஆவது பிறந்த தினம் இன்றாகும்.
அதேவேளை, சிறுமி படுகொலை செய்யப்பட்டமையைக் கண்டித்து நேற்று கொட்டதெனியாவ பகுதியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
சிறுமியின் கொலையுடன் தொடர்புடைய குற்றவாளியை கைது செய்து மரண தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டுமெனகோரிக்கை விடுத்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.
அத்துடன் சிறுமியின் சடலம் இறுதி கிரியைகளுக்காக கம்பஹா, கொட்டதெனியாவ, அகரங்கஹ பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைக்கப்பட்டுள்ளது. வீட்டை சுற்றி 2 ஆயிரத்துக்கு அதிகமானோர் குழுமியிருப்பதால் அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இந்த 2 ஆயிரம் பேரில் காலி, மாத்தறை மற்றும் குருநாகல் பகுதியில் இருந்து வந்தவர்களும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ற)



# கைக்குண்டு மீட்பு

மட்டக்களப்பு, செப்.16
மட்டக்களப்புகாத்தான்குடிபொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்முனை – மட்டக்களப்பு பிரதான வீதியில் 5ஆம் கட்டை பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை வளவொன்றிலிருந்து இராணுவத்தினரால் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது. தாளங்குடா இராணுவத்தினருக்கு பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து ஸ்தலத்துக்கு விரைந்த இராணுவத்தினர் கைக் குண்டை மீட்டு குண்டு செயலிழக்கச் செய்யும் படைப் பிரிவினரின் உதவியுடன் செயலிழக்கச் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஏப். 4

சாவகச்சேரியில் மருத்துவரின் சொகுசு கார் விபத்தினால் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

அத்துடன், குறித்த குடும்பஸ்தர் தொடர்ச்சியாக இரத்த வாந்தி எடுத்து வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த விபத்து சாவகச்சேரியில் நேற்றுமுன்தினம் இரவு 9.15 மணியளவில் இடம்பெற்றது.

இந்த விபத்தில் சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கைச் சேர்ந்த கருணாகரன் யூட் கரன் (வயது -34)என்பவரே படுகாயமடைந்தார். விபத்தையடுத்து குறித்த வாகனத்தைச் செலுத்திச் சென்ற மருத்துவர் பொலிஸாரால் விசாரிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மருத்துவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றி வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது. (து-வ-4)

# மீள் கட்டுமானம் சுலபம் நல்லிணக்கமோ சிரமம்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம். ஏப். 4


மோசமான போரின் பின்னர் உடைந்த வீடுகளை மீள்கட்டுமானம் செய்து கொள்வது சுலபமானது. ஆனால் நல்லிணக்கம் ஏற்படுவது சிரமமானது என்று வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

நேற்று யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்ட ஹோட்டல் திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நாம் தற்போது நல்லிணக்கத்துக்கான காலத்தில் வசிக்கின்றோம். வடக்கில் வீடுகள் அனைத்தும் முற்றுமுழுதாகச் சேதமடைந்ததை எனது கண்களால் காணக் கூடியதாகவுள்ளது. இவற்றை நாம் மீள் கட்டுமானம் செய்து கொண்டுள்ளோம்.

மீள் கட்டுமானம் சுலபமானது. ஆனால் நல்லிணக்கம் ஏற்படுவது சிரமமானது. நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தொலைநோக்கு பார்வை அவசியம். இவ்வாறான நல்லிணக்கப் பாதையில் இந்த ஹோட்டல் திறப்பு விழா ஒரு மைல்கல்லான விடயமாகும்.



நல்லிணக்கத்துக்கான முயற்சிகளில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார். இதன் அடையாளமாகவும் முதலீட்டாளர்களுக்கு ஊக்கம் அளிக்கும் வகையிலும் அவரது வருகை அமைந்துள்ளது.

சமாதான பிரதேசமாக யாழ்ப்பாணம் பிரகடனப்படுத்தப்பட்டபோதும், வெப்பமும், குடிக்க இயலாத தண்ணீரும் மனிதர் வாழ்வதற்கு உகந்த இடம் அல்ல. ஆனாலும் இங்கு சிறந்த வளங்கள் காணப்படுகின்றன. ஆண்டின் முழு நாள்களும் சூரிய ஒளி கிடைக்கின்றது. இதன் மூலம் பெரிய சோலர் சக்தியை உருவாக்க முடியும். இருக்கும் வளங்களை தொழில்நுட்பத்தின் மூலம் சிறந்த சக்தியாக மாற்ற முடியும்.

வடக்கில்கல்வி அறிவுள்ளோரின் எண்ணிக்கை அதிகம். ஆனால் அவர்களில் பலர் வெளிநாடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர். தற்போதுள்ள தருணம் நாடு திரும்புவதற்கான சிறந்த தருணமாகும். அவர்களது திறனை நிரூபிக்கவும், சொந்த இடங்களைச் சுவீகரிக்கவும் அவர்களது வருகை அவசியமாகும். ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சி நல்லிணக்கத்திற்கான புதிய பாதையை ஏற்படுத்தியுள்ளது - என்றார். (து-வ-21-ரி4)

# வெளிநாட்டுத் தூதுவர்களை நியமிப்பதில் சிங்கப்பூரைப் பின்பற்றவுள்ள இலங்கை

*மங்கள சமரவீர தெரிவிப்பு*

கொழும்பு, ஏப். 4

தற்போது இலங்கை தூதரகங்கள் இல்லாத வெளிநாடுகளுக்கு, நிரந்தர வதிவிடமற்ற தூதுவர்களை நியமிக்கும் திட்டம் ஒன்றை வெளிவிவகார அமைச்சு செயற்படுத்தவுள்ளது.

வெளிவிவகார அமைச்சை மறுசீரமைக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாகவே, கொழும்பில் இருந்து செயற்படத்தக்க தூதுவர்களை அரசு நியமிக்கவுள்ளதாக, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இவ்வாறு நியமிக்கப்படவுள்ள தூதுவர்களின் பெயர்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் அவர்களில் சிலர் நிதி வசதியுள்ளவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் வெளிவிவகார அமைச்சில் இவர்கள் அலுவலகம் ஒன்றைக் கொண்டிருப்பர். குறிப்பிட்ட நாட்டுக்கு ஆண்டுக்கு குறைந்தது இரண்டு தடவைகள் பயணம் மேற்கொள்வர் என்றும் மங்கள சமரவீர கூறியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த திட்டத்து ஆதரவு தெரிவித்திருப்பதாகவும், இதே நடைமுறை சிங்கப்பூரில் பின்பற்றப்படுகிறது என்றும் சுட்டிகாட்டிய வெளிவிவகார அமைச்சர், இலங்கைக்கான சிங்கப்பூர் தூதுவர் அங்கிருந்தே செயற்படுகிறார் என்பதையும் குறிப்பிட்டார். (வி)

# நானுஓயா வனத்தில் தீ

கொழும்பு, ஏப். 4

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஹட்டன் நுவரெலியா பிரதான வீதியில் நானுஓயா எடின்புரோ தோட்டப்பகுதியில் உள்ள மானாபுல் வனப்பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

ஆறு ஏக்கரைக் கொண்ட இந்த மானாபுல் வனப்பகுதியின் 3 ஏக்கர் வரை முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நானுஓயா பொலிஸாரும் பொதுமக்களும் பெரும் சிரமத்திற்கு மத்தியில் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சித்தனர்.

குறித்த பகுதியில் சிறுவர்கள் விளையாட்டுத் தனமாக தீ வைத்ததன் காரணமாக இந்தத் தீ விபத்துச் சம்பவம் இடம்பெற்றதாக பொதுமக்கள் தெரிவிக் கின்றனர்.

இந்த தீ விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வி)

# பனங்கைப்பணி பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஏப். 4

விசுவமடு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் இன்று திங்கட்கிழமை பனங்கைப்பணிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியில் 25 பனம் கைப்பணிப் பயனாளிகள் இணைந்து பயிற்சி நெறியை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பனை அபிவிருத்தி சபையின் தலைவர் மா.கணபதிப்பிள்ளையும், கௌரவ விருந்தினராக கூட்டுறவு ஆக்க உற்பத்தி உதவி ஆணையாளர் யு.சுபசிங்கவும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-ரி)

# உயர்தர மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், ஏப். 4

இந்த வருடம் ஜீ.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தமர்வு எதிர்வரும் புதன்கிழமை மற்றும் வியாழக்கிழமைகளில் யாழ்.வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலை மற்றும் யாழ்.மத்திய கல்லூரி ஆகிய பாடசாலைகளில் இடம்பெறவுள்ளன.

எதிர்வரும் புதன்கிழமை இரசாயனவியல் மற்றும் பௌதிகவியல் பாடங்களுக்கான கருத்தமர்வு இடம்பெறவுள்ளது. இந்தப் பாடங்களுக்கு தோற்றும் பெண்களுக்கான கருத்தமர்வு வேம்படி மகளிர் கல்லூரியிலும் ஆண்களுக்கான கருத்தமர்வு யாழ். மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது.

மறுநாள் வியாழக்கிழமை வணிகக்கல்வி மற்றும் பொருளியல் பாடங்களுக்கான கருத்தமர்வு இடம்பெறவுள்ளது. இந்தப் பாடங்களுக்குத் தோற்றும் பெண்களுக்கான கருத்தமர்வு யாழ்.வேம்படி உயர்தர பெண்கள் பாடசாலையிலும் ஆண்களுக்கான கருத்தமர்வு யாழ்.மத்திய கல்லூரியிலும் இடம்பெறவுள்ளது.

சட்டத்தரணி வேலாயுதன் தேவசேனாதிபதியின் அனுசரணையில் இந்தக் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது. இதில் கொழும்பின் பிரபல ஆசிரியர்கள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கவுள்ளனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (வ-4)

இம்முறை
தனயோகம்
உங்களுடையதா?
திகதி 03.04.2016
வெற்றி வாரம் 1963
ஊதா
மேடம்
வெற்றி இலக்கங்கள்
07 08 30 32
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 2,334,580 /-

Galaxy Star
வெற்றி வாரம் 048
திகதி 03.04.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
03 08 14 28 49
அடுத்த புதன்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,000,000/-

பாராட்டி வாழ்த்துகிறோம்



யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்
20.03.2016 ஞாயிற்றுக்கிழமை
நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில்
BBM (வியாபார முகாமைத்துவ
மாணி) பட்டம் பெற்ற
எமது நண்பன்
வைரவநாதன்
சயந்தன்
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதுடன்
மேலும் பட்டங்களைப் பெற்று சிறப்புற மனதார
வாழ்த்துகின்றோம்.
மட்டுவில், சாவகச்சேரி.
வாழ்த்துவோர்
V.V.S நண்பர்கள்.

# மின் தடை ஏற்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பின் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை சில பிரதேசங்களில் மின் தடைப்பட்டிருக்கும் என்று மின்சார சபையினர் அறிவித்துள்ளனர்.

இதன்படி, அல்லைப்பிட்டி, மண்கும்பான், மண்டைதீவு, சோளாவத்தை, வங்களாவடி, மண்கும்பான் தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம் மண்டைதீவு கடற்படை முகாம் ஆகிய இடங்களிலும், கிளிநொச்சி பிரதேசத்தில் பாரதிபுரம், மலையாளபுரம், அம்பாள் குளம், தேராவில், உடையார்கட்டு, தேவிபுரம், வள்ளிபுனம், நாவற்காடு, கேப்பாபுலவு, வற்றாப்பளை, முல்லைத்தீவு விமானப் படை I,II, முல்லைத்தீவு 59 ஆவது படைப்பிரிவு (14 இ.எஸ்.ஆர் - 01 மற்றும் 14 இ.எஸ்.ஆர். - 02), எஸ்.எப்.எச்.கியூ வற்றாப்பளை, 683 ஆவது படைப் பிரிவு முகாம், 68 ஆவது படைப் பிரிவு முகாம் ஆகிய இடங்களிலும், வவுனியா பிரதேசத்தில் குகன்நகர் கிராமம், உமாமகேஸ்வரன் கிராமம், தெற்கிலுப் பைக்குளம்கிராமம்ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் தெரிவித்துள்ளார். (வ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகள்

*அண்மையில் வெளியான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளில் பாடசாலை ரீதியாக எமக்குக் கிடைத்த பெறுபேறுகள் வருமாறு -*

**சென்.அன்ரனிஸ் கல்லூரி**
ஏ.எப்.ஜெனிபர் 6ஏ,பி,சி,எஸ், ஜி.றிச்மன் 5ஏ,பி,2சி, எஸ்.தேனுஜன் ஏ,2பி,சி,2எஸ், கே.சரண்ராஜ் 4பி,சி,4எஸ், ரி.இப்சன் பிளே 2ஏ,3பி,3சி.

**உரும்பிராய் இந்துக் கல்லூரி**
செ.ஜெல்சன் கோஸ்லி 7ஏ,2பி, செ.கபிலன் 5ஏ,பி,2சி,எஸ், யோ.றோஜினி 4ஏ,3பி,2எஸ், பி.யாழினி 3ஏ,2பி,2சி,எஸ், மு.டக்ஷா 3ஏ,2சி,3எஸ், பெ.கஜானா 2ஏ,5சி,எஸ், ஜெ.டக்சனா 2ஏ,பி,3சி,2எஸ், சி.டினுஜன் ஏ,2பி,4சி,எஸ், செ.டிலக்சிகா ஏ,6சி,எஸ்.

**வட்டுமத்திய கல்லூரி**
க.வித்தியா 9ஏ, தி.தாரணி 8 ஏசி, ஜெ.விநோதினி 8ஏசி, ரா. துஷ்யந்தன் 6ஏ,2பி,எஸ், செ.தினேஸ் 5ஏ,2பி,சி, ம.சாளினி 5ஏ,பி,2சி,எஸ், ம.சோமபாலன் 4ஏ,2பி,2சி,எஸ், சி.பார்கவி 3ஏ,3பி,2சி,எஸ், ச.பிரகாஷ் 2ஏ,4பி,2சி,எஸ், சி.கார்த்திகா 2ஏ,பி,3சி,3எஸ்.

**மன்னார் கௌரியம்பாள் அ.த.க பாடசாலை**
ச.கம்சாருஜன் 4ஏ,பி,3சி,எஸ், க.பிரதீபன் - 4ஏ,2பி,சி,எஸ், பு.அனோஜன் 2பி,4சி,3எஸ், சி.அர்ச்சனா,பி,2சி,4எஸ், சி.சுகன்யா 2பி,3சி,2எஸ், க.சீதாலக்சுமி பி,3சி,4எஸ், உ.உசா நந்தினி பி,4சி,3எஸ்.

**கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்**
ச.துசாலினி8ஏ,சி, அ.மயூரன் 3ஏ,2பி,3சி,எஸ், இ.கயல்விழி 3ஏ,பி,3சி,2எஸ், ச.சங்கமன் 2ஏ,பி,4சி,எஸ், கு.கங்காசுதன் ஏ,4பி,2சி, ஸ்ரீ.சத்யன் ஏ,3சி,4எஸ், ச.விணோயா ஏ,பி,4சி,எஸ், கே.கௌசிகா ஏ,பி,3சி,2எஸ்.

**இணுவில் மத்திய கல்லூரி**
க.கோகுலன் 7ஏ,பி,சி, க.டொபிக்கா 7ஏ,பி,சி, ரா.யுவரூபன் 7ஏ,2சி, ஜீ.றிபன்சிகா 4ஏ,2பி,3சி, சி.மலரவன் 4ஏ,3பி,சி,எஸ், மு.கௌசிகன் 4ஏ,4சி,எஸ், பா.நிறோஜினி 3ஏ,பி,3சி,2எஸ், தி.விதுசிகா 2ஏ,3பி,3சி,எஸ், க.துஸ்யந்தன் 2ஏ,2பி,3சி,2எஸ், மு.சுபாகி 2ஏ,பி,3சி,3எஸ், பி.ரஜின்சன் ஏ,4பி,3சி,எஸ், பா.நிரஞ்சன் 4ஏ,2பி,2சி, ப.தாரணி 3ஏ,பி,4சி, ம.மதூஸன் 3ஏ,பி,2சி,2எஸ், க.கோகிலவதனி 2ஏ,2பி,3சி,எஸ்.

**யாழ்ப்பாணம் வேலாயுதம் மகாவித்தியாலயம்**
செ.கிருஷாந் 5ஏ,3பி, தி.செந்தூரன் 5ஏ,2பி,சி, த.வேல்கஜா 3ஏ 2பி,3சி,எஸ், இ.சஜிந்தன் 3ஏ,4சி,எஸ், த.விமல்ராஜ் 3ஏ,பி,2சி,எஸ், இ.பபின் 2ஏ,5பி,சி, இ.துவாரகன் 2ஏ,3பி,சி,3எஸ், அ.அகிலன் 2ஏ,2பி,2சி,எஸ், த.கீர்த்திகன் 2ஏ, 3பி, 3எஸ்.


## கணக்காளர் தேவை

மேற்படி எமது நிறுவனத்துக்கு அனுபவமும் ஆற்றலும் உள்ளவரும், கணினி முறையில் கணக்குப் பதிவதில் நீண்டகால அனுபவமும் தேர்ச்சியும் உடையவர்களும் தேவைப்படுகின்றனர். உங்கள் விண்ணப்பங்களை **09.04.2016** ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு: முழுநேரமாகவோ, பகுதி நேரமாகவோ பணியாற்ற முடியும்.**

ESS JEY ELECTRICALS
9,Stanley Road, Jaffna.
**021 222 2564, 021 222 7430**

## யா/மகாஜன கல்லூரி - தெல்லிப்பழை
## க.பொ.த (உ/த) 2018 பிரிவுக்கான அனுமதி

**2018** உயர்தர பிரிவுக்கு இம்முறை புதிதாக தொழில்நுட்ப பிரிவு ஆரம்பிக்கப்பட உள்ளது.

✓ **தொழில்நுட்ப பிரிவு** ✓ **கணிதம்** ✓ **விஞ்ஞானம்**
✓ **கலை** ✓ **வர்த்தகம்**

ஆகிய துறைகளுக்கு அனுமதி பெற விரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 27.04.2016 இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

**அதிபர்.**

## மானிப்பாய் இந்துக் கல்லூரி
## (தேசிய பாடசாலை)
## க.பொ.த.உயர்தர பிரிவு (2018)
## மாணவர் அனுமதி

யா/ மானிப்பாய் இந்துக் கல்லூரியில் க.பொ.த. உயர்தரம் (2018) பொறியியல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பிரிவுகளில் கல்வி கற்பதற்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளன.

**விண்ணப்ப முடிவு திகதி:- 30.04.2016**

**குறிப்பு:**
✓ மேற்படி பிரிவுகளுக்கு மாணவிகளும் இணைத்துக் கொள்ளப்படுவர்.
✓ ஆண் மாணவர்களுக்கு விடுதி வசதிகளும் உண்டு.

**அதிபர்.**


## அறிவித்தல்
## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

சங்கரப்பிள்ளை கணேசலிங்கம்
கௌரவ பொதுச் செயலாளர்
புற்றளைச் சித்திவிநாயகர் ஆலயப் பரிபாலனசபை,
புற்றளை சித்தி விநாயகர் ஆலயம்,
புற்றளை, புலோலி தெற்கு, புலோலி.
புலோலி தெற்கு, புற்றளைச் சித்திவிநாயகர் ஆலய பரிபாலனசபை சார்பாக

**வழக்காளி**

**வழக்கு இல:-**
**18984 / L / 2016**

**எதிர்**

சின்னத்துரை சந்திரகுமார்,
ஸ்ரீ வல்லிபுரா போட்டோ
கந்த முருகேசனார் வீதி,
உபயகதிர்காமம்
புலோலி தெற்கு,
புலோலி.

**எதிராளி**

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளியால் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் 18984 / L / 2016 என்ற இலக்க வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்டுள்ள எதிராளிக்கு எதிராக அவ் வழக்கின் பிராதில் கோரியுள்ள நிவாரணங்களைக் கோரி கோப்பிடப்பட்டுள்ளது.

அவ்வழக்கில் குடியியல் நடவடிக்கை கோவையின் பிரிவு 16 இன் கீழான பகிரங்க அறிவித்தலினைப் பத்திரிகையில் பிரசுரம் செய்யுமாறு மன்று பிறப்பித்த கட்டளைக்கு இணங்க இவ்வழக்கில் அக்கறையுள்ள புற்றளைச் சித்தி விநாயகர் ஆலய பரிபாலனசபை உறுப்பினர்கள் எவரேனும் இருப்பின் அவர்கள் இவ்வழக்கில் தோன்றி தமது உரிமையை நிலைநாட்டுவதற்கு ஏதுவாக இவ் அறிவித்தல் விடுவிக்கப்படுகின்றது.

இவ்வழக்கின் அடுத்த தவணையாக **06.04.2016** நியமிக்கப்பட்டுள்ளது.
**04 ஆம் திகதி ஏப்ரல் மாதம், 2016**

**வரைபு,**
**வழக்காளியின் சட்டத்தரணி.**

**நீதிமன்றின் கட்டளைப்படி**
**பதிவாளர்**
**பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்.**

(.../16.17.18)


## வேலையாள் தேவை

கோழிப்பாம் விற்பனை நிலையத்துக்கு வேலையாள்கள் தேவை. விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

ஆனைக்கோட்டை- **077 868 9500**

## காணி விற்பனைக்கு உண்டு

ஆவரங்கால் சிவன் வீதியில், வைரவர் கோயிலுக்கு அருகில் சகல வசதிகளுடன் கூடிய 3½ பரப்புக் காணியுடன் வீடு வளவும், விற்பனைக்கு உண்டு.

**077 921 7069,**
**0044 7772 994590** (லண்டன்)

## வீடும் காணியும் விற்பனைக்கு

மன்னார், மூர்வீதியில் (ஸ்ரேடியம் சந்தியில் இருந்து 25 மீற்றர் தூரம்) 6.5 பேர்ச் கொண்ட காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. (61278)(12.16.20)

**077 958 3343**

## வீடு விற்பனைக்கு உண்டு

சாவகச்சேரி நகருக்கு அண்மையில் 3 பரப்புக் காணியுடன் இணைந்த நல்ல நிலையிலுள்ள சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.

**077 614 5305**

## A/L, O/L வகுப்புக்கள்

A/L வகுப்புக்கு கணக்கீடு, பொருளியல்
O/L வகுப்புக்குத் தரம் 10 வகுப்புக்களுக்கு வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும், குடியியற் கல்வியும் தனியாகவும் குழுவாகவும் கற்பிக்கப்படும்.

**077 832 1677, 077 906 4595**

## காணி விற்பனைக்கு

யாழ் நல்லூரில் இராமலிங்கம் வீதி, அம்மன் வீதிக்கிடையில் " சந்திர சேகரவளவு" 1 ¾ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தரகர் வேண்டாம். (60793)(11.18)

**071 133 3685**

உ
ஸ்ரீ ராமஜெயம்

## சௌள உபநயன பிரம்மோபதேச அழைப்பு

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மன்மத வருஷம் **பங்குனித்**
**திங்கள் 22ஆம் நாள் (04.04.2016) திங்கட்கிழமை**
**சதய நக்ஷத்திரமும், துவாதசி திதியும், சித்த யோகமும்**
கூடிய சுப தினத்தில் காலை **9.09 மணி முதல் 10.39**
மணிக்குள் வரும் இடப லக்ன சுப முகூர்த்த வேளையில்

**பாரத்வாஜ கோத்திரம்**
**எமது செல்வப் புதல்வன்**

**சிரஞ்ஜீவி**

**ஜெ.குமரேஸ்வர சர்மாவுக்கு (குமரன்)**

**பிரம்ம உபதேச குரு மதுர மந்திர மாமணி சிவஸ்ரீ குமர சரவணபவக் குருக்களால் சௌள, உபநயன பிரம்மோபதேசம்** செய்ய எமது குலதெய்வங்களின் திருவருளும், குருவருளும், பெரியோர்களின் நல்லாசிகளும் கூடியிருப்பதால் மேற்படி வைபவம் எமது ஆலய **ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் கோவில் மண்டபத்தில்** நிகழவிருப்பதால் தாங்கள் தங்கள் இஷ்ட மித்ர பந்துக்கள் சகிதம் குடும்ப சமேதராக வருகை தந்து குமரனை ஆசீர்வதித்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**தங்கள் நல்வரவை நாடும்**

**[illegible]**
**[illegible] வீதி,**
**கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்**

**சிவஸ்ரீ.ந.ஜெகதீஸ்வரக் குருக்கள்**
**ஸ்ரீமதி ஜெ.ஜெயந்தி**
**குடும்பத்தினர்.**

(எசி/58)(11.18)


## வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிளால் விபத்து

சாவகச்சேரி, ஏப்.4
வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதி வளைவைக் குறிக்கும் வீதியோர கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்தவர் தூக்கி வீசப்பட்டு கால் முறிந்தது.
இவர் சுமார் இரண்டு மணிநேரத்தின் பின்னர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை அம்புலன்ஸ் மூலம் வைத்திய சாலைக்கு கொண்டுவரப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம்மாலைசாவகச்சேரி தனங்களப்புப் பகுதியில் இடம்பெற்றது.
பூநகரியில் இடம்பெற்ற சாவு வீட்டில் கலந்து கொள்ளச் சென்ற வேளையில் இந்த விபத்து இடம்பெற்றது என்றும்-அருகில் உள்ள மதகு வாய்க்காலுக்குள் வீழ்ந்து கிடந்ததால் எவரும் கவனிக்கவில்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன்போது அவ்வழியே சைக்கிளில் சென்ற ஒருவர் வீதியோரத்தில் மோட்டார் சைக்கிள் அநாதரவாகக் காணப்பட்டதையடுத்து, அவ்விடத்தில் பார்த்தபோது கால் முறிந்து அதிகளவு குருதி வெளியேறிய நிலையில் ஒருவர் காணப்பட்டதை அடுத்து பொலிஸாருக்கு அறிவித்து, அவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை அம்புலன்ஸ் மூலம் வைத்திய சாலைக்கு அனுப்பி வைத்தனர். குறித்த நபர் கால் முறிந்து துண்டாகக் காணப்பட்டதால் உடனடியாக மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (ற-ஐ-9)

## வவுனியாவில் டெங்கு ஒழிப்பு

தேசிய டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு வவுனியாவிலும் பல பகுதிகளில் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. கடந்த வெள்ளிக்கிழமை முதல்டெங்குஒழிப்புச்செயற்பாடுகள் வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என வவுனியா பொது சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.
வவுனியா நகரை அண்மித்த பகுதிகளில் டெங்கு பெருக்கெடுக்கும் இடங்களை இனங்கண்டு டெங்கு ஒழிப்புச் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது என்றும்,இந்தவேலைத் திட்டத்தில் பொலிஸார், இராணுவத்தினர், நகரசபை ஊழியர்கள், இலங்கை செஞ்சிலுவைத்தொண்டர்கள், குடும்பல நல உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து மேற்கொள்கின்றனர். வியாபார நிலையங்கள், அரச திணைக்களங்கள், வீதிகள், பொது மக்களின் இருப்பிடங்கள் என அனைத்து இடங்களும் சோதனை மேற்கொள்ளப்படுகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது (ற-ஐ-402,21)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றங்கள் நடந்திருப்பின் நீதி வழங்கப்பட வேண்டும்

## இராணுவத்தினரும் காப்பாற்றப்பட வேண்டும் என்கின்றது மக்கள் விடுதலை முன்னணி

கொழும்பு, செப்.16
இறுதிக்கட்டப் போரில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றனவா என்று தமிழர் தரப்பினருக்கும் சர்வதேச தரப்புக்கும் ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களைத் தீர்க்கவேண்டியது அரசின் முக்கிய பொறுப்பாகும். குற்றங்கள் இடம்பெற்றிருப்பின் நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும். – இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கெதிரான ஐ.நா. அறிக்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது பொதுமக்களின் மனித உரிமைகளை மீறும் செயற்பாடுகள் எவையும் நடந்துள்ளனவா என்பது தொடர்பில் பெரும் சந்தேகம் அனைத்து தரப்பினராலும் எழுப்பப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழ் பேசும் மக்களின் சார்பில் கேள்வி எழுப்பும் வேளையில், சர்வதேச அமைப்புக்களும் மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இலங்கை மீது அழுத்தங்களைச் செலுத்தி வருகின்றன. எனினும் இந்தக் கேள்விகளை சர்வதேச மட்டத்தில் கொண்டு செல்வதால் இலங்கையின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியாது. மாறாக, இலங்கையின் பிரச்சினைகளை உள்நாட்டுப் பொறிமுறைகளின் மூலமாகவே தீர்க்க வேண்டும்.

தற்போது சர்வதேச அளவில் செயற்படும் ஒருசில அமைப்புக்கள், தமது உடன்படிக்கைகளுக்கு அமைய இலங்கையில் மீண்டும் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. அவற்றை உள்நாட்டில் கட்டுப்படுத்த முடிந்தாலும், சர்வதேச அளவில் இவர்களது செயற்பாடுகளை கட்டுப்படுத்த முடியாது. எனினும் உள்நாட்டில் நல்லிணக்கத்தையும், சம உரிமைகளையும் மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதன் மூலமாக இலங்கையின் பிரச்சினைகளுக்கு தீர்வை எட்ட முடியும்.

அதேபோல் மக்களிடையே ஒற்றுமையையும் ஏற்படுத்த முடியும். இப்போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையால் இலங்கை மீது முன்வைக்கப்படவுள்ள விசாரணை அறிக்கை. எவ்வாறானது என்பது தொடர்பில் சரியான தகவல்கள் வெளிவரவில்லை. எனினும் இலங்கை மீது செலுத்தப்படும் அழுத்தங்களை அரசு சமாளிக்கும் வகையில் தனது செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும். தமிழர் தரப்பினருக்கும் சர்வதேச தரப்புக்கும் ஏற்பட்டிருக்கும் சந்தேகங்களைத் தீர்க்க வேண்டியது அரசின் முக்கிய பொறுப்பாகும்.

அதேபோல் இலங்கைக்கு எதிராக எழும் சர்வதேச சிக்கல் நிலைமைகளை சமாளித்து நாட்டையும் இராணுவத்தையும் காப்பற்ற வேண்டியதும் அரசின் பொறுப்பாகும். அதேபோல் குற்றச்சாட்டுக்கள் உண்மையாயின் பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு நியாயம் கிடைக்கவேண்டும். எனினும் இவை அனைத்தையும் உள்நாட்டு செயற்பாடுகள் மூலமாகவே கையாள வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். உள்ளக விசாரணைப் பொறிமுறைகளைப் பலப்படுத்தி அதனூடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டும். அரசு அவற்றைச் சரிவர முன்னெடுக்க வேண்டும் – என்றார். (ற)



அநாகரிக தர்மபாலவின் 151 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு கடைப்பிடிக்கப்படும் அநாகரிக தர்மபால வாரத்தின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் பன்னிப்பிட்டி தர்மபால கல்லூரியில் நடைபெற்றது. அதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டு அநாகரிக தர்மபாலவின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினார். கல்லூரி வளாகத்தில் மரக்கன்றொன்றையும் நட்டார். (ற)

# இந்திய உடன்படிக்கைகளால் இலங்கைக்குப் பயனில்லை

## அத்துரலிய ரத்ன தேரர் கூறுகின்றார்

கொழும்பு, செப்.16
இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட எந்தவொரு உடன்படிக்கையாலும் இலங்கைக்கு நன்மை கிடைக்கவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய அரசு சீபா உள்ளிட்ட எந்தவொரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டாலும் அது குறித்து முதலில் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். எந்தவொரு உடன்படிக்கையையும் கைச்சாத்திடுவதற்கு முன்னதாக நாடாளுமன்றில் சமர்ப்பித்து அதற்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.– என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இந்தியப் பயணம் குறித்துக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

இரகசியமான முறையில் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட அனுமதிக்க முடியாது. கடந்த காலங்களில் இந்தியா நடந்துகொண்ட விதத்தைக் கருத்தில் கொள்ளும் போது எந்த வகையிலும் திருப்தி கொள்ள முடியாது.

உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் போது அது நாட்டுக்கு நன்மையை ஏற்படுத்த வேண்டியது அவசியமாகும். இந்தியாவுடனான உடன்படிக்கைகளின் போது நாம் அதனைச் சரியான முறையில் பின்பற்றிய போதிலும் இந்தியா அவ்வாறு செயற்படுவதில்லை.– என்றார். (ற)



# அத்தனகல அமைப்பாளர் சந்திரிகா!

கொழும்பு, செப்.16
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல பிரதான அமைப்பாளராக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க செயற்படவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அத்தனகல அமைப்பாளர் பதவி, கடந்த சில மாதங்களாக வெற்றிடமாக உள்ள நிலையில், அந்த இடத்துக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் போசகராகச் செயற்பட்டு வருகின்றார். (ற)



# உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்காது

கொழும்பு, செப்.16
உணவுப் பொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என்று நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

உருளைக்கிழங்கு மற்றும் சீனியின் இறக்குமதி வரி மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில், ஒன்பது பொருள்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது என்று போலிப் பரப்புரை மேற்கொள்ளப்படுகின்றது என்று அமைச்சர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சர்வதேச சந்தையில் சீனி மற்றும் உருளைக்கிழங்கின் விலைகள் அதிகரித்துள்ளதால், உள்ளூர் உற்பத்தியாளர்களின் நன்மையைக் கருத்தில் கொண்டே குறித்த இரு பொருள்களுக்கான இறக்குமதி வரியும் அதிகரிக்கப்பட்டது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த இரு பொருள்களின் சில்லறை விலையிலும் எவ்வித மாற்றமும் ஏற்படாது என்றும், நுகர்வோர் இதுகுறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சீனியின் இறக்குமதி வரி 30 ரூபாவிலிருந்து 40 ரூபாவாகவும், உருளைக்கிழங்கின் இறக்குமதி வரி 18 ரூபாவிலிருந்து 30 ரூபாவாகவும் அண்மையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. (ற)

# மகிந்த தலைமையில் கட்சி ஏதும் உருவாகாது

## வெளியான தகவல்கள் பொய் என்கிறார் பந்துல குணவர்த்தன

கொழும்பு, செப்.16
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையில் புதிய கட்சி ஒன்று உருவாக்கப்படவுள்ளது என்று வெளியான செய்தியில் எவ்வித உண்மையும் இல்லை. – இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் தலைமையில் புதிய கட்சியொன்று உருவாக்கப்படும் என மேற்கொள்ளப்படும் பரப்புரைகள் பொய்யானவை. அவ்வாறான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்ற அடிப்படையில் அவ்வாறான எவ்வித தீர்மானங்களையும் எடுக் கவில்லை. கட்சியைப் பாதுகாக்கும் முயற்சிகளே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இன்னமும் அமைச்சுப் பதவிகள் வழங்கி முடிக்கப்படவில்லை. அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டதன் பின்னர் எஞ்சும் நாம் எதிர்க்கட்சியில் அமர்ந்து கொள்வோம். இதன்போது ஏற்படக்கூடிய நிலைமைகள் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் நாம் பேச உள்ளோம்.

இந்தப் பேச்சில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவம் செய்ய விரும்பும் உறுப்பினர்கள் பங்கேற்பார்கள்.– என்றார். (ற)

# எம்மை விசாரித்துக் கொண்டிருக்காது சிறுவர் கொலையாளிகளைப் பிடியுங்கள்

கொழும்பு, செப்.16
தம்மிடம் விசாரணைகளை மேற்கொள்வதற்கு முன்னர், நாட்டில் இடம்பெறும் சிறுவர் படுகொலைகள் தொடர்பில் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நாமல் ராஜபக்சவிடம் நிதி மோசடி விசாரணைப் பிரிவினர் நேற்று முன்தினம் விசாரணைகளை மேற்கொண்டனர். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே நாமல் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எவ்வித குற்றச்சாட்டுக்களும் இன்றி தாம் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ள நாமல், கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் அதிகாரத்தில் இருந்தவர்களை விசாரணைக்கு உட்படுத்த பொலிஸார் கடும் பிரயத்தனங்களை மேற்கொள்கின்றனர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அதைவிடுத்து நாட்டில் தற்போது சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்படுகின்றமை தொடர்பில், உரிய விசாரணைகளை நடத்தி முதலில் அது குறித்த கொலைக் குற்றவாளிகளைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்று முன்தினம் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிப்பதைத் தவிர்த்துக் கொண்டார். (ற)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அனைவரிடமும் அன்பு பாராட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். குடும்பத்துடன் விருந்து நிகழ்வில் கலந்து கொள்வீர்கள். பணியாளர்கள் நிர்வாகத்தினரால் பாராட்டுப் பெறுவர்.

**இடபம்:** உற்சாகத்துடன் அன்றாடப் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம். அரசியல்வாதிகள் அரசியல்ரீதியான பயணம் மேற்கொள்வர்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிக நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பும், அதற்கேற்ப இலாபமும் கூடும். ஆரோக்கியம் சீராக இருக்கும். பணியில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கடகம்:** கடந்தகால உழைப்புக்கான பலனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். தாய்வழி உறவினர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வீர்கள்.

**சிங்கம்:** மற்றவர்களால் பிரச்சினைக்கு ஆளாகலாம்; கவனம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். நண்பர்களின் உதவியைக் கேட்டுப் பெறுவீர்கள். பிள்ளைகளின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும்.

**கன்னி:** எதிர்கால நலன்கருதி, ஆர்வத்துடன் பாடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் படிப்படியாக இலாபம் உயரும். பெண்கள் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். மாணவர்களுக்கு கல்வி வளர்ச்சிக்கான சூழல் அமையும்.

**துலாம்:** உறவினரிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். தொழில், வியாபாரத்தில் உழைப்புக்கேற்ப இலாபம் உயரும். மனம் விரும்பியவகையில் ஆடம்பரச் செலவு செய்வீர்கள். பிள்ளைகளின் நலனுக்காக பெண்கள் பாடுபடுவர்.

**விருச்சிகம்:** சாதுரியமாகச் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் பன்மடங்கு உயரும். புதிய வீடு, வாகனம் வாங்கும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி கூடும்.

**தனுசு:** மனதில் இனம்புரியாத மகிழ்ச்சி நிறைந்திருக்கும். அன்றாடப் பணிகளில் சுறுசுறுப்பாக ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் போதுமான இலாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்க வாய்ப்புண்டு.

**மகரம்:** நண்பர்களைச் சந்தித்துப் பேசி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனத்தைப் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்தவும்.

**கும்பம்:** நிதானத்துடன் செயற்பட்டால், பிரச்சினை உண்டாகாது. தொழில், வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் ஆடம்பர எண்ணத்தைக் கைவிடுவது நல்லது.


**மீனம்:** நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். பெண்கள் மனம்போல ஆடை, ஆபரணம் வாங்குவர். புத்திரரின் செயலைக் கண்டு மனம் மகிழ்வீர்கள்.

# கஞ்சத்தனத்திலும் பஞ்சம்

## நேர்மையான மனைவி





ஒரு மனிதர், தான் காலமெல்லாம் சம்பாதித்த பணத்தை, தம் குடும்பத்துக்குக் கூட செலவு செய்யாது, சேமித்து வைத்திருந்தார். அவர் இறப்பதற்கு சிறிது காலத்துக்கு முன் தனது மனைவியை அழைத்து, "நான் இறந்து விட்டாலும் என்னுடைய பணத்தை என் கூடவே கொண்டு செல்ல விரும்புகிறேன். எனவே என்னுடைய பணத்தை என்னுடன் சவப்பெட்டியில் வைத்து அடக்கம் செய்து விடு" என்று கடவுளின் பேரால் உறுதி மொழி வாங்கிக் கொண்டார். கணவனின் கடைசி ஆசை என்று அவர் மனைவியும் கடவுளின் பேரால் உறுதிமொழி செய்து கொடுத்து விட்டார். அந்த மனிதர் இறந்த பின் எல்லா ஏற்பாடுகளும் நடந்தன. சவப்பெட்டியை மூடும்போது, அந்த நேர்மையான மனைவி, "கொஞ்சம் பொறுங்கள்" என்று கூறி சவப்பெட்டியினுள் ஒரு பேழையையும் வைத்து மூடச்செய்தாள். அவளுடைய கடினமான வாழ்வையும் அவள் கணவருடைய கஞ்சத்தனத்தையும் அறிந்திருந்த அவள் தோழி, "நீயும் முட்டாள்தனமாக அவர் சொன்னது போல் செய்து விட்டாயா?" என்று கேட்டாள். அதற்கு அந்த நேர்மையான மனைவி, "அவரது சவப்பெட்டியினுள் பணத்தை வைப்பதாக கடவுளின் பேரால் உறுதி மொழி கொடுத்து விட்டு மாற்றவா முடியும். அவர் சேமிப்புகள் மொத்தத்தையும் பணமாக்கி என் கணக்கில் வங்கியில் போட்டு விட்டு, முழுத்தொகைக்கும் காசோலையொன்றை எழுதிவைத்து விட்டேன். அவர் போன இடத்தில் மாற்ற முடிந்தால் அவர் செலவழித்துக் கொள்வதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை" என்றாள்.




# சாதனை படைத்த விசாரணை

வெற்றிமாறன் இயக்கத்தில் உருவாகியுள்ள புதிய படம் "விசாரணை". இந்தப் படத்தில் அட்டக்கத்தி தினேஷ், சமுத்திரகனி, ஆனந்தி, சரவண சுப்பையா, கிஷோர், முருகதாஸ், முத்துக்குமார், சந்திரன் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இந்தப் படம் சமீபத்தில் நடைபெற்ற 72ஆவது வெனிஸ் திரைப்பட விழாவில் திரையிடப்பட்டது. இந்த விழாவில், அம்னஸ்டி இன்டர்நேஷனல் இத்தாலி மனித உரிமைகள் பற்றிய சினிமா என்ற பிரிவில் "விசாரணை" படம் விருது வென்றுள்ளது. இந்திய திரைப்பட வரலாற்றிலேயே வெனிஸ் திரைப்பட விழாவில் விருது வென்ற முதல் இந்தியத் திரைப்படம் விசாரணை என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார். ராமலிங்கம் ஒளிப்பதிவு செய்துள்ளார். தனுஷின் வுண்டர்பார் பிரைவேட் லிமிடெட் மற்றும் கிராஸ் ரூட் பிலிம் கம்பெனி இணைந்து தயாரித்துள்ளது. லைக்கா நிறுவனம் இந்தப் படத்தை உலகமெங்கும் வருகிற செப்ரெம்பர் 24ஆம் திகதி வெளியிடுகிறது.











## பலூன் கலைஞர்

எல்லோருக்கும் பலூனுடன் விளையாடுவதற்கு ஆசை இருந்தாலும் பெரியவர்களான காரணத்தால், நாம் பலூனின் பக்கம் போகாமல், தூரத்தில் இருந்து ஏங்குவோம்! ஆனால் அமெரிக்காவின் உட்டா மாநிலத்தைச் சேர்ந்த ஜெரெமி டெல்ஃபோர்ட் என்னும் கலைஞர், கடந்த வாரம் 3500 பலூன்களைக் கொண்டு 17 அடி உயரமும், 25 அடி அகலமும் கொண்ட தாஜ்மஹாலை எண்பது மணிநேர உழைப்புக்குப்பின் தயார் செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேசத் தலையீடுகளை அரசு சரியான முறையில் கையாளும்

## அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



கொழும்பு, செப்.16
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் இலங்கை மீதான அறிக்கை உள்ளக விசாரணைகளை பலப்படுத்தும் வகையில் அமையும் என்ற நம்பிக்கை உள்ளது. இலங்கை குறித்த சர்வதேச தலையீடுகளை இலங்கை அரசு சரியான முறையில் கையாளும். – இவ்வாறு அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

தவறியேனும் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்காவிடின் – தொடர்ந்தும் மகிந்தவின் ஆக்கிரமிப்பில் நாடு இருந்திருந்தால், எமது இராணுவத்தினர் நிச்சயமாக சர்வதேச நீதிமன்றில் தண்டிக்கப்பட்டிருப்பார்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 30ஆவது கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் இலங்கை தொடர்பில் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த நிலையில் இலங்கையின் மீதான சர்வதேச தலையீடு தொடர்ந்தும் காணப்படும் வாய்ப்புக்கள் உள்ளனவா? என்பது தொடர்பில் ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடர் ஆரம்பமாகியுள்ள நிலையில் இலங்கை தொடர்பில் இன்று அறிக்கை முன்வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இப்போது இலங்கை தொடர்பில் எழுந்துள்ள சர்வதேச அழுத்தங்கள் இன்று, நேற்று ஆரம்பமாகிய ஒன்றல்ல. போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதில் இருந்தே இலங்கை இராணுவத்தின் மீது போர்க்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

ஆனால் இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் நிரூபிக்கக் கூடிய ஆதாரங்கள் எவற்றையும் முன்வைக்கவில்லை. எனினும் சர்வதேச ஊடகங்கள் ஒரு சில தமது தனிப்பட்ட வியாபார மற்றும் ஒரு சிலரின் தூண்டுதலின் பெயரில் பொய்யான புகைப்படங்களையும், காணொலிப் பதிவுகளையும் தயாரித்து இலங்கை இராணுவத்துக்கு எதிராக வெளியிட்டு வருகின்றனர்.


எனினும் இந்த ஆதாரங்கள் அனைத்தும் உண்மைக்குப் புறம்பானவை. இலங்கை இராணுவம் கடந்த காலத்தில் மிகப்பெரிய மனிதாபிமான சேவையைச் செய்துள்ளது. இந்த நாட்டில் பிரிவினைக் கொள்கையில் பலமடைந்த ஆயுததாரிகளின் தீவிரவாத செயற்பாடுகளால் நாட்டில் மூவின மக்களும் பாதிக்கப்பட்டனர். குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் மிக மோசமான அடக்குமுறைச் செயற்பாடுகள் காணப்பட்டன. அவ்வாறான சூழலில் இருந்து நாட்டையும் மக்களையும் காப்பாற்றியுள்ளோம்.

போர் முடிவடைந்து கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டின் சூழல் முழுமையாக மாற்றமடைந்துள்ளது. வடக்கு– கிழக்கு உள்ளிட்ட நாட்டின் அனைத்துப் பகுதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன. அதேபோல் நாட்டுக்கு எதிரான உள்நாட்டு அச்சுறுத்தல்கள் அனைத்தும் முழுமையாகத் தடுக்கப்பட்டுள்ளன. ஆகவே இவை அனைத்துமே ஒரு நாட்டின் மிக முக்கிய உள்நாட்டு செயற்பாடுகளாகும். ஆகவே இவற்றை சர்வதேசம் அமைப்புக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆனால் சர்வதேச அளவில் செயற்படும் புலம்பெயர் புலிகள் அமைப்புகள் மற்றும் பிரிவினைவாத அமைப்புக்களின் தேவையை பூர்த்திசெய்யும் வகையில் சர்வதேச தரப்பும் செயற்படுகின்றன. ஒரு பக்க நியாயங்களை மாத்திரமே கவனத்தில் கொண்டு சர்வதேசம் செயற்படுகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆயினும் கடந்த காலத்தில் சர்வதேச தலையீடுகள் அதிகரித்துக் காணப்பட்டாலும், இப்போது நிலைமை முழுமையாக மாற்றமடைந்துள்ளது. கடந்த ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட சர்வதேசத் தலையீடுகள் இப்போது குறைவடைந்துள்ளன. அதேபோல் புதிய அரசின் மீதான நம்பிக்கை பலமடைந்துள்ளது. ஆகவே இவை அனைத்தையும் நல்ல முன்னேற்றங்களாகவே நாம் கருதுகின்றோம். அத்தோடு இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை முன்வைக்கும் விசாரணை அறிக்கையும் இலங்கையை பாதிக்காத வகையிலும், சர்வதேசத்தின் நேரடித் தலையீடுகள் எவையும் இல்லாத வகையிலும், அதேவேளை உள்ளக விசாரணை பொறி முறையை பலப்படுத்தும் வகையிலுமே அமையும் என்ற நம்பிக்கை எமக்கு உள்ளது.

இந்த ஆட்சிமாற்றம் நாட்டுக்கும், இராணுவத்தினருக்கும் நன்மையளிக்கும் வகையில் அமைந்துள்ளது. தவறியேனும் ஆட்சி மாற்றம் ஒன்று ஏற்பட்டிருக்காவிடின் நாட்டின் நிலைமை முழுமையாக மாறியிருக்கும். மகிந்தவின் ஆக்கிரமிப்பில் நாடு தொடர்ந்தும் இருந்திருந்தால் எமது இராணுவத்தினர் நிச்சயமாக சர்வதேச நீதிமன்றில் தண்டிக்கப்பட்டிருப்பார்கள். கடந்த காலத்தில் குறிப்பிட்ட சில அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பல இராணுவத்தினரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன. ஆனால் இன்று அவை அனைத்தும் நீக்கப்பட்டுள்ளன. அதேபோல் நேரடி சர்வதேச தலையீட்டை ஏற்படுத்தி நாட்டில் மீண்டுமொரு நெருக்கடி நிலைமையை உருவாக்கியிருப்பார்கள். ஆயினும் அவ்வாறான செயற்பாடுகளில் இருந்து நாடு பாதுகாக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று இப்போதிருக்கும் நிலையில் இலங்கை குறித்த சர்வதேச தலையீடுகளை இலங்கை அரசு சரியான முறையில் கையாளும் என நம்பமுடியும். எவ்வாறு இருப்பினும் இலங்கை தொடர்பில் உள்ளக விசாரணைப் பொறிமுறையைக்கையாளவேண்டும் என்பதே எமது இப்போதைய நிலைப்பாடாகும். அதேபோல் இலங்கை இராணுவத்தினரைச் சர்வதேச நீதிமன்றில் நிறுத்த எமது அரசு ஒரு போதும் இடம் கொடுக்காது. போரில் ஏதேனும் மனித உரிமைகளைமீறும்வகையில் அரசதரப்பினால் குற்றங்கள் இழைக்கப்பட்டிருக்குமாயின் அவையும் சட்டப்படி கையாளப்படும் – என்று தெரிவித்துள்ளார். (ற)



மன்னார் கல்வி வலயத்துக்குட்பட்ட தலைமன்னார் புனித லோறன் சியார் றோ.க.த.க பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் சிறுவர் சந்தை மற்றும் கண்காட்சி என்பன நேற்று நடைபெற்றுள்ளது. இந்த சிறுவர் சந்தையானது மன்னார் வலய கல்விப்பணிப்பாளர் சியாம் தலைமையில் பாடசாலை வளாகத்தில் நடைபெற்றது.

குறித்த கண்காட்சியைக் கண்டு களிக்க பெற்றோர்கள், நலன் விரும்பிகள், ஊர் பிரமுகர்கள் எனப் பலரும் திரண்டிருந்தனர். (ற)

# யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழாவின் நாளைய காட்சிகள்

யாழ்ப்பாணம், செப். 16
யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகியுள்ளது.

அதில் நாளை மு.ப. 10 மணிக்கு 'த டேய்ஸ் ஒவ் க்றோவ்ஸ்', நண்பகல் 12.30 மணிக்கு 'சியர் ஒவ் ஹப்பினஸ்', பி.ப. 3 மணிக்கு 'பொன்மணி', மாலை 7 மணிக்கு 'றெட் டோக்' ஆகிய திரைப்படங்கள் கைலாசபதி கலையரங்கிலும், கார்கில்ஸ் சதுக்கத் திரையரங்கில் பி.ப. 3 மணிக்கு 'மோட்டார் பைசிக்கிள்', பி.ப 7 மணிக்கு 'த நைற் இஸ் ஸ்ரில் யங்' ஆகிய திரைப்படங்களும், யாழ்.பொது நூலகத்தில் மு.ப 10 மணிக்கு 'மாஸ்ரர் கிளாஸ்', 12.30 மணிக்கு குறுந்திரைப்படம் ஒன்றும் பி.ப. 3 மணிக்கு 'வி ஆர் யங். வி ஆர் ஸ்றரோங்' போன்றவையும் காட்சிப்படுத்தப்படவுள்ளன என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் ஏற்பாட்டாளர் கள் தெரிவித்துள்ளனர்.(ற–10)


காணி விற்பனைக்கு
மறவம்புலம், சேதுகாவலர் பிள்ளையார் கோவில் அருகில் 40 பரப்பு வயல் காணி விற்பனைக்கு.
T.P: 077 502 2651
071 314 6537

தையல் பணியாள் தேவை
ரவுசர், சேர்ட், தைப்பதில் அனுபவமுள்ளவர்கள் உடனடியாகத் தேவை
தொடர்பு: 077 559 0495

பெயர் மாற்றம்
உரும்பிராய் மேற்கு அன்னுங்கை உரும்பிராயை சேர்ந்த நற்குணராசா கலா இன்பன் ஆகிய நான் இன்றிலிருந்து எனது பெயரை இன்பன் என மாற்றம் செய்வதோடு சகல ஆவணங்களிலும் இவ்வாறே கையொப்பம் இடுவேன் என்பதை சகலருக்கும் அறியத் தருகிறேன்
ந. இன்பன்

பக்கவடிவமைப்பாளர் தேவை
நெல்லியடியிலுள்ள அச்சகம் ஒன்றுக்கு கணினி அறிவுடைய ( Photo Shop ,Crol draw) பக்கவடிமைப்பாளர் hamada மிசினில் வேலை செய்வதற்கும் அனுபவமுள்ள வேலையாள்கள் உடன் தேவை. வடமராட்சியில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது மற்றும் பிரதேசங்களில் உள்ளவர்களும் தொடர்பு கொள்ளலாம்
தொடர்பு:
077 959 7145

நீரிழிவு நோயில் இருந்து நிவாரணம் பெற.......
நீரிழிவு நோய் பற்றி 370 வினாக்களுடன் நீங்களும் விடைகளுடன் நானும் என்ற மருத்துவ கைநூல் வெளிவந்துள்ளது. Dr.தம்பி.பரா அவர்களால் நீண்டகால அனுபவத்தின் பின்னணியில் விஞ்ஞான ரீதியான விளக்கங்களுடன் தமிழில் வெளிவந்துள்ளது. கிடைக்குமிடம் பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம்.
தொடர்பு : 071 833 4549

வேலை வாய்ப்புக்கள்
இவ்வாண்டு A/L எழுதியவர்களுக்கு ..........
* வயதெல்லை:18-27
* தங்குமிடம் & உணவு வசதிகள் உண்டு
* Ass. Manager, Mangement trainees, Ware house Supervisor
* அனுபவம் அவசியமற்றது
தொடர்புகளுக்கு: 077 5566224, 077 230 2795
உங்கள் அனுமதிக்கு முந்துங்கள்






காணி விற்பனைக்கு
T.P: 077 502 2651
071 314 6537


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், செப்.16

நயினை தில்லங்குளி ஸ்ரீபாலஞான வைரவர் ஆலய மஹாகும்பாபிசேகம் இன்று புதன்கிழமை காலை நடைபெறவுள்ளது.

பிரதிஷ்டாபிரதமகுரு.சிவஸ்ரீ.நயினை கைலை வாமதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறும் மஹாகும்பாபிசேக பூசைகளில் அனைவரை யும் கலந்துகொள்ளுமாறு ஆலய அறங்காவலர் சபையினர் தெரிவித்துள்ளனர். (ற–ரி5)

* * *


தெல்லிப்பழை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய மகா கும்பாபிசேகம் இன்று புதன்கிழமை காலை மு.ப. 10மணி முதல் 11.15 மணி வரை உள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

இந்த ஆலயம் 1990ஆம் ஆண்டு இடப்பெயர்வு, வன்செயலால் சிதைவடைந்துள்ள நிலையில் 25 வருடங்களின் பின்னர் ஆலய தர்மகர்த்தா சபையினரின் முயற்சியால் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாபிசேகம் நடத்தப்படுகின்றது. (ற–36)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி மகேஸ்வரன்

**(ஆயுள்வேத வைத்தியர் D.A.M)**



யாழ்ப்பாணம் 797, ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகக்கொண்ட சின்னத்தம்பி மகேஸ்வரன் 14.09.2015 திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளியம்மை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான யோசேவ் - ஜெயம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், பிறக்சீட் இனசென்டின்(ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் டனீஷியா சுலோசனா (ஆசிரியை - புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்), பெலிஷியா கோமதி, டனீஷியஸ் டினேஸ்குமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சண்முகதாசன் (ஆசிரியர் -சென் ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), ஜொனாலி ஜஸ்ரின் ஆகியோரின் அன்பு மாமனாரும் அன்ரனி, ஜெறமி, ஸ்ரெபாணி ஆகியோரின் பாசமிகு பேரனும், கிறிஸ்ரி இராஜநாயகம், பற்றிக் செல்வநாயகம், பியூலா ஷிராணி றதிக்கா ஆகியோரின் மைத்துனரும், றோஸ் இமல்டா, பிறிஜட் சந்திரா, விஜயகுமார் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (17.09.2015) வியாழக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரின் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு புனித திருமுழுக்கு அருளப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**797, ஆஸ்பத்திரி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(64836) 11.16

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### கிருஷ்ணவேணி மகேஸ்வரன்



யாழ்.நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் லண்டன் Walthamstow ஐ வதிவிடமாகவும் கொண்ட கிருஷ்ணவேணி மகேஸ்வரன் 13.09.2015 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் கணபதிப்பிள்ளை(இளைப்பாறிய கிராமசேவையாளர்), சற்குணம்(இளைப்பாறிய ஆசிரியை) தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான குமாரசாமி - பொன்னம்மா தம்பதிகளின் அருமை மருமகளும், மகேஸ்வரன் (ராசா- குமரன்ஸ் ஸ்டோர்ஸ், லண்டன்) அவர்களின் அன்பு மனைவியும், கிரிஷாந்தி(துளசி) அவர்களின் பாசமிகு தாயாரும், கமலவேணி(ரமணி), உதயவேணி(ரஜனி), குமாரசூரியர்(ராசன்), கேதீஸ்வரநாதன், சிவஞானவேணி(சிவா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ராஜேந்திரன், குருபரன், சத்தியபாமா, வீரசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், செழியன், மூர்த்தி, ராசாத்தி, அழகன், தனம் ஆகியோரின் அன்பு அண்ணியும், சிந்து, சோபியா, சஹானா, மதன்ராஜ், துஷாரா, விநோதர், நேருஜா, ஜனார்த், ஜனார்த்தனி, மணாளினி, மயூரன், நிரோஷன், அபிரா, மயூரா, மதிரா, லக்ஷனா, லக்ஷ்மன், ஹரிஸ் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், பிரியங்கா, பிரியன், பிரவின், ராஜினி, ராஜீவ், ராஜேந்தினி, பரணி,பிரபு, பாபு, கஸ்தூரி ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2015) வியாழக்கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :-**
**குடும்பத்தினர்.**

**58, மருதடி வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

தொடர்பு :- SL- 021 222 0323
076 668 4537
LONDON:- +442 085 204 508,
+447 459 457 666

(64701)(14.16)

# கூட்டுறவு அமைப்புக்கள் சீரழிவதை அனுமதித்துக் கொண்டிருக்க முடியாது

## வடக்கு விவசாய, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு

அச்சுவேலி, செப். 16

கூட்டுறவு அமைப்புக்கள் பொதுமக்களின் சொத்தாகும். இவை எத்தகைய நோக்கங்களுக்காக உருவாக்கப்பட்டனவோ அந்த நோக்கங்களை உரிய முறையில் நிறைவு செய்ய வேண்டும். கூட்டுறவு அமைப்புக்களை சீரழிப்பதை அனுமதிக்க முடியாது. அவ்விதம் இடம்பெற்றால் கண்டிப்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வடபகுதியில் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட கூட்டுறவு அமைப்புக்கள் உள்ளன. அவற்றின் விவரங்கள், சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் திரட்டப்பட்டு கணினி மயப்படுத்தப்பட்டுள்ளன. – இவ்வாறு கூறினார் வடக்கு மாகாண விவசாய கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய அபிவிருத்தி வங்கியின் புதிய கரும பீடத்தின் திறப்பு விழா ஆவரங்காலில் நடைபெற்றது.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் இ.சந்திரன் தலைமையில் நடைபெற்ற திறப்பு விழாவில் கரும பீடத்தை திறந்து வைத்து உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அதன்போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

வடபகுதியில் உள்ள பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் பல, நட்டத்தில் செயற்படுவதோடு தொடர்ந்து செயற்பட முடியாத நிலையில் திண்டாடிக் கொண்டிருக்கின்றன. அவை ஊழியர்களுக்கான கொடுப்பனவுகளை மற்றும் அதிகரித்த 30 வீத சம்பள உயர்வை மாதாந்தம் வழங்க முடியாத நிலையில் உள்ளன.

கூட்டுறவு அமைப்புக்கள் பொதுமக்களின் சொத்துக்களாகும். இவை என்ன நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டனவோ அந்த நோக்கத்தை நிறைவு செய்து மக்களுக்கு உதவ வேண்டும். கூட்டுறவு அமைப்புக்களை எவரும் சுயநலத்தோடு பயன்படுத்தக்கூடாது. அவ்வாறு பயன்படுத்தப்படுவதும் கண்டறியப்பட்டுள்ளது. அது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்போது விவரம் மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்படும். வடபகுதியில் 2 ஆயிரம் வரையிலான கூட்டுறவு அமைப்புக்கள் செயற்படுகின்றன. அவை ஒவ்வொன்றினதும் விவரங்கள் அசையா, அசையும் சொத்துக்கள் மற்றும் தகவல்கள் திரட்டப்பட்டு கணினிமயப்படுத்தப்பட்டுள்ளன.

கூட்டுறவு அமைச்சுக்கள் அங்கத்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு உரிய முறையில் உதவ வேண்டும் இல்லாமல் அவை பெயரளவில் இருப்பதில் பயன் இல்லை. கூட்டுறவு அமைப்பின் பணிப்பாளர் சபையில் சிலர் 30 வருடங்களாக உள்ளனர். இது அரசியலுக்குப் பொருந்தலாம். ஆனால் கூட்டுறவுக்குப் பொருந்தமாட்டாது.

மாணவர்கள் பாடசாலைப் பருவத்தில் ஆர்வத்தோடு கற்று முன்னேற வேண்டும். மாணவர்கள் அரசியல்வாதிகளின் காலில் விழுந்து விடக் கூடாது. அவர்கள் பெற்றோர், ஆசிரியர், மதகுரு ஆகியோரிடம் ஆசி பெறலாம். நானும் ஆசிரியர்தான். இப்பொழுது அரசியல்வாதி. என்னுடைய காலில் விழுந்து ஆசி பெறுவதையும் ஏற்றுக்கொள்ள மாட்டேன். கல்வியில் முன்னேற வேண்டும். அதுதான் நிரந்தரமான முன்னேற்றம். – என்றார். (ற–11)

## ஆன்மிக சொற்பொழிவு

சாவகச்சேரி, செப்.16

சாவகச்சேரி கல்வயல் அயிலடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு 'தொண்டர்தம் பெருமை' என்னும் தலைப்பில்தொடர்ஆன்மிகச் சொற்பொழிவு நடத்தப்படவுள்ளது. கவிஞர் த.நாகேஸ்வரன் சொற்பொழிவை நடத்தவுள்ளார். (ற)

## நெல் கொள்வனவு நிறுத்தத்தால் விவசாயிகள் பெரும் நெருக்கடி

முல்லைத்தீவு, செப். 16

உடையார் கட்டு கமநலசேவை நிலையத்தில் நெல் கொள்வனவு இடைநிறுத்தப்பட்டதால் விவசாயிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளதாவது:–

உடையார் கட்டு கமநல சேவை நிலையத்தால் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்படும் என்ற அறிவித்தலுக்கு அமைய கமநலசேவை நிலையத்தால் வழங்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து நெல்லை கடந்த 8 ஆம் திகதி கமநல சேவை நிலையத்துக்கு கொண்டு சென்றோம்.

8 ஆம் 9 ஆம் திகதி வரை நெல்லை கொள்வனவு செய்து விட்டு திடீரென 9 ஆம் திகதிக்குப் பின்னர் கொள்வனவு செய்யமுடி யாது என கொள்வனவை நிறுத்தி விட்டார்கள். அதனால் கமநல சேவை நிலையத்தின் முன்பாக இரவு, பகல் காத்திருக்க வேண்டியுள்ளது.– என்று தெரிவித்துள்ளனர்.

இது குறித்து முல்லைத்தீவு கமநல சேவை நிலையத்தின் உதவி ஆணையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது:–

நெற்களஞ்சியத்துக்கு அனுமதியளிக்கப்பட்ட அளவான நெல் கொள்வனவு செய்யப்பட்டது. களஞ்சியங்கள் நிரம்பி விட்டன. 14 உழவு இயந்திரங்கள் நெல்லுடன் உடையார் கட்டுக் கமநல சேவை நிலையத்தில் நிறுத்தப்பட்டிருப்பதால் கொள்வனவு இடைநிறுத்தப்பட்டுள்ளது. அரச அதிபருடன் கலந்துரையாடி இது குறித்து முடிவு எடுக்கப்படும்.– என்றார். (ற–500)

# பொருத்திய நாளிலிருந்து ஒளிராத தெருவிளக்குகள்

## சாவகச்சேரியில் மக்கள் விசனம்

சாவகச்சேரி,செப்.16

சாவகச்சேரி பிரதேச சபையால் பிரதேச வீதிகளில் பொருத்தப்பட்ட தெரு விளக்குகளில் பெரும்பாலானவை ஒளிர்வதில்லை என்று பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

சபை உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒவ்வொரு உறுப்பினருக்கும் தலா 15 தன்னியக்க தெரு விளக்குகள் வீதம் கொள்வனவு செய்து பிரதேசத்தின் பல இடங்களில் பொருத்தப்பட்டன. அவை பொருத்தப்பட்ட நாளிலிருந்து இன்று வரை ஒளிர்வதில்லையென பொதுமக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,


தமக்கு வழங்கப்பட்ட 15 தன்னியக்க தெரு விளக்குகள் சரசாலை, கனகன்புளியடிச் சந்தியிலிருந்து மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவிலடி வரை பொருத்தப்பட்டன. அவை பொருத்தப்பட்டு இரண்டு மாதங்களானபோதும் தற்போது ஒரேயொரு தெரு விளக்கு மட்டும் ஒளிர்கிறது. ஏனையவை ஒளிர்வதில்லை என்று தெரிவித்தார். இது தொடர்பில் பிரதேச சபையில் உறுப்பினர்கள் குறிப்பிட்டபோதும் பயன் ஏதுமில்லை என்றும் அவர் தெரிவித் தார்.

இது தொடர்பில் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது:–

சபை இருந்த காலத்தில் பொருத்தப்பட்ட தெரு விளக்குகள் ஒளிர்வதில்லையென பொதுமக்கள் முறைப்பாடு வழங்கி வருகின்றனர். தெருவிளக்கு ஒளிராத இடங்களைச் சேர்ந்த மக்கள் தமது பகுதி உப அலுவலகத்துடன் தொடர்பு கொண்டால் அவற்றைத் திருத்த ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படும். தெருவிளக்குகளின் திருத்த வேலைகளை இலங்கை மின்சார சபை உத்தியோகத்தர்களே மேற்கொள்வதால் சபையின் ஒரேயொரு ஊழியர் அந்தந்த வீதிகளுக்கு அவர்களை அழைத்துச் சென்று திருத்தம் மேற்கொண்டு வருகின்றார். – என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு சிரமதானம்



யாழ்ப்பாணம், செப்.16

உள்ளூராட்சி வார தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி பிரதேச சபையின் அனுமதியுடன் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தால் கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரம தானம் மேற்கொள்ளப்பட்டது.

வளர்மதி சனசமூக நிலையத்தின் தலைவர் க.தயாளன் தலைமையில் ஆரம்பமான இந்தச் சிரமதான நிகழ்வு மதியம் வரை இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சனசமூக நிலைய அங்கத்தவர்கள், விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் என முப்பதுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிரமதான வேலைகளை மேற்கொண்டனர்.

மயான வளவில் காணப்பட்ட பற்றைகளில் ஒரு பகுதி வெட்டி யழிக்கப்பட்டதுடன் கழிவுகளும் சேகரிக்கப்பட்டு தீ மூட்டி எரிக்கப்பட்டன. இனிவரும் காலங்களிலும் இந்தச் சிரமதான வேலைகளை மாதத்தில் ஒரு தடவை தாம் செய்யவுள்ளதாகவும், இதற்கு தமது நிலைய அங்கத்தவர்கள் பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனவும் வளர்மதி சன்சமூக நிலையச் செயலாளர் தே.அமிலன் தெரிவித்தார். (ற-288)

## மனித உரிமை மீறல்கள் தொடர்பில் உண்மைகள் கண்டறியப்பட வேண்டும்

### டக்ளஸ் தேவானந்தா எம்.பி. கூறுகின்றார்

யாழ்ப்பாணம், செப். 16

போரின் போது ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட வேண்டும் எனவும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும்– ஈ.பி.டி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

எமது மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காக நாம் உறுதியோடு குரல் கொடுத்து வருகின்றோம். இதேவேளை– சர்வதேச விசாரணையா? உள்ளக விசாரணையா? தேவை என்ற நிலைப்பாட்டில் எமது மக்களுக்குக் கிடைக்க வேண்டிய நீதி தடைப்பட்டுவிடக்கூடாது என்பதிலும் நாம் விழிப்புடன் இருந்து வருகிறோம்.

அழிவுகளையும், இழப்புக்களையும் சந்தித்த எமது மக்களுக்கு நீதி நிலை நாட்டப்பட்டு, உரிய பரிகாரம் தேடப்படல் வேண்டும். நீண்ட கொடிய போரினால் ஏற்பட்ட அனைத்து மனித உரிமை மீறல்கள் குறித்தும் விசாரிக்கப்பட்டு உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். எமது மக்களின் இழப்பீடுகளுக்கும் பரிகாரம் தேடப்பட வேண்டும்.

அதற்காகவே, நீதி விசாரணையை நாம் வலியுறுத்தி நிற்கின்றோம். நாம் வலியுறுத்தும் நீதி விசாரணைக்கான கோரிக்கையின் ஊடாக எமது மக்களின் அரசியல் உரிமைப் பிரச்சினையை தீர்ப்பதற்குத் தேவையான தேசிய நல்லிணக்கத்தை வலுப்படுத்த முடியும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அதுமட்டுமன்றி, நீண்டகாலமாகப் புரையோடிப் போயுள்ள அரசியல் உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரமானதும், நீடித்து நிலைக்கக் கூடியதுமான தீர்வையும் காண முடியும்– என்றுள்ளது. (ற-5)

## பளை தர்மக்கேணி கிராமத்தில் சேதனப் பசளைத் தொட்டிகள்

பளை, செப்.16

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன் பளை தர்மக்கேணி கிராமத்தில் சேதனப் பசளை உருவாக்கும் தொட்டிகள் அமைக்கப்படவுள்ளன.

நிறுவன அனுசரணையுடன் பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தால் தர்மக்கேணி கிராமத்தில் ஆரம்பிக்கப்பட்ட 'பசுமையை வளர்ப்போம்' திட்டம் பெரு வெற்றியளித்ததையடுத்து அங்குள்ள மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் சேதனப் பசளை உருவாக்கும் தொட்டிகள் அமைக்க நிதி உதவி வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பாக அண்மையில் நிறுவனப் பிரதிநிதிகள் கிராமத்துக்கு வருகை தந்து கிராம வளர்ச்சியைப் பார்வையிட்டனர். அங்கு காணப்படும்கழிவுப் பொருள்களைக் கொண்டு சேதனப் பசளை உருவாக்கக் கூடிய வளங்கள் காணப்பட்டதையடுத்து அங்கு பல பயனாளிகளைத் தெரிவு செய்து சேதனப் பசளை உருவாக்கல் தொடர்பான பயிற்சிகளையும் வழங்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

தர்மக்கேணி கிராமத்தைச் சேர்ந்த 45 குடும்பங்களுக்கு தலா 6 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சிமெந்துத் தொட்டிகள் அமைத்து வழங்கப்படவுள்ளது என்று– சங்கத் தலைவர் கு.ந.பாலசந்திரன் தெரிவித்தார்.

தர்மக்கேணி கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட 'பசுமையை வளர்ப்போம்' திட்டத்தில் 100க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் விநியோகம் மேற்கொண்டதுடன் அங்கு பனம் பொருள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு பயிற்றப்பட்டவர்களால் ஆக்கப்பட்ட பனை உற்பத்திப் பொருள்கள் கண்காட்சி அண்மையில் பளை முல்லையடியில் உள்ள சங்க மண்டபத்தில் நடத்தப்பட்டிருந்தது. (ற)

## சட்டவிரோத மின்சாரம்: மூவருக்கு அபராதம்

சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த மூவருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் தலா 10 ஆயிரம் ரூபாவீதம் அபராதம் விதிக்கப்பட்டது. மின்சார சபைக்கு ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகையையும் செலுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

கொழும்பிலிருந்து வந்திருந்த விசேட குழுவினர் தென்மராட்சி பிரதேசத்தின் பல இடங்களில் சாவகச்சேரி மற்றும் கொடிகாமம் பொலிஸாரின் உதவியுடன் தேடுதல் நடத்தினர்.

அதன்போது சரசாலை வடக்கு, மட்டுவில் வடக்கு, வரணி அகிய பகுதிகளில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற மூவர் இனங்காணப்பட்டதுடன், அவர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது மின்மானியில் துளையிட்டு மின்சாரம் பெற்ற வரணி வாசிக்கு 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்ததுடன் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட இழப்பீட்டுத் தொகையாக 22 ஆயிரத்து 70 ரூபாவும் செலுத்துமாறும், சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற சரசாலை மற்றும் மட்டுவில் வடக்கு வாசிகளுக்கு தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டதுடன் இலங்கை மின்சார சபைக்கு ஏற்பட்ட இழப்பீடாக முறையே 8 ஆயிரத்து 190 ரூபா மற்றும் 8ஆயிரத்து366ரூபா செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டது. (ற)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், செப். 16

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபை ஒழுங்கமைத்துள்ள கொக்குவில் உபஅலுவலகத்துக்குட்பட்ட வட்டாரங்களான 7, 8, 9 மற்றும் 16க்கான நடமாடும் சேவை எதிர்வரும் வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பி.ப. 2 மணி வரை இடம்பெறவுள்ளது என்று நல்லூர் பிரதேச சபைச் செயலர் தெரிவித்துள்ளார்.

இந்த நடமாடும் சேவை கொக்குவில் மேற்கு பிடாரி அம்மன் சனசமூக நிலையத்தில் இடம்பெற வுள்ளது என்றும் இந்த நடமாடும் சேவையில் பிரதேச மக்களைப் பங்கு கொண்டு பயன்பெறுமாறும் நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர். (ற-ரி2)

சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
பதிவு இல-J/1594 பதிவு திகதி 11.03.1972
பதவி வெற்றிடம்

01. பதவி - அலுவலக வேலைஉதவியாளர் (01)
குறியீட்டு இல- 317/16(66/2006 இன்படி)
சம்பள அளவுத் திட்டமும்- 9200-70x10-75x10-10650.00
வயதெல்லை - 18-45 வரை
பால் -ஆண்
தகைமைகள்:-
அ.கூட்டுறவு பணியாளர் 17வது சம்பளத்திட்ட பதவி ஒன்றில் 01 வருடத்திற்கு குறையாத அனுபவமும் 05 ஆம் வகுப்புக் கல்விச் சான்றிதழும்
அல்லது
ஆ. 08 ஆம் வகுப்புக்கல்விச் சான்றிதழ்
விண்ணப்ப முடிவுதிகதி:-29.09.2015
குறிப்பு:-
01 கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது.
02. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்களின் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
03. சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
மேற்படி பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினைக் காரியால யத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ்,பிறப்புச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், அண்மையில் பெற்ற இரு நற் சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகள் இணைக் கப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் " அலுவலக வேலை உதவியாளர் (317/16) பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிட்டு தலைவர்,சாவகச்சேரி பனை-தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்" டச்சு வீதி சாவகச்சேரி எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டு.
பணிப்பாளர் சபைக் கட்டளைப்படி
சி. பரராசசிங்கம்
தலைவர்
ப.தெ.வ. அபி.கூட். சங்கம்
டச்சு வீதி
சாவகச்சேரி

புலோலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
புலோலி கிழக்கு, பருத்தித்துறை
பதவி வெற்றிடங்கள் - நிரந்தரம்
எமது சங்கத்தின் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
01.பதவி - கணக்காளர் 104/9
சம்பளகுறியீட்டு இல 108/81 சுற்றுநிருப இலக்கத்தின்படிய 104/7
சம்பளத்திட்டம் 10950 - 130 X 10 - 140 X 10 - 13650.00
சு.நி.இல 66/2006ன்படி இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் வழங்கப்படும் ஏனைய படிகளும் வழங்கப்படும்.
தகைமைகள் அ. கூட்டுறவுப் பணியாளரின் 10வது சம்பளத்திட்டத்தில் அமைந்த கணக்காளர் அல்லது உள்ளக கணக்காய்வாளர் பதவியில் பெற் றுள்ள 3 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு பணியாளர் சம்பள அளவுத்திட்டம் 11 இல் உள்ளகக் கணக்காய்வாளர்/கணக்குப் பதிவாளர்/ கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் பெற்றுள்ள 6 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ. ஐக்கியராட்சிய கணக்குப்பதிவாளர் நிறுவ னத்தின் இறுதிப்பரீட்சையில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் மேற்பார்வை மட்டப் பதவியில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
அல்லது
இ. கூட்டுறவு பணியாளர் தராதரப்பத்திர உயர் தரம் சித்தி/ கல்விப்பொதுதராதரப் பத்திரம் உயர் தரத்தில் கணக்கியல் உட்பட 03 பாடங்களில் சித்தியுடன் மேற்பார்வை மட்டப் பகுதியில் கணக்கியல் அல்லது கணக்காய்வுத் துறையில் 06 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
02. பதவி - களஞ்சிய முகாமையாளர் 208/13
சம்பளத்திட்டம் 9950 - 85 x 10 90x10 - 11700.00 இத்துடன் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட சம்பள அதிகரிப்பு படிகளும் வழங்கப்படும்.
கல்வித்தகைமை கூட்டுறவுப்பணியாளர் 14ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது 15 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
அல்லது
கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் (சா.த) க.பொ.த (சா.த) இல் கணிதம் மொழி உள்ளடங்கலாக 4 திறமைச்சித்தியுடன் 6 பாடங்களில் சித்தியும் சம்பந்தப்பட்ட துறையில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
பொதுவானது
1. 2/2015 சுற்று நிருபத்தின்படி அடிப்படைச்சம்பளத்தின் 30 வீத சம்பள அதிகரிப்பும் வழங்கப்படும்.
2. பிறப்புச் சான்றிதழ், கல்வித்தகைமைச் சான்றிதழ், தொழில் தகைமைச்சான்றிதழ் என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
3. வயதெல்லை 18 - 45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
4. சங்க ஊழியர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.
5. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுச்சட்டத்திற்கமைய பிணை செலுத்தப்பட வேண்டும்.
சங்கத்தில் பெறப்பட்ட விண்ணப்பப்படிவத்தில் கோரப்பட்டவாறான விவரங்கள் பூர்த்தி செய்து சான்றிதழ்களின் நிழற்பிரதிகளுடன் 30.09.2015 ஆம் திகதிக்கு முன்னர் தலைவர் புலோலி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
தலைவர்
புலோலி ப.நோ.கூ.சங்கம் (12653)(14.16.17) 15.09.2015

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்பாண்டப் பொருள்களை சந்தைப்படுத்துவதில் சிரமம்

## உற்பத்தியாளர்கள் கவலை

மட்டக்களப்பு, செப்.16

தற்போது பிளாஸ்டிக் பொருள்களின் பாவனை அதிகரித்துள்ள நிலையில், மட்பாண்டப் பொருள்களை சந்தைப்படுத்துவதில் சிரமத்தை எதிர்நோக்குவதாக மட்பாண்ட உற்பத்தியாளர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரிய போரதீவு, செங்கலடி, ஏறாவூர், வாழைச்சேனை ஆகிய இடங்களில் பாரம்பரிய தொழிலாக மட்பாண்டத் தொழில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. இயற்கையாகக்கிடைக்கும் களிமண், சேம்புமண் மற்றும் நீரைக் கொண்டு மட்பாண்டப் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒரு வண்டி களிமண் ஆயிரத்து 500 ரூபாவாகவும், ஒரு வண்டி சேம்பு மண் 800 ரூபாமற்றும் செய்யப்பட்ட மட்பாண்டங்களை சுடுவதற்கான தேங்காய் உரிமட்டையொன்று இரண்டு ரூபா வீதமும் கொள்வனவு செய்யப்படுகின்றன.

வடிவமைக்கும் மட்பாண்டங்களுக்கேற்ப விலை வேறுபடுவதாகவும் 8 ரூபா முதல் 100 ரூபாவரை மட்பாண்டங்களை தாங்கள் விற்பனை செய்வதாகவும் அந்தத் தொழிலில் ஈடுபடுபவர்கள் தெரிவித்தனர்.

தாங்கள் உற்பத்தி செய்யும் மட்பாண்டப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்குரிய நடவடிக்கையை கைத்தொழில் திணைக்களம் மேற்கொள்ள வேண்டுமெனவும் இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பெரிய போரதீவு மற்றும் வாழைச்சேனையில் 6 மாதங்களைக் கொண்ட மட்பாண்ட தொழில் பயிற்சிநெறி இடம்பெற்றுள்ளது. இந்தப்பயிற்சியை பூர்த்தி செய்தவர்கள் சுயதொழிலாக தங்களது வீடுகளில் மட்பாண்டங்களை உற்பத்தி செய்து வருகின்றனர் என்று கிராமிய தொழிற்றுறைத் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலக உதவிப் பணிப்பாளர் கே.இளங்குமுதன் தெரிவித்துள்ளார். (ற)

# நியாய விலை இல்லாததால் எள் செய்கையாளர் சிரமம்

## வடக்கு விவசாய அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்

முல்லைத்தீவு, செப். 16

முல்லைத்தீவு மாவட்டத்தில் எள்ளுச் செய்கையை மேற்கொண்ட செய்கையாளர்கள் தமது எள்ளை நியாய விலையில் கொள்வனவு செய்ய எவரும் முன்வராததால் பெரும் நட்டத்தை எதிர்கொள்வதாகத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளனர்.

எம்மிடம் 5 ஆயிரம் கிலோ எள் இருக்கின்றது. வெளிச்சந்தையில் எள் கிலோ 300 ரூபாவாக விற்கப்படுகின்றது. ஆனால் எம்மிடம் 180 ரூபாவுக்கே கொள்வனவு செய்ய முற்படுகின்றனர். அதனால் நாம் அவற்றை விற்காது வைத்துள்ளோம். எம்மிடமுள்ள எள்ளை நியாய விலையில் கொள்வனவு செய்ய ஆவன செய்யப்பட வேண்டும்.- என்று அவர்கள் விவசாய அமைச்சரிடம் கோரியுள்ளனர்.

இதுபற்றி கவனமெடுக்கப்படும் என்றும், விவசாயிகளிடம் உள்ள எள்ளின் தொகை குறித்த விவரங்களை எழுத்து மூலம் தருமாறும் விவசாய அமைச்சர் தெரிவித்தார். (ற-500)

# கரவெட்டிப் பிரதேச வீதிகளை திருத்துவதற்கு நிதி ஒதுக்கீடு

## 'வீட்டுக்கு வீடு கிராமத்துக்கு கிராமம்' திட்டத்தின் கீழ்

கரணவாய், செப். 16

'வீட்டுக்கு வீடு கிராமத்துக்கு கிராமம்' திட்டத்தின் கீழ் கரவெட்டிப் பிரதேசத்துக்குட்பட்ட பகுதியிலுள்ள வீதிகளைத் திருத்துவதற்கு 28 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியின் மூலம் மக்களின் பயன்பாடு அதிகமாகவுள்ள வீதிகள் முன்னுரிமை அடிப்படையில் புனரமைக்கப்படவுள்ளன.

அந்த அடிப்படையில் கரணவாய் மேற்கு வல்லியாவத்தை வீதி மற்றும் நாவலர் மடம் வீதி என்பன புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சிவசிறி தெரிவித்துள்ளார்.

இதேவேளை வாழ்வெழுச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட 7 லட்சம் ரூபாநிதியின் மூலம் கரவெட்டி தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் குடிதண்ணீர் விநியோக நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கரவெட்டி தெற்குப் பகுதியிலுள்ள சுமார் 300 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிதண்ணீர் வசதிகள் இன்றிப் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனை நிவர்த்தி செய்யும் நோக்கமாக இந்தக் குடிதண்ணீர் விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், அதற்குரிய கொடுப்பனவுகள் கிடைத்துள்ளன எனவும் நீர்விநியோக நடவடிக்கை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பிரதேச செயலர் சி.சிவசிறி தெரிவித்தார். (ற-108)

# ஏறாவூர் நகர சபையில் அளவுக்கதிகமான ஆளணி

கொழும்பு, செப்.16

ஏறாவூர் நகர சபையில் அளவுக்கதிகமான ஆளணி காணப்படுவதாக முதலமைச்சரின் செயலாளர் அப்துல் அஸீஸ் தலைமையில் உள்ளகப் பரிசீலனை மேற்கொண்ட குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக ஏறாவூர் நகர சபையில் 142 பேர் நிரந்தரமாகவும், 27 பேர் தற்காலிக ஊழியர்களாகவும், 40 பேர் ஒப்பந்த அடிப்படையிலும் நியமிக்கப்பட்டுள்ளார்கள் என்ற விவரங்கள் அடங்கிய அறிக்கையை செயலாளர் முதலமைச்சரிடம் சமர்ப்பித்துள்ளார்.

இது பற்றி அந்தக் குழு கடந்த வாரம் உள்ளகப் பரிசீலனை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்துள்ளது. ஏறாவூர் நகர சபையில் மொத்தமாக 116 ஊழியர்களே அனுமதிக்கப்பட்ட ஆளணியினராக உள்ள நிலையில் அங்கு 105 பேர் மேலதிகமாக உள்ளார்கள்.

இவர்களுக்கு மாதாந்தம் 5 மில்லியன் ரூபா உள்ளூராட்சி ஆணையாளரால் சம்பளமாக வழங்கப்படுகின்றது. இந்த நிலையில் மக்களிடமிருந்து சேகரிக்கப்படும் வரிப்பணத்தை கூடுதலாக மக்களது சேவைக்கே பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்க வேண்டும் என உள்ளகப் பரிசீலனைக் குழு தனது பரிந்துரையில் தெரிவித்துள்ளது. (ற)

# மோதலில் நால்வர் காயம்: குளவி கொட்டி இருவர் பாதிப்பு

இரு பகுதியினருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் பாடசாலை மாணவன், இரு பெண்கள் உட்பட நால்வர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கச்சாய் தெற்கில் இடம்பெற்றுள்ளது.

கச்சாய் கடலேரியில் வலைகள் போடுவதில் ஏற்பட்ட பிரச்சினையே மோதலுக்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டது. அதே இடத்தைச் சேர்ந்த ரஞ்சன் ராகினி (வயது-39), அவரது பிள்ளைகளான ரஞ்சன் அச்சுதன் (வயது-18), ரஞ்சன் ரஜீந்திரன் (வயது-15) மற்றும் மகேந்திரம் சோமகலா (வயது-44) ஆகியோரே காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதே வேளை வீதியில் நடந்து வந்த யுவதிகள் இருவர் கருங்குளவிக் கொட்டுக்குள்ளாகியுள்ளனர். நேற்றுமுன்தினம் வரணி, குடமியனில் நடந்த இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த [illegible] கீர்த்தனா (வயது-18), சிவலிங்கமூர்த்தி ரமிகா (வயது-18) ஆகியோரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களாவர். (ற)

# மழைப்பழம் சிறுவர் கூத்து இன்று

யாழ்ப்பாணம், செப். 16

கிழக்குப் பல்கலைக் கழக நுண் கலைத் துறை மாணவன் இ.கங்கை கோபாலனின் தயாரிப்பில் சுதுமலை சின்மய பாரதி வித்தியாலய மாணவர்கள் வழங்கும் மழைப் பழம் சிறுவர் கூத்து இன்று மாலை 5மணி தொடக்கம் 8மணி வரை யாழ்.சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலய முன்றிலில் பாரம்பரிய அரங்கான வட்டக்களரி அரங்கில் அரங்கேற்றம் காணவுள்ளது.

இந்தப் பாரம்பரிய ஆற்றுகையின் அண்ணாவியாராக சி.ஞானசேகரமும் கொப்பியாசிரியராக கூத்துப் புலவர் செ.சிவநாயகமும் செயற்படவுள்ளனர்.

இந்தச் சிறுவர் ஆற்றுகை நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ற-ரி2)

# முதியோருக்கான கொடுப்பனவை பெறலாம்

சாவகச்சேரி, செப்.16

தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கான செப்ரெம்பர் மாதக் கொடுப்பனவுகள் இன்று தொடக்கம் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களில் வழங்கப்படவுள்ளன. இந்தக் கொடுப்பனவுகளை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கூட்டம்

தேசிய திட்டமிடல் திணைக்களத்தினர் தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க பணியகத்தினருடன் இணைந்து 2016 – 2018 காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கான அபிவிருத்தித் திட்டங்களை முன்னுரிமைப் படுத்தி முடிவாக்குதல் தொடர்பான கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி மு.ப. 9 மணிக்கு மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அனைத்து திணைக்களத் தலை வர்களுக்கும் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (ற)

# சதுர்த்தி உற்சவம்

சாவகச்சேரி, செப்.16

சாவகச்சேரி பெரியமாவடி உளுத்தம்புலம் விநாயகர் ஆலயத்தில் ஆவணிச் சதுர்த்தி உற்சவம் நாளை வியாழக்கிழமை முற்பகல் 9 மணி முதல் நடைபெறவுள்ளது.

மு.ப. 9 மணிக்கு விசேட சங்காபிசேகம் இடம்பெற்று மாலை 6.30 மணிக்கு வசந்த மண்டப பூசை, திருவூஞ்சல், சுவாமி வெளி வீதி வருதல் இடம்பெறும்.

இரவு 8.30 மணிக்கு தென்மராட்சி இலக்கிய அணியின் சிறப்புப் பட்டிமன்றமும் இடம்பெறும். 'இன்றைய இளைய தலைமுறைக்கு வழிகாட்டுவதில் பெரிதும் முன்னிற்கும் இதிகாசம் இராமாயணமே ! மகா பாரதமே !' என்னும் தலைப்பில் ஆசிரியர் அ.வாசுதேவா தலைமையில் தென்மராட்சி பிரதேச ஆசிரியர் குழாத்தால் இந்தப் பட்டிமன்றம் நடத்தப்படவுள்ளது.

இராமாயணமே என்னும் தலைப்பில் ஆசிரியர்களான த.நாகேஸ்வரன், சுசுதர்சன், பா.விக்கினேஸ்வரன் ஆகியோரும் மகாபாரதமே என்னும் தலைப்பில் ஆசிரியர்களான ச.மார்க்கண்டு, சோ.கோகிலன், வே.உதயகுமார் ஆகியோரும் விவாதிக்கவுள்ளனர். (ற)


முதலாம் ஆண்டு நினைவலைகள்

அமரர் சின்னையா தர்மலிங்கம்

(ஓய்வு பெற்ற இராணுவ அலுவலக உத்தியோகத்தர், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்)



பிறப்பு 05.10.1935 | இறப்பு 28.08.2014

திதி- திருதியை(16.09.2015)

கடந்த வருடம் சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் அமரர் சின்னையா தர்மலிங்கம் அவர்களின் ஆண்டு திவசம் இன்று (16.09.2015) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

(இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.)

பாலாவி வடக்கு, கொடிகாமம். 077 698 7025

குடும்பத்தினர்.

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர் கதிர்காமர் விநாசித்தம்பி (தம்பு)

(அரச கட்டட ஒப்பந்த காரர்)

கடந்த 18.05.2015 இல் சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் கதிர்காமர் விநாசித்தம்பி அவர்களின் [illegible] (17.09.2015) வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் இல்லத்தில் நடைபெறவிருக்கும் [illegible] பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம் 29.07.1937 | மறைவு 18.05.2015

[illegible], புலோலி வடக்கு, பருத்தித்துறை.

தகவல் : குடும்பத்தினர் 021 300 2581

முதலாம் ஆண்டு பிரார்த்தனை



திருமதி ஜீவமணி சிவலிங்கம்

தோற்றம் 1953.10.04 | மறைவு 2014.08.28

திதி:திருதியை

அம்மா என்றழைக்க அருள் தந்த தாயே!
உம்மை நினையாமல் ஒரு கணமும்
இல்லை....
வரிகளால் வடிக்க முடியாத வலிகள் தான்,
எங்கள் விழிகள் வடிக்கும் கண்ணீர்....!
அம்மா...!
உங்கள் வரவை எதிர்பார்த்து [illegible]

90, சம்பியன்லேன், கொக்குவில்.

தங்கள் குடும்பத்தினர்.

(64548) (14,16)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## புதிய வசதியுடன் வெளியாகும் அப்பிள் சிறி (Siri)




குரல் வழி கட்டளைகள் மூலம் அப்பிள் சாதனங்களை இயக்கும் வசதியைத் தரும் அப்பிளிக்கேசன் ஆன அப்பிள் Siri இன் புதிய பதிப்பு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

அதாவது அண்மையில் பொதுப் பாவனைக்காக வெளியிடப்பட்ட iOS 9.1 பீட்டா பதிப்புடன் இணைத்து இந்த அப்பிளிக்கேசன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இது பல்வேறு குரல்களையும் இனம் கண்டு செயல்படக் கூடியதாக வடிவமைக்கப்பட்டுள்ளமை விசேட அம்சமாகும்.

காரணம் இதற்கு முன்னை பதிப்புக்களில் பலரது குரல்களை இந்த அப்பிளிக்கேஷன் முறையாக இனம் கண்டு செயற்படாத குறை காணப்பட்டிருந்தது.

இவ்வாறு ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட குரல்களை அடையாளம் காட்டுவதற்கு General Siri Allow 'Hey Siri இனுள் உள்ள வசதியைச் செயற்படுத்த வேண்டும்.

மேலும் இந்த அப்பிளிக்கேசன் இன்னும் ஓரிரு வாரங்களில் iPhone 6s மற்றும் iPhone 6s Plus உடன் இணைத்து அறிமுகம் செய் யப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சூரிய வெளிச்சத்தின் மூலம் தானாகவே சார்ஜ் ஆகும் மின்கலங்கள்

சம காலத்தில் சூரிய வெளிச்சத் தை மின் சக்தியாக மாற்றும் சூரி யப் படலங்கள் பாவனையில் இருப் பது அனைவரும் அறிந்ததே.

எனினும் இவ்வாறு மாற்றப்படும் மின்சக்தியை சேமிப்பதற்கு தனியான மின்கலங்கள் பயன்படுத்தப்படும்.

ஆனால் தற்போது சூரிய ஒளியைப் பயன்படுத்தி தானாகவே சார்ஜ் ஆகக்கூடிய lithiumdIon மின்கலங்களை ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.




ஒளி ஊடுபுகவிடக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த மின்கலம் கடந்த மாதம் டோக்கியோவில் இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சி ஒன்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இம் மின்கலத்தைக் கண்டுபிடிப்பதற்கான அடித்தளம் 2013 ஆம் ஆண்டு Kogakuin பல் கலைக் கழகத்தைச் சேர்ந்த விரிவுரையாளரான Mitsunobu Sato என்பவரால் இடப்பட்டது.

3.6 வோல்ற் மின்னழுத்தத்தைக் கொண்ட இம் மின்கலம் 20 தடவைகள் வெற்றிகரமாக சார்ஜ் செய்து பரிசீலிக்கப்பட்டுள்ளது.

## எழுத்து வடிவில் நேரத்தைக் காண்பிக்கும் கடிகாரம்



இலக்க முறையினை அடிப்படையாகக் கொண்ட டிஜிட்டல் கடிகாரம் மற்றும் முட்களின் அடிப்படையில் நேரத்தைக் காண்பிக்கும் அனலொக் கடிகாரங்கள் தற்போது பாவனையில் உள்ளன.

இவ்வாறிருக்கையில் எழுத்து வடிவில் நேரத்தைக் காண்பிக்கக்கூடிய கடிகாரம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதில் ஒவ்வொரு இலக்கங்களுக்குமான ஆங்கிலச் சொற்களை வெளிப்படுத்தும் மின்குமிழ்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

குறித்த ஒரு நேரத்துக்கான சொற்களுக்குரிய மின்குமிழ்கள் ஒளிர்வதன் மூலம் இந்தக் கடிகாரம் செயற்படுகின்றது. 28 X 28 X 3 cm என்ற அளவிடைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ள இக் கடிகாரத்தின் விலை 159 டொலர்கள் ஆகும்.

## கைப்பேசிகளுக்கான மின்கலங்களின் ஆயுட்காலத்தை அதிகரிக்கும் அப்பிளிக்கேசன்

சாதாரண கைப்பேசிகளை விடவும் ஸ்மார்ட் கைப்பேசிகளில் பயன்படுத்தப்படும் மின்கலங்களில் விரைவாக சார்ஜ் குறைந்து செல்கின்றமை அறிந்ததே.

இதற்காக கூடிய Amh உடைய மின்கலங்கள் தயாரிக்கப்பட்டு அறிமுகம் செய்யப்படுகின்ற போதிலும் மின்கலங்களின் ஆயுட்காலத்தை அதிகரிக்க மேலும் பல ஆய்வுகள் இடம்பெற்றுவருகின்றன.

இவற்றின் ஓர் அங்கமாக அமெரிக்காவின் Purdue பல்கலைக் கழக ஆய்வாளர்கள் குறியீடுகளை (Code) கொண்ட அப்பிளிக்கேசன் ஒன்றை வடிவமைத்துள் ளனர்.

எனினும் இது அன்ரோயிட் இயங்கு தளங்களில் செயல்படக்கூடிய மொபைல் சாதனங்களுக்கு மட்டுமே பொருத்தமானதாக இருக்கின் றது.

இந்த அப்பிளிக்கேசன் செயற்படும் போது மின்கலங்களின் ஆயுட் காலம் 16 சதவீதத்தினால் அதிகரிக்கின்றது.

இதனைக் கண்டுபிடிப்பதற்காக சுமார் 2000 வரையான Samsung Galaxy S3 மற்றும் நீ4 ஸ்மார்ட் கைபேசிகளில் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2016 ஆம் ஆண்டில் எரிக்கும் வெயில்

## விஞ்ஞானிகள் அதிர்ச்சி தகவல்

லண்டன், செப். 16
தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகும் காபனீர் ஒக்சைட் உள்ளிட்ட மாசு காரணமாக உலகம் வெப்பமயமாகியுள்ளது. இதனால் பருவநிலையில் மாற்றம் ஏற்பட் டுள்ளது. அதனால் இயற்கையில் மாற்றம் ஏற்பட்டுக் கடந்த சில ஆண் டுகளாக வெயில் சுட்டெரிக்கிறது.

குறிப்பாக கடந்த 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் அதிக வெயில் காரணமாகக் கடும் வெப்பம் நிலவியது .ஆனால் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு, அதாவது அடுத்த ஆண்டில் இதை விடக் கடுமையான வெயில் கொளுத்தும் எனவும், அதன் மூலம் கடும் வெப்பம் வெளிப்படும் எனவும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.இங்கிலாந்தின் மிக உயரிய வானிலை ஆராய்ச்சி மையமான எல் நினோ இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.



அட்லாண்டிக், பசிபிக் கடல் மேற்பரப்பில் வீசும் காற்றானது ஈரப் பதத்தை அகற்றி விட்டு வறட்சி நிலையை உருவாக்கும். அதன் காரணமாக ஆசியா, ஆஸ்திரே லியா, வடக்கு ஆபிரிக்கா, சகாராப் பகுதி, அமெரிக்காவின் கலிபோர் னியா உள்ளிட்ட பகுதிகள் வெப்பத் தால் உலர்ந்து விடும்.அதன் காரண மாக மழை அளவு குறைந்து வரலாறு காணாத வகையில் வறட்சி ஏற்படும். அட்லாண்டிக் மற்றும் பசிபிக் பகுதிகளில் புயல் தாக்குதல்கள் அதிகம் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த–ரி4)

## எகிப்துப் படையினரால் தவறுதலாக கொல்லப்பட்ட சுற்றுலாப் பயணிகள்



எகிப்துப் பாதுகாப்புப் படையினருக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே நேற்று நடைபெற்ற மோதலொன்றில், மெக்சிக்கோ சுற்றுலாப் பயணிகள் உட்பட 12 பேர், எகிப்தியப் படையினரால் தவறுதலாகக் கொல்லப்பட்டுள்ளனர் என உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

தடை செய்யப்பட்ட மேற்குப் பாலைவனப் பகுதியான வாஹட்டுக்கு, 4 வாகனங்களில் பயணம் செய்த சுற்றுலாப் பயணிகளே இந்த மோதலின் இடையில் சிக்கிக் கொல்லப்பட்டுள்ளனர். குறித்த சம்பவத்தில் காயமடைந்த மெக்சிக்கோவை சேர்ந்த 10 சுற்றுலாப் பயணிகளும் , எகிப்தைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைக்குக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என எகிப்திய அரசு தெரிவித்துள்ளது.

மெக்சிக்கோவின் வெளிநாட்டு அமைச்சகம் இருவர் கொல்லப்பட்டதை உறுதி செய்துள்ளது. மெக்சிக்கோவின் தூதுவர் ,எகிப்துக்குப் பயணம் செய்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கும் மெக்சிக்கோ நாட்டவர்களைச் சந்தித்து பேசினார். மெக்சிக்கோ நாட்டின் ஜனாதிபதி என்ரிக் பென நிடோ இந்தச் சம்பவம் தொடர்பான முழுமையான விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார். (த–ரி4)



## நாய்களுக்கு விடுதலை

நாய் இறைச்சி தயாரிப்பதை நிறுத்தும் திட்டத்தின் ஒரு.பகுதியாக, தென்கொரியப் பண்ணை ஒன்றில் இருந்து இந்த வாரத்தில் நூற்றுக்கும் அதிகமான நாய்களை மீட்டதாகச் சர்வதேச மிருக நல நிறுவனமொன்று கூறியுள்ளது. நாய் இறைச்சியைக் கொரியர்கள் பாரம்பரியமாகவே உண்டு வருகிறார்கள். ஆனால், நாய் இறைச்சிக்குப் பதிலாக ஏனைய வகையிலான பண்ணைகளை அமைக்குமாறு கொரியாவில் நாய் பண்ணைகளை வைத்திருப்போரை மனமாற்றம் செய்யச் செயற்பாட்டாளர்கள் முயன்று வருகிறார்கள். இதற்கான சமரசப் பேச்சுக்களை அவர்கள் நடத்தி வருகிறார்கள். நாய் வளர்க்கும் கூண்டுகளை அகற்றி அவற்றுக்குப் பதிலாக வேறு விதைகளை வழங்கி, பயிரிடச் செய்வது போன்ற மாற்று நடவடிக்கைகளுக்காக விவசாயிகளுக்கு 60,000 டொலர்கள் வரை வழங்கப்படுகின்றன.(த–ரி4)

## குடிபோதையில் படகுச் சவாரி

### மயிரிழையில் உயிர் தப்பிய இருவர்

பேர்ண் ,செப்.16
சுவிட்சர்லாந்து நாட்டில் நண்பர்கள் இருவர் அளவுக்கதிகமாக மது அருந்தி விட்டு படகுச் சவாரியில் ஈடுபட்டிருந்த வேளை, படகில் திடீரென துவாரமொன்று ஏற்பட்டு படகுக்குள் நீர் உட்புகுந்ததால் ஏற்படவிருந்த விபத்திலிருந்து அதிர்ஷ்டவசமாக அவர்கள் தப்பித்துக் கொண்டனர். கடந்தசனிக் கிழமை பிற்பகல் வேளையில் 35 மற்றும் 38 வயதுடைய இரண்டு நண்பர்கள் அளவுக்கதிக மாக மது அருந்தி விட்டு அங்குள்ள ஆற்றில் படகுச் சவாரியில் ஈடுபட்டிருந்தனர்.

படகில் ஏற்கனவே ஒரு துவாரம் இருந்து அது தற்காலிகமாகச் சரி செய்யப்பட்டமை தெரியாமல் அவர்கள் இருவரும் அந்தப் படகில் உற்சாகமாகச் சவாரி செய்துள்ளனர். அப்போது திடீரென அந்த துவார அமைப்பு சேதமாகி படகுக்குள் தண்ணீர் உட்புகத் தொடங்கியுள்ளது. மதுபோதை தலைக்கேறி இருந்ததால், படகுக்குள் தண்ணீர் வருவது தெரிந்தும் இருவரும் தொடர்ந்து படகை முன்னோக்கி உற்சாகமாக குரல் எழுப்பியவாறு செலுத்தினர். படகு சிறிது சிறிதாகத் தண்ணீரில் மூழ்கியவாறு சென்றுள்ளது. அப்போது ஆற்றுக்கு மேல்புறத் தில் இருந்த பாலத்துக்கு அருகில் படகு வந்துக்கொண்டிருந்தபோது படகில் தண்ணீர் புகுந்துள்ளதைக் கண்டு பாலத்தில் நின்றிருந்தவர்கள் அபாயக் குரல் எழுப்பியுள்ளனர்.

ஆனால், இதனை கண்டு கொள்ளாது அவர்கள் இருவரும் படகை விட்டுத் தப்பிக்க முயலாமல் படகை உறுதியாகப் பிடித்தவாறு மெதுவாகப் படகைச் செலுத்தியுள்ளனர். நிலைமையை அறிந்த ஒருவர், அருகில் இருந்த ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மீட்பு குழுவினருக்கு அவசரத் தகவல் அளித்துள்ளார். மீட்புக்குழு வினர் ஆற்றுப் பகுதிக்கு வந்து சேர்ந்த அதே நேரம் படகு முழுவதுமாகத் தண்ணீரில் மூழ்கியிருந்தது. உடனடியாக மற்றொரு படகில் சென்ற மீட்புக்குழுவினர் தண்ணீரில் மூழ்கிக் கொண்டிருந்த இரண்டு நபர்களையும் கரைக்கு இழுத்து வந்தனர். சரியான நேரத்தில் மீட்புக்குழுவினர் வந்து சேர்ந்ததால், குறித்த இருவரையும் உயிருடன் மீட்டு அவர்களைக் கடுமையாக எச்சரிக்கை செய்து அனுப்பி வைத்தனர்.(த–ரி4)



*நேற்றுமுன்தினம் டச்சு குதிரைப் படையை நினைவு கூரும் ஒத்திகை நிகழ்வு நெதர்லாந்தில் நடைபெற்றது. கையெறி குண்டுகள் வீசப்பட்டுப் பயிற்சி வழங்கப்பட்டது:இந்த ஒத்திகை நிகழ்வில் 80 குதிரைகளும் , 80 குதிரை வீரர்களும் பங்கு கொண்டனர். விழா நாளின் போது, சத்தம் , புகை என்பவற்றால் குதிரைகள் மிரள்வைத் தவிர்க்கவே இந்தப் பயிற்சி வழங்கப்பட்டது. (த–ரி4)*

# தண்டவாளத்தைக் கடக்க முயன்ற அம்புலன்ஸ்

## ரயில் மோதிப் பரிதாபமாக உயிரிழந்த நோயாளி

ஒட்டாவா , செப்.16
கனடா நாட்டில் அம்புலன்ஸ் ஒன்று தண்டவாளத்தைக் கடக்க முயன்றபோது எதிரே வந்த ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் அம்புலன்சில் கொண்டு செல்லப்பட்ட நோயாளி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.


வன்கூவர் மாகாணத்தில் உள்ள லாங்லி என்ற நகரில் தான் இந்தக் கோர விபத்து நிகழ்ந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில், நோய்வாய்ப்பட்ட மூதாட்டி ஒருவரை மருத்துவமனையில் அனுமதிப்பதற்காக அம்புலன்ஸ் வாகனத்தில் கொண்டு சென்றுள் ளனர். லாங்லி நகர வாகனபோக்கு வரத்துச் சாலைக்கு இடையே புகையிரதப் பாதையொன்று அமைந்துள்ளது. இந்தச் சாலையிலிருந்து தண்டவாளத்தைக் கடந்து மறுபுறம் செல்வதற்காக அம்புலன்ஸ் வாகனம் முயன்றுள்ளது. அப்போது, அவ்வழியாக வந்த சரக்கு ரயிலொன்று அம்புலன்ஸ் மீது பயங்கரமாக மோதி வாகனத்தைத் தூக்கி வீசியுள்ளது.இந்தப் பயங்கர விபத்தைத் தொடர்ந்து அம்புலன்ஸின் ஓட்டுநர் பலத்த காயமடைந்து மயக்கமடைந்துள்ளார். சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த மருத்துவ ஹெலியில், அம்புலன்ஸில் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த நோயாளியை ஏற்றிக்கொண்டு சென்றனர். ஆனால், மருத்துவமனைக்குச் செல்லும் வழியிலேயே அந்த மூதாட்டி உயிரிழந் துள்ளார். படுகாயம் அடைந் துள்ள அம்புலன்ஸ் ஓட்டுநர் தற் போது மருத்து வமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அம்புலன்ஸ் மீது ரயில் மோதிய கொடூரக் காட்சி சாலையில் இருந்த கமெராவில் பதிவாகியுள்ளது.

தண்டவாளத்தைக் கடக்க முயன்ற அம்புலன்ஸ் திடீரென தண்ட வாளத்திலேயே நிற்பது போல வீடியோவில் பதிவாகியுள்ளதால், இந்த விபத்துக்கான காரணத்தை அறிய பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். (த–ரி4)

# பாறி விழுந்த மரத்தின் வேர்களுக்கு நடுவில் 1000 ஆண்டுகள் பழைமையான எலும்புக்கூடு





அயர்லாந்தில் வீசிய கடும்புயலில் 215 ஆண்டுகள் பழைமை வாய்ந்த மரமொன்று பாறி விழுந்தது. அதன் வேர்களுக்கு நடுவில் 1000 வருடங்கள் பழமையான மனித எலும்புக்கூடொன்று தென்பட்டது. இதனையடுத்து தேசிய நினைவுச் சின்னங்களுக்கான அதிகாரிகள், தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களை நியமித்து அந்த இடத்தில் தோண்டுதல் பணிகளை ஆரம்பித்துள்ளனர். ஆரம்பக் கட்ட ஆய்வுகளின் படி கண்டெடுக்கப்பட்ட மனித எலும்புக்கூடு 17 – 25 வயதையுடைய ஆண் ஒருவருடையது என்றும் , கத்தி அல்லது வாள் மூலம் தாக்கப்பட்டதில் அவர் சாவடைந்துள்ளார் எனத் தெரிய வந்துள்ளது. கதிரியக் கக் காலக்கணிப்பின் மூலம் அது 815 – 985 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனத் தெரிய வந்துள்ளது. (த–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதிகளின் வருகை அதிகரிப்பால் எல்லைப் பகுதியை மூடியது ஹங்கேரி

## கண்ணீருடன் காத்திருக்கும் குடியேறிகள்





புடாபெஸ்ட், செப்.16,

தினந்தோறும் பல்லாயிரக்கணக்கான குடியேறிகள் ஹங்கேரிக்குள் நுழைவதை தடுக்கும் வகையில் சேர்பியா நாட்டையொட்டியுள்ள எல்லைப்பகுதியை ஹங்கேரி அரசு மூடியுள்ளது.


இந்த ஆண்டின் முதல் எட்டு மாதங்களில் மட்டும் உள்நாட்டுக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட ஆப்பிரிக்கா, ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து பிறநாடுகளுக்கு அடைக்கலம் தேடிச் செல்லும் சுமார் 2 லட்சம் மக்கள் ஹங்கேரிக்குள் நுழைந்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானோர் ஹங்கேரியில் அகதிகளாகத் தங்கியுள்ளனர். மீதிப்பேர் அங்கிருந்து கடல்மார்க்கமாகத் துருக்கி, கிரீஸ், ஜேர்மனி மற்றும் சுவீடன் போன்ற நாடுகளுக்குப் புகலிடம் தேடி செல்கின்றனர்.

ஐரோப்பிய யூனியன் நாடுகளில் ஒன்றான ஹங்கேரிக்குள் நுழைந்து விட்டால்போதும். அங்கிருந்து ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டில் எப்படியாவது குடியேறி விடலாம் என்ற ஆவலுடன் இங்குவரும் மக்களால் ஹங்கேரியில் வாழும் மக்களின் அமைதி சீர்குலைந்து விடும் என ஹங்கேரி அரசு கருதுகின்றது.

அதுமட்டுமின்றி, வந்தேறிகளில் பெரும்பாலானவர்கள் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இருந்து வந்துகொண்டிருப்பதால், ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் உண்டாகலாம் எனவும் அஞ்சப்படுகிறது. குறிப்பாக, இந்த ஆண்டுக்குள் ஜேர்மனியில் மட்டும் 10 லட்சம் பேர் அகதிகளாக நுழையக்கூடும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிடையில், ஹங்கேரியின் குடியுரிமைச் சட்டத்தில் நாளை கடுமையான சட்டதிட்டங்கள் சேர்க்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் இதுவரை இல்லாத அளவுக்கு அண்டை நாடான சேர்பியாவில் இருந்து நேற்று மட்டும் 5 ஆயிரத்து 809 குடியேறிகள் ஹங்கேரியை வந்தடைந்தனர். நிலைமை மேலும் மோசமாவதைத் தடுக்கும் வகையில் சேர்பியா – ஹங்கேரி எல்லையோரம் உள்ள 13 அடி உயர வேலியை இழுத்துமூடி, இனியும் குடியேறிகள் ஹங்கேரிக்குள் நுழைவதைத் தடுக்குமாறு ஹங்கேரி அரசு உத்தரவிட்டது.

இதையடுத்து, ரோஸ்கே எல்லைப் பகுதி உடனடியாக 'அடைக்கப்பட்டது. வழக்கம்போல் ஹங்கேரிக்குள் நுழையும் ஆவலுடன் எல்லைப்பகுதிக்கு நேற்று வந்த குடியேறிகள் , எல்லைப்பகுதி அடைக்கப்பட்டுள்ளதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். தோளிலும், இடுப்பிலும், தள்ளுவண்டிகளிலும் குழந்தைகளை வைத்தபடி காத்திருக்கும் பல பெண்களும், முதியோர்களும் எல்லையோரம் அழுதபடி காத்திருக்கும் காட்சி பார்ப்பவர்களின் இதயத்தை வேதனையில் ஆழ்த்துவதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. எல்லைப்பகுதி அருகே ஏராளமான ராணுவ ஹெலிகளும், பொலிசாரும் குவிக்கப்பட்டுள்ளனர். இதற்கு முன்னதாக, கள்ளத்தனமாகக் ஹங்கேரிக்குள் நுழையும் குடியேறிகள் கைது செய்யப்படுவார்கள் என அந்நாட்டு அரசு நேற்று அறிவித்திருந்தமை, குறிப்பிடத்தக்கது.

(த–ரி4)



# இந்தோனேசியாவில் பெரும் காட்டுத் தீ

## புகை மண்டலம் மலேசியா, சிங்கப்பூருக்கும் பரவியது

இந்தோனேசியாவில் ஏற்பட்ட பெரிய காட்டுத்தீயால் ஏற்பட்ட புகை மண்டலம் அண்டை நாடுகளான, மலேசியா மற்றும் சிங்கப்பூருக்கும் பரவியிருக்கிறது.

மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் பள்ளிக்கூடங்கள் மூடப்பட்டுள்ளன. சிங்கப்பூரில் வீதிகளில் கடினமான நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளவேண்டாமென்று சிங்கப்பூர்வாசிகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்தோனேசியாவின் சுமாத்திரா மற்றும் போர்னியோ தீவுகளில் மரம் செடி கொடிகளைச் சட்டவிரோதமாக வெட்டி எரிக்கும் நடவடிக்கைகளால் இந்தக் காட்டுத் தீ ஒவ்வொரு ஆண்டும் ஏற்படுகிறது.

காகித மற்றும் பனை எண்ணெய் தயாரிப்பு நிறுவனங்களே இத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் குற்றம் சாட்டப்பட்டு வந்துள்ளது. இந்தத் தீயை அணைக்கும் முயற்சியில் நூற்றுக்கணக்கான ராணுவத்தினரை இந்தோனேசிய அரசு பயன்படுத்தி யிருக்கிறது.

(த–ரி4)




*சீனாவின் பீஜிங் நகர சாலை ஒன்றில் , புதைகுழியொன்றுக்குள் கார் எதிர்பாராத விதமாகச் சிக்கிக்கொண்டது. இந்தச் சம்பவத்தின்போது எவருக்கும் காயம் ஏதுவும் ஏற்படவில்லை என சீனாவின் உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.* (த–ரி4)

# அணு உலையைச் செயற்படுத்த தொடங்கியது வடகொரியா

பியங்யாங் , செப் .16,

வடகொரியா தனது யொங்பியொன் அணு உலையை செயற்படுத்தத் தொடங்கியுள்ளதாக அறிவித்துள்ளது.

தனது அணு ஆயுதங்களை மேம்படுத்தி, அவற்றை எந்த நேரத்திலும் அமெரிக்காவுக்கு எதிராகப் பயன்படுத்தத் தயாராவதாக வடகொரியா கூறுகிறது. அந்த அணு உலைப் பகுதியில் நடமாட்டமும் செயற்பாடுகளும் அதிகரித்திருப்பதைக் கடந்த வாரம் வெளியான செய்மதிப் படங்கள் காண்பித்தன. நீண்ட தூர ரொக்கட்டுக்களை ஏவும் வல்லமையை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கை என்று ஏனையோரால் கருதப்படும் வகையில், தொடர்ச்சியாகப் பல செய்மதிகளைத் தாம் ஏவப்போவதாக வடகொரியா அறிவித்த மறுதினம் இந்த அறிவிப்பும் வந்திருக்கிறது. இந்த இரு அறிவிப்புக்களும், வட கொரியாவின் இராணுவ வல்லமையை உலகுக்கு எடுத்துக் காட்டும்வகையில் ஒருங்கிணைக் கப்பட்டவை என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். (த–ரி4)



*இஸ்ரேலின் குண்டு வீச்சால் இடிந்துபோன தனது வீட்டில், குடும்பத்தினரின் நினைவுகளுடன் [illegible] பாலஸ்தீனச் சிறுவன். இந்தப் புகைப்படம் சுஹைப் சலீம் என்பவரால் எடுக்கப்பட்டது. கடந்த வாரம் காசாவில் வீசிய மணல் புயல் பற்றிய செய்திகளைச் சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளரின் கண்ணில் பட்ட காட்சி இது.* (த–ரி4)

# இரட்டைச் சகோதரிகள் பெறவுள்ள 2ஆவது இரட்டைக் குழந்தைகள்



நியூயோர்க், செப். 15

அமெரிக்காவின் உட்டா மாநிலத்தில் ஆசிரியைகளாக ஒரே பள்ளியில் பணிபுரியும் இரட்டைச் சகோதரிகள், தங்களது ஆரம்ப காலம் முதலே, நட்புடன் வளர்ந்து வந்தனர். தம்மிடையே மிக ஒற்றுமையாக வாழ்ந்து இவர்கள் தங்களுக்கு நெருங் கிய நண்பர்களாக இருந்த இரு வரைத் திருமணம் செய்து கொண் டனர். கெர்ரி மற்றும் கெல்லி என்கிற இந்தச் சகோதரிகளில் ஒருவருக்கு நான்கு வயதில் இரட்டைப் பெண் குழந்தைகளும், மற்றொருவருக்கு மூன்று வயதில் ஒரு ஆண், பெண் என இரட்டைக் குழந்தைகளும் உள் ளனர்.

தற்போது, இந்த இரு சகோதரிகளும், இரண்டாவது முறையாக ஒரே நேரத்தில் கர்ப்பம் அடைந்துள்ளனர். மருத்துவப் பரிசோதனையில் இருவருக்குமே மீண்டும் இரட்டைக் குழந்தைகள் கருத்தரித்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. இதனால் எதிர்வரும் மார்ச் மாதம் [illegible] த்தை எதிர்ப்பார்த்துள்ள இந்த சகோதரிகள் இருவரும் பெரு மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். (த–ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாங்கக் கணிப்பீடுகளும் பாதிக்கப்படும் இந்துக்களும்

கலாபூஷணம் சி.சபா, வடவரணி

"கலண்டர் வருடம்" என்பது உலக மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால்" பஞ்சாங்க வருடம்" என்பது இந்து மக்களுக்கு மாத்திரமே சொந்தமானது.

இந்தப் பஞ்சாங்க வருடத்தை ஆதிகாலந் தொட்டே இந்து மக்கள் கைக்கொண்டு வருவதுடன், பஞ்சாங்கத்தைத் தமது கைநூலாகவும் கொண்டுள்ளனர்.

கிராமிய மக்களும், கடவுள் கோட்பாடுகளைப் பின்பற்றி வரும் ஆன்மிகவாதிகளும், சமய வாதிகளும், பஞ்சாங்கத்தை அடிப்படையாகக் கொண்டு தமது ஒவ்வொரு செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்கின்றனர். நாள், கோள், திதி, கரணம், நட்சத்திரம் என்ற ஐந்து அம்சங்களையும் அடிப்படையாகக் கொண்டே பஞ்சாங்கம் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பஞ்சாங்கத்தை அடிப்படையாகக் கொண்டே பாரம்பரிய சோதிடக்கலை உருவாகியது.

புதிய வீடு கட்டுதல், திருமணம் செய்தல், விதை தானியம் விதைத்தல், அறுவடை செய்தல், பிள்ளைகளுக்கு அன்னப்பிரசாதம் செய்தல், ஏடு தொடக்கல் போன்ற சகலவிதமான சுபகாரியங்களுக்கும், இறந்து விட்ட ஓர் ஆன்மாவின் கிரியைகளுக்கும் பஞ்சாங்கத்தின் துணை கொண்டே பொருத்தமான நாள்களைத் தெரிவு செய்கின்றனர். இதன் மூலம் மக்கள் ஓர் ஆத்ம திருப்தியை அடைந்து கொள்கின்றனர். பிறந்த பிள்ளை ஒன்றுக்கு சாதகம் கணிப்பதிலிருந்து, ஆலய உற்சவங்கள், விரதங்கள், குரு பூசைத்தினங்கள், இந்து சமய பண்டிகைகள் அனைத்தும் பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்ட கால நேரங்களை அடிப் படையாக வைத்தே தீர்மானித்து அதன்படி செயற்படுத்தி வரு கின்றனர்.நிலைமை இவ்வாறு இருக்கும் போது, இவற்றைப் பின்பற்றுவதில் அல்லது கடைப்பிடிப்பதில் , ஒருசில தசாப்த காலங்களில் இந்துக்களிடையே குழப்பநிலை தோன்றியுள்ளதை அவதானிக்க முடிகிறது. அதற்கான காரணமும் இந்தப் பஞ்சாங்கங்களே என்பதை நினைக்கும்போது இந்துமக்கள் மிகவும் வேதனை அடைந்துள்ளனர். இதற்கான அடிப்படைக்காரணம், சோதிடக் கணிப்பீட்டின் மூலம் வெளியிடப்படும் பஞ்சாங்கங்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறு விதமான வெளிப்படுத்தல்களைப் பிரதிபலிப்பதேயாகும்.

இந்துக்களின் புதுவருடப்பிறப்பு, விளக்கீடு (வீட்டுத்தீபம்), ஆடி அமாவாசை, சூரன்போர் போன்ற அலங்கார அபிஷேக உற்சவ தினங்கள், ஒரு பஞ்சாங்கத்தில் ஒரு திகதி மற்றும் நேரங்களும், இன்னோர் பஞ்சாங்கத்தில் இன்னொரு திகதி மற்றும் நேரங்களும் நிர்ணயிக்கப்படுகின்றன, திருமண முகூர்த்த நேர காலங்களில் கூட இந்த வித்தியாசம்




காணப்படுகிறது.

இந்த நிலை இந்துக்களிடையே சில குழப்பங்களை உருவாக்குகிறது. இதனால் சாதாரண மக்களினால் எது சரி? எது பிழை? என்பதைத் தீர்மானிக்க முடியாதுள்ளது.

உதாரணமாகத் தீபாவளித் திருநாள் ஐப்பசி மாதம் 25ஆம் திகதி என ஒரு பஞ்சாங்கத்திலும், 26ஆம் திகதி என இன்னொரு பஞ்சாங்கத்திலும், குறிப்பிடப்பட்டுள்ளது என வைத்துக்கொள்வோம். (இது கடந்த வருடங்களில் இடம்பெற்ற கசப்பான உண்மைகள்) 25ஆம் திகதி நேரமில்லாத ஓர் இந்து மகன், 26ஆம் திகதியும் 26ஆம் திகதிக்கு நேரமில்லாதவன் 25 ஆம் திகதியும் இந்தப் பண்டிகையைக் கொண்டாடலாமல்லவா? இதனால் தீபாவளித் திருநாளின் மகத்துவம் மதிப்பிறக்கம் செய்யப்படுவதுடன், ஏனைய கிறிஸ்தவ, பௌத்த, முஸ்லிம் மதத்தவர் இந்து சமயக் கோட்பாடுகளைக் "எள்ளி நகையாடவும் வாய்ப்பளிக்கிறது. மேலும் இந்து மதத் தவரிடையே இரு பிரிவினரைத் தோற்றுவிக் கவும் காரணமாகின்றது.

தீபாவளித் திருநாள் ஓர் உதாரணத்துக்குச் சொல்லப்பட்டது போல ஏனைய பிரதான உற்சவ பண்டிகை நாள்களிலும் இந்த வேறுபாட்டை பஞ்சாங்கங்கள் வெளிப்படுத்துகின்றன. இந்த வேறுபாடுகளினால் இந்துக்களைக் குழம்ப வைக்கும் பொறுப்புக்களை பஞ்சாங்க வெளியீட்டாளர்களே முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இனி, வடபுலத்து யாழ்ப்பாணத்திலிருந்து பிரசுரமாகும் பஞ்சாங்கங்களை உற்று நோக்குவது அவசியமாகும்.

முதலாவதாக நூற்றிஐம்பது வருட காலத்துக்கு மேலாக இ.சி.இரகுநாதஐயர் அவர்களால் வெளியிடப்பட்டு, இன்று அவர்களின் வழிதோன்றல்களால் கொக்குவிலில் இருந்து வெளியிடப்படும் வாக்கிய பஞ்சாங்கம், மட்டுவிலில் இருந்து வெளியிடப்படும் திருக் கணித பஞ்சாங்கம் என்பனவே அவை இரண்டுமாகும். இதைவிட வருடாவருடம் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் சோதிடமாமணி எஸ்.தேவநாயகம் ஐயாவால் கணிக்கப்பட்டு இலவசமாக விநியோகிக்கப்பட்டு வரும் ஒரு பஞ்சாங்கமும் உள்ளது.

இதைப்போல தும்பளை சுப்பிரமணிய சாத்திரியாரால் வெளியிடப்பட்ட ஒரு பஞ்சாங்கம், மேலும் பலரால் வெளியிடப்பட்டு இடை நடுவில் நின்று போன பல பஞ்சாங்கங்கள். இவற்றில் இன்று நிலைத்து நிற்பவை, இந்துக்களால் கைக்கொள் ளப்பட்டு வருகின்ற இரண்டே இரண்டு பஞ் சாங்கங்கள்தான். ஒன்று வாக்கிய பஞ்சாங் கம், அடுத்தது திருக் கணித பஞ்சாங்கம் இந்த இரண்டும்தான் இந்து மக்களைக் குழப்பு கின்றன. இரு வெவ்வேறு காலங்களை வெளிப்படுத்துவதால் நிச்சயமாக இந்த இரண்டில் ஒன்றின் கணிப்பீடு தவறானது எனக் கொள்ள வேண்டும்.

ஒரு தவறான செயற்பாடு நீண்ட காலமாகத் தொடர்ந்து செய்யப்பட்டால், அது சரியாகி விடாது. அந்தத் தவறு கண்டுபிடிக்கப்பட்ட அடுத்த கணத்திலிருந்து அது திருத்தப்பட வேண்டும்.

சம்பந்தப்பட்ட கணிப்பீட்டாளர்களின் வித்துவக் காய்ச்சலினாலும், சித்து விளையாட்டினாலும் இந்து மக்கள் சரியான ஒரு நடைமுறையைக் கைக்கொள்ள முடியாத நிலையில் உள்ளனர்.

கனடா, ஜேர்மனி போன்ற மேற்குலக நாடுகளில் வாழும் புலம்பெயர்ந்த தமிழ் இந்து மக்கள் எது சரி? எது பிழை? என்று தெரியாது, பக்கத்து வீட்டு இந்து மக்களைக்கேட்டு தாமும் பின்பற்றும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். இது இந்து மக்களின் மத நம்பிக்கையைத் தகர்த்தெறியும் ஒரு செயலாகும். இதை முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும். இந்த நிலை தொடர இடமளிக்கக்கூடாது.

ஒவ்வொரு கணிப்பீட்டாளர்களும், ஏதோ ஓர் அடிப்படையில் தமது கணிப்பீடுகளை மேற்கொண்டு தமது தனித்துவத்தின் அடிப்படையில் அதைச் சரியானதென்றே நியாயப்படுத்துவர். அதை விவாதிப்பதன் மூலம், தமது தனித்துவம் இழக்கப்பட்டுவிடும், அல்லது தமது பாண்டித்துவம் பகிரங்கப்படுத்தப்பட்டுவிடும் என்று கருதலாம். இது ஒரு குறுகிய சிந்தனை என்றே கூற வேண்டும்.

இது தொடர்பில் இந்து சமய ஆன்மிகவாதிகளும், சோதிட வல்லுநர்களும், புத்திஜீவிகளும், இந்து சமய கலாசாரத் திணைக் களமும் சம்பந்தப்பட்ட பஞ்சாங்கக் கணிப்பீட்டாளர்களும் அலசி ஆராய்ந்து ஒரு சரியான முடிவுக்கு வந்து, இந்து மக்கள் தொடர்ந்தும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, அல்லது கடைப்பிடிக்கக்கூடிய ஒரு சரியான கணிப்பீட்டை வெளிப்படுத்தும் பஞ்சாங்கத்தை வெளியிட ஆவன செய்ய முன்வர வேண்டும்.

இன்றைய நிலையில் புலம்பெயர்ந்த தமிழ் இந்து மக்கள் உலகம் பூராகவும் பரந்துபட்டு வாழ்கின்றனர். அவர்கள் இந்து சமயக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து வாழ்வதையிட்டு நாம் அனைவரும் பெருமைப்படும் அதே வேளையில், அவர்களின் குழப்பங்களையும் தீர்த்து வைக்க வேண்டியது எமது கடமையாகும்.

கலண்டர் வருடம் தை தொடங்கி மார்கழி மாதம் முடிவடைகின்றது. பஞ்சாங்க வருடம் சித்திரை மாதம் தொடங்கி பங்குனி மாதம் முடிவடைகின்றது.

அடுத்த பஞ்சாங்க வருடம் தொடங்க இன்னமும் அரை வருடத்துக்கு மேல் கால அவகாசம் இருப்பதால், இனிப் பிறக்கப் போகும் துர்முகி பஞ்சாங்க வருடத்தில் வெளியிடப்படும் பஞ்சாங்கம், வேறுபாடற்ற திகதிகளைக் காட்டாது சரியான ஒரே திகதியை வெளிப்படுத்தக்கூடியவாறு அமைய சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே இந்தக் கட்டுரையின் பெருநோக்கமாகும்.

# வண்ணை வெங்கடேசனுக்கு இன்று கொடியேற்றம்

இராசையா ஸ்ரீதரன்

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான ஸ்ரீமந் நாராயண மூர்த்தி எனப்படும் மகாவிஷ்ணு ஆனவர் தம்மை வழிபாடு இயற்றுகின்ற பக்தர்களுக்கு அருள்புரியும் நோக்கில் யாழ்ப்பாண மாநகரில் உள்ள வண்ணையம்பதியில் வெங்கடேச வரதராஜப் பெருமாளாக வீற்றிருந்து திவ்ய திருவருட் கடாட்சத்தை அள்ளிச் சொரிந்து கொண்டிருக்கிறார்.

அப்பேர்ப்பட்ட அருள் மூர்த்திக்குரிய மன்மத ஆண்டுக்கான வருடாந்த திவ்ய மகோற்சவம் இன்று காலை நிகழும் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின்றது. பஞ்ச கிருத்தியங்களான படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பவற்றுள் காத்தல் தொழிலைப் புரிகின்றவரான ஸ்ரீ மகா விஷ்ணு மூர்த்தி உலகில் தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் காலத்தில் திருஅவதாரம் எடுப்பதாகப் புராண வாயிலாக அறிகின்றோம்.

அந்த வகையில் எம்பெருமான் எமக்கெல்லாம் காத்தல் என்கின்ற அருள் புரிய வேண்டும் என்று பக்தியோடு விண்ணப்பம் செய்து வழிபாடு இயற்ற இன்று தொடங்குகின்ற திவ்ய பிரமோற்சவம் நல்லதொரு வாய்ப்பாக அமைவது, நாம் செய்த பாக்கியம் என்றே சொல்ல வேண்டும்.

பத்து நாள்கள் நிகழ்கின்ற இந்த மஹோற்சவத்தில் வெங்கடேசப் பெருமாள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமான அழகு மிகு அலங்காரத்துடன் வெவ்வேறு வாகனங்களில் அருட்காட்சி நல்குவார். இந்த ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் சனீஸ்வரன் அதிசக்தி வாய்ந்தவராகக் கருதப்பட்டு ஒவ்வொரு சனி வாரத்திலும் பக்தர்கள் எள் தீபம் ஏற்றி வழிபட்டு நிற்கும் பாங்கு சொல்லும் தரமன்று. அதற்கு ஏதுவாக புரட்டாதிச் சனிக்கிழமைகள் இங்கு நிறைந்த சனக்கூட்டம் காணும் நாள்கள் ஆகும். அதுமட்டுமன்றி பத்மசாலி எனப்படுகின்ற செட்டியார் பரம்பரையால் பரிபாலிக்கப்பட்டு வரும் இந்தக் கோயிலின் தேர்த்திருவிழாவும் தீர்த்தோற்சவமும் மிகச் சிறப்பான பெருவிழாக்களாகும். யாழ்.குடாநாட்டில் பல பாகங்களில் இருந்தும் பக்தர்கள் இங்கு வந்து ஸ்ரீமத் நாராயணனை மன, மொழி, மெய்களால் வழிபாடியற்றிச் செல்வர். இங்கு எழுந்தருளி இருக்கும் வெங்கடேசப் பெருமாள் நினைத்ததை நிறைவேற்றிடும் அருள் மிகுந்த சக்தி உடையவர் என்பதால் அடியார் பெருமக்கள் நேர்த்திகள் வைத்து வணங்குவர். அந்தக் கருமங்கள் வெற்றிகரமாக நிறைவேறியதும் தம்முடைய நேர்த்திகள் பூர்த்தியான மகிழ்ச்சிப் பெருக்கால் அங்குள்ள ஆஞ்சநேயருக்கு முன்பாக பொங்கல் பொங்கிப் படைத்து ஆனந்திப்பர். சிலர் பெரிய அன்னதானமே செய்து விடுவார்கள். ஆஞ்சநேயர் வெற்றிக்குரிய சஞ்சீவிக் கடவுளாவார். ஆதலினால் விடயங்கள் யாவும் வெற்றியாகி விட்டால் பக்தர்கள் பாடு கொண்டாட்டம்தான்.

விண்ணைத் [illegible] உயர்ந்த ராஜகோபுரத்தைக் கொண்டு விளங்குகின்ற இந்தப் பெருமாள் கோயிலானது யாழ்ப்பாண நகரின் மத்தியிலே மணிக்கூட்டு



வீதியிலே, நாவலர் வீதிக்கும் கன்னாதிட்டி வீதிக்கும் இடையில் அமைந்திருப்பது ஒரு பெரிய தெய்வீகமான நிலைப்பாடாகும். ஏனெனில் வெளியிடங் களில் இருந்து வருகின்ற பக்தர்களுக்கு இங்கு வருகை தரவும் வழிபாடு இயற்றவும் சுல பமாக இருப்பதாகும். இந்த ஆலயத்தின் வரலாற்றுச் சிறப்புக்கள் பற்றி ஆராயப் புகின் நீண்டு கொண்டே போகும். [illegible] டுகளில் இதன் பெருமை [illegible] பதாகக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணம் ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வரன் ஆலயமும் கன்னாதிட்டி விஸ்வகுல தெய்வம் ஸ்ரீகாளியம்பாள் கோயிலும் மணிக்கூட்டு வீதி ஸ்ரீ விநாயகர் கோயிலும் மிகச் சமீபமாக அமைந்திருப்பதால் ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் கோயில் தனிச்சிறப்புப் பெறுகிறது.

ஆகவே இன்று தொடங்குகின்ற மன்மத வருட பிரமோற்சவத்திலே அடியார் பெருமக்கள் அனைவரும் அணிதிரண்டு வருகை தந்து பெருமாளைச் சிந்தித்து, வந்தித்து, சேவித்து நல்லருளைப்பெற்று உய்ய தங்களைத் தாங்களே தயார்படுத்திக் கொள்வார்களாக... வண்ணை வேங்கடவனே சரணம்! சரணம்!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டுக்கு உரித்தான நாடகத் திருவிழா

வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் ஆலய பெருந்திரு விழாக் காலத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக நாடகத் திருவிழா ஒன்றும் இடம்பெற்று வருவது யாவரும் அறிந்ததே. ஆலயச் சூழலில் ஆங்காங்கே பல முத் தமிழ் நிகழ்வுகள் நடைபெற்று வருவது வழமையான ஒன்றாகும். மனம் கவர்ந்த நிகழ்வுகளை மக்கள் கண்டும் கேட்டும் இன்புறுவதும் வழமை. அந்த வகையில் ஆலயத்துக்கு அண்மையில் செயல் திறன் அரங்க அமைப்பினரின் நிகழ்வுகளும் குறிப்பிடத்தக்கதொன்றாக அமைகின்றன.

அறிவியல் ஓங்கி வளர்ந்து உயர்ந்து செல்லும் உலகியல் வாழ்வில் அமைதியைத் தொலைத்து நிம்மதிக்கு ஏங்கித் தவிக்கும் மக்களுக்கு இந்த செயற்றிறன் அரங்கத்தினரின் செயற்பாடுகள் ஒரு வரப்பிரசாதமாகவே அமைகின்றன.

படித்தவர் தொடக்கம் பாமரர் வரையான அனைத்துத் தரப்பினரையும் மிக எளிதாகக் கட்டிப் போட்டுள்ளனர் இந்த அரங்கத்தினர். தங்களுடைய ஆற்றுகை மூலம் பார்வையாளர்களுடைய மனங்களை, அவர்களது உணர்வுகளைத் தட்டிச் செல்ல வழி வகுத்தமை மிக வும் விந்தையான ஒன்றாக அமைகின்றது.

அரங்க இயக்குநர் தன்னுடைய படைப்பாற்றல், கலை அம்சம், ஆக்கத்திறன் மற்றும் செயற்றிறன் என்பவற்றை "கூடி விளையாடு பாப்பா" என்ற பாரதியா ரின் சிந்தனைக்கு அமைவாக பல கலைஞர்களின் ஒன்றிணைப்பில் உட்புகுத்தி ஒரு நாடகத் திருவிழாவையே நடத்தியிருக்கின்றார்.




நாடகத் திருவிழாவை நடத்துவதென்பது மிகச் சுலப மான விடயமல்ல. ஒரு நாடகத்தை ஒருவர் மேடையேற்றி ஒப்பேற்றுவதென்பதே பெரிய விடயமாகத் தோன்றும்போது, பல வகையான நாடகங்களைத் தயாரித்துத் தொகுத்து ஒரு நாடகத் திருவிழாவையே நடத்தி யிருப்பது சறுக்கு மரத் தில் ஏறிச் சாதனை படைத் ததை ஒத்ததாகும்.

கிரேக்க தத்துவஞானி சோக்கிரட்டீஸ் நூறு இளைஞர்களை என்னிடம் தாருங்கள் . ஆக்கபூர்வமான தேசத்தை நான் கட்டி எழுப்புவேன் – என அறைகூவல் விடுத்திருந்தார். அந்த தத்துவஞானியைப் போல இந்தச் செயற்றிறன் அரங்க இயக்குநர் தே. தேவானந் தன்னுடைய அட்டகாசமில்லாத அமைதியான செயற்பாட்டினால் பல இளைஞர்களைத் தன்னுடன் இணைத்துக் கலை உலகத்துக்கும் இளைஞர்களின் மேன்மையான வாழ்வுக்கும் வழி சமைத்தமை பாராட்டத் தக்கது. இன்றைய காலகட்டத்தில் பல இளம் தலைமுறையினர் வீதியிலும், களியாட்டங்கள் கொண்டாட்டத்திலும் புறம் போக்கில் சிந்தித்துச் செயற்பட்டு வரும் நிலையில் பல இளைஞர்களையும் சிறுவர்களையும் தன்னகத்தே ஈர்த்து கவர்ந்திழுத்து வியத்தகு விந்தையான செயற்பாட்டைச் செய்திருப்பது வரவேற்கத் தகுந்த விடயமாக அமைகின்றது.

பல வகையான நாடகங்கள் அங்கே மேடையேற்றப் பட்டன.


ஆயினும் சிறுவர் நாடகங்கள் சிறுவர்களையும் பெரியவர்களையும் ஆனந்தத்தின் எல்லைக்கே கொண்டு சென்று விட்டன. தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையை மையமாக வைத்து தயாரிக்கப்பட்ட சிரிப்பு மூடை நாடகம் மிகவும் பாராட்டைப் பெற்றது. அந்த நாடகத்தில் இயக்குநரின் கற்பனைத் திறன் மிகவும் அபாரமானது.

இதில் பங்குபற்றிய சிறுவர்கள் இளைஞர்களின் ஆற்றுகை பின்னணி இசை மற்றும் பாடல்களை அள்ளி வழங்கிய சிறுவன் உமாசங்கர் ஆருத்ரன் மற்றும் பாடகி ப.ஜகனி ஆகியோரின் கலைத்திறன் அளவிட முடியாததொன்றாகின்றது.

இந்த நாடகத் திருவிழாவின் மேடை அமைப்பு, காட்சி அமைப்பு பாத்திரங்களின் வேடங்கள், பக்கவாத்தியங்கள், பாடல்கள் மற்றும் ஒலி ஒளி அமைப்பு என அனைத்து வகையான கலை அம்சங்களையும் மிகத் திறம்படவும் துல்லியமாகவும் வெளிப்படுத்திய தன்மை மேன்மையானது. மேலும் இந்தச் செயற்றிறன் அரங்கமானது குறிப்பிட்ட வரையறைக்குள் நின்று செயற்படாது பல பிரதேசங்களிலும் சிறுவர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் இந்தச் செயற்பாட்டை விஸ்தரிப்பதன் மூலம் எமது மக்கள் மத்தியில் ஒரு சுபீட்சத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என நான் நினைக்கிறேன். செயற்றிறன் அரங்க இயக்கத்தினர் இதனைச் செயற்படுத்துவார்களா?

– ***சரஸ்வதி,*** அரியாலை.

## கேலிச் சித்திரம்



# கபட நோக்கம் கொண்டதா ரணிலின் டில்லிப் பயணம்

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் அழைப்பையேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இருநாள் பயணம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ளார். பிரதமராகப் பதவியேற்ற பின்னர் ரணிலின் முதலாவது வெளிநாட்டுப் பயணம் இது என்பதால் இது முக்கியமானதாகக் கருதப்படுகிறது. பிரதமர் ரணில் தமது இந்தியப் பயணத்தின்போது பிரதமர் நரேந்திரமோடி, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரையும், சிரேஷ்ட அரசியல் தலைவர்களையும் சந்தித்துள்ளார்.

பிராந்தியத்தின் அமைதிக்கும் இரு நாடுகளுக்கிடையில் நெருக்கமான உறவுகளைப் பேணவும் ரணிலின் இந்தியப் பயணம் உதவும் என்று பொதுவாக எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் சர்வதேச விவகாரங்களில் இலங்கையும் இந்தியாவும் நெருங்கி ஒத்துழைக்கக் கூடிய ஏது நிலைமை உருவாகி வருவதை நாம் அவதானிக்க முடிகிறது. இதன் காரணமாக இலங்கைத் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் இந்தியாவின் நிலைப்பாட்டில் தளர்வு நிலைமை ஏற்படலாம். இத்தகைய நிலைமை ஆட்சி மாற்றத்தின் பின்னர் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஏற்படும் இரண்டாவது பின்னடைவாக இருக்கும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அடுத்தடுத்து தீர்மானங்களைக் கொண்டுவந்து இலங்கையின் குரல்வளையை நெருக்கும் அளவுவரை வந்தது அமெரிக்கா. ஆனால் ஆட்சி மாற்றத்தின் பின்னர் அமெரிக்கா 'பல்டி' அடித்துவிட்டது. அதன் நிலைப்பாடு மாறிவிட்டது. கடந்த மார்ச் மாதக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவிருந்த ஐ.நாவின் விசாரணை அறிக்கையை ஆறுமாதத்துக்கு பிற்போட வைத்தது அமெரிக்கா. தற்போது உள்ளக விசாரணைப் பொறிமுறைக்கு ஆதரவான தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவர இருப்பதுடன் அதற்கு இந்தியா உட்பட்ட உறுப்பு நாடுகளின் ஆதரவையும் எதிர் பார்க்கிறது. போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படுவதிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதிலும் மேலும் தாமதம் ஏற்படும் ஐயப்பாட்டை இது ஏற்படுத்தி விட்டுள்ளது. ஆகவே தமிழர் தரப்புக்கு ஆதரவாக ஜெனிவா சென்றுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் தமிழர் நலன் விரும்பிகள் இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கும் முயற்சி எடுக்கும் அவசர தேவை ஏற்பட்டுள்ளது. சீனாவுடன் மிகவும் நெருக்கமான உறவுகளை வைத்திருந்த மகிந்த ஆட்சி தோற்கடிக்கப்பட்டதால் ரணில் - மைத்திரி அரசுக்கு எந்த உதவி செய்யவும் இந்தியா தயாராக இருக்கிறது.

தமது இந்தியப் பயணத்துக்கு முன்னர், இலங்கைக் கடல் பகுதியில் அத்துமீறி மீன்பிடித்தபோது கைதான 16 மீனவர்களை மனிதாபிமான ரீதியில் விடுதலை செய்து தனது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார் பிரதமர் ரணில். கடந்த மார்ச் மாதம் பிரதமர் மோடியின் இலங்கை பயணத்தின் போதும் 86 இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர். ஏப்ரலில் 54 பேர் விடுவிக்கப்பட்டனர்.

தனது இந்தியப் பயணத்தின்போது ஜெனிவாவில் இந்தியாவின் ஆதரவைப் பெறுவதற்கு ரணில் அளிக்கும் முக்கியத்துவம், மீனவர் பிரச்சினையிலும் இருக்க வேண்டும். கைதாகும் மீனவர்களைத் தனது அரசியல் நோக்கங்களுக்காக இலங்கை விடுவிக்கும்போது மீனவர் பிரச்சினையைத் தீர்ப்ப தில் இந்தியாவுக்கு உள்ள அக்கறை குறையலாம். இலங்கையின் கடல் வளங்கள் சூறையாடப்படுவதைத் தடுக்க முடியாது போகலாம்.

கடந்த மார்ச் மாதம் சென்னை தொலைக்காட்சி ஒன்றுக்குப் பேட்டியளிக்கையில், இலங்கைக் கடல் பகுதிக்குள் அத்துமீறி வரும் இந்திய மீனவர்களைச் சுடும் அதிகாரம் இலங்கைக்கு உண்டு என்று தெரிவித்தவர், தற்பொழுது மனிதாபிமான அடிப்படையில் என்று கூறிக்கொண்டு இந்திய மீனவர்களை விடுவிக்கிறார். இந்தியாவின் ஆதரவைப் பெறும் கபட நோக்கம் கொண்டதாக இது இருக்கலாம்.

ஆகவே ரணிலின் இந்தியப் பயணம் ஜெனிவாவில் இலங்கைக்கு ஆதரவு தேடும் ஒரு பயணமாக இருக்காமல் மீனவர் பிரச்சினை உட்பட சகல பிரச்சினைகளுக்கும் தீர்வுகாணும் பயணமாக அமைய வேண்டும்.

பத்தி எழுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021-492 7474, 021-492 7475, 021-567 9933, 021-567 9944
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## புதிய கூட்டு அரசின் கைரேகை ஒளிபட்டுத் தெறிக்கிறதே......!

ஐக்கிய நாடுகள் சபையின் -- ஐ.நா. மனித உரிமைகள் சபையின் -- இலங்கை குறித்த விசாரணை அறிக்கை இன்று (16.09.2015) ஜெனிவாவில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட உள்ளது. ஆயினும் உத்தியோகபூர்வமாக வெளியாவதற்கு முன்னரே, அது உள்ளாடும் கள்ளாடுமாகக் கசிந்துவிட்டது; கசியவிடப்பட்டு விட்டது!

மிகவும் முக்கியமான, பல தரப்புகளும் எதிர்பார்த்த, இரகசியமாகப் பேணப்பட்ட அந்த அறிக்கை விவரங்கள் உத்தியோகப்பற்றற்ற முறையில் எவ்வாறு கசிந்தன என்பது குறித்து, அதற்கென ஓர் உள்ளக விசாரணை மேற்கொள்ளப்படுமா என்ற வினா இயல்பாகவே எழுகிறது!!

உண்மை என்னவெனில், விசாரணை அறிக்கை ஐ.நாவின் மனித உரிமைகள் சபை யில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படும் வரை, இரகசியம் பேணப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதித்தே எங்கள் நாட்டு அரசிடம், அதன் பிரதானிகளிடம் அறிக்கை கையளிக்கப் பட்டது!!!

ஆனால் அது கசிந்து அரைப் பரமரகசியமாக வெளிவந்தமை நம்பிக்கைத் துரோகமான செயற்பாடு எனில் தப்பல்ல.

ஐ.நா. மனித உரிமைகள் சபை தனது அறிக்கையின் முக்கிய பகுதிகள் குறித்து, அது இறுக்கமான முறையில் செயற்பட்டிருந்த போதிலும், அது எவ்வாறு கசிந்தது என்பது பெரும் மர்மமே எனில் தப்பன்று.

அது ஒரு புறமிருக்க --

இலங்கை தொடர்பான ஐ.நா.மனித உரிமைகள் சபையின் தரவுகள், மிகவும் பாரதூரமானவை என்று அதன் ஆணையாளர் வெளிப்படுத்தி இருப்பது உள்ளார்ந்து உற்று நோக்க வேண்டிய ஒன்றாகும். இன்று புதன்கிழமை (16.9.2015இல்) சபையில், ஆணையாளரால் வெளியிடப்படும் அறிக்கை, இலங்கை(கொழும்பு) அரசுக்கு தலைச்சுற்றைக் கொண்டு வரும் என்று நோக்கர்கள் உத்தி யோகப் பற்றற்ற முறையில் கருத்து வெளியிட்டிருப்பதாகவும் தகவல்கள் கசிந்துள்ளன!

எதுவோ, ஐ.நா. மனித உரிமைகள் சபையின் வலைக்குள் விழாதிருக்க, அமெரிக்காவின் உள்ளக விசாரணை என்ற கயிற்றில் தொங்கிக் கொள்ளவே, கொழும்பு அரசு அதியுச்ச ராஜதந்திர நட்வடிக்கையில், ஜெனிவாவில் சுழன்று திரிவதாக அனைத்துலக ராஜதந்திரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

மனித உரிமைகள் விடயத்தில், அனைத்துலக விசாரணையைத் தவிர்த்து, இலங்கை அரசின் உள்ளக விசாரணை என்ற பம்மாத்துக்கு ஒத்தூதும் ரணில் அரசுக்கு பக்கபலமாக, அமெரிக்கா கைகொடுக்கும் என்ற எதிர் பார்ப்பு, தென்னிலங்கையில் மேலுயர்ந்து நிற்பதனையும் மறந்துவிட இயலாது.

இதேவேளை, உள்ளக விசாரணை என்ற அமெரிக்காவின் பிரேரணைக்கு, அனைத்துலக நாடுகளின் ஆதரவைத் திரட்டும் படலமும் ஜெனிவாவில் தொடங்கப்பட உள்ளது. அதற்கு முறைசாராக் கூட்டம் என்று நாமம் சூட்டப்பட்டுள்ளது!

இலங்கை அரசின் பொறுப்புக் கூறல் குறித்த செயல்முறைகள் தொடர்பாக, அதன் இணக்கத்துடன் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற அமெரிக்கா பாடாய்ப்பாடுபடுகிறது. அதுவும் முக்கிய காட்சியாக தொனிக்கப்போகிறது.


அத்துடன் விவகாரம் தரிக்கவில்லை. இந்தியாவுக்கு 'விழுந்துகட்டி' ஓடிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தருணம் பார்த்து --

ஐக்கிய இலங்கைக்குள் புதிய அரசமைப்பு ஒன்றின் மூலம் தமிழ் மக்களுக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படும் என்று, புதுடில்லியில் திருவாய் மலர்ந்துள்ளார்.

மறுபக்கத்தில், இலங்கை அரசுடனான இராணுவ உறவு மேலும் வலுப்படுத்தப்படும் என்று இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி, ரணிலுக்கு இனிப்புப் 'போளை' வழங்கி உள்ளார்.

அடே அப்பா! இலங்கையின் புதிய கூட்டு அரசின் கைரேகை, ஒளிபட்டுத் தெறிக்கத் தொடங்கிவிட்டது. அடியடா சக்கை என்ற தமிழ்ப் பேச்சு மொழியை விட வேறெந்த உவமானத்தை இதற்குக் கூறலாம்.......!??

# தெளிவில்லாத நிலையில் போர்க் குற்ற விசாரணை



வந்தியத்தேவர்

நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இரண்டாவது தடவையாக தமிழரான இரா.சம்பந்தன் நியமிக்கப்பட்டுள்ளமை தமிழ் மக்கள் மத்தியில் மகிழ்ச்சியை உண்டு பண்ணி னாலும், தென்பகுதி அரசியல்வாதிகள் அதை முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் ஒரு தமிழர் அமர்வதை ஒப்புக்கொள்ள விரும்பாத நிலை இன்னமும் அங்கு நீடிக்கிறது. இரண்டு பிரதான அரசியல் கட்சிகளும் இணைந்து தேசிய அரசை அமைத்துள்ளன. எனினும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பங்காளிகள் சிலர், தேசிய அரசில் இணைய மறுத்துத் தனியாக இயங்குகின்றனர். சுமார் ஐம்பது வரையான உறுப்பினர்கள் இதில் உள்ளனர். எதிர்க்கட்சித் தலைவர் தொடர்பில் இழுபறி நிலை இருந்த நிலையில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்க்கட்சித் தலைவர் பதவி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இல்லை என்பதை நல்லாட்சியின் ஒரு அடையாளமாகவே கூறியிருந்தார் என்பதைத் தமிழ்மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

நாடாளுமன்றச் சம்பிரதாயப்படி சபாநாயகரே இறுதி முடிவெடுக்கத் தகுதி பெற்றவர். சபாநாயகரின் முடிவுக்கு அமைய எதிர்க்கட்சித் தலைமை சம்பந்தனுக்குக் கிடைத்துள்ளது. எனினும் மகிந்த சார்பானவர்கள் இதனை எப்படியாவது குழப்பிவிட வேண்டும் என்பதில் குறியாக இருக்கிறார்கள். தமிழர் விரோதப் போக்கு எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒரு பிரச்சினையாகவே இருக்கப் போகின்றது.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கூட்டமைப்புக்கு வழங்க முன்வந்ததில் அரசுக்கு உள்நோக்கம் இல்லாமலில்லை. சர்வதேச விசாரணையை இல்லாமற் செய்து போர்க்குற்றம் தொடர்பாக உள்ளக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதே அரசின் நோக்கம். அதற்காக அமெரிக்க சார்பு நிலையைக் கருத்தில் எடுத்து உள்ளக விசாரணை என்ற தனது நோக்கத்தை நிறைவேற்றவே எதிர்க்கட்சித் தலைமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்டுள்ளதாகப் பொதுவாகக் கருத்துக்கள் வெளிவந்துள்ளன. போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச விசாரணை தேவை என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையோர் வலியுறுத்திக் கொண்டிருக்கும்போது, விசாரணை எப்போதோ முடிந்து விட்டதாகவும் சிலர் கூறுகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் சர்வதேச விசாரணை முடிவடைந்து விட்டதாகக் கூறியுள்ளார். வடக்கு மாகாண முதல்வர் க.வி.விக்கினேஸ்வரன் சர்வதேச விசாரணையை ஆதரிக்கின்றார். சர்வதேச விசாரணையைக் கோரி பொது மக்கள் கையெழுத்திட்ட வண்ணம் உள்ளனர். தங்களது தலைமைத்துவத்தை அதிக பிரதிநிதிகளூடாகக் கூட்டமைப்புக்குத் தமிழ் மக்கள் வழங்கியுள்ளபோது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பிரதிநிதிகள் உண்மை நிலைகளை அடுத்தவர் தெரிந்து கொள்ளாமல் மறைத்து வைத்துக் கொண்டு முரண்பட்டுக் கொண்டிருப்பது எந்த வகையில் நியாயமாகும்? எதிர்க் கட்சித் தலைவர் சம்பந்தனாவது சர்வதேச விசாரணையா? உள்ளக விசாரணையா? என்பதைத் திட்ட வட்டமாக நாட்டு மக்களுக்கு குறிப்பாக போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

> தமிழர்களின் முற்று முழுதான அபிலாசைகளான, அவர்கள் எதிர்நோக்கும் சுயநிர்ணய உரிமை யுடன் கூடிய வடக்கு கிழக்கு இணைந்த அரசு கிடைக்கப் போவதில்லை என்பதால் சம்பந்தனுக்குக் கிடைத்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியால் தமிழர்களுக்கு பெரிய அளவிலான விமோசனம் கிடைக்கப் போவ தில்லை

சர்வதேச விசாரணை முடிந்து விட்டதாகச் சுமந்திரன் கூறினாலும், ஒரு பகுதியினரிடம் மட்டுமே அவர் கூறியவாறு விசாரணை இடம் பெற்றுள்ளது. மறுதரப்பினரிடம் அதாவது குற்றவாளிகள் எனக் குறிப்பிடப்படுபவர்களிடம் விசாரணை செய்யப்படவில்லை.

நீதிமன்றத்தில் வழக்காளியை மட்டும் விசாரித்து விட்டு எதிர்த் தரப்பை விசாரிக்காது தீர்ப்பு வழங்கலாம் என்பதுபோல் இது உள்ளது. சம்பந்தப்பட்ட அரசியல்வாதிகளை சர்வதேச விசாரணையின் முன் நிறுத்துவதில்லை என அரசுத் தலைவர்கள் செய்த முடிவுக்கு ஆதரவாகவே உள்ளகவிசாரணை என்ற பதம் உள்ளது. இதில் எதிர்க்கட்சித் தலைவரின் பொறுப்பு முக்கியத்துவம் கொண்டதும் கவனத்தில் கொள்ள வேண்டியதுமாகும்.

என்ன இருந்தாலும் பிரதி, இராஜாங்க அமைச்சர்கள் பதவிகள் இன்னமும் வழங்கப்படாததால், அதுவரை அமைச்சர் பதவிகளுக்காக காத்துக்கிடப்பவர்கள் அரசுக்கு எதிராக எதையும் செய்யப்போவதில்லை. அந்த நியமனங்களின் பின்னரே அரசின் உண்மை நிலைப்பாட்டைத் தெரிந்து கொள்ள முடியும். இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் சிங்கள மக்களுடன் முரண்படாத வகையில் செயற்பட வேண்டுமானால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்ட சமஷ்டி இல்லை என்றான மாற்றுத் தீர்வுகளையே ஏற்க வேண்டி வரலாம். குறைந்த அளவிலான தீர்வுகளை வழங்கி, நாங்கள் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டுள்ளோம் என்று உலகுக்குப் போக்குக் காட்டும் நாடகத்தையே மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் நடத்தவுள்ளனர். தமிழர்களின் முற்று முழுதான அபிலாசைகளான அவர்கள் எதிர்நோக்கும் சுயநிர்ணய உரிமை யுடன் கூடிய வடக்கு கிழக்கு இணைந்த அரசு கிடைக்கப் போவதில்லை என்பதால் சம்பந்தனுக்குக் கிடைத்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியால் தமிழர்களுக்கு பெரிய அளவிலான விமோசனம் கிடைக்கப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய ஆட்சிக்கால ஊழல் விசாரணைகள் தொடர வேண்டும்

## "அட்வன்ட் கார்ட்" புலனாய்வு நிறுத்தப்பட்டமைக்கு விளக்கம் என்ன?

லூசியன் ராஜகருணாநாயக்க கட்டுரையிலிருந்து ரெங்கன்

குற்றங்கள், ஊழல்கள் மற்றும் முன்னைய அரசின் மோசடிகள் தொடர்பான பல்வேறு குற்ற விசாரணைகளையும் இந்த அரசு மூடிமறைத்துவிடுமோ என்ற ஒருவித சந்தேகம் எழுந்துள்ள சூழ்நிலையில் பிரதான குற்றச்செயல்கள் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த தகவல்களைச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதானது, உண்மைகளைக் கண்டறிவதில் அரசு தன்னை அர்ப்பணித்துள்ளது என்பதை வெளிப்படுத்துவதாக உள்ளது. எல்.ரி.ரி.ஈ தலைவர்களில் ஒருவரான கே.பியின் செயற்பாடுகள் தொடர்பில் பயங்கரவாதம் காணப்படவில்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றங்களுக்கு அறிவித் திருப்பது மற்றும் அட்வன்ட் கார்ட் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் கைவிடுவதாக வந்துள்ள செய்திகளின் பின்னணியில் பிரதமரின் நடவடிக்கை முக்கியத்துவம் பெறுகின்றது.


கே.பி. தொடர்பான விரிவான புலனாய்வுகள் இடம்பெற்று வருவதாக சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்திருப்பது ஆறுதல் அளித்தாலும், அட்வன்ட்கார்ட் (Advante Guarde) விடயம் தொடர்பாகத் தெளிவான அறிக்கையொன்று வெளியிடப்படுவது அவசியம். அது தொடர்பான குற்றச்சாட்டுகளின் தன்மை மற்றும் எப்பொழுது, எந்த அடிப்படையில் விசாரணைகள் நிறுத்தப்பட்டன என்பது தெளிவாக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட நபர்கள் நாட்டுக்கு வெளியில் செல்ல அனுமதிக்கப்பட்டமை பற்றியும் விவரிக்கப்படவேண்டும்.

விசாரணைகளின் முன்னெடுப்புக்கள் தொடர்பான பிரதமரின் தகவல் கோரிக்கை சரியான நேரத்தில் முன்வைக்கப்பட்டிருப்பது போலவே நல்லாட்சியின் மூலம் ஒருமைப்பாட்டைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டில் மக்களுக்கு எதிராகக் குற்றம் புரிந்தவர்கள் தப்பவிடப்படுகிறார்கள் என்ற அபிப்பிராயம் மக்கள் மனங்களில் வளர்வதற்கு இடம் தரப்படலாகாது.

ஜனவரி 8ஆம் நாள் ஜனாதிபதித் தேர்தலின் போது மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதியாகும் இது. ஓகஸ்ட் 17 அன்றும் அதுவே உறுதிப்படுத்தப்பட்டது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஒரு பகுதியினர் ஒன்று கூடுவதன் நோக்கம், இந்த விசாரணைகளைக் குப்பையில் தள்ளிவிடுவதற்காகும். அதனை விரைவாகச் செய்து முடிப்பதற்காக அவர்கள் பிரிவினை வாதத்தை முன்தள்ளுகிறார்கள். அண்மையில் அரசியல் வாதியான பிக்கு ஒருவர் பிரதீப் எக்னெலிகொட புலிகளின் முகவராகச் செயற்பட்டார் என்று கூறியிருந்தமை இதற்கு ஒரு சான்று. எனவே பிரதமர் வழங்கியுள்ள வாக்குறுதிகள் மற்றும் நல்லாட் சிக்கான அவரது அர்ப்பணிப்புக்கள் நிறை வேற்றப்படுவதற்கு இந்த விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுவதை உறுதி செய்ய வேண்டும். எஞ்சி நிற்பவை தொடர்பாகப் புதிய விசாரணைகளும் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

ராஜபக்சவின் குடும்பமே விசாரணைக்குட்படுத்தப்பட வேண்டிய பல விடயங்களைக் கொண்டிருக்கின்றது. இரண்டு தடவை ஜனாதிபதியாக இருந்த ஒருவர் எதிர்த்தரப்பின் பின்வாங்கில் அமர்ந்திருந்தாலும்கூட இந்த விசாரணைகளின் முன்னெடுப்பில் தளர்வு ஏற்பட்டுவிடக் கூடாது.

கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைத்துள்ள ஒருமைப்பாட்டு அரசின் கட்டமைப்பு தொடர்பில் எதிர்கொள்கின்ற பெரிய பிரச்சினைகள் வெளிப்படுவதாக இருந்துள்ளது.



**ராஜபக்ச தன்னையும் தனது குடும்பத்தாரையும் ஊழல் மோசடி விசாரணைகளில் இருந்து தப்புவித்துக் கொள்ள வேண்டியும் இருக்கின்றது. அதனால் அவர் அமைதியாக இருப்பதுபோல் தெரிகின்றது. இவை மட்டுமல்ல வேறுபல புலனாய்வுகளும் ஆரம்பிக்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியிலுள்ள சிறு குழுக்கள் தங்களுக்கும் அமைச்சரவைப் பதவிகள் கேட்டு ஏற்படுத்துகின்ற அழுத்தங்களால் இந்தப் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

ஐ.தே.கவுக்கு கிடைத்த 106உறுப்பினர்களுடன் வேறு சிறு கட்சிகளின் ஆதரவும் த.தே.கூட்டமைப்பின் கொள்கை அடிப்படையிலான ஆதரவையும் பெற்று மிக இலகுவாக அரசொன்றை அமைக்கக்கூடிய நிலைமை இருந்தபோதிலும், ஜனாதிபதியின் தேசிய ஒருமைப்பாட்டு அரசுக்கான விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் பெரிய நிலைப்பாடு ஒன்றை மேற்கொண்டு இரு பெரும் கட்சிகளும் இணைந்து அரசமைக்க அது முன்வந்தது.

**விசாரணை பற்றிய தகவல் அறிக்கை**

அமைச்சரவை ஒன்று உருவாக்கப்படுவதற்கு முன்னரே அரசின் விழிப்புணர்வையும் வெளிப்படைத்தன்மையையும் வெளிப்படுத்தும் வகையில், பத்திரிகையாளர் லசந்த விக்கிரமசிங்க முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ், ரக்பிவீரர் வசிம் தாஜுதீன் ஆகியவர்களின் கொலைகள் தொடர்பாக நடைபெற்றுவரும் விசாரணைகளின் முன்னேற்றம் குறித்த அறிக்கை களை வழங்கும்படி பிரதமர் விக்கிரமசிங்க அதிகாரிகளைப் பணித்திருந்தார்.

புதிய அமைச்சர்களுக்கு அவர் விடுத்த முக்கிய அறிவுரையாவது தேர்தல் பரப்புரைகளின் போது மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் உடனடியாக இறங்குங்கள். நேர்மையும் பரிசுத்தமான செயற்பாடுகளின் மூலமும் பெறுபேறுகளை வழங்குங்கள். இலங்கையில் நாகரிகமுள்ள சமுதாயமொன்றைக் கட்டியெழுப்ப உதவுங்கள் என்பதாகும்.

இதற்கு முன்னர் பொலநறுவையில் இடம் பெற்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வருடாந்த மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உரை நிகழ்த்துகையில் கட்சி தீவிர சீர்திருத்தங்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அதன் மூலம் எதிர் வரக் கூடிய தேர்தல்களில் வெற்றி பெற வேண்டும். அதற்காகக் கட்சியின் எதிர்காலத்துக்கான மாற்றங்களைச் செய்ய வேண்டிய தருணம் இதுவாகும் என்று கூறியிருந்தார். கட்சியின் நிறுவுநர் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கவகுத்துக்கொடுத்த கொள்கை நோக்கங்களில் இருந்து திசைமாறிப் போயிருப்பதைத் தாம் சரிசெய்து சரியானமார்க்கத்தில்கொண்டு செல்ல விரும்புவதாகவும் தெரிவித்தார்.

இந்த நாட்டின் மக்கள் அனைவரையும் பாகுபாடுகளில் பிரித்து விடுவதான ஊழல் மிக்கசர்வாதிகாரப் போக்கை நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட கடந்த காலத்திலிருந்து நேர் வழிக்குத் திருப்பியாக வேண்டும் என்றும் கூறியிருந்தார்.



சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் எந்த அளவுக்குக் கீழ் இறங்கியுள்ளார்கள் என்பது அமைச்சர் பதவிகளுக் காக அவர்கள் அவதிப்பட்டதைக் கொண்டு கணித்துக் கொள்ளலாம்.

கட்சியைச் சீர்திருத்துவதில் ஜனாதிபதி கொண்டிருக்கும் கொள்கைகள் நிறைவேற வேண்டுமானால் முக்கியமாக குடும்ப ஆட்சிமுறை முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். கடந்த காலத்தில் கட்டியெழுப்பப்பட்ட இந்த முறையானது, நல்ல அரசியல் முறை வெற்றி பெறுவதற்கு இடைஞ்சலாக இருந்துவந்துள்ளது. இதனை மாற்றி அமைப்பதானால் சுதந்திரக்கட்சியினரை நேர்மையாகச் செயற்படும்படியும், பதவி விலகப் போவதாக அச்சுறுத்தல்களை மேற்கொண்டு மீண்டும் ராஜபக்ச குழுவை அதிகாரத்தில் அமர்த்த எடுக்கும் முயற்சிகளை கைவிடும்படியும் ஜனாதிபதி தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்க வேண்டியிருக்கும்.

**சிறு குழுக்களின் நெருக்குதல்**

சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர் இப்போது எதிர்க்கட்சியில் இருக்கும் சிலரால் குறிப்பாக சில சிறு கட்சிகளின் தலைவர்களால் பெரும் நெருக்குதல்களுக்குள்ளாகவே செய்வார்கள். இவர்கள் மீண்டும் எதிர்க்கட்சியாகச் செயற்படுவதற்கு ஒன்றிணைய விரும்புவார்கள். அனேகமாக ராஜபக்சவை தலைமைத்துவம் வகிக்கும்படியும் செய்துவிடுவார்கள். இருந்தாலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினருக்கு இது ஒரு கடினமான கால கட்டமாகவே தென்படுகின்றது. அவர்களில் எப்பொழுதும் குரல் எழுப்பிக் கொண்டிருக்கின்றவர்களான விமல் வீரவன்ச, உதயகம்மன்பில போன்றவர் களைச் சபாநாயகர் நாடாளுமன்றத்தில் கட்சிகளின் தலைவர்களாக அங்கீகரிக்க வில்லை. அவர்களில் 50பேருக்கு மேற்பட்டவர்களால் எதிர்க்கட்சித் தலைவர் பதவி கோரி சபாநாயகருக்கு அனுப்பியுள்ள மனுவும் வெற்றியளிக்கப் போவதில்லை.

சுதந்திரக் கட்சியின் பெரும்பான்மையினர் ஐ.தே.கவுடன் இணைந்து உடன்பாட்டு அரசொன்றை அமைத்துள்ள நிலையில் சிலர் தாங்கள் நியாயமற்ற முறையில் நிர்வகிக்கப்படுவதாகக் கூக்குரலிடுவது அர்த்தமில்லாமல் போயுள்ளது. இது எப்படியென்றால் கட்சித் தலைவரால் செயலாளராக நிய மிக்கப்பட்டுள்ளவர் அவர்கள் பக்கம் சரிவதாய் இல்லை. முன்னர் சுதந்திரக் கட்சியின தும் ஐ.ம.சு. முன்னணியினதும் முன்னாள் பொதுச் செயலாளர்கள் அமைச்சர்களாகப் பதவிகளை ஏற்றுக்கொண்டுவிட்டார்கள்.

**தலைமை வகிக்க ராஜபக்ச தயக்கம்**

புதிய தனிக் குழுவொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகவும் தகவல்கள் வருகின்றன. ஆனால் மகிந்த ராஜபக்ச தமக்கு அண்மைக்காலத்தில் ஏற்பட்டுவிட்ட இரட்டைத் தோல்வியின் அனுபவம் காரணமாக அவர்களுக்குச் சம்மதம் தெரிவிப்பதில் தயக்கம் காட்டுவதால் அவர்களின் முயற்சி வேகம் பெறவில்லையென்று தெரிகின்றது. அது மட்டுமன்றி ராஜபக்ச தன்னையும் தனது குடும்பத்தாரையும் ஊழல் மோசடி விசாரணைகளில் இருந்து தப்புவித்துக் கொள்ள வேண்டியும் இருக்கின்றது. அதனால் அவர் அமைதியாக இருப்பதுபோல் தெரிகின்றது. இவை மட்டுமல்ல வேறுபல புலனாய்வுகளும் ஆரம்பிக்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடோக்கு எண் விளையாட்டு


| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 7 | 5 | 4 | | | 9 | 2 | 1 |
| | 8 | 2 | | 9 | 1 | | 3 | 6 |
| 1 | 9 | | 2 | | | | 8 | 4 |
| | | | | 2 | | | | |
| | | 8 | | | | 6 | | |
| | | | | 5 | | | | |
| 7 | 5 | | | | 8 | | 6 | 2 |
| 2 | 6 | | 5 | 3 | | 8 | 4 | |
| 8 | 3 | 4 | | | 2 | 1 | 5 | 9 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 4 | 5 | 2 | 1 | 7 | 6 | 9 |
| 7 | 9 | 5 | 8 | 3 | 6 | 2 | 1 | 4 |
| 6 | 1 | 2 | 7 | 9 | 4 | 3 | 5 | 8 |
| 3 | 4 | 7 | 1 | 5 | 9 | 6 | 8 | 2 |
| 9 | 5 | 6 | 2 | 8 | 3 | 1 | 4 | 7 |
| 1 | 2 | 8 | 4 | 6 | 7 | 5 | 9 | 3 |
| 2 | 8 | 9 | 6 | 7 | 5 | 4 | 3 | 1 |
| 4 | 6 | 3 | 9 | 1 | 2 | 8 | 7 | 5 |
| 5 | 7 | 1 | 3 | 4 | 8 | 9 | 2 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# உடல் ஆரோக்கியத்துக்கு உதவும் பப்பாளி



சாதாரணமாக அனைவரும் ஒதுக்கும் அல்லது பெரிதாக அனைவராலும் விரும்பப்படாத பப்பாளிப்பழத்தில் எமது உடல் ஆரோக்கியத்துக்கும், சரும அழகுக்கும் தேவையான பல சத்துக்கள் அடங்கியுள்ளன. பப்பாளிப் பழத்தை அடிக்கடி குழந்தைகளுக்குக் கொடுத்து வர உடல் வளர்ச்சி துரிதமாகும். எலும்பு வளர்ச்சியடையும், பல் உறுதி ஏற்படும். பப்பாளிக் காயைக் கூட்டாக செய்து உண்டு வர குண்டான உடல் படிப்படியாக மெலியும். தொடர்ந்து பப்பாளிப் பழத்தைச் சாப்பிட்டு வர கல்லீரல் வீக்கம் குறையும். பப்பாளிப் பழத்தை தேனில் தோய்த்து உண்டு வர நரம்புத் தளர்ச்சி குறையும். நன்கு பழுத்த பழத்தை கூழாகப் பிசைந்து தேன் கலந்து முகத்தில் பூசி, ஊறிய பின் சுடுநீரால் கழுவி வர முகச்சுருக்கம் மாறி, முகம் அழகு பெறும். பப்பாளி விதைகளை அரைத்துப் பாலில் கலந்து சாப்பிட நாக்குளிப் பூச்சிகள் அழிந்து விடும்.

பப்பாளிக் காயின் பாலை வாய்ப்புண் மற்றும் புண்கள் மேல் பூச புண்கள் ஆறும். பப்பாளிப் பாலை, பசும் பாலுடன் கலந்து சேற்றுப் புண்கள் மேல் தடவி வரபுண்கள்ஆறும். பப்பாளிப் பாலைக் குழந் தைகளின் தலையில் ஏற்படும் புண்களில் பூசி வர புண்கள் ஆறும். பப்பாளி இலைகளை அரைத்து கட்டிகளில் மேல் போட்டு வர கட்டி உடையும். பப்பாளி இலைகளைப் பிழிந்து எடுத்து வீக்கங்கள்மேல் பூசி வர வீக்கம் கரை யும்.

பப்பாளி விதைகளை அரைத்துத் தேள் கொட்டிய இடத்தில் பூச வலி, விஷம் இறங்கும். பப்பாளிக் காய்க் குழம்பை பிரசவித்த பெண்கள் உணவில் சேர்த்து வர பால் சுரப்புக் கூடும்.




| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 700 | 700 | 400-700 | 550 |
| நண்டு | 300 | 400 | 300 | 300 | 200 | 400 |
| கணவாய் | 600 | 600 | 600 | 500 | 600 | – |
| பாரை | 550 | 500 | 500 | 600 | 500 | 400 |
| சுறா | 500 | 500 | – | 700 | 500 | – |
| சீலா | 300 | 400 | 300 | 400 | 400 | – |
| விளை | 650 | 400 | 400 | 500 | 400 | 350 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | – |
| கும்பிளா | 350 | 350 | 300 | 400 | 300 | 300 |
| கிழாக்கன் | 500 | 800 | – | 500 | 250 | – |
| ஒரா | 350 | 400 | 300 | 500 | – | 350 |
| திரளி | 250 | 250 | 200 | 300 | 200 | 300 |
| நகரை | 200 | 200 | 150 | 300 | 250 | 300 |
| ஆடை | 150 | 150 | 100 | 120 | 100 | 70 |
| ஓட்டி | 250 | 200 | 250 | 350 | 250 | 250 |
| திருக்கை | 150 | 300 | 250 | 300 | 250 | 150 |
| பாலை | 350 | 250 | 300 | 300 | – | – |
| வாழை | 100 | 150 | – | 350 | – | 250 |
| கொய் | 100 | 100 | 100 | 100 | 50 | – |
| மதனம் | 150 | 250 | 300 | 300 | – | 250 |

**நாளை**

**ஆவணி 31**
**வியாழக்கிழமை**
**17.09.2015**

**திதி: சதுர்த்தி**
**மு.இ.07.49 வரை**
**நட்சத்திரம்: சுவாதி**
**ந.இ.12.01 வரை**
**சுபநேரம்: 07.33-09.03 வரை**
**இராகுகாலம்: [illegible] வரை**




| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 40 | 60 | 40 | 60 | 40 | 20 |
| கத்தரி | 100 | 100 | 80 | 80 | 50 | 80 | 80 | 40 |
| கரட் | 70 | 120 | 100–160 | 80 | 120 | 120 | 100–120 | 120 |
| மரவள்ளி | 50 | 50 | 40 | 40 | 40–50 | 60 | 50–60 | 40 |
| பயிற்றை | 100 | 50 | 80 | 60 | 70–80 | 80 | 80–100 | 30 |
| பாகல் | 100 | 80 | 100 | 80 | 80 | 120 | 100–110 | 60 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 80 | 120 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 110 | 120 | 100 | 100 | 110 | 100–120 | 90 |
| சி.வெங்காயம் | 90 | 100 | 100 | 80 | 70 | 100 | 100–120 | 60 |
| பூசணி | 40 | 30 | 140 | 30 | 30 | 60 | 50–60 | 25 |
| தக்காளி | 60 | 50 | 40 | 40 | 40–50 | 70 | 60–80 | 40 |
| வாழைக்காய் | 100 | 50 | 60 | 50 | 50–60 | 40 | 60 | 25 |
| கீரை | 20 | 20 | 30 | 10 | 20 | 40 | 30–35 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 20 | 20 | 40 | 10–15 | 10 |
| பச்சை மிளகாய் | 160 | 130 | 180 | 120 | 120–130 | 120 | 200–220 | 100 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 | 50 | 60 | 60–80 | 30 |
| கோவா | 70 | 80 | 80 | 80 | 60 | 80 | 80–100 | 40–50 |
| வெண்டி | 40 | 40 | 40 | 60 | 60–80 | 40 | 40–50 | 25 |
| போஞ்சி | 160 | 140 | 180 | 160 | 140 | 140 | 120–160 | 140 |
| லீக்ஸ் | 80 | 80 | 80 | 80 | 80 | 120 | 70–80 | 70 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 50 | 60 | 40–50 | 35–50 | 35 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 100 | 90 | 80 | 90 | 80–100 | 80–100 |
| தேசிக்காய் | 80 | 120 | 120 | 100 | 100 | 120 | 120–160 | 100 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15–20 | 08 |
| கறிமிளகாய் | 100 | 100 | 100 | 100 | 120 | 120 | 100–120 | 100 |
| இராசவள்ளி | – | – | – | 160 | 80–100 | – | 180 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 100 | 120 | 120 | 120–140 | 100 | 120 | 70 |

# ஆன்மா இறைவனை உணரும் போது ஆரம்பிக்கிறது மத உணர்வு

**விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....**



மதம் என்பது ஆன்மா சம்பந்தப்பட்டது, சமூக விடயங்களில் தலையிட அதற்கு எந்த உரிமையும் இல்லை. என்பதை நீங்கள் நினைவில் வைக்க வேண்டும். ஏற்கனவே விளைந்துள்ள தீமைகள் அனைத்தும் அப்படித் தலையிட்டதன் காரணமாகவே என்பதையும் மறக்கக் கூடாது.

ஒருமதம் பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால் அது உத்வேகம் மிக்கதாக இருக்க வேண் டும். அதே வேளையில் அதில் உட்பிரிவுகள் பெருகிக் கொண்டே போகின்ற அபாயத்தைத் தடுக்க வேண்டும். பிரிவினை வாதம் அற்ற பிரிவாக இருப்பதன் மூலம் இதை நாம் தடுக்க முடியும், ஏனெனில் இதில் ஒரு பிரிவுக்கான அனுகூலங்கள் அனைத்தும் இருக்கும், உலகம் தழுவிய ஒரு மதத்துக்கான பரந்த தன்மையும் இருக்கும். எப்போது ஆன்மா அன்பான இறைவனின் தேவையை ஆசையை, ஏக்கத்தை உணருமோ அப்போதுதான் மத உணர்வே ஆரம்பிக்கிறது, அதற்கு முன்பு அல்ல.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(நேற்றைய தொடர்ச்சி)


**சகுனங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.**

1. காட்சியின் தன்மையை வைத்து நல்ல காட்சியாயின் நல்ல சகுனம்; கெட்ட காட்சியாயின் கெட்ட சகுனம்.
2. நாம் எதிர்நோக்கும் ஆளோ, பொருளோ, வாகனமோ அமைவது சாதகமான நிலையாயின் நல்ல சகுனம்; பாதகமான நிலையாயின் கெட்ட சகுனம்.
3. மரபுவழியாகச் சொல்லப்படும் சகுனங்கள்: முதலாவதாக நல்ல காட்சி – நல்ல சகுனம் கண்டால் நல்லது நடக்கும் என்பதும், கெட்ட காட்சி – கெட்ட சகுனம் கண்டால் கெட்டது நடக்கும் என்பதும் எமது மனதில் எழும் வெறுப்பு விருப்புகளின் வெளிப்பாடாகும்.

இரண்டாவதாக, காட்சி சாதகமானதா அல்லது பாதகமானதா என்பதை வைத்து எழும் சகுன நம்பிக்கை, நடக்கப்போகும் காரியத்தின் முன்னறிவிப்பாக இந்தக் காட்சிகளைக் கருதும் அறியாமையால் எழுகிறது.

மூன்றாவதாக, பல்லி, பூனை போன்ற சகுன நம்பிக்கைகள் மரபு வழியில் கற்பிக்கப்பட்ட சகுன நம்பிக்கைகள் ஆகும்.

விதவை என்பவள் வாழ்விழந்தவள், அலங்கோலப்படுத்தப்பட்டவள். எனவே அவள் எதிரில் வந்தால் கெட்டது நடக்கும் என்ற நம்பிக்கை அவள் மீதுள்ள வெறுப்பால் எழுந்தது. நடக்கப்போகும் கெடுதலுக்கு அவள் எப்படிப் பொறுப்பாவாள் என்பதைச் சற்றுச் சிந்திக்க வேண்டும்.



# சகுனங்கள் - ஒரு பார்வை...

நடக்கப்போகும் கெடுதலுக்கு வாழ்விழந்த பெண்ணை ஒரு அபாய அறிவிப்பாக ஆக்குவதும், அதை நம்புவதும் அடிமுட்டாள்தனமல்லவா? அநியாயம் அல்லவா?

நடக்குப்போகும் காரியத்துக்கு, புறப்படுமுன் நல்லதாயின் நல்லது நடக்கும் என்பதும், கெட்டதாயின் கெட்டது நடக்கும் என்பதும் காட்சியோடு காரியத்தைப் பொருத்திப் பார்க்கும் மூடத்தனத்தின் விளைவாகும்.

இந்தக் காட்சிகளைப் பலமுறை சோதித்துப் பார்த்தால், கெட்ட சகுனத்தைப் பார்த்துச் சென்றபோது நல்லது நடப்பதையும், நல்ல சகுனத்தைப் பார்த்துச் சென்றபோது கெட்டது நடப்பதையும் நாம் அறியலாம்.

எந்தவொரு காட்சியும், வார்த்தையும், ஒலியும் நடக்கப்போவதை அறிவிக்கக் கூடியவை அல்ல. எல்லாம் எமது உள விருப்பு வெறுப்பின் வெளிப்பாடுகளைத் தொடர்புபடுத்திப் பார்ப்பதன் விளைவுகள்.

மேலும் ஒரே காட்சியை, ஒரே சகுனத்தைப் பார்த்துச் செல்கின்ற அனைவருக்கும் ஒரே மாதிரியான பயன்கள் கிடைப்பதில்லை. விதவையைப் பார்த்துச் சென்ற ஒருவருக்குக் கெட்டது நடந்துள்ள அதேசமயம், இன்னொருவருக்கு நல்லது நடந்திருக்கும். எனவே காட்சிகளுக்கும், நடக்கப்போகும் காரியங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பதை பிஞ்சுக் குழந்தைகள் மட்டுமன்றி, பெரியவர்களும் நன்கு சிந்தித்து சகுன நம்பிக்கையென்னும் மூடநம்பிக்கையை விட்டொழித்து பகுத்தறிவுப் பாதையில் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.





# சேலை கட்டும் பெண்ணுக்கொரு...!

**சேலை கட்டுவதற்கு முன்னர் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.**

1. சேலைகளில் உட்பக்கம் வெளிப்பக்கம் என இரு பக்கங்களிலும் வித்தியாசம் இருக்கும். அதாவது வெளிப் பக்கம் இருக்கவேண்டிய பக்கம் சற்று வேலைப்பாடுகளுடன் இருக்கும். மற்றப் பக்கம் மங்கலாக இருக்கும். இதனை அவதானித்துக் கொள்ளவும்.
2. சேலையின் ஒரு முனையில் முகதலையும் மறுமுனையில் சில சேலைகளில் மேற்சட்டைக்கான துணியும் இருக்கும். சட்டை தைப்பதற்கான துணி இருந்தால் அதனை வெட்டி எடுத்து விடவும். இல்லையேல் சேலை நீளம் கூடியதாக இருக்கும்.
3. சேலை கட்டுவதற்கு முன் அதனை மின் அழுத்தியால் அழுத்திக் கொள்ளவும்.

**சேலை கட்டுவது எப்படி?**

சேலையைப் பல விதமாகக் கட்டுகிறார்கள். ஆனால் பொதுவான ஒரு முறை இதுதான். சேலையின் வெளிப்பக்கம் (அழகான பக்கம்) வெளியே தெரியக்கூடியதாக சேலையின் முகதலை அற்ற முனையை வலது கையால் பிடித்து (அகலமான கரை கீழே இருக்கக் கூடியதாக) மேல் கரைத் தலப்பில் இரண்டு மூன்றுமுறை கொய்து சிறிய மடிப்புகள் மடித்து அதனைக் கட்டியிருக்கும் உள் பாவாடைக்குள் வலது பக்க இடுப்பின் ஓரமாகச் செருகுங்கள். (செருகும்போது சேலையின் கீழ் உயரத்தை அவதானித்துக் கொள்ளுங்கள்) அனேகமானோர் நுனியில் ஒரு சிறு முடிச்சுப் போட்டு அதனைச் செருகுவர்.

2. அதன்பின்னர், சேலையின் மேற்கரைப் பகுதியைச் சுருக்கிப் பிடித்து இடப்பக்கமாக எடுத்து உடம்பை ஒருமுறை சுற்றியபின் சேலையின் மேல்கரையைப் பிடித்துத் திரும்பவும் வலது வயிற்றடியில் உள்பாவாடைக்குள் இறுக்கமாகச் செருகுங்கள். சேலையின் உயரத்தைக் கவனித்து அதற்கு ஏற்றாப்போல் உயர்த்தியோ இறக்கியோ செருகி விடுங்கள். இப்போது உடம்பைச் சுற்றிய சேலையின் மேல் விளிம்பு பாவா டைக்கு மேல் தெரியலாம். அவற்றையும் உடம்பைச் சுற்றிவர பாவாடைக்குள் செருகி விடுங்கள்.



3. இப்போது மிகுதியாக இருக்கும் சேலையைத் திரும்பவும் இடது பக்கமாக எடுத்து உடம்பை மீண்டும் ஒருமுறை சுற்றி இடது தோளின்மீது போட்டுவிடுங்கள். இந்த நிலையில் நீங்கள் விரும்பும் உயரத்தில் தாவணி தொங்கக் கூடியதாக உயரத்தை (உயரமாகவோ, பதிவாகவோ) சரிசெய்து கொள்ளுங்கள்.

இப்போது சேலையின் முன் பக்கத்தில் சேலையின் ஒரு பகுதி தொய்வாகத் தொங்கிக் கொண்டு இருக்கும். அதில்தான் கொய்யகம் (பிளீற்ஸ்) அமைக்க வேண்டும். சேலையை முதற் சுற்றுச் சுற்றி இடுப்பில் செருகிய இடத்தில் இருந்து சுமார் நான்கு விரல்கள் அகலத்துக்கு மடிப்புகளாக மடித்து (தொய்ந்த சேலை இறுக்கமாகும்வரை) கொய்துகொண்டு அதனை வலது பக்க வயிற்றடியில் முதல் செருகிய இடத்தில் ஒழுங்காகவும் இறுக்கமாகவும், கரைகள் வெளியில் தெரியாதபடி, முழுமடிப்பும் உள்ளே ஒழுங்காக இருக்கக் கூடியதாகச் செருகுங்கள். (இல்லையேல் அவ்விடம் முன்புறமாக உயர்ந்து நிற்கும்)


இப்போது கொய்து செருகிய இடத்தில் இருந்து மேற்கரையை உடம்பைச் சுற்றி அணைத்துப் பிடித்து (மார்புப் பகுதியை மறைத்து) கொஞ்சம் இறுக்கமாக தோள் மூட்டடியில் வைத்து மேற்சட்டையுடன் ஊசி குத்தி விடுங்கள். இப்போது சேலையின் கீழ்க்கரைச் சுற்று ஒழுங்காக இருக்கின்றதா எனப் பார்த்துக் கொள்ளுங்கள். சில வேளைகளில் ஒருபக்கம் உயர்ந்தும் பதிந்தும்காணப்படும். அப்போது கரையைக் கொஞ்சம் கீழ் இழுத்துச் சரிப்படுத்திக் கொள்ளலாம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டலாம் வாங்க




## சுண்டெலி ராசன்



அத்தை பையன் மகன்
சுப்புக்குட்டி
சுப்புக்குட்டி பிள்ளை
சுண்டெலியாம்
சுண்டெலி ராசனுக்குக்
கல்யாணமாம்
சோளத்தட்டுப் பல்லாக்கு
ஊர்கோலமாம்.
பாம்பைக் கூப்பிடுங்கள்
பல்லாக்குத் தூக்கட்டும்
பல்லியைக் கூப்பிடுங்கள்
பராக்குப் பார்க்கட்டும்
தவளையைக் கூப்பிடுங்கள்
தாரை ஊதட்டும்
சேவலைக் கூப்பிடுங்கள்
கொம்பு முழங்கட்டும்

# தானமும் தருமமும் பலன் தரத் தப்பாது



ஒரு காலத்தில் இந்திரசித்தன் என்று ஒரு மாமன்னன் இருந்தான். அவன் தனது ஆட்சிக் காலத்தில் மக்கள் போற்றும் வண்ணம் தான தர்மங்கள் செய்து, சிறப்பாக அரசாண்டு, நேரே சொர்க்கத்துக்குப் போனான். சொர்க்கபுரியின் இன்பத்தில் திளைத்துக் கொண்டிருந்த அவனை ஒரு நாள் சொர்க்கத்தின் தலைவர் கூப்பிடுவதாக தேவதூதன் வந்து சொன்னான். மன்னன் சென்று என்ன வென்று கேட்டபோது உனக்கு சொர்க்க வாசம் முடிந்து விட்டது. நீ பூலோகத்துக்கு நாளை கிளம்பத் தயாராக இரு என்று கட்டளை போட்டார் சொர்க்கத்தின் தலைவர். ஏனென்று மன்னன் கேட்டான். நீ செய்த நல்ல காரியங் களை நினைவில் வைத்திருக்க எவருமே இனி மேல் பூலோகத் தில் உயிருடன் இல்லை. இன்றுடன் அந்தக் கணக்குத் தீர்ந்து விடும். ஆகவே கிளம்பும் வழியைப் பார் என்று பதில் வந்தது. இதற்குத் தீர்வே இல்லையா? என்று மன்னன் முறையிட்டான். தலைவர் முக வாயைச் சொறிந்து கொண்டு யோசித்தார். பிறகு மன்னா, நீ கீழே போய் உனது நற்காரியங்களால் இன்னும் பயன் பெறும் ஒரு ஜீவனையாவது கண்டு பிடித்தால் உனக்கு சொர்க்கம் நீடிக்கப் படும் என்று சொன்னார்.

மன்னனும் கிளம்பிப் பூலோகம் வந்தான். பல நூறு ஆண்டுகள் கடந்து விட்டிருந்தன. அவன் வாழ்ந்த இடமே தலை கீழாக மாறிப் போயி ருந்தது. மக்களில் எவரையும் அவனால் அடை யாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. மனதைத் தேற்றி நம்பிக்கையுடன் விடா முயற்சியாகத் தேடி, இருப்பதிலேயே வயதான ஒரு மனி தரைச் சந்தித்தான். அவரிடம் ஐயா! உமக்கு இந் திர சித்தன் என்று இந்தப் பகுதியை அரசாண்ட மன்னனைப் பற்றித் தெரியுமா? என்று ஆர் வத்துடனும் மிகுந்த எதிர்பார்ப்புடனும் கேட் டான். வயோதிபர் இடுங்கிய கண்களால் அவனை மேலும் கீழும் பார்த்து விட்டு உதட் டைப் பிதுக்கி விட்டார். வேண்டு மானால் என்னை விட வயதான ஆந்தை ஒன்று பக்கத்து மரப் பொந்தில் தூங்கிக் கொண்டி ருக்கிறது. இரவில் அது விழித்த பின் அதனிடம் போய்க் கேள் என்று சொல்லி விட்டார்.

வேறு வழியில்லாமல் இரவு வரை கோவில் நிழலில் உட்கார்ந்திருந்து விட்டு இரவு ஆந்தை யைப் பார்த்தான். தலையை முதுகுப் பக்கம் வைத்து ஒரு இரையைக் குறி வைத்துக் கொண் டிருந்த ஆந்தையிடம் இந்திரசித்தனைப் பற்றிக் கேட்டான். இரையைத் தப்ப விட்ட எரிச்சலில் ஆந்தை எனக்குத் தெரியாது. இங்கே ஒரு கிழட்டு நாரை தினமும் காலைப் பொழுதில் திரியும். வேண்டுமானால் அதைக் கண்டு பிடித் துக் கேள் என்று சொல்லி விட்டுத் தன் வேலை யைப் பார்க்கப் போய் விட்டது.

காலையில் அலைந்து திரிந்து நாரையைக் கண்டு பிடித்தான் மன்னன்? அதனிடம் கேட்ட போது. எனக்கு நினைவில்லை. ஆனால் பக்கத்து ஏரி யில் ஒரு ஆமை கிடக்கிறது. அதற்கு நினைவி ருக்க வாய்ப்பிருக்கிறது என்று நம்பிக்கையை வளர்த்து விட்டது.

மன்னன் ஏரியைத் தேடி ஓடினான். அங்கே வயதான ஆமையைப் பார்த்தான். தள்ளாத வயதில் சிரமப்பட்டுக் கொண்டிருந்தது அந்த ஆமை. மன்னன் அதனிடம்இந்திரசித்தனைப் பற்றிக் கேட்டான். ஆமை உடனே ஆமாம். அவனால்தான் இந்த ஏரியும் இருக் கிறது. அதில் இருக்கும் உயிரினங்களும் நன்றியுடன் உயிர் வாழ்கின்றன என்று சொன்னது. அப்போது மன்னன் நானேதான் அந்த இந்திரசித்தன்! எனக்கு இந்த ஏரியை ஏற்படுத்தி யதாக நினை வில்லையே. நீ ஏதோ தப்பாகச் சொல்கிறாய் என்று தன்நம்பிக்கை இழந்து போய் ஆமையி டம் சொன்னான்.

கதை அப்படியில்லையப்பா! நீ அரசாண்ட போது மக்களுக்குத் தினமும் ஏராளமான பசுக்களைத் தானமாக வழங்கினாய். மக்கள் அவற்றையெல்லாம் இந்தப் பகுதியிலுள்ள புற்றரையில் மேயவிட்டார்கள். மாடுகள் தினமும் அலைந்து திரிந்து தங்கள் குளம்புகளால் மண்ணைக் கிளப்பி விட்டதால் இந்தப் பகுதி நாளடைவில் பள்ளமாகப் போய் விட்டது. மழை பெய்து நீர் பிடித்ததால் ஏரியாக மாறிவிட்டது. இந்தப் பகுதியின் செழிப்புக்கே இந்த ஏரிதான் காரணம் என்றும் ஆகிவிட்டது. அதைக் கேள் விப்பட்டுத்தான் நான் இங்கே வந்து குடியேறி னேன். இத்தனை நாள் நன்றியுடன் வாழ்ந்தி ருக்கிறேன். இன்னமும் பல உயிரினங்களும் வாழ் கின்றன. வாழப் போகின்றன என்றது ஆமை.

அப்போது மன்னனைக் கூட்டிப் போக சொர்க்க புரியில் இருந்து விமானம் ஒன்று தூரத்தில் வருவது மன்னனுக்குத் தெரிந்தது.



# வேண்டாம் மணமுறிவு...

இன்றைய காலக்கட்டத்தில் விவாகரத்து என்பது எம்மிடையே அதிகமாகிக் கொண்டே போகிறது. விவாகரத்தையும்,அதனால் ஏற்படும் மனவலியையும் தடுக்க ஏராளமான வழிகள் உள்ளன. திருமண வாழ்க்கையில் சில பிரச்சினைகளைச் சந்தித்தாலும் அவை உடையாமல் தீர்வு காணப்பட வேண்டும்.

எந்த ஒரு தம்பதியினர் மத்தியிலும் சரி ஒரு கட்டத்தில் கருத்து வேறுபாடு ஏற்படுவது வழக்கமான ஒன்று தான். அந்தக் கருத்து வேறுபாட்டை எப்படிச் சரிசெய்வது என்பதைப் பார்க்க வேண்டுமே தவிர, விவாகரத்தைப் பற்றி யோசிக்கவே கூடாது. எந்தத் தம்பதிகள் தங்கள் உறவைப் பாதுகாக்கச் சோர்வு இல் லாமல் பாடுபடுகிறார்களோ, அவர்களின் உறவே நிலைத்து நிற்கும். தம்பதிகள் தங் களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாட்டுக் கான காரணத்தைக் கண்டறிவது மிகவும் முக்கியம்.

பிரச்சினை எந்தளவுக்குச் சிறிதாக இருந் தாலும் சரி, எமது கையைமீறிப் புயலாக வள ரும் முன்னர் முளையிலேயே அதைக் கிள்ளி எறிய வேண்டும். குறிப்பாக, திருமண வாழ்க்கையில் விட்டுக் கொடுக் கும் மனப் பான்மை கண்டிப்பாக இருக்க வேண்டும். தேவையான அளவு நேரத்தை திருமண வாழ்க்கையில் முதலீடு செய் தால் திருமண வாழ்க்கையில் சந்தோ ஷம் (லாபம்) செழித்து இருக்கும்.

திருமண வாழ்க்கை சரியான பாதை யில் பயணிக்க காதல் மிகவும் அவசி யம். திருமணத்துக்கு முன் உங்கள் மனைவியைக் காதலித்தபோது உங் களிடம் அவர் ரசித்த விஷயங்களை நினைவு கூர்ந்து அதே போல் மீண்டும் காதலித்து அன்பை வெளிக்காட் டலாம். இது இருவரின் திருமண மன உளைச்சலை நீக்கிச் சந்தோஷத்தை உண்டாக்கும். மனைவியை குறை கூறுவதை நிறுத்தி விட்டு, உங்களிட மும் சில தவறுகள் இருக்கின்றன என் பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

அவ்வாறு புரிந்து உங்களிடம் இருக் கும் குறைகளைத் திருத்துவதற்கு நீங் கள் முயற்சி செய்தால், மனைவியும் திருந்தி விடுவார். மனைவி அல்லது கணவன் செய்யும் தவற்றை முழு மனதுடன் மன்னிக்கும் பக்குவம் இருக்கவேண்டும். இத்தகைய மன்னிக்கும் பண்புடன் திருமண வாழ்க் கையை நடத்தினால் வாழ்வில் எப்போதும் மகிழ்ச்சி பொங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளக விசாரணையில் வெளிநாட்டு நீதிபதிகள்வேண்டும் என்கிறது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, செப்.16

போர்க்குற்றச்சாட்டுகள் தொடர்பாக விசாரிக்க இலங்கை அரசு முன்மொழிந்துள்ள சுதந்திர மான உள் நாட்டு விசாரணைப் பொறிமுறையில், வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தி யுள்ளது.

இலங்கையின் பொறுப்புக்கூறல் செயல்முறையில், சர்வதேசப் பங்களிப்பு இருந்தால் மட்டுமே, அது உண்மையில் சுதந்திரமானதாகவும், நம் பகமானதாகவும் இருக்கும் என அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித் துள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் அமர்வில் பங்கேற்பதற்காக ஜெனிவா சென்றுள்ள அவர், கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

முன்னைய அரசுகளின் அனுபவங்களால், வாக்குறுதிகள் செயல்வடிவம் பெறுமா என்று மக்கள் சந்தேகம் கொண்டுள்ளனர். உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள், இலங்கையின் நீதித்துறை மீது நம்பிக்கையிழந்துள்ளனர்.

எனவே, சர்வதேச தர நியமங்களுக்கேற்ப நடத்தப்படக் கூடிய உள்ளக விசாரணையில், சர்வதேச நீதிபதிகளை உள்ளடக்க வேண்டியதே, மிகச் சிறந்தது. காணாமற்போனோர் மற்றும் அரசியல் கைதிகளின் விவகாரங்களும் தீர்க்கப்பட வேண்டியுள்ளன.

போர் முடிந்து ஆறு ஆண்டுகளாகியும், தமிழ் மக்களுக்குச் சொந்தமான சில காணிகள் மட்டும் தான் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தமிழர்களுக்காக மட்டும் நாம் இந்தச் சர்வதேச விசாரணையைக் கோரவில்லை. எல்லா இலங்கையர்களினதும் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன. வன்புணர்வுகள், சித்திரவதைகள், படுகொலைகள் என்று எல்லாவற்றையும் சுதந்திரமான தீர்ப்பாயம் ஒன்று விசாரிக்கவேண்டும். இல்லாவிட்டால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த செயல்முறையின் மீது எந்த நம்பிக்கையையும் கொள்ள மாட்டார்கள் – என்றார்.

(த–வ)

## 10 சுயாதீன ஆணைக் குழுக்களுக்கும் மலையகப் பிரதிநிதிகள் பிரேரிப்பு

கொழும்பு, செப் 16

அரசமைப்பின் 19ஆவது திருத்தச்சட் டத்தின் பிரகாரம் அமைக்கப்படவுள்ள பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல் ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு உட்பட 10 சுயாதீன ஆணைக்குழுக்களுக்கும் மலையகப் பிரதிநிதி களின் பெயர்களைத் தமிழ் முற்போக்குக் கூட்டணி பிரேரிக்கவுள் ளது.

இதுவிடயத்தைக் கையாள்வதற்கு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பொதுச் செயலாளர் லோரன்ஸ் தலைமை யில் மூவரடங்கிய குழுவொன்று அமைக் கப்படவுள்ளது.

தேர்தலுக்குப் பிறகு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் முதலாவது கூட்டம் நேற்றுமுன்தினம் கொழும்பு பம்பலப் பிட்டியில் நடைபெற்றது.

இதன்போது சமகால அரசியல் நிலவரங்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக, அரசமைப்புப் பேரவைக்கு மலையகப் பிரதிநிதிகள் உள்வாங்கப்படாமை குறித்துப் பேசப்பட்டுள்ளது.

அரசமைப்புப் பேரவைக்கு மலையகப் பிரதிநிதிகள் உள்வாங்கப்படாததால், அமையவுள்ள சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு மலையகப் பிரதிநிதி களை அரசு உள்வாங்கவுள்ளது. இதற் கமைய 10 சுயாதீன ஆணைக் குழுக்களுக்கும் மலையகப் பிரதிநிதிகளின் பெயர்கள் பரிந்துரைக் கப்படவுள்ளன.

எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் பெயர்கள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்பது குறிப் பிடத்தக்கது.

அதேவேளை, தமிழ் முற்போக்குக் கூட்டணியிலுள்ள இரண்டு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களும், ஓர் இராஜாங்க அமைச்சரும் கூட்டாக இணைந்து செயற் பட்டுமலையக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுவது தொடர்பில் இங்கு ஆராயப்பட்டுள்ளது. (த–சி)

## சீரடி சாயி மகோற்சவம்

யாழ்ப்பாணம், செப்.16

நாவலர் வீதி, நல்லூரிலுள்ள சீரடிசாயி ஆலய மகோற்சவம் நாளை மறுதினம் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப.4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 12 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 5 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பி.ப.4.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (அ)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

**Job For School Leavers**
**முகாமைத்துவ துறையில் வேலைவாய்ப்பு**
பாடசாலை கல்வியை நிறைவு செய்ததும் முகாமைத்துவ துறையில் ஆர்வமுடையவர்களுக்கு ஓர் உன்னத சந்தர்ப்பம்.
* முறையான பயிற்சி வழங்கப்படும்
* பின்னர் நிரந்தர வேலையும் கொடுக்கப்படும்
* பயிற்சிக் காலத்தில் : 12 000/= - 15 000/=
* பின் 45 000/= குறைந்தது
அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. முதலில் இணையும் 30 பேருக்கு மாத்திரம் சந்தர்ப்பம் வழங்கப்படும்.
இன்றே இணையுங்கள் Granton Company Srilanka
**தொடர்பு : 077 445 8134, 021 499 3166**

**கண்ணீர் அஞ்சலி**
**விநாசித்தம்பி இராஜரட்ணம்**

(ஓய்வுபெற்ற சிரேஷ்ட முகாமையாளர், எல்.ஐ.சி (L.I.C) யாழ்ப்பாணக்கிளை.)
13.09.2015 கொழும்பில் காலமாகிய எமது முன்னாள் யாழ். கிளையின் சிரேஷ்ட முகாமையாளரின் பிரிவு ஆழ்ந்த கவலையையும், துயரையும் தந்துள்ளது. வட பிராந்தியத்தில் இன்று L.I.C இல் பணியாற்றி வரும் இளைய தலைமுறையினரை வளர்த்தெடுத்த பெருமை அன்னாரையே சாரும்.
நாம் இத்தருணம் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், துயரத்திலும் பங்கெடுப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
அவர்தம் பணி நிற்கும்
முகாமையாளர்களும், பணியாளர்களும்,
ஆயுள் காப்பீட்டுக் கூட்டுத்தாபனம் (இலங்கை) வரை
(L.I.C (Lanka) Ltd.)
வட பிராந்தியம்.
(C/18854)
(10.17)

**அறைகள் வாடகைக்கு உண்டு**
கலாசாலை வீதி, திருநெல்வேலியில் அறைகள் வாடகைக்கு உண்டு.
தொடர்பு
077 609 0837, 075 266 6212

**விற்பனைக்கு**
ஊர்க் கோழிக்குஞ்சு விற்பனைக்கு.
**T.P - 077 860 5098**

**வீடு வாடகைக்கு உண்டு**
195/12A, ஸ்ரேசன் வீதி(ஆடியபாதம் வீதி) திருநெல்வேலியில் 2500 சதுர அடி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் அரச திணைக்களங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 668 1547

**வேலையாள்கள் தேவை**
* காசாளர்
* உணவு பரிமாறுபவர்
HOTEL ROLEX
340, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்
T.P- 077 907 9888
(தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் 2.p.m - 4.00p.m வரை)

**வீடு வாடகைக்கு உண்டு**
இல.94, நல்லூர் குறுக்கு வீதியில் 2000 சதுர அடி கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் அரச திணைக்களங்கள் விரும்பத்தக்கது.
(வாகனத்தரிப்பிட வசதி உண்டு.)
தொடர்பு: 077 668 1547

**பாதுகாப்பு ஊழியர்கள் தேவை**
J.S.O , A.S.O மற்றும் பலருக்கு வேலை வாய்ப்பு உண்டு. மற்றும் தங்கியிருந்து வேலை செய்பவருக்கும் அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். உடன் நேரில் வரவும். வரும்போது குடும்ப அட்டை பிரதி மற்றும் I.D copy முடிந்தால் மூன்று I.D photo கொண்டு வரவும்.
Parameswary Rest Inn Room - 1
Kaithady Road, Maruthanarmadam.
077 891 9367, 076 706 0095

**தேவைப்படுகின்றனர்**
* உணவக மேற்பார்வையாளர்- (ஆண்/ பெண்)
* சமையல் உதவியாளர்கள்- (ஆண்/ பெண்)
* சிற்றுண்டி தயாரிப்பவர்கள்- ஆண்/பெண்)
* தேநீர் தயாரிப்பவர்
* உணவு பரிமாறுபவர்கள்- (ஆண்/ பெண்)
* Bill போடுபவர்கள் (பெண்கள் விரும்பத் தக்கது)
* சுத்திகரிப்பாளர்கள்
* களஞ்சிய உதவியாளர்
உடன் தொடர்பு கொள்ளவும் :
**076 791 1219**

After A/Levels
மிகவும் பிரபல்யம் வாய்ந்த
இரட்டை டிப்ளோமாக்களை
நான்கே மாதங்களில் பெற்றுக்கொள்ளுங்கள்
Diploma in Information Technology
Duration : 4 Months
Text Book Free
**IT & ENGLISH**
Diploma in English
Duration : 4 Months
Text Book Free
சேமிப்பு Rs. 16,375
25% off 50% off
assured by PEARSON
SMS your Details to
077 309 9 308
ESOFT + Pearson (UK)
Diploma in Business Management
Duration : 4 Months
Free Text Books
Diploma in Software Engineering
Duration : 6 Months
Free Text Books
Diploma in Web Engineering
Duration : 6 Months
Free Text Books
Diploma in Hardware & Networking
Duration : 4 Months
Free Text Books
Diploma in Computerized Accounting
Duration : 5 Months
Free Text Books
Diploma in Business English
Duration : 6 Months
Free Text Books
Diploma in Hospitality Management
Duration : 4 Months
Free Text Books
18.09.2015 | 20.09.2015
New Batches
**ESOFT METRO CAMPUS**
No. 137, K.K.S Road, Jaffna, Sri Lanka
Hotline : 077 309 9 308 | Tel : 021 222 4142
இலங்கையின் மிகப்பெரிய உயர்கல்வி வலையமைப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏலவிற்பனை



**நவாலி அந்திரான் முருக மூர்த்தி கோயில்** முன் கொட்டகை 27.09.2015 ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு ஏலத்தில் விடப்படும். மேலதிக விவரங்களுக்கு

077 690 6092, 077 614 5244

# Diploma In Spoken English

**புதிய பிரிவு ஆரம்பம்**

**19.09.2015 @ 3.00மணி**

(இப்பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில், மாலை 2.30 - 5.00 வரை இடம்பெறும்)

ஆங்கில மொழியைக் கற்பித்துப்பேச வைப்பதில் வடமாகாணத்தில் முதன்மை ஆங்கிலக் கல்லூரி

உலகத்தரம் வாய்ந்த சான்றிதழ்கள்

University of Cambridge (UK) Certificates
CITY & GUILDS (UK) Certificates
E-CITY Diploma in English Certificates

City & Guilds

அனுமதிகள் வழங்கப்படுகின்றன

**E-CITY COLLEGE OF ENGLISH**

இல.372, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ். 0773400418/0212217106

மானிப்பாய் மெமோறியல்
ஆங்கில பாடசாலை
**Manipay Memorial English School**

Web : www.manipaymemorial.com & www.mmes.sch.lk
Email : manipaymemorial@gmail.com

## பழைய மாணவர் சங்கம்
## Old Students Association

வருடாந்த பொதுக்கூட்டம் - 2015

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் பழைய மாணவர் சங்க, மெமோறியன்ஸ் கழக வருடாந்த பொதுக்கூட்டம் அதிபர் ஆறுமுகம் பேரின்பநாதன் அவர்களின் தலைமையில் இடம் பெறும்.

இடம் : பாடசாலை அழகரத்தினம் மண்டபம்
காலம் : 20.09.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.30 மணி

பழைய மாணவ மாணவியர்கள், முன்னாள் ஆசிரியர்கள் அனைவரும் தவறாது பொதுக்கூட்டத்தில் பங்கு பற்றுமாறும் தாங்களறிந்த ஏனைய பழைய மாணவ மாணவியர்களையும் நிகழ்ச்சியில் பங்கு பற்றச் செய்யுமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

க.கமலசேகரம் / சிவஸ்ரீ.இரா.வாசுதேவன்
தலைவர் / செயலாளர்
077 663 6596 / 077 170 1610

(647159)(10.17)



## யாழ் அத்தியடி பிள்ளையார் கோயில் விநாயகர் சதுர்த்தி திருவிழா

**17.09.2015 வியாழன் காலை 9.30 மணிக்கு சங்காபிஷேகமும் மாலை 5.00 மணிக்கு வசந்த மண்டப பூசையும் சக்தி கணபதி பூசையும் நடைபெற்று எம் பெருமான் வீதி உலாவும் இடம்பெறும்.**

**கோயில் நிர்வாக சபை.**


# சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தினால் தண்டனை

## மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, செப்.16

சுற்றாடலுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவோருக்கு எதிராகப் பாரபட்சமின்றிச் சட்ட நடவடிக்கையை மேற்கொள்வதற்கு பின்வாங்கப் போவதில்லை என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அரசு முன்னெடுத்துள்ள தேசிய மட்டத்துக்கான செயற்றிட்டங்கள் தொடர்பில் மாவட்ட செயலாளர்களுக்கு விளக்கமளிக்கும் கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சுற்றாடல் பாதுகாப்புத் தொடர்பான தேசிய செயற்றிட்டம் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

உள்நாட்டு உணவு உற்பத்தி, வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கை, போதைப் பொருள் நிவாரணத் திட்டம், சிறுநீரக நோய் நிவாரணத் திட்டம் ஆகிய விடயங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (த-வ)


உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
021 493 1111

GATEWAY Language Centre

# GATEWAY LANGUAGE CENTRE

# IELTS

**A Comprehensive Preparation course covering all language skills Listening, Speaking, Reading & Writing**



Rs.11,000/=

* Latest course materials
* Individual attention
* Installment Payment
* Qualified Lecturers
* Air-Conditioned Classrooms

**Hotline : 0716 362 362**

Head Office -
# 39, College Road,
Neeraviady,
Jaffna
Tel: 021 492 7456
Fax: 021 221 7780

Email: gatewayjfn@sltnet.lk Web: www.gatewayworldwide.com

| Nelliady Branch: | Chavakachcheri Branch: | Kilinochchi Branch |
|---|---|---|
| *#55, Point Pedro Road, Nelliady.* | *#1, New Market Building, Chavakachcheri.* | *Karadippokku Junction, A9 Road, Kilinochchi.* |
| 021 492 7457 | 021 492 7432 | 021 492 7454 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உல்லியனொல்லை கண்ணகை அம்மன் பெருமைகளை பறை சாற்றும் இறுவட்டு

யாழ்ப்பாணத்தில் தமிழினத்தின் இருப்பையும் இந்து சமய பின்னணியையும் பத்தினி தெய்வம் மற்றும் கிராமிய வழிபாட்டு மரபுகளையும் பதிவுகளாக்குவது காலத்தின் தேவையாக மலர்ந்திருக்கிறது. குறிப்பாக ஆலயம் சார் பாடல் வெளியீடுகள் நூல் வெளியீடுகள் இன்று எமது சமூகத்துக்கு அடிப்படை தேவையாக மாறியிருக்கிறது.

அன்றைய தமிழகத்தில் எவ்வாறு பக்தி இயக்கம் தோற்றம்பெற்று இந்து சமயத்தோடு தமிழ் வளர்ந்ததோ அதேபோன்று இன்றும் எமது ஆலயங்கள் சார் பெருமைகளை ஆவணமாக்க ஆலயங்களும் கலைஞர்களும் முன்வரவேண்டிய காலத்தின் தேவை உருவாகியிருக்கிறது. இலத்திரனியல் யுகமாக மாறியிருக்கும் இன்றைய காலகட்டத்தில் ஆலய தலபுராணங்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் சிறப்புகள் அற்புதங்கள் என்பவற்றை இலத்திரனியல் பதிவுகளாக்கி வெளியிடவேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில் இந்து சமயமும் பத்தினி தெய்வ வழிபாட்டு மரபுகளும் ஊறித்திளைத்த வடமராட்சி வதிரி பதியிலே கோயில் கொண்டருளும் உல்லியனொல்லை கண்ணகை அம்மன் ஆலயத்தினர் தமது ஆலய பெருமைகளை பறை சாற்றும் வகையில் வருடா வருடம் உல்லியனொல்லையாள் எனும் பக்தி பாசுர இறுவட்டை வெளியிட்டு வருவது அனைவரின் பாராட்டையும் பெற்றிருக்கிறது.

தமிழ் இலக்கிய வரலாற்றிலே தமிழோடு இணைந்த கலை வளர்ப்பில் ஆலயங்கள் அளப்பரிய சேவைகளை நல்கியுள்ளன 21 நூற்றாண்டிலும் தமிழ் மொழியின் இனிமை மாறாமல் இருப்பதற்கு இந்த முயற்சிகள் அளப்பரிய சேவைகளை நல்கியுள்ளன . இவற்றை பாதுகாக்க காலத்தின் சூழ் நிலைக்கு ஏற்ப இலத்திரனியல் சாதனங்களே செல்வாக்கு செலுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை. அத்தோடு இளம் சந்ததி இது தொடர்பில் எமது கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை உணர்ந்து கொள்ளவும் இலத்திரனியல் சாதனங்கள் அளப்பரிய செல்வாக்கை செலுத்துகின்றன அந்த முயற்சிகளை இன்று பல்வேறு ஆலயங்கள் மேற்கொள்வது பாராட்டப்படும் விடயமாக மாறியிருக்கிறது.

அந்த முயற்சி வடமராட்சியிலும் மேற்கொள்ளப்படுவதற்கான சிறந்த எடுத்துக்காட்டு வதிரி உல்லியனொல்லை கண்ணகை அம்மன் ஆலயத்தினர் வருடா வருடம் வெளியிடும் ஆலயத்தின் பெருமைகளை பாடும் உல்லியனொல்லையாள் எனும் பாடல் இறுவட் டாகும். அந்த வகையில் முதலாவது இறுவட்டு உல்லியனொல்லை யாள் எனும் பெயரை தாங்கி 2012 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. சத்தியனின் இசையில் ஸப்தமி கலையகத்தின் ஒலிப்பதிவில் வெளியாகியிருக்கும் இறுவெட்டு ஆலயத்தின் பெருமைகளை அப்ப டியே பறை சாற்றுகிறது. பாடலாசிரியர்களாக– கவிஞர்களான சோ. பத்மநாதன், த.அஜந்தகுமார், மானியூர் ரட்ணேஸ், த.ஜெயசீலன், சி. முகுந்தன் ஆகியோரின் அற்புதமான பாடல் வரிகளுடன் வெளியாகியிருக்கிறது. பாடகர்களாக சாந்தன், என்.வி.எம். நவரத்தினம், கிருஸ்ணா, எஸ்.திவாகர், என். தனசொருபி, ஆர். அபிஸாதன் ரிதினுசா ஆகியோரின் அற்புதமான குரலமைப்பில் வெளிவந்திருக்கிறது.

இந்த இறுவட்டில் கண்ணகி வழிபாட்டு மரபு வடமராட்சிக்கு பரவிய விதம் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு கண்ணகி வழிபாட்டு மரபு இரு பண்பாட்டு பாதைகள் ஊடாக ஊடுருவியதாக வரலாற்றறிஞர்கள் கூறுகின்றனர். முதலாவதாக வடமராட்சிக்கான கண்ணகி வழிபாட்டு மரபு கண்ணகி தெய்வத்தால் நேரடியாக ஏற்படுத்தப்பட்டதாக வரலாறுகள் ஆய்வாளர்களின் ஆய்வுகளும் தெளிவாக கூறுகின்றன. அந்த வகையின் இந்தியாவில் மதுரை எரிப்புக்குப் பின்னர் சிலம்பொன்றுடன் கண்ணகி இலங்கை திரும்பியதாகவும் வடமராட்சி பொலிகண்டி பகுதியில் தொடங்கிய கண்ணகியின் யாத்திரை தேவரையாளி வதிரி உல்லியனொல்லை பகுதி சுட்டிபுரம் நோக்கிச் சென்று வற்றாப்பளை நோக்கி நகர்ந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. இவ்விடயங்களில் கண்ணகி தெய்வம் அற்புதங்களுடன் கோயில் கொண்டருளியதாக வரலாறு கூறுகின்றது. மற்றைய பண்பாட்டு பாதை சேரன் செங்கூட்டுவன் இந்தியாவில் கண்ணகிக்கு விழா எடுத்ததாகவும் அந்த விழாவில் இலங்கையை சேர்ந்த மன்னனும் கலந்து கொண்டதாகவும் அங்கிருந்து கண்ணகி சிலைகளுடன் திரும்பிய அவன் பல கண்ணகி கோயில்களை நிறுவியதாக வரலாறு கூறுகின்றது. இவை பற்றி இந்த இறுவட்டுகள் தமது பாடல்கள் அறிமுக விளக்கங்களில் தெளிவாகக் கூறுகின்றன.

இரண்டாவது இறுவட்டு முரளியின் இசையில் ஸ்ப்தமி கலைய கத்தின் ஒலிப்பதிவில் 2013 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது கவிஞர்களான செ .குமாரசுவாமி, த. ஜெயசீலன் சோ. பத்மநாதன், ரீ .பாலகுமார், சிதம்பரபிள்ளை பசுபதி, த. அஜந்தகுமார் பேராசிரியர் சிவலிங்கராஜா, த. சிவகுமாரன் ஆகியோரின் வரிகளில் பாடகர்களான எஸ்.ஜி. சாந்தன் , குமாரசுவாமி, தனசொருபி , ஜெயபாரதி கௌசிகன், ந. சஞ்சீவன், க. ரஜீவன், ஏ. கிருஸ்ணா, நெல்லை வீஜயன் ஆகியோரின் குரலில் வெளிவந்தது மூன்றாவது இறுவட்டு 2014 ஆம் ஆண்டு அற்புதனின் இசையமைப்பில் கலைகுவியத்தின் ஒலிப்பதிவில் பாடகர்களான செ குமாரசாமி, ஜெயபாரதி கௌசிகன், என். சண்முகலிங்கன் க. ரஜீவன் அ. கிருஷ்ணானந்தன் நெல்லைவிஜயன் ஆகியோரின் அற்புதமான குரலில் பல்வேறு கவிஞர்களின் பாடல்வரிகளுடன் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்த இறுவட்டில் ஆலயத்தில் நிகழ்ந்த அற்புதங்கள் அதன் தல சிறப்பு அப்படியே படம் பிடிக்கப்பட்டுள்ளது

இதே முயற்சியை தொடர்ந்த ஆலயத்தினரும் வடமாகாண மீன்பிடி அமைச்சின் செயலாளர் சத்தியசீலன் உட்பட்ட பிரமுகர்கள் இந்த வருடமும் உல்லியலொல்லையாள் இறுவட்டை வெற்றிகரமாக வெளியிட்டு வைத்திருக்கின்றனர். கு. அற்புதனின் இசையமைப்பில் கலைக்குவியத்தின் ஒலிப்பதிவில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுதுறை அமைச்சின் நிதி ஒதுக்குதலில் இசைத்தட்டு அற்புதமாக வெளிவந்திருக்கிறது. ஆலயத்தின் வரலாற்றை ஆவணமாக்கும் முயற்சியின் புதிய அங்கமாக இந்த முயற்சி அமைந்திருக்கிறது. கவிஞர்களான திருமதி மகேந்திரராணி இளங்கோ, த. அஜந்தகுமார் , வ. செல்வராஜா சா. ஹரிகரன் திருமதி ராஜேஸ்வரி சத்தியசீலன் சி. பசுபதி ,த. பாலகுமார் ஆகியோரின் பாடல்வரிகளை பாடகர்களான பரா ரமேஸ், எஸ். ஜி. சாந்தன், திருமதி ஜெயபாரதி கௌசிகன் , செ. குமாரசுவாமி என். சண்முகலிங்கன், அ. கிருஷ்ணானந்தன், ஜெயா சுகுமார் ஆகியோர் உட்பட கலைஞர்கள் அற்புதமாக உருவாக்கியிருக்கின்றனர்

இவ் இறுவட்டுகள் எல்லாம் ஆலயம் சார் பண்பாட்டு மரபுகளை அப்படியே படம் பிடித்து வெளிப்படுத்தியிருப்பதோடு எமது இனத்தின் இருப்பை உறுதிப்படுத்தும் மாபெரும் அடையாளங்களாக நிமிர்ந்து நிற்கும் ஆலயங்களின் வரலாறுகளை எமது எதிர்காலச் சந்ததிகளிடம் சென்று சேர்க்கும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

*தொடர்ச்சிகள்*

## இலங்கை பொறுப்புக்

இலங்கை அரசு நாட்டின் நிலைமையை சரியாகக் கையாண்டால், அது அந்தப் பிராந்தியத்தில் மட்டுமல்ல, உலக அளவில் எப்படி நீடித்திருக்கக் கூடிய சமாதானத்தை முன்னெடுக்க முடியும் என்பதற்கு ஒரு உதாரணமாக அமையும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் 30வது அமர்வில் நேற்று மனித உரிமைகள் நிபுணர் பாப்லோ டெ கெரெய்ப் சமர்ப்பித்த அறிக்கையிலேயே இந்தக்கருத்தை வெளியிட்டுள்ளார். இது தொடர்பில் அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

இலங்கையில் நீதித்துறையில் மாறுதல்களைக் கொண்டுவந்து, போருக்கு பின்னரான காலப் பகுதியில் ஏற்பட்டுள்ள மாறுதல்கைளயும் மனதில் கொண்டு, அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதிவழங்கும் நோக்கில், அதற்கேற்ற வகையில் உத்திகள் வகுக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. அதற்கான வழிமுறைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

அதேபோல் உண்மைகளைக் கண்டறிய சுயாதீனமான வழிமுறை ஏற்படுத்தப்பட்டு, இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு முழுமையான வகையில் நியாயங்கள் வழங்கப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும். இந்த இரண்டு நடவடிக்கைகளும் ஒரே நேரத்தில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கையை பொறுத்தவரை, இராணுவம், பொலிஸ், புலனாய்வு சேவை மற்றும் நீதி என்பவற்றில் அதிக மீளமைப்புக்களை ஏற்படுத்த வேண்டும். இதில்தான் உண்மையைக் கண்டறியும் பொறிமுறையின் சவால் தங்கியுள்ளது.

அனைத்திலும் முக்கியமாக கடந்த காலங்களில் இடம்பெற்ற பெரிய அளவிலான அத்துமீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் அதில் உள்வாங்கப்படுவது அவசியம். அதிகாரிகள் நீண்டகால அடிப்படையில் உறுதியுடன் செயற்படுவது தவிர்க்க முடியாத ஒன்றாக இருக்க வேண்டும்.

சட்டவிரோதமாக ஆள்கள் தடுத்து வைப்பது முடிவுக்கு வரவேண்டும். மறுபுறத்தில் காணாமற்போனவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை தெளிவுபடுத்த உடனடி நடவடிக்கை தேவை.

நாட்டின் வடக்கு–கிழக்கு பகுதியில் பெண்கள் மீதான கண்காணிப்பு மற்றும் துன்புறுத்தல்களும், சட்டத்துக்கு விரோதமாக தடுத்து வைப்பது போன்ற நடவடிக்கைகளும் முடிவுக்கு வருவதை அரசு உறுதிசெய்ய வேண்டும்.

கடுமையான விதிமீறல்களைச் செய்தவர்கள் நீதிமன்றத்தின் முன்னாள் நிறுத்தப்படுவது அவசியம்.

இந்த விடயங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலில் முன்பு அமைக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் தீர்வுகளைக் காணத்தவறிவிட்டன.

இந்தநிலையில் திட்டமிட்ட புறக்கணிப்பின் விளைவாக, 30 ஆண்டு நீடித்த மோதல் மற்றும் அடுத்தடுத்த அடக்குமுறை ஆட்சி காரணமாகவே சமூகத்தில் நம்பிக்கையின்மை ஏற்பட்டுள்ளது.

நாடு தற்போதுள்ள நிலையில் மீண்டும் எவ்விதமான தவறுகளும் செய்யும் நிலை ஏற்படக் கூடாது என அவர் கடுமையாகச் சுட்டிக் காட் டியுள்ளார். (த–வ)

## ஒக்ரோபரில்

துரையாடல் இடம்பெற்றது. இதன் போதே மேற்படி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சர்வதேச சிறுவர் தினம் இலங்கையில் ஆண்டு தோறும் கொண்டாடப்படுவது வழமை. அதற்கமைய இந்த முறையும் கொண்டாடப்பட வுள்ளது. தேசிய சிறுவர் தின நிகழ்வுகள் இந்த ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடத்த சிறுவர் விவகார அமைச்சு தீர்மானித்துள்ளது. குறித்த நிகழ்வில் ஜனாதிபதி விசேட அதிதியாகக் கலந்து கொள்ளவுள்ளார். (த–5–101)

## மரண அறிவித்தல்

### கந்தப்பு தங்கராசா



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் இல.91, ஸ்கந்தபுரம் கிளிநொச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட கந்தப்பு தங்கராசா நேற்று (15.09.2015) செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தப்பு - தெய்வானை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இரத்தினேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை, இரத்தினம், தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனநாயகம், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் நாகேஸ்வரி, லோகேஸ்வரி (கனடா), காலஞ்சென்ற ஜெயதீஸ்வரி மற்றும் மோகனேஸ்வரி, சிவமங்களேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், தியாகராசா (J.P.ஓய்வுபெற்ற விரிவுரையாளர் - யா/ தொழில்நுட்பக் கல்லூரி கொக்குவில்), தேவகாந்தன் (கனடா), திலகராஜ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், தவரூபன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கரைச்சி பிரதேச சபை), பகீரதன் (உத்தியோகத்தர் - யாழ் தினக்குரல்), கபிலன், வித்யானி, நளினி, சாம்பவி (கனடா), ஆதித்தன் (கனடா), ஆத்வி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் லோஜிதனின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2015) வியாழக்கிழமை திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 2.00 மணியளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

அரசடி அம்மன் வீதி,
திருநெல்வேலி மேற்கு,யாழ்ப்பாணம்.
0775073244,0770488535

தகவல் :
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் வள்ளியம்மை

யாழ். நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் இல.313 கரும்புள்ளியான் பாண்டியன் குளத்தை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வள்ளியம்மை 13.09.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமார், பார்வதிப்பிள்ளை, பேரின்பநாயகம் மற்றும் பசுபதி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற குமாரசாமி (நெடுந்தீவு) மற்றும் வேலுப்பிள்ளை (மல்லாவி), பரமானந்தம் (கரும்புள்ளியான்) சபாரத்தினம் (விநாயக்புரம்) பரமேஸ்வரி (பாண்டியன்குளம்) கமலாவதி (கரும்புள்ளியான்), சிவலிங்கம் (விநாயகபுரம்) தர்மராசா (சுவிஸ்) காலஞ்சென்ற பத்மராணி (கரும்புள்ளியான்) பரமதாஸ் (அமெரிக்கா) காலஞ்சென்ற கிருஷாகரன் (கிளிநொச்சி) ஆகியோரின் பாசமிகு தாயும், தவமணி, கனகம்மா, கமலேஸ்வரி, காலஞ்சென்ற மனோரஞ்சிதம் மற்றும் இரத்தினம் காலஞ்சென்ற தில்லைநாதன் மற்றும் திலகேஸ்வரி, பத்மா, ஆனந்தன், கோமளேஸ்வரி மல்லிகா தேவி ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2015) புதன் கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பாலியாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கரும்புள்ளியான்,
பாண்டியன்குளம்.

(63507)
(10.17)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகாரப்

கேற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது இலங்கைப் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஜெனிவா மாநாடு உள்ளிட்டவைகள் குறித்து விரிவாக ஆலோசித்தோம். இலங்கைப் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்படும். பயங்கரவாத ஒழிப்பில், இந்தியாவுடன் இணைந்து செயல்படுவோம். பொருளாதாரம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் இரு நாடுகளுக்கும் இடையே இணக்கமான செயல்பாடு நிலவிவருகிறது. இலங்கை நாடாளுமன்றத்தில், அனைத்துக் கட்சிகளுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முதல் பயணமாக இந்தியாவுக்குத் தான் வந்தார். நானும் முதல் முறைப் பயணமாக இந்தியா வந்துள்ளேன். இது மகிழ்ச்சியாக இருக்கிறது– என்றார்.

(த–வ)

## வித்தியாவின்

குமார் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று விசா ரணைக்கு வந்தது. அதன்போது வழக்குத் தொடுநரான குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வழக்கு விசாரணை பற்றிய மேலதிக அறிக்கையைத் தாக்கல் செய்தனர். தொடர்ந்து யாழ். போதனா வைத்தியசாலைச் சட்ட மருத்துவ நிபுணர், சடலத்திலிருந்து எடுக்கப்பட்ட விந்து எனச் சந்தேகிக்கும் திரவத்தை நீதிமன்றில் சமர்ப்பித்தார். அது இன்றுவரை போதனா வைத்தியசாலையில் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துப் பாதுகாக்கப்பட்டு வருவதாக அது தொடர்பில் அவர் நேற்றுச் சாட்சியமும் அளித்தார்.

வழக்குடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்த கைப்பற்றப்பட்ட கமரா வசதியுடன் கூடிய கைத்தொலைபேசி, மடிக் கணினி, ரப் என்பன தொழில்நுட்ப ஆய்வுக்காக முன்னர் மொரட்டுவ பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது. குறித்த கருவிகளில் மாணவி பற்றிய புகைப்படங்கள் அல்லது வீடியோ காட்சிகள் ஏதாவது பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவே அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால் அந்தக் கருவிகள் கைப்பற்றப்படும்போது அவற்றிலிருந்து குறித்த காட்சிகள் எவையும் இருக்கவில்லை. எனவே அந்தக் காட்சிகள் சந்தேக நபர்களால் அழிக்கப்பட்டு விட்டதா என்றும் அவ்வாறு அழிக்கப்பட்டிருந்தால் அவற்றை மீளப் பெறமுடியுமா என்றும் ஆய்வு செய்வதற்காகவே அவை அவ்வாறு அனுப்பி வைக்கப்பட்டன. எனினும் அங்கு அது பற்றிய திருப்திகரமான பதில் மொரட்டுவப் பல்கலைக்கழகத்திலிருந்து கிடைக்காதமையால் அவற்றை மீளப் பெற்றுத் தனியார் நிறுவனமான சி.ஈ.ஆர்.ரி எனும் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு அனுப்பி ஆய்வு செய்யவேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றிடம் அனுமதி கோரினர். அதற்கு நீதிமன்று அனுமதி வழங்கியது.

அத்துடன் 9 சந்தேக நபர்களினதும் இரத்த மாதிரிகள் ஏற்கனவே தனியார் நிறுவனமான ஜீன்ரெக் எனும் இரசாயனப் பகுப்பாய்வு நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அவற்றில் மாணவியின் ரத்த மாதிரி, மாணவியின் உடலில் இருந்து எடுக்கப்பட்ட உரோமம், மாணவியின் உள்ளாடை ஆகிய தடயப் பொருள்களும் அந்த நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. குறித்த பொருள்களும் சந்தேக நபர்களின் இரத்த மாதிரிகளும் ஒத்துப் போகின்றதா என்பது பற்றிய ஆய்வுக்கே அவை அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றுடன் நேற்றுச் சமர்ப்பிக்கப்பட்ட விந்து எனச் சந்தேகிக்கும் திரவத்தையும் குறித்த நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப் பணிக்கப்பட்டது. அது விந்து தானா என்பது பற்றியும், அவ்வாறு அது விந்தாக இருக்குமானால் அதிலிருந்து மரபணுப் பரிசோதனை செய்யலாமா என்பது பற்றியும், அவ்வாறு பரிசோதனை செய்ய முடியுமெனின் அது சந்தேக நபர்களினது இரத்த மாதிரிகளுடன் ஒத்துப் போகின்றதா என்பது பற்றியும் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்று நேற்றுப் பணித்துள்ளது. அந்தத் திரவத்தை உரிய குளிரூட்டியில் வைத்துக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் அவர்களுக்கு நீதிமன்று பணித்தது.

வழக்கு நிறைவில் சந்தேக நபர்களைப் பார்த்து ஏதாவது கூற விரும்புகிறீர்களா என்று நீதிவான் கேட்டார். அதற்கு 8 ஆவது சந்தேக நபர், வித்தியாவின் சம்பவத்துக்குப் பின்னர் தனது குடும்பம் கொழும்பிலிருப்பதாகவும், அவர்கள் வந்து தன்னைப் பார்வையிடச் சிறைச்சாலையில் உரிய நேரம் அமைவதில்லை என்றும், எனவே உரிய நேரம் ஒதுக்கித் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரினார்.

ஆனால் உங்களுக்கு என்று விசேட பார்வையாளர் நேரத்தை ஒதுக்க முடியாது என்று நீதிவான் கூறினார். சிறைச்சாலை நடைமுறையின் படிதான் அங்கு நடக்கும் என்றும் அவர் கூறினார். இதனையடுத்து அந்த வழக்கு எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. சந்தேக நபர்களின் விளக்கமறியலும் நீடிக்கப்பட்டது.

வழக்கில் சந்தேக நபர்களாகக் குறிப்பிடப்படும் 9 பேரில் 4 ஆம், 7 ஆம், 9 ஆம் சந்தேக நபர்களான சசிக்குமார், சசீந்திரன், கிரிசாந்தன் ஆகியோர் சார்பாக சரத் வல்கம என்ற சட்டத்தரணி நேற்றும் முன்னிலையானார். பாதிக்கப்பட்ட மாணவி சார்பில் சட்டத்தரணிகளான வி.மணிவண்ணன், சிந்தக்க அமரசிங்க ஆகியோர் முன்னிலையாகியிருந்தனர்.

கடந்த மே மாதம் 13 ஆம் திகதி காலை குறித்த மாணவி பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்தபோது காணாமற்போயிருந்தார். மறுநாள் காலை அவர் வழமையாகச் சென்றுவரும் பாதையின் ஓரமாக இருந்த பாழடைந்த வீட்டின் பற்றைப் பகுதியிலிருந்து ஆடைகளின்றி கோரமான முறையில் சடலமாகக் காணப்பட்டார். உடற்கூற்றுப் பரிசோனை மேற்கொண்டபோது அவர் கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்டமை தெரியவந்திருந்தது. அதனைத் தொடர்ந்து குறித்த சந்தேக நபர்கள் வெவ்வேறு நாள்களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(த–4)

## மங்களவின்

யாற்றியுள்ளார். அதில் பல விடயங்களைச் சொல்லியுள்ளார். அதனைக் கேட்பதற்கு இனிமையாக இருக்கின்றது. இனிப்புத் தடவிய பண்டம் போன்று உள்ளது.

ஆனால் உண்மை நிலவரம் என்ன? இந்த அரசு பதவியேற்று ஒன்பது மாதங்கள் கடந்துள்ளன. இந்தக் காலத்தில் தமிழ் மக்கள் நம்பிக்கை வைக்கக் கூடிய விதத்தில், இந்த அரசு என்ன செய்துள்ளது. மீள் குடியமர்வு விடயத்தில் ஏன் இந்தக் கால தாமதம். இந்த விடயம் தொடர்பில் மங்கள சமரவீர ஜெனிவாவில் வாயே திறக்கவில்லையே. இராணுவத்தை வெளியேற்றுவதாகச் சொல்லவில்லையே. இங்கு நல்லாட்சி நடப்பதாகச் சொல்கின்றார்கள். அப்படியானால் இங்கு ஏன் இவ்வளவு இராணுவம். இலங் கைக்கு ஏதாவது நாடுகள் படையெடுத்துவரப் போகின்றனவா? மிகச் சிறிய நாட்டில் மிகப் பெரிய முப்படை எதற்கு?

இன நல்லிணக்கம் ஏற்படுவதற்கு இராணுவ வெளியேற்றம் – மீள் குடியேற்றம் என்பன நடைபெற வேண்டும். ஆனால் கடந்த 9 மாத காலங்களில் அவை எதுவும் இல்லையே. காணாமற்போனோர் ஆணைக் குழு எத்தனை பேரைக் கண்டுபிடித்துள்ளது? நல்லிணக்க ஆணைக்குழுவின் 264 பரிந்துரைகளில் எத்தனை பரிந்துரைகளை இலங்கை அரசு நிறைவேற்றியுள்ளது? தமிழ் மக்கள் ஏதாவது நம்பிக்கை வைக்கக் கூடிய செயற்பாடுகள் நடைபெற்றிருக்கின்றனவா ?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியும், பிரதம நீதியர்சராக சிறீபவனும், சட்ட ரீதியாகவே நியமிக்கப்பட்டவர்கள். சட்ட ரீதியாகக் கிடைக்க வேண்டியதைக் கூட, ஏதோ தாங்கள் வழங்கியது போன்றும் இங்கு பாகுபாடு எதுவுமில்லை என்பதற்கு அவற்றை உதாரணமாகவும் காட்டியுள்ளார் மங்கள சமரவீர.

இந்தப் போரை நடத்திய இராணுவத் தளபதிக்கு பீல்ட் மார்ஷல் பட்டம் கொடுத்தது இந்த அரசு. அப்படியானால், அவரை எவ்வாறு விசாரிப்பார்கள். மேலும், மங்கள சமரவீரவின் உரையில் சொல்லப்பட்ட பல விடயங்களைச் செய்து முடிப்பதற்கான கால அவகாசம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. ஆகவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க எவ்வளவு காலம் செல்லும்.

மேலும், மங்களவின் உரையில் சொல்லப்பட்டவாறு இலங்கை அரசு விடயங்களை நடைமுறைப்படுத்தினால் அதற்கு சிங்கள – பௌத்த கடும் போக்காளர்கள் அனுமதிப்பார்களா? தென்னிலங்கையில் இரத்த ஆறு ஓடும் நிலையே ஏற்படும்.

எனவேதான் நாம், உள்ளக விசாரணையை விடுத்து சர்வதேச விசாரணையை நடைமுறைப்படுத்துங்கள் என்று கோருகின்றோம். அறிக்கை பாரதூரமானது என்று சொல்லும் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் அதனை வலு விழக்கச் செய்யும் வகையில், உள்ளக விசாரணையை ஆதரிக்கக் கூடாது – என்றார்.

(த–5–21)

## இலங்கையில்

முறையாக இலங்கைப் பிரதமராக முழுமையான பதவிக் காலம் வகித்தபோது, இந்தியாவில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியே இருந்தது. இப்போது அவர் மீண்டும் பிரதமராக தேர்வு செய்யப்பட்டிருக்கிறார். தற்போது இந்தியாவில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சி நடைபெறுகிறது.

**வரலாற்றுச் சிறப்பு**

இந்திய – இலங்கை உறவில் இந்த ஆண்டு வரலாற்றுச் சிறப்புமிக்கது. முதலில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்புக்குப் பின்னர் தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொண்டார். பின்னர், நான் இலங்கை சென்றேன். தற்போது, இலங்கைப் பிரதமர் ரணில் இந்தியாவுக்கு தனது முதல் வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

**வலுவான நட்புறவு**

இந்தியா – இலங்கை நட்புறவு மிகவும் வலுவானது. இலங்கையில் அண்மையில் நடைபெற்ற தேர்தல் [illegible] [illegible] வளர்ச்சி ஆகிய கொள்கைகளுடன் வளமான எதிர்காலத்தை நோக்கி நகர்ந்து வருகிறது என்பதை உணர்த்துகிறது. இலங்கை அரசு அனைத்து முயற்சிகளிலும் வெற்றி பெற வாழ்த்துவதோடு, இந்தியாவின் ஆதரவு எப்போதும் இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இலங்கைத் தலைவர்களின் சீர்தூக்கிய அறிவாலும், அவர்களது உயரிய எண்ணங்களாலும் அந்நாட்டில் உண்மையான அமைதி உடன்படிக்கை ஏற்படுவதுடன் வளர்ச்சியும் ஏற்படும் என நம்புகிறோம்.

இலங்கையின் வளர்ச்சி தெற்காசிய பிராந்திய வளர்ச்சிக்கு வித்திடுவதோடு, இந்தியா – இலங்கை கடல் சார் நட்புறவுக்கும் வித்திடும்.

இலங்கையில் தமிழர்கள் கௌரவமாக வாழ வழிவகை செய்ய வேண்டும் என ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியுள்ளேன்.

**ஆக்கபூர்வமான பேச்சு**

இருநாட்டு நட்புறவு குறித்து எங்களுக்கு இடையேயான பேச்சு ஆக்கபூர்வமானதாக அமைந்தது. பொருளாதார உடன்படிக்கைகள் மேலும் வலுப்பெறும் என்ற நம்பிக்கை உதயமாகியுள்ளது. இலங்கையில் கட்டுமானம், எரிசக்தி, போக்குவரத்து துறையில் முதலீடு செய்ய விரும்பும் இந்திய முதலீட்டாளர்களுக்கு ஆதரவு அளிக்க வேண்டும் என இலங்கைப் பிரதமரிடம் கேட்டுக் கொண்டேன்.

அதேபோல், இலங்கையின் உட்கட்டுமானம், ரயில்வே, எரிசக்தி, சமூக மேம்பாட்டுத் திட்டங்கள், விவசாயம், அறிவியல் தொழில்நுட்பம், விண்வெளி ஆராய்ச்சி, அணுசக்தி ஆகிய துறைகளில் இந்தியாவின் நட்புறவு தொடரும்.

இருநாட்டு மக்கள் நட்புறவை மதிக்கிறோம். இனிக் குமார் சங்ககாரவை கிரிக்கெட் மைதானத்தில் காண முடியாது என்பதுகூட எங்களுக்கு வருத்தமளிக்கும் செய்தியே.

**படைகளுக்கு பயிற்சி தொடரும்**

பாதுகாப்பு பயிற்சித் துறையில் இலங்கை, இந்தியாவின் மிக நெருங்கிய நட்பு நாடாகத் திகழ்கிறது அந்தவகையில் இலங்கைப் படைகளுக்குத் தொடர்ந்து இந்தியா, பாதுகாப்பு துறைசார் பயிற்சி வழங்கும். இந்தியா – இலங்கை பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பு மேம்படுத்தப்படும். தீவிரவாத ஒழிப்பு நடவடிக்கையில் இந்தியா, இலங்கைக் கூட்டுறவு தீவிரப்படுத்தப்படும். கடல் எல்லையில் இரு நாட்டுப் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும்.

**பேச்சு மூலம் தீர்வு**

இலங்கை, இந்திய மீனவர்கள் சங்கப் பிரதிநிதிகள் பேச்சு மூலம் தங்கள் பிரச்சினைக்குத் தீர்வு காண தொடர்ந்து முயற்சிக்க வேண்டும் என்பதில் நாங்கள் இருவரும் உடன்படுகிறோம். மேலும், மீனவர்கள் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் அணுகவேண்டும் என இலங்கை பிரதமரிடம் வலியுறுத்தினேன். ஏனெனில், இது அவர்கள் வாழ்வாதார பிரச்சினை. அதேவேளை, இந்திய மீனவர்களை ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கு தயாராகும்படி ஊக்குவித்து வருவதாகவும் ரணிலிடம் கூறினேன். இவ்வாறு இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

(த–வ)

## விசாரணை

இன்று புதன்கிழமை ஜெனிவாவில் வெளியிடப் பட வுள்ளது.

குறித்த அறிக்கை யின் பிரதி கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை அரசிடம் கையளிக்கப்பட் டுள்ளது.

இந்நிலையில், குறித்த அறிக்கைக்கு உரிய பதில் அளிக்கப்படும் என்று இலங்கை அரசு தன்னிடம் உறுதியளித்தது என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல்–ஹுசைனின் பேச்சாளர் ரவினா சம்தசனி, ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் கூறியுள்ளார்.

இலங்கை தொடர்பில் இன்று வெளிவரவிருக்கும் விசாரணை அறிக்கை ஆணைக் குழுவின் உத்தியோக பூர்வ இணையத் தளத்திலும் பகிரங்கப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கை மிகவும் பாரதூரமானதாக அமையும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சயிட் அல் ஹுசைன் நேற்றுமுன்தினம் ஜெனிவாவில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(த–சி)

## ஐ.நா.

திகதி விசேட உரை நிகழ்த்தவுள்ளார். ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்பதற்காக எதிர்வரும் 23ஆம் திகதி ஜனாதிபதி தலைமையிலான இலங்கைக் குழுவினர் அமெரிக்கா பயணம் செய்யவுள்ளனர். எதிர்வரும் 30ஆம் திகதி அமெரிக்க நேரப்படி முற்பகல் 9.45 மணிக்கு ஜனாதிபதி உரையாற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது

பொதுச் சபைக் கூட்டத்தில் பங்கேற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பக்க நிகழ்வாக, உலகின் பல நாடுகளது தலைவர்களுடன் பேச்சு நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது அமெரிக்க ஜனாதிபதி, பிரித்தானிய பிரதமர், இந்திய பிரதமர், ஜப்பான் பிரதமர் உள்ளிட்ட பலருடன் சந்திப்புக்களை நடத்தும் முனைப்புக்களை நியூயோர்க்கிலுள்ள இலங்கை இராஜதந்திரிகள் ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை ஐ.நா பொதுச்சபையில் எதிர்வரும் 25ஆம் திகதி புனித பாப்பரசர் பிரான்ஸிஸ் ஆண் டகை உரையாற்றவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த–வ)

## இலங்கை

நரேந்திர மோடி ஆகியோரின் முன்னிலையில் இந்த ஒப்ப ந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இந்தச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, சர்வதேச முதலீட்டு அமைச்சர் மலிக் சமரவிக்ரமசிங்க ஆகியோரும் பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க உள்ளிட்ட அரசின் முக்கிய பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

சார்க் வலயத்தில் செய்மதி பரிமாற்றும் வேலைத்திட்டம், வவுனியா மாவட்ட வைத்தியசாலையைப் புனரமைக்கும் வேலைத்திட்டம், சிறிய அபிவிருத்திக்கு உதவி வழங்குதல், இந்தியாவில் 17 மாநிலங்களில் முன்னெடுக்கப்படும் அவசர சிகிச்சைசேவை அனுபவங்களை இலங்கையுடன் பகிர்ந்துகொள்ளல் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டே இந்த நான்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்டுள்ளன. (த–சி)

## சர்வதேசப்

டைச் சுமந்திரன் வலியுறுத்தியுள்ளார். அத்தோடு வெளிவரவிருக்கும் சர்வதேச விசாரணை அறிக்கையை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டிய தேவையையும் வலியுறுத்தினார்.

இந்தச் சந்திப்பானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மனித உரிமைகள் சபையின் அங்கத்துவ நாடுகள், இவ்விடயத்தில் அக்கறையுள்ள அனைவரோடும் பொறுப்புகூறல் சம்பந்தமாக தொடர்ச்சியாக மேற்கொண்டிருக்கின்ற கலந்துரையாடல்களின் ஒரு பகுதியாகும்.

(த–5)

## திலீபனின்

குறித்த நினைவு நாள் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் மாதம் 26 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (த–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தர் சிலை அமைக்கும் அனுமதியை உரிய திணைக்களத்தில் பெறவில்லை

## அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ்.நாக விகாரையினால் கடற்கரையோரம் அல்லது கடலுக்குள் கட்டப்படவிருந்த புத்தர் சிலை கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதி வழங்கப்படாததால் நிறுத்தப்பட்டுள்ளது என்று அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அனுமதி இல்லாமல் கடற்கரையோரம் அல்லது கடலுக்குள் எந்தவித கட்டுமானமும் செய்ய முடியாது என்பது, யாழ் நாக விகாரை அதிபதிக்குத் தெரிந்திருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இது தொடர்பில் தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சரும், தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவருமான மனோ கணேசன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

புத்த விகாரை கட்டுமானம் தடை செய்யப்பட்டதானது, நாட்டின் இன மத சகவாழ்வுக்கு ஏற்பட்டுள்ள தடை என என்னிடம் முறையிட்ட ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பிரபல அரசியல்வாதி ஒருவருக்கு இது பற்றிய பதிலைத் தந்துள்ளேன். இதை ஒரு காரணமாக வைத்துக்கொண்டு சிங்கள ஊடகங்களில் இனவாதத்தை கிளப்பியவர்களுக்கும் பதில் கூறியுள்ளேன்.

இது சகவாழ்வுக்கான தடை இல்லை. நாட்டின் சட்டங்களை புரிந்து கொள்ளாமையினால் ஏற்பட்ட சட்ட தடை என கூறியுள்ளேன். இந்த கரையோர பாதுகாப்பு திணைக்களம் இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் வருகிறது.

இந்த நாட்டில் ஒரு குறிப்பிட்ட பிரிவினர், விசேட வரம் பெற்றவர்களைப்போல் நினைத்த நேரத்தில் சட்டங்களை மீறி எதுவும் செய்யலாம் என்ற நிலைமை மாறி இன்று சட்டத்தின் ஆட்சி இயன்ற அளவில் நிலைநாட்டப்பட்டுள்ளது. தென்னிலங்கையின் பல்வேறு இந்து ஆலயங்களில் வானுயர்ந்த கோபுரங்கள் பல எழுப்பட்டுள்ளன.

எனவே வடக்கிலும் விகாரைகளில் கட்டுமானங்கள் செய்யப்படலாம் என்பது இயற்கையே. ஆனால், சட்டத்தை மீறி கடலிலும், வானிலும் கட்டுமானங்களை நினைத்தபடி எவரும் செய்ய முடியாது. இந்த நிலைப்பாட்டின் அடிப்படையிலேயே யாழ். அரச அதிபர் வேதநாயகன் நடவடிக்கை எடுத்துள்ளார் என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-4)

# 155 கி. ஹெரோயின், 693 கி. கஞ்சா சிக்கின

## 3 மாதங்களில் என்கிறது பொலிஸ்

கொழும்பு, ஏப். 4

கடந்த மூன்று மாதங்களில் 155 கிலோ 816 கிராம் ஹெரோயினும், 693 கிலோகிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் உதவி பொலிஸ் அத்தியட்சகருமான ருவன் குணசேகர தெரிவித்தார்.

ஹெரோயின் விநியோக மையமாக காணப்பட்ட மீகமுவ, துங்கல்பிட்டிய, லெபுன்கல பகுதியினை தேடுதல் நடத்திய பொலிஸார் பெருமளவு ஹெரோயினைக் கைப்பற்றியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். குறித்த பகுதியை சுற்றிவளைத்த போது, இதனோடு தொடர்புடைய பாகிஸ்தானியர் கைது செய்யப்பட்டதாகவும், அங்கிருந்து தப்பிச்செல்ல முயற்சித்த இருவர் கட்டுநாயக்க அதிவேக பாதைக் கருகில் பொலிஸாரினால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார். (வ-5)

## அதி உச்சப்

ஜனாதிபதி கைவிட்டுத் திரும்பிவிட்டார்.

வடக்கு மாகாணத்துக்கு வருகை தரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வவுனியாவில் ஜனாதிபதியின் ஆலோசனையில் அமைக்கப்பட்ட இராணுவக் குடியிருப்பைத் திறந்து வைக்க உள்ளார் எனவும், அத்தோடு யாழ்ப்பாணத்தில் ஜேர்மன் முதலீட்டாளர்களால் நிர்மாணிக்கப்பட்டு, ஏற்கனவே இயங்கிக் கொண்டிருக்கும் தனியார் விருந்தினர் விடுதியைத் திறந்து வைப்பார் எனவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்த நிலையில் நேற்றையதினம் யாழ்ப்பாணத்துக்கு மட்டுமே ஜனாதிபதி பயணித்தார். யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அமைக்கப்பட்ட குறித்த விருந்தினர் விடுதிக்கு நேற்று முற்பகல் 11.30 மணியளவில் வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசே ன, விருந்தினர் விடுதியை சம்பிரதாயபூர்வமாகத் திரை நீக்கம் செய்தார்.

இதனைத் தொடர்ந்து ஜேர்மனியின் நிதியுதவியுடன் காரைநகரில் மேற்கொள்ளப்படும் விருந்தோம்பல் பயிற்சிநெறியை முடிவு செய்த மாணவர்கள் 5 பேருக்கான சான்றிதழ்களையும் விருந்தினர் விடுதியில் வைத்து ஜனாதிபதி வழங்கினார்.

யாழ்ப்பாணத்தின் நிகழ்வைத் தொடர்ந்து வவுனியாவில் அமைக்கப்பட்ட இராணுவக் குடியிருப்பும் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டுக் கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டு, வவுனியாவிலும் தீவிர பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்த நிலையில், ஜனாதிபதி வவுனியாவுக்குச் செல்லவில்லை. அதற்கான காரணம் கூறப்படவில்லை.

ஜனாதிபதி கலந்து கொண்ட நிகழ்வில் சுற்றுலாத்துறை அமைச்சர், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர், வடக்கு மாகாண ஆளுநர், யாழ் மாவட்ட அரச அதிபர், இந்திய துணைத் தூதுவர், மதத் தலைவர்கள், விருந்தினர் விடுதியின் நிர்வாகிகள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதியின் வடக்குக்கான வருகையை முன்னிட்டுப் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் அதிதீவிர பாதுகாப்பை வழங்கியிருந்தனர். யாழ்ப்பாண பிரதான வீதிகள் எங்கும் விசேட அதிரடிப் படையினர் நேற்றுமுன்தினம் முதல் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். விருந்தினர் விடுதியைச் சுற்றி உள்ள வர்த்தக நிலையங்களில் பொலிஸார், அதிரடிப் படையினரால் தீவிரமாகத் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

மாடிக் கட்டடங்களில் பொலிஸார் எந்த நேரமும் கண்காணிப்பில் ஈடுபட்டிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அத்துடன் நேற்றையதினம் ஜனாதிபதியின் வருகைக்காக கார்கில்ஸிலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. அங்கு நேற்றுக் காலை முதல் பிற்பகல் 2 மணிவரை திரைப்படங்களைத் திரையிடுவதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்ததாகவும், அதனால் திரையரங்குக்கு சென்றிருந்தவர்கள் திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-வ-21-106)

## வித்தியாவை

நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளார்.

வித்தியாவின் குடும்பத்துக்கு வீடு கையளிக்கும் நிகழ்வு வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. இதன் போது வித்தியாவின் தாயார் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

முன்னர் யாழ்ப்பாணம் வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, வித்தியாவின் தாயாரைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார். இதன்போது, வித்தியாவின் கொலைக் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வழங்கவேண்டும் என்று கோரியிருந்தார். அத்துடன், அவருக்குச் சொந்தமாக வீடு இல்லை என்றும் கூறப்பட்டிருந்தது. இதன்போதே வித்தியா குடும்பத்தினர் விரும்பும் இடத்தில் வீடு ஒன்றைக் கட்டிக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால உறுதியளித்திருந்தார்.

இந்தநிலையில் அவர்களுக்கு என வவுனியாவில் வீடு அமைத்துத் தருவதாக அரச தரப்பினால் கூறப்பட்டிருந்தது. அதன்படி நிர்மாணிக்கப்பட்ட வீடே நேற்றுக் கையளிக்கப்பட்டது. அதனை ஜனாதிபதி கையளிப்பார் என்று முன்னர் கூறப்பட்டிருந்தபோதும், வவுனியாவுக்கான ஜனாதிபதியின் பயணம் பின்னர் விலக்கிக் கொள்ளப்பட்டது.

இதனால் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் வவுனியாவுக்குச் சென்று வித்தியா குடும்பத்தினருக்கான வீட்டைக் கையளித்தார்.

இதன்போதே வித்தியா கொலைச் சந்தேக நபர்களுக்கு விரைவில் உரிய தண்டனையைப் பெற்றுக் கொடுக்குமாறு செயலாளரிடம் வித்தியாவின் தாயார் உருக்கமான வேண்டுகோளை முன்வைத்திருந்தார். தனது மகளின் படுகொலை குறித்த விசாரணையை விரைவுபடுத்தி, குற்றவாளிகளுக்கு விரைவாகத் தண்டனை பெற்றுக் கொடுக்குமாறு வித்தியாவின் தாயார் கண்ணீர் மல்கக் கேட்டுக் கொண்டார். (த-வ-4-101)

# பிரஸல்ஸ் பறந்தது இலங்கைக் குழு


கொழும்பு, ஏப். 4

ஐரோப்பிய ஒன்றியத்தால் நாட்டின் மீன் ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்குவது தொடர்பிலான இறுதிப்பேச்சில் கலந்து கொள்வதற்காக இலங்கைப் பிரதிநிதிகள் சிலர் பிரஸல்ஸுக்குப் பயணித்துள்ளனர்.

நீரியல்வள அமைச்சின் செயலாளரின் தலைமையில் இந்தக் குழுவினர் நேற்று முன்தினம் நாட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றதாக கடற்றொழில் திணைக்களம் தெரிவித்துள்ளது. (வ-சீ)

## கண்ணீர் அஞ்சலி

### நல்லதம்பி முருகேசு



எமது ஸ்தாபன கட்டட உரிமையாளர் **நல்லதம்பி முருகேசு** அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்தி ஆத்ம சாந்திக்காக இறையருள் வேண்டி அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**அருள்நிலா நகைமாடம்**
**உரிமையாளரும், ஊழியர்களும்.**

**74, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.**

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 27 | | 06 |
| 03 | | 04 |
| 1946 | | 2005 |



அமரர்
### சுப்பையா பொன்னுத்துரை

(உரிமையாளர் பொன்மலர் ஸ்ரோஸ் -அளவை கொன்வெக்சனறி வேக்ஸ் (SUN BRAND) அளவெட்டி)

"தந்தை மகற்காற்றும் உதவி அவையத்து முந்தி இருக்கச்செயல்"

என்ற பொய்யா மொழியான் கூற்றை உமதாக்கி உங்களை உருக்கி எம்மை ஆளாக்கினீர்களே.... எங்கே போய்த் தேடுவோம் ஐயா....

பொன்மலர் ஸ்ரோஸ்,
அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

உங்கள் கொள்கைகளை மனதிலிருந்து உங்கள் வழியில் வாழும் உங்கள்
**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பு

அமரர் **மகேஸ்வரி இராசையா**



**கடந்த 07.03.2016 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி மகேஸ்வரி இராசையா அவர்களின் அந்தியேட்டிக் கிரியை இன்று (04.04.2016) திங்கட்கிழமை கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறும். 06.04.2016 புதன்கிழமை அவர்களது வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் நிகழும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

**குடும்பத்தினர்.**

**விரவாணி, வாதரவத்தை, புத்தூர் கிழக்கு, புத்தூர்.** (70344) (12.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 4

**நாமகள் வி.கழகத் தொடர்**
தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையத்தின் 53 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நாமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய் றெட்றேஞ்சஸ் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சாவற்கட்டு மகாத்மா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

**கழுகுகள் வி.கழகத் தொடர்**
பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் நடப்பு வருடத்துக்கான வல்வவன் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உடுப்பிட்டி யுத் அணியை எதிர்த்து அண்ணா சிலையடி அணி மோதவுள்ளது. தொடர்ந்து மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மெலிஞ்சிமுனை அணியை எதிர்த்து சிவானந்தா அணி மோதவுள்ளது. (ம-23)

# வீரர்களின் புதிய ஒப்பந்தத்தை வெளியிட்டது ஆஸி. கிரிக்கெட்

ஆஸ்திரேலியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை நடப்பு, எதிர்வரும் வருடங்களுக்கான தனது வீரர்களின் புதிய ஒப்பந்தங்களை வெளியிட்டுள்ளது. 20 வீரர்களையே தனது ஒப்பந்தத்தில் உள்வாங்கியுள்ளது. பெரும்பாலும் இது எதிர்பார்க்கப்பட்டதைப் போலவே அமைந்துள்ளது.

கடந்த வருடம், இந்த வருடம் ஓய்வு பெற்ற வீரர்களான மைக்கல் கிளார்க், சேன் வற்சன், பிராட் ஹடின், மிச்செல் ஜோன்சன், ஹரிஸ், கிறிஸ் ரோஜர்ஸ் ஆகியோரே இடம்பெற்றிருக்கவில்லை. இவர்களுக்குப் பதிலாக பீற்றர் சிடில், உஸ்மான் கவாஜா, ஜோ பேர்ண்ஸ், அடம் வொஜஸ், பீற்றர் நெவில், ஜோன் ஹஸ்டிங்கஸ், நைல் ஆகியோர் இம்முறை உள்வாங்கப்பட்டுள்ளனர்.

ஒப்பந்த வீரர்கள்– சிமித், பெய்லி, ஜோ பேர்ண்ஸ், நைல், கும்மின்ஸ், ஜேம்ஸ் பல்க்நெர், ஆரோன் பின்ஞ், ஜோன் ஹஸ்டிங்ஸ், ஹசில்வூட், உஸ்மான் கவாஜா, லையன், மிச்செல் மார்ஷ், சோர்ன் மார்ஷ், கிளென் மக்ஸ்வெல், பீற்றர் நெவில், ஜேம்ஸ் பற்றின்சன், அடம் வொஜஸ், பீற்றர் சிடில், மிட்செல் ஸ்டார்க், டேவிட் வோர்ணர். (ம)

CRICKET AUSTRALIA



# இந்தியாவை கிண்டலடித்த பாக். நடிகை வீணா மலிக்

பாகிஸ்தான் நடிகை வீணா மலிக், ரி–20 உலகக் கிண்ணத் தொடரில் இருந்து வெளியேறிய இந்திய அணியை கிண்டலடித்து டுவிட் வெளியிட்டுள்ளார். இந்திய அணியின் இந்த தோல்வியால் பங்களாதேஷ், பாகிஸ்தான், இலங்கை ரசிகர்கள் சிலர் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பங்களாதேஷ் வீரர் முஸ்பிகர் ரகிம் டுவிட்டரில் வெளிப்படையாகவே தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தி பின்னர் ரசிகர்களிடம் மன்னிப்புக் கேட்டார்.

இந்த நிலையில் பாகிஸ்தான் நடிகை வீணா மலிக் – என்ன ஒரு ஆட்டம். சாதித்து விட்டீர்கள் மேற்கிந்திய தீவுகள். அன்புக்குரிய இந்தியா, பாகிஸ்தானிடம் இருந்து வரும் கருத்து என்னவென்றால். 'மோக்கா.. மோக்கா' என்று கிண்டலடித்துள்ளார். லீக் ஆட்டத்தில் இந்தியா –பாகிஸ்தானை வீழ்த்தியிருந்தது. மொத்தத்தில் இந்தியாவை விட அதிகம் சாதித்து, இறுதிக்குள் நுழைந்த இங்கிலாந்தும், மேற்கிந்தியத் தீவுகளும் இந்தியாவுக்கு எதிராக எந்தவொரு கருத்தையும் முன்வைக்காத நிலையில் இந்தியாவுக்கு முன்னரே அதாவது சுப்பர் 10 பிரிவைத் தாண்டாதவர்கள் தான், தங்களை விட மிக உயரத்தில் உள்ள இந்தியாவை கிண்டல் செய்து வருகின்றனர். இதுக்குப் பெயர்தான் ஆதங்கத்தின் வெளிப்பாடோ. (ம)

# அல் மாதர் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 4

வவுனியா அல்ஹிஜிரா விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையில் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் அல்மாதர் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய அஸ்ரப் ஞாபகார்த்த மைதானத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் அல்மாதர் அணியை எதிர்த்து யங்ஸ்ரார் 'பி' அணி மோதிக் கொண்டது. இதில் இரண்டு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததினால், சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதில் அல் மாதர் அணி 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23-422)

# துடுப்பாட்டத் தொடர்

சாவகச்சேரி ஏப். 4

சாவகச்சேரி சரசாலை வடக்கு உதயநிலா விளையாட்டுக் கழகத்தினர் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு 21வயதுக்கு உட்பட்ட பிரிவினருக்கான துடுப்பாட்டத் தொடர் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர். 11 வீரர்கள் பங்குபற்றும் இந்தத் தொடரின் ஆட்டங்கள் 12 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்டதாக அமையும். இறுதியாட்டம் 16 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்டதாக அமையும். தொடரில் கலந்து கொள்ள ஆர்வமுடைய கழகங்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் பதிவை மேற்கொள்ளலாம். (ம-9)

# உடுப்பிட்டி சிவகுமரன், ஞானமுருகன் அணிகள் திக்கம் இளைஞரின் கால்பந்தில் முன்னேற்றம்

கரணவாய், ஏப். 4

திக்கம் இளைஞர் வி.கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகம் மற்றும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகம் என்பன முன்னேற்றம் கண்டுள்ளன.

**சிவகுமரன் – சரஸ்வதி**
பருத்தித்துறை கால் பந்தாட்டச் சங்கத்தின் அனுமதியுடன் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டு வரும் இந்தத் தொடர் திக்கம் இளைஞர் வி.கழக மைதானத்திலேயே இடம்பெற்று வருகிறது. கடந்த புதன்கிழமை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக் கழகமும் புத்தூர் சரஸ்வதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. பரபரப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் முதல் பதின்ம நிமிடங்கள் வரை எந்த அணியாலும் கோல் கணக்கை ஆரம்பிக்க முடியவில்லை. ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் சிவகுமரன் அணியின் கஜனன் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி, அணிக்கான முதல் கோலைப் பெற்றுக் கொடுக்க அதுவே முதல்பாதியின் ஒரே கோலாகவும் அமைந்தது. வேறெந்த மாற்றங்களும் ஏற்படாமல் ஓடி மறைந்தது இரண்டாவது பாதி. முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் சிவகுமரன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றது.

**சிலையடி – ஞானமுருகன்**
தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அண்ணா சிலையடி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன. ஆட்டத்தின் 16 ஆவது நிமிடத்தில் ஞானமுருகன் அணியின் சிமித் முதற்கோலைப் பதிவு செய்தார். மேலதிக மாற்றங்கள் எவையும் ஏற்படாத நிலையில் முதற்பாதி முடிவுக்கு வந்தது.

இரண்டாம் பாதியின் 10 ஆவது நிமிடத்தில் ஜெகதீஸின் உதவியுடனும் 17 ஆவது நிமிடத்தில் பார்த்தீபன் மற்றும் 22 ஆவது நிமிடத்தில் லகின்சன் ஆகியோரின் உதவியுடன் 3 கோல்களைப் பெற்று முடிவில் 4:0 என்ற கோல் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது ஞானமுருகன் விளையாட்டுக் கழகம். (ம-108)

# வென்றது ஞானமுருகன்

யாழ்ப்பாணம், ஏப். 4

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் ஞானமுருகன் அணி வெற்றிபெற்றுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 2மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகஅணி மோதிக் கொண்டது. இதில் மயிலங்காடு ஞானமுருகன் அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# வைகறைக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஏப். 4

உடுவில் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான தாச்சித் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வைகறை அணி வெற்றிபெற்றுள்ளது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உடுவில் ஆலடிசிந்து விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் புதுமடம் வைகறை விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

# இந்தியாவின் சிறந்த தலைவர் டோனிதான் என்கிறார் கங்குலி

இந்திய அணியின் சிறந்த தலைவர் டோனி என்று முன்னாள் அணித்தலைவர் கங்குலி புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்திய அணியின் ஒருநாள் மற்றும் ரி–20 தலைவரான டோனி, ரி–20 உலகக்கிண்ணத்தில் இந்திய அணியை சிறப்பாக வழிநடத்தினார். இந்தியா அரையிறுதியில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் மேற்கிந்தியத் தீவுகள் அணியிடம் தோற்று தொடரில் இருந்து வெளியேறியது. இந்த நிலையில் இந்திய அணித்தலைவர் டோனியை சிறந்த தலைவர் என்று குறிப்பிட்டுள்ளார் கங்குலி, அவர் மேலும் தெரிவிக்கையில்; மேற்கிந்திய தீவுகள் அணிக்கு மும்பை மைதானம் 2 நாள்களுக்கு முன்பே பழக்கப்பட்ட இடமாக மாறிவிட்டதாக நினைக்கிறேன். அந்த அணி வீரர்கள் சிறப்பாகச் செயற்பட்டனர். அரையிறுதியில் 193 ஓட்டங்களை எட்டுவது என்பது சவாலான விடயம். மேலும், டோனி இந்திய அணிக்கு சிறந்த தலைவராக இருக்கிறார். அவர் எதிர்பார்த்ததை விட சிறப்பாக இந்தியாவை வழிநடத்துகிறார் – என்றார். (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மேசைப் பந்தாட்ட பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம், செப். 16
வடமாகாண கல்வி திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மேசைப் பந்தாட்டச் சங்கம் நடத்தும் பயிற்சி முகாம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் ஆரம்பமானது.
குறித்த பயிற்சி முகாமில் கொக்குவில் இந்துக்கல்லூரி, யாழ்.இந்துக் கல்லூரி, யாழ்.மத்தியகல்லூரி, யாழ். இந்துமகளிர் கல்லூரி, வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சென்.ஜோன்ஸ் கல்லூரி, அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம், யூனியன் கல்லூரி, ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, ஹட்லிக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த நூற்றிற்கும் மேற்பட்ட வீரவீராங்கனைகள் கலந்து கொண்டனர். (ம-23)

# டோனிக்கு எதிரான வழக்கை விசாரிக்கத் தடை

இந்திய கிரிக்கெட் அணியின் அணித் தலைவர் டோனி மீதான வழக்கை விசாரிக்க இந்திய உச்சநீதிமன்றம் தடைவிதித்துள்ளது.
கடந்த 2013ஆம் ஆண்டு வெளியான ஒரு வணிகம் சம்பந்தப்பட்ட மாத இதழில் டோனியை கடவுள் விஷ்ணு போல சித்திரித்து படம் வெளியிடப்பட்டு இருந்தது. அந்த படத்தில் டோனிக்கு பல கைகள் இருப்பது போன்றும், ஒவ்வொரு கையிலும் ஒருவியாபாரப்பொருளை அவர் வைத்திருப்பது போலும் விளம்பரப்படுத்தப்பட்டது. இதில் பாதணி ஒன்றும் இடம்பெற்றிருந்தது.
இந்நிலையில் இந்த விளம்பரம் இந்து மதத்தை அவமதிப்பதாக இருக்கின்றது என்று டோனிக்கு எதிராக சிலர் பெங்களூர் மன்றில் வழக்குத் தொடர்ந்தனர். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த நிலையில் டோனி உச்சநீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்தார். அதில், நான் கடவுள் விஷ்ணு போல் ஒளிப்படத்துக்குக் காட்சி கொடுக்க வில்லை. அந்த ஒளிப்படம் வெளிவந்த பிறகுதான் தனக்கு அதுபற்றி தெரியும். யாரையும் புண்படுத்தும்நோக்கமல்ல. எனவே இந்த வழக்குக்கு தடை விதிக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்தது.
இந்த மனுவை விசாரணைக்கு ஏற்ற உச்ச நீதிமன்றம், பெங்களூர் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் வழக்கு விசாரணைக்குத் தடை விதித்து உத்தரவிட்டுள்ளது. (ம)





## குவியும் பாராட்டுக்கள்

சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான அமெரிக்கன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் கிண்ணம் வென்ற மிர்சா கிங்கிஸ் இணைக்கு இந்தியப் பிரதமர் மோடி உள்ளிட்ட பல பிரபலங்களிடமிருந்தும் பாராட்டுக்கள் குவிந்த வண்ணம் உள்ளன.
இந்தியப் பிரதமர் மோடி – அற்புதமான வெற்றிக்காக வாழ்த்துகள் சானியா, கிங்கிஸ். உங்களின் சாதனைகள் எங்களுக்கு பெருமிதம் அளிக்கிறது;
இந்திய ஜனாதிபதி முகர்ஜி – அமெரிக்க ரென்னிஸ் தொடரின் மகளிர் இரட்டையரில் கிண்ணம் வென்றமைக்காக இதயம் கனிந்த வாழ்த்துகள் சானியா மற்றும் ஹிங்கிஸ். அற்புதம்;
ராகுல் ராவிட் – இளம் வீராங்கனைகள் ரென்னிஸை தேர்ந்தெடுக்க சானியா ஒரு உந்துசக்தியாக உள்ளார். என்றவாறு தமது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளனர்.
அமெரிக்கன் தொடரில் சானியா கிங்கிஸ் இணை ஒரு செற்றைக்கூட எதிரணியிடம் இழக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ம)

## கிளி. இந்து, மெதடிஸ்த பெண்கள் தேசியமட்ட கபடியில் இரண்டாமிடம்

யாழ்ப்பாணம், செப். 16
இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கபடித் தொடரில் 19வயது ஆண்கள் பிரிவில் கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணியும் 19வயது பெண்கள் பிரிவில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியும் இரண்டாம் இடத்தை தமதாக்கிக்கொண்டன.

***மெதடிஸ்த பெண்கள் எதிர் கிரான் மகாவித்தியாலயம்***


நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கிண்ணியா மைதானத்தில் இடம்பெற்ற 19 வயதுப்பிரிவு பெண்களுக்கான கபடி தொடரின் இறுதியாட்டத்தில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து மட்டக்களப்பு கிரான் மகா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் மட்டக்களப்பு கிரான் மகா வித்தியாலய அணி 35:30 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

***கிளி. இந்து எதிர் நகுலா வித்தியாலயம்***

19வயதுப்பிரிவு ஆண்களுக்கான கபடித் தொடரின் இறுதியாட்டத்தில் கிளிநொச்சிஇந்துக்கல்லூரி அணியை எதிர்த்து அனுராதபுரம் நகுலா வித்தியாலய அணி மோதிக் கொண்டது. இதில் அனுராதபுரம் நகுலா வித்தியாலய அணி 21:11 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் ஆனது. (ம-23)

## ஜோன்சன், கசில்வூட் கட்டாய நீக்கம்

பங்களாதேஷ் – ஆஸ்திரேலியத் தொடரிலிருந்து ஆஸியின் வேகப்பந்து வீச்சாளர்களான ஜோன்சன், கசில்வூட் இருவரும் நீக்கப்பட்டுள்ளனர்.
அடுத்த மாதம் பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 2 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் ஆஸ்திரேலிய அணி விளையாடவுள்ளது. இந்தத் தொடரிலிருந்து ஜோன்சன், கசில்வூட் இருவரும் நீக்கப்பட்டுள்ள அதேநேரம் மக்ஸ்வெல் இணைக்கப்பட்டுள்ளார்.
அணி விவரம்: சிமித் (தலைவர்), கமரூன் பன்கிராப்ட், பேர்ண்ஸ், கும்மின்ஸ், அன்ரூ, உஸ்மான் காவஜா, லியான், மிட்செல் மார்ஸ், சோஜுன் மார்ஸ், மக்ஸ்வெல், நெவில், ஶ்ரீவன், சிடில், மிட்செல் ஸ்ராக். (ம)




# அரச அதிபர் கிண்ணத் தொடரின் லீக் ஆட்டத்தின் முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 16
யாழ். மாவட்ட செயலகத்தின் நலன் புரி கழகத்தினால் பிரதேச செயலகங்களுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் அரச அதிபர் வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகியது.
குறித்த தொடரின் லீக் ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு – சண்டிலிப்பாய் பிரதேச செயல அணிக்கும் காரைநகர் பிரதேச செயலக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணி 7:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.
பருத்தித்துறைபிரதேசசெயலகஅணிக்கும் சாவகச்சேரி பிரதேச செயலக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பெறாததனால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது. சமநிலைதகர்ப்பு உதைகளில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
யாழ். மாவட்ட செயலக அணிக்கும் ஊர்காவற்துறை பிரதேச செயலக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் யாழ். மாவட்ட செயலக அணி 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.
தெல்லிப்பழை பிரதேச செயலக அணிக்கும் சங்கானை பிரதேச செயலக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது.
யாழ். பிரதேச செயலக அணியை எதிர்த்து நல்லூர் பிரதேச செயலக அணி மோதிக்கொண்ட ஆட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
மருதங்கேணி பிரதேச செயலக அணியை எதிர்த்து கோப் பாய் பிரதேச செயலக அணி மோதிக் கொண்ட ஆட்டத்தில் மருதங்கேணி பிரதேச செயலக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
கரவெட்டி பிரதேச செயலக அணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணி மோதிக்கொண்ட ஆட்டத்தில் வேலணை பிரதேச செயலக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.
நெடுந்தீவுபிரதேசசெயலகஅணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணி மோதிக்கொண்ட ஆட்டத்தில் நெடுந்தீவு பிரதேச செயலக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ALLIANCE FRANÇAISE DE JAFFNA
af பிரெஞ்சு மொழி
FRENCH EMBASSY ... ALLIANCE FRANÇAISE ... CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
www.ambafrance-lk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

இலவச ஆங்கில வகுப்பு
இடம்: ELAS institute
Time:- 9am to 1pm 19/09/2015 சனிக்கிழமை
நான்கு மணித்தியாலத்தில் ஆங்கிலம்.
Sir Pon Ramanathan Road, Thirunelveli, Jaffna.
Contact No: 076 697 3040, 021 221 2410



ஆங்கிலம்
மூன்று மாத சனி, ஞாயிறு பயிற்சி நெறி
நீங்கள் ஆங்கிலம் பேசவேண்டுமா? இல்லையா?
இம்முறை A/L எழுதியோர், பல்கலை புதுமுக மாணவர்கள் தொழில்புரிவோர், இளைஞர், யுவதிகளுக்கானது.
புதிய பயிற்சிநெறி ஆரம்பம் : 19.09.2015
பிரிவு 1 : காலை 08.00-10.00 பிரிவு 2 : மு.ப 10.00-12.00
பிரிவு 3 : பி.ப 01.00-03.00 பிரிவு 4 : மாலை 03.00-05.00
பாடப்புத்தகங்கள், DVD, மற்றும் சான்றிதழ் இலவசம்
SAAMSON
077 621 4567
021 320 3313



கபடியில் தேசியத்தில் சாதித்த வீர, வீராங்கனைகளுக்கு

# நேற்று பெருமெடுப்பில் கௌரவம்

யாழ்ப்பாணம், செப். 16

பாடசாலைகளுக்கு இடையிலான தேசியமட்ட கபடித் தொடரில் 15வயது ஆண்கள் பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற கிளிநொச்சி சிவநகர் அ.த.க.பாடசாலை அணிக்கும் 19வயதுப்பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற கிளிநொச்சி இந்துக்கல்லூரி அணிக்கும் நேற்று மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

முதலாவதாக முறிகண்டி பிள்ளையார் ஆலய முன்றிலிருந்து கிளிநொச்சி கல்வி வலய பணிமனை வரை சாதானையாளர்கள் அழைத்து வரப்பட்டு கிளிநொச்சி கல்வி வலய பணிமனை மண்டபத்தில் பணிப்பாளர் முருகவேள் தலைமயில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. கௌரவிப்பு நிகழ்வில் கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை ஆகிய கல்வி கோட்ட அதிகாரிகள் மற்றும் பிரதி கல்வி பணிப்பாளர்கள், உதவிக் கல்வி பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இரண்டாவதாக கிளிநொச்சி மாவட்ட செயலகமும், கிளிநொச்சி மாவட்ட பிரசைகள் குழுவினரும் இணைந்து சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது. இக் கௌரவிப்பில் கிளிநொச்சி பிரதன வீதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலய முன்றிலில் இருந்து சாதனையாளர்கள் கிளிநொச்சி மாவட்ட செயலகம் வரை அழைத்து வரப்பட்டு கிளிநொச்சி மாவட்டசெயலக மண்டபத்தில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக கிளி. அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்துகொண்டார்.

மூன்றாவதாக இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வு உருத்திரபுரம் உழவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்பட்டது. கழகத்தலைவி செல்வி ஜனகாவின் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இக்கௌரவிப்பு நிகழ்வில் வடமாகாண கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் குருகுலராசா கலந்துகொண்டு வீரர்களுக்கு தனது கௌரவிப்பை வழங்கினார்.

15 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான கபடித் தொடரில் தங்கம் வென்ற பண்டத்தரிப்பு யசிந்தா பாடசாலையின் வீராங்கனைகளும் நேற்று கல்லூரிச் சமூகத்தினரால் கௌரவிக்கப்பட்டனர்.

இக் கௌரவிப்பு நிகழ்வுகள் கல்லூரியின் அதிபர் அருட் சகோதரி மேரி லாசரின் தலைமையில் நடைபெற்றன.(ம-23)

Belarusian State MEDICAL university Minsk
Gomel State Medical University
STUDY MEDICINE IN BELARUS



BECOME A WORLD CLASS DOCTOR
DOCTOR OF MEDICINE (MD)
FREE TWO WAY AIR TICKET
RECOGNITION :
SLMC - Sri Lanka | GMC - UK
AMC - Australia | ECFMG - USA | WHO
- 6 Years Duration
- English Medium Education
- Very Affordable Course Fee
- Arrangements for Parents to Go With Students
BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road, Jaffna. | Tel.: 021 221 9910
E-mail: info@bcas.lk | Web: www.bcas.lk
For Details 0777 102 131
16 YEARS
COLOMBO | MT. LAVINIA | KANDY | KURUNEGALA | BATTICALOA | AMPARA | JAFFNA | QATAR

A/L தொழிநுட்பப்பிரிவு
ஆரம்பம் :- 17.09.2015 4.00 pm
வியாழக்கிழமை
★ விஞ்ஞானத்துக்கான தொழிநுட்பம்
இரசாயன இயக்கவியல்
(வியாழன், வெள்ளி - 4.00 pm - 5.30 pm)
by R. Ramanan (B.Sc in Agric/MBA (pera)
★ பொறியியல் தொழிநுட்பம்
கட்டட நிர்மானிப்பு
(செவ்வாய், புதன் - 4.00 pm - 5:30 pm)
by Eng. S.Sutharshan
(B.Sc in Eng./PGDM/PGD in Structural Analysis)
★ உயிர்முறைகள் தொழிநுட்பம்
நில அளவையியலும் பட்டங்காணலும்
(சனி, ஞாயிறு - 4.00 pm - 5.30 pm)
by Pon. Sivakumar (B.Sc in Agric)
யூனிவேர்சல்
கந்தர்மடம்
Hotline:- 0775 344 669

# ஜோகோவிக் ஐந்தாமிடம்

அமெரிக்க ரென்னிஸ் தொடரில் கிண்ணத்தைக் கைப்பற்றிய காரணத்தினால் அதிக சர்வதேச கிண்ணத்தைக் கைப்பற்றிய வீரர்களின் வரிசையில் ஐந்தாவது இடத்துக்கு முன்னேறியுள்ளார் ஜோகோவிக்.

இந்தப்பட்டியலில் ரோஜர் பெடரர் 17 கிண்ணங்கள் வென்று முதலிடத்திலும், சாம்பிராஸ், நடால் இருவரும் தலா 14 கிண்ணங்கள் வென்று இரண்டாவது இடத்திலும், எமெர்சன் 12 பட்டங்களுடன் மூன்றாவது இடத்திலும், ரோட் லாவெர், ஜோன் போர்க் இருவரும் தலா 11 கிண்ணங்களுடன் நான்காவது இடத்திலும் உள்ளனர். பத்தாவது கிண்ணத்தை வென்ற ஜோகோவிக் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.09.2015 இல்

உலக வரலாற்றில் காணப்பெறும் பெரும் இயக்கங்கள் எல்லாம் உற்சாகத்தின் உறுதியான வெற்றிச் சின்னங்களே.

— எமர்சன்.


புதன் பொய்கை

உதயன்

16 செப்ரெம்பர் 2015 புதன்கிழமை


# யாழ்.மண்ணில் சர்வதேச திரைப்படவிழா


சந்தித்தவர்கள்
தட்சா ஜோ, செ.ஷேபா


யாழ்ப்பாணத்தின் முதலாவது சர்வதேச திரைப்பட விழா ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் முதல்முறையான நடைபெறும் யாழ்ப்பாண சர்வதேச திரைப்பட விழா என்ற நிகழ்வுக்கு இயக்குநராகச் செயற் படுகிறார் அனோமா ராஜகருணா. இவர் "அஜெண்டா 14" என்ற இந்த சினிமா நிறுவனத்தின் இயக்குந ருமாவார். நடைபெற்றுக்கொண்டிருக்கும் விழாவுக்கு மத்தியிலும் 'உதயன்' பத்திரிகைக்குத் தனது நேர் காணலை வழங்கியிருந்தார்.

எவ்வித பதட்டமும் இல்லாமல் சற்று மகிழ் வோடு தமது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார். சினிமா என் பது ஓர் ஊடகம். ஒரு தகவலை அனைத்து மட்டத்தின ருக்கும் கொண்டு செல்லக்கூடிய சாதனம். இங்கு கதை மற்றும் வசனங்கள் மூலம் ஒவ்வொருவரிடமும் ஒரு விடயம் கொண்டு சேர்க்கப்படுகின்றது. ஒவ்வொரு விடயத்தையும் வித்தியாசமான முறையில் வெளிப் படுத்தவல்லது இந்தச் சினிமா. யாழ்ப்பாணத்தில் சர்வதேச சினிமா விழா நடைபெறுவது இங்குள்ள கலாசாரங்கள் பற்றிய சரியான பிரதிபலிப்பை சர்வ தேச ரீதியில் கொண்டுசெல்லும்–என்றார்.

### அனோமாவின் மனதில்..

சினிமா என்பது வியாபார நோக்கில் அமையவேண் டும் என்றில்லை. நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்தத் திரைப்பட விழா சர்வதேச திரைத்துறையின் பார்வையை இங்கு ஈர்க்கவல்லது. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் இந்த விழா துறைசார்ந்து உறுதியான ஓர் அத்திபாரமாக அமைய வேண்டும். இப்படியான நிகழ்வுகள் மூலம் துறைசார்ந்தோர் அனைவரும் சந்திக்கும் வாய்ப்புக்கள் உருவாக்கப்படுகின்றன. ஆர்வ முள்ள இளம் சமுதாயத்துக்கு வாய்ப்புக்களை உரு வாக்கும். யாழ்ப்பாணத்தில் இது புதிய செயற்றிட்டம். இங்குள்ள படைப்பாளிகளின் திறன்கள் உலகளவில் கொண்டுசெல்லப்படவேண்டும் என்பது அனோமா விடம் ஆழப்பதிந்த விடயங்கள்.

### வடபகுதியின் சினிமாத்துறை..

பொதுவாக பலரது நினைப்பு என்ன வென்றால், இலங்கையில் தமிழ் சினிமா இல்லை என்பதுதான். அதா வது இலங்கையில் தயாரிக்கப் பட்ட தமிழ் மொழிப் படைப்புக் கள் வெளிவரவில்லை என்பது தான். இதற்கு முக்கிய காரணங் களில் ஒன்று இலங்கையின் சிங் கள சினிமாவின் ஆதிக்கம். அது மட்டுமன்றி தென்னிந்தியாவில் இருந்து வெளிவரும் திரைப் படங்கள் திரையரங்குகளை நிறைப்பது மற்றுமொரு கார ணம். ஓர் இயக்குநராக எனக் குத் தெரியும் தமிழ் மொழி மூலப் படைப்பாளிகள் பலர் உள்ளனர். அவர்கள் திற மையாளர்கள் என்பதும் தெரி யும். ஆனால் வெளியு லகுக்கு அவர்களது

> ஒரு விழாவின் இயக்குநராக என்னால் தற்பொழுது எதுவும் கூறமுடியாது. இந்த விட யத்தில் மக்கள் என்ன முடிவைக் கொடுக்கி றார்களோ அதை ஏற்றுக்கொள்வேன். என் னைப் பொறுத்தவரை இந்த விழாவின் ஊடாக மக்களுக்கு நல்ல படங் களை வழங்க வேண்டும்.

படைப்புக்கள் செல்லவில்லை. திரைப்படம் என்பது குறுகிய அல்லது நீண்ட ஆவணப்படுத்தலாகக் கூட இருக்கலாம். யாழ்ப்பாணத்தில் ஏராளமான கதைகள் உள்ளன. அவற்றை எப்படி சினிமாவுக்குள்ளால் வெளி யில் கொண்டுவரவேண்டும் என்பது தொடர்பில் கலைஞர்கள் பயிற்றுவிக்கப்படவேண்டும். அதாவது துறைரீதியில் பயிற்றுவிக்கப்பட வேண்டும். யாழ்ப்பா ணத்தில் தென்னிந்திய திரைப்படங்களின் ஆதிக்கத் தால் இங்குள்ளவர் களின் தயாரிப்புக்கள் பின்தள்ளப் படுகின்றன. அதுமட்டுமன்றி இங்கிருந்து வெளி வரும் படைப்புக்கள் கூட தென்னிந்திய திரைப்படங்களின் சாயலை வெளிப்படுத்துகின்றன. அதனைத் தவிர்த்து யாழ்ப்பாண மண்வாசனை பிரதிபலிக்கப்படவேண் டும். அப்போதுதான் குறித்த படைப் புக்கள் நிலைத்து நிற்கும் என்பது அனோமா வட பகுதி சினிமா தொடர்பில் பதிவு செய்தவை.



### யாழ்ப்பாண சர்வதேச விழாவில் சவால்கள்..

யாழ்ப்பாணத்தில் சர்வதேச திரைப் படவிழா ஆரம் பிக்கப்பட்டுள் ளது.



## இயக்குநர் அனோமாவுடனான சந்திப்பு

ஆரம்பிக்க முன்னர் சில சவால்களை எதிர்கொண் டேன். விழாவின் இயக்குநரான நான் மட்டுமன்றி எனது குழுவினரும் சவால்களைச் சமாளிக்க அரும்பாடுபட் டோம். குறிப்பாக திரைப்படங்களைக் காட்சிப்படுத் துவது தொடர்பில் சவால்கள் ஏற்பட்டன. இடவசதிகள் தொடர்பில் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. திரையரங்குகளின் இடவசதி, நூலகத்தின் சூழல் தொடர் பில் சில தடைகளைச் சந்தித்தோம். அதுமட்டுமன்றி யாழ்ப் பாணத்தில் இது முதல் தடவை என்பதால் மக்கள் வருகை என்பது சவாலாகத்தான் இருக்கும். விழா தொடர்பான செய்திகளை மக்களிடம் கொண்டு சேர்க்கவேண்டும்– என்றார்.

### என்னைக் கவர்ந்தவை..

ஒரு விழாவின் இயக்குநராக என்னால் தற் பொழுது எதுவும் கூறமுடியாது. இந்த விட யத்தில் மக்கள் என்ன முடிவை கொடுக்கிறார்களோ அதை ஏற்றுக்கொள் வேன். என்னைப் பொறுத்தவரை இந்த விழாவின் ஊடாக மக்களுக்கு நல்ல படங்களை வழங்க வேண் டும். இவை தவிர எவரையும் எந்தப் படைப்பையும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. பக்கச் சார்பாகவும் செயற்படவில்லை.

### இளம் கலைஞர்களுக்கு..

சினிமா ஒரு வித்தியாசமான ஊடகம். இது ஒரு நீண்ட பயணம். இந்தப் பயணம் தொடர் பில் படைப்பாளிகள் மத்தியில் தெளிவு இருக்கவேண்டும். என்ன செய்யப் போகிறீர்கள்? எப்படிப் படைக்கப்போகிறீர்கள் என்ற தெளிவு அவசியம். யாழ்ப்பாணத்தில் வெவ்வேறான கதைக்களங்கள் உள்ளன. நிறைய விடயங்கள் உள் ளன உலகத்துக்குச் சொல்வதற்கு. அது சரியானமுறை யில் கூறப்படவேண்டும். அதற்கான முறையில் படைப் பாளிகள் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அவ்வாறான தொரு நிலையில் துறை சார்ந்த வெற்றிக்குக் காரண மாக அமையும்.

### சினிமாவில் யாழ்ப்பாணத்துப் பெண்கள்..

ஒரு பெண்ணாக இந்தக் கேள்வியை நான் எதிர்கொள் கிறேன். இது ஒரு பிரச்சினை. யாழ்ப்பாணத்தில் மட்டு மன்றி உலகளவிலும் பேசப்படும் விடயம் இது. ஒரு சில பெண்கள் தான் கமராவுக்குப் பின்னால் நின்று சாதித் துள்ளனர். இந்தியாவிலும் இந்த நிலை உள்ளது. யாழ்ப் பாணத்தைப் பொறுத்தவரை சினிமாவில் பெண்களைப் பார்க்கின்றேன். ஆனால் அவர்களின் சாதனைகளின் அளவு தொடர்பில் சொல்லத் தெரியவில்லை. பெண்களும் பயிற்று விக்கப்பட்டு அவர்களுக்கான களங்கள் அமைக் கப்பட வேண்டும் – என்றார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவிலைப் பெருமைப்படவைத்த வயலின் வித்துவான்– இராதாகிருஷ்ணன்



> தமிழையும் சைவத்தையும் வளர்க்க அப்போது இயங்கிய மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கமும் அயராது பாடுபட்டது. கோயிலிலும், பாடசாலையிலும் பல்வேறு சமய இசை நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுவது வழக்கம்.

இணுவையூர் சிதம்பர திருச் செந்திநாதன்

மருதனார்மடச் சந்தியில் உள்ள பல்லப்ப வைரவர் கோயில் முன்னால் இருந்த அந்தப் பழம் பெருமை மிக்க கிணறு காணாமற் போய் விட்டது. அவ்வாறே இணுவில் ஆஸ்பத்திரிக்கு அண்மையில் சிவ காமி அம்மன் கோயிலுக்குச் செல்லும் வீதியின் முகரியில் இருந்த புளியமரமும் அதைத் தொட்டு வழக்கில் இருந்த புளியடி என்ற சொல்லும் அழிந்து போய் உள்ளது. அதேபோல் இணுவிலில் புகழ் பூத்த வயலின் வித்துவான் இராதாகிருஷ்ணனும் மறைந்து போய் விட்டார்.

முன்னைய இரண்டும் எங்கள் மண்ணின் மைந்தர்களால் செயற் படுத்தப்பட்டவை. பின்னையது இயற்கை தன் பங்குக்கு எடுத்துக் கொண்டது.

இணுவிலின் பெருமைகள் பல. சைவமும் தமிழும், நாடகமும் கூத்தும், ஏனைய கலைகளும் நீக்கமற நிறைந்து வளர்ந்த பேரூர்.

ஒழுங்கைக்கு ஒழுங்கை அம்மனாகவும், முருகனாகவும், பிள்ளையாராகவும் கடவுளர்கள் கொலுவிருந்து அயலையும் சமயத்தையும், பண்பாட்டையும் வளர்க்கக் காரணமாயிருந்தனர்.

நாடகமும், கூத்தும், காவடியும், மேளமும், நாதஸ்வரமும் வயலின் போன்ற இதர வாத்திய இசைகளும் தலைநிமிர்ந்து வளர இணுவிலின் பண்பாட்டுச் சூழலும் மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகளும் அடிகோலின.

இணுவில் புகையிலை, இணுவில் கிழங்கு என்று சொல்லும்போது எவ்விதம் பெருமையும் தலை நிமிர்வும் ஏற்படுகின்றதோ, அவ்விதம் தான் இணுவிலில் வளர்ந்து விழுது விட்டு சர்வ உலகிலும் வியாபித்து, சிறப்பும் எழுச்சியும் பெற்ற இயல் இசை நாடகக் கலைஞர்களை பெரிதாகப் பட்டியல் இட முடியும்.

வாழும் பொழுது சிறப்புடன் வாழ்ந்து, மறையும் போதும் எழுச்சியுடன் மறைந்த இணுவில் கலைஞர்களில் வயலின் வித்துவான் உருத்திராபதி இராதாகிருஷ்ணன் தனித்துவமானவர்.

எவ்விதம் தவில் வித்துவான் தெட்சணாமூர்த்தி, என்.ஆர். சின்ன ராசா, கோவிந்தசாமி, வீரமணி ஐயர் போன்றோர் தனித்துவமும் சிறப்பும் பெற்றார்களோ, அவ்விதமான ஓர் உன்னதமான நிலையில் இருந்தவர் இராதாகிருஷ்ணன்.

எனது நினைவு தெரிந்த சிறுவயதில் 1960களில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக் கல்லூரியும், சித்தி விநாயகர் கோயிலும் மறக்க முடியாத இடங்களாகும். எங்கள் தகப்பனார் அங்கு மாவட்டப் பதிவுகாரர் அலுவலகத்தில் கடமை புரிந்தார்.

தமிழையும் சைவத்தையும் வளர்க்க, அப்போது இயங்கிய மன்னார் இந்து சமய வளர்ச்சிச் சங்கமும் அயராது பாடுபட்டது. கோயிலிலும், பாடசாலையிலும் பல்வேறு சமய இசை நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுவது வழக்கம். குறிப்பாக நவராத்திரி தினங்கள் எழுச்சி மிக்க தினங்களாகும்.

தவில் வித்துவான் தெட்சணாமூர்த்தி, நாதஸ்வர வித்துவான் கே.ஆர். சுந்தரமூர்த்தி, தவில் வித்துவான் கே.பி. புண்ணியமூர்த்தி போன்றோர் அங்கு அடிக்கடி வருவார்கள்.

இவர்கள் எல்லாம் எனது தகப்பனாரின் இளம் பராயத்துத் தோழர்களாக இருந்தபடியால், இவர்கள் மன்னாருக்கு வந்தால் எங்கள் வீடு அமளிப்படும். பெரும்பாலும் எங்கள் வீட்டில்தான் அவர்கள் தங்குவார்கள். பிறகென்ன, எனது தகப்பனார் பாட அவர்கள் தாளம் போட ஓர் அற்புதமான உலகம் அங்கு படைக்கப்படும்.

இவ்வாறான நிகழ்வுகளின் பின்னால் எனது தகப்பனாரினால் மன்னாருக்கு அழைத்து வரப்பட்டவர்தான் வயலின் வித்துவான் உ.இராதாகிருஷ்ணன்.

இராதாகிருஷ்ணனின் தகப்பனார் உருத்திராபதி, எனது தகப்பனாருக்கு மிகவும் நெருக்கமானவர். அதைவிட அவரும் ஓர் அற்புதமான வயலின் வித்துவான். அந்தப் பெரிய வித்துவானின் வாரிசாக வந்த இராதாகிருஷ்ணன் எப்படிச் சோடை போவார்.

இராதா" என அப்பாவால் அன்பாக அழைக்கப்பட்டவர். அப்போது இளைஞராக இருந்த இராதாகிருஷ்ணன் அப்பாவின் கதாப்பிரசங்கம் சிலவற்றுக்கு வயலின் வாசித்துச் சிறப்புச் செய்தார்.

ஒரு தடவை எங்கள் வீட்டில் நடந்த நவராத்திரி பூசையின்போது இராதாகிருஷ்ணன் சிறிது நேரம் வயலின் வாசித்து எங்களையும், நாங்கள் இருந்த அரச விடுதியின் அயலில் இருந்தவர்களையும் மெய்மறக்கச் செய்தார்.

காலம் வெகு வேகமாகச் சுழன்றபோது அந்த அற்புதமான கலைஞன் சர்வவியாபகமாக வியாபித்து ஒரு மாபெரும் வயலின் கலைஞராகத் தலைநிமிர்ந்து நின்றபோதுதான் அவரை மீண்டும் சந்திக்கக் கூடியதாக இருந்தது.

காலச்சூழலில் இருபது வருடங்களுக்கு மேலாக அவரைச் சந்திக்க முடியவில்லையெனினும் பின்னர் கண்டபோது உயர்ந்து நின்ற அவரை வியப்புடன்தான் பார்க்க முடிந்தது. அதே பழைய அன்புடனும் மாறாத புன்னகையுடனும் அவர் உரையாடியதுதான் இப்போது மிச்சமாக உள்ளது.

நாற்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக இசைச் சாம்ராஜ்யம் நடத்திய அவர் இரண்டாயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட மேடைக் கச்சேரிகளைக் கண்டவர் என்பது பிரமிப்பை ஊட்டும் ஒரு செய்திதான்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலும் சரி இலங்கையின் ஏனைய இடங்களிலும் சரி, எந்தப் பிரல்யமான இசை விற்பன்னர்களின் இசைக் கச்சேரி நடந்தாலும், அந்தக் கச்சேரியில் இராதாகிருஷ்ணன்தான் வயலின் வாசிப்பது வழக்கமாக இருந்தது என்பதிலிருந்து அவரது சிறப்பை யாவரும் உணர்ந்து கொள்ள முடியும்.

ஒவ்வொரு பாடகருக்கும் ஒவ்வொரு விதமான பாணி இருக்கும். அவ்வாறான அவர்களின் பாணியில் உள்ள சிறப்புக்களையும், பலவீனங்களையும் சரியாக விளங்கிக் கொண்டு சோடை போகாமல் வயலின் வாசித்து பாடகர்களையும் காப்பாற்றி, இசைக்கச்சேரிகளையும் சிறக்க வைத்த பெருமை இராதாகிருஷ்ணனுக்கு இருந்ததாக பலரும் சொல்லக் கேள்விப்பட்டுள்ளோம்.

இத்தகைய சிறப்பினால்தான் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வருகைதந்த மாபெரும் இசை மேதைகளான சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, தஞ்சாவூர் ரி.எம்.தியாகராஜா, எஸ். கல்யாணராமன், மதுரை சோமு, மகாராஜபுரம் சந்தானம் போன்றோரின் கச்சேரிகளுக்கும் வயலின் வாசித்து மண்ணின் பெருமையை நிலை நாட்டியவர்.

அவர் தன்னை மாத்திரம் வளர்த்துக் கொள்ளவில்லை. தனது அடிச்சுவட்டில் தொடர்பணி புரியத் தனது பிள்ளைகளை மாத்திரம் கலைஞர்களாக உருவாக்கவில்லை.

எண்ணற்ற பல வயலின் கலைஞர்களை உருவாக்குவதற்குத் தன்னாலான பணியைச் செய்து வந்தார். இறுதிவரை அதற்கான முயற்சியில் இருந்தவர்.

அதன் காரணமாக இசை உலகம் இருக்கும் வரை அவர் நாமம் வாழும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 50 வருடம் பழைமையான அம்மன்கோயில் விதானத்து ஓவியங்கள்



வல்வெட்டித்துறை என்பது இலங்கையின் வட பகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண தீபகற்பத்தின் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ள மிகப்பழைய நகரமாகும். இலங்கையின் வடகோடியில் வல்வெட்டித்துறை அமைந்திருப்பதால், வல்வெட்டித் துறையானது பாக்கு நீரிணையையும் தமிழ் நாட்டின் தென்கோடியையும், தன் அருகில் கொண்டு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

**து.துசியந்தன்**
*சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்(சித்திரம்)*
*வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்*



விதானத்து ஓவியம் என்றால் ஞாபகத்துக்கு வருவது 15ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் உரோம் சிஸ்ரைக் தேவாலயத்தின் உட்கூரையில் (விதானத்தில்) உலகப் புகழ்பெற்ற மைக்கல் அஞ்சலோ என்ற ஓவியரால் ஒரு கையில் விளக்கையும் மறுகையில் தூரிகையும் கொண்டு வரையப்பட்ட ஓவியமாகும்.

யாழ்ப்பாணத்தைப் பொறுத்த வரையில், சுவரோவியங்களே மிகக் குறைவாக காணப்படுகின்ற நிலையில் விதானத்து ஓவியங்கள் மிக அரிதாகவே காணப்படுகின்றன. அவற்றிலும் இன்று எஞ்சியுள்ள ஓவியங்கள் வல்வெட்டித்துறை அம்மன் கோயிலில் காணப்படுகின்றன.

சுவரோவியங்களை வரைவதைக் காட்டிலும் விதானத்து ஓவியங்கள் வரைவது கடினமாகும். அண்ணாந்து பார்த்த நிலையில் பிரமாண அளவுத்திட்டங்களை அனுசரித்து வரைவது மிகக் கடினமானதாகும். ஆனாலும் இங்கு காணப்படும் விதானத்து ஓவியங்கள் அழகும் நேர்த்தியும் மிக்கதாக வரையப்பட்டுள்ளமை சிறப்பு மிக்கதாகும்.

இலங்கை கலைப்படைப்புக்களின் உருவாக்கத்தில் இந்திய கலைஞர்களின் பங்களிப்பு காலத்திற்கு காலம் கிடைத்துள்ளது. வல்வெட்டித்துறை அம்மன் கோயில் விதானத்து ஓவியங்களையும் இந்தியாவில் இருந்து வருகைதந்த ஓவியர் நரசிம்மன் தலைமையிலான குழுவே வரைந்ததாகவும் இவை சுமார் 50 வருடங்கள் பழைமையானவை எனவும் அவ்வூர் மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

வல்வெட்டித்துறைப் பகுதியின் பழைமையும் மகிமையும் மிக்கதாக இந்த அம்மன் கோயில் கருதப்படுகிறது. இந்தக் கோயிலின் வாயில் மண்டபத்தில் உட்கூரையிலே மனதைக் கவரும் விதத்தில் ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன. விதானத்தின் மேற்பரப்பானது செவ்வக வடிவ பகுதிகளாக பிரிக்கப்பட்டு அவற்றினுள்ளே சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. ஓவியத்தின் கீழ்ப்பகுதியில் அந்த ஓவியத்தின் தலைப்பும்(விடயமும்) எழுதப்பட்டுள்ளது. இது சிங்கள பௌத்த ஓவியரான எம்.சார்ரிலிஸ் என்பவரது பன்சல ஓவியங்களை நினைவுபடுத்துகிறது. விதானத்தின் விளிம்புப் பகுதியில் வரையப்பட்டுள்ள லியவெல எனப்படும் கொடியிலை அலங்காரம் விதானத்தின் அழகை மேலும் அழகுபடுத்திக் காட்டுகிறது.

இந்த விதானத்து ஓவியங்களின் விடயப்பொருளை நோக்குமிடத்து, அவை இந்த ஆலயத்தின் வரலாற்றையும், புராணக் கதைச் சம்பவங்களையும் சித்திரிப்பதாகக் காணப்படுகிறது.

வல்வெட்டித்துறை என்பது இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ள யாழ்ப்பாண தீபகற்பத்தின் வடகிழக்குத் திசையில் அமைந்துள்ள மிகப்பழைய நகரமாகும். இலங்கையின் வடகோடியில் வல்வெட்டித்துறை அமைந்திருப்பதால், வல்வெட்டித்துறையானது பாக்கு நீரிணையையும் தமிழ் நாட்டின் தென்கோடியையும், தன் அருகில் கொண்டு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

இந்துத் தத்துவத்தை மிகச் சிறப்பாகவும் இறுக்கமாகவும் கடைப்பிடிக்கும் வல்லையில் பெரிய ஆலயங்களில் ஒன்றான வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலின் தீர்த்தத்திருவிழாவன்று நிகழும் இந்திர விழா இலங்கையில் மிகப் பிரசித்தமானதும் அதிக பொருள் செலவில் எடுக்கப்படும் ஒரு விழாவாகும்.

வல்வெட்டித்துறை அம்மன் கோயிலின் விதானத்து ஓவியங்களில் இந்தக்கோயில் உருவான செய்தி இங்கு சித்திரமாக வரையப்பட்டுள்ளது. இதில் அம்மன் (அம்மன் உருவகப் படுத்தப்பட்டிருக்கிறார்) இந்தியாவில் இருந்து (கோடியாக் கரையில்) புறப்படுதல், வல்வெட்டித்துறையை வந்தடைதல், அம்பாளுக்கு கோயில் கொட்டகை அமைத்தல், கோயில் நிர் மாணித்தல் போன்ற சம்பவங்கள் ஓவியங்களாக வரையப்பட்டுள்ளன.

புராணக்கதைகளைக் காட்டும் ஓவியங்களில் பெரும்பாலும் விநாயகர், முருகன் தெய்வங்களுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகிறது. இதில் கதைச் சித்திரிப்பானது, மிகத் தெளிவானதாக காணப்படுகிறது. தூரநோக்கு உத்திமுறை சிறப்பான முறையில் கையாளப்பட்டுள்ளது. இந்த ஓவியங்களில் நாக உரு அசுரனின் வயிற்றைப் பிளந்து கொண்டு விநாயகர் வெளிப்படும் தன்மை மிகச் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது.

இங்கு வரையப்பட்டுள்ள மற்றுமொரு சிறப்பான புராணக் கதை ஓவியம் சபலா சூர சம்ஹாரம் ஆகும். இதில் காணப்படும் சபலா சூரனின் வடிவம் ஒரு கற்பனைப் பறவை வடிவத்தில் காட்டப்பட்டுள்ளது. இந்தப் பறவை வடிவம் இரு கழுகுத் தலைகளுடனும் ஒரு பறவை உடலுடனும் காணப்படுகிறது. இந்த வடிவம் இருதலைப்பட்சி எனப்படும். இது எம்பக்கே தேவாலயத்தில் காணப்படும் கற்பனைப் பிராணி வடிவத்தை ஒத்துள்ளது. இது இந்தக் கலைஞனின் திறமையை எடுத்துக் காட்டுகிறது. இந்த இருதலைப்பட்சி வடிவமானது, இந்தியாவில் விஜயநகர நாயக்கர் காலத்து சிற்பங்களில் எடுத்தாளப்பட்ட வடிவமாகும். இந்த வடிவத்தை சூரனின் வடிவமாக பயன்படுத்தியமை மிகவும் வித்தியாசமான சித்திரிப்பையும், அப்படைப்பின் பெறுமதியையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

யாழ்ப்பாணத் தமிழர்களின் பொக்கிசமாக கிடைக்கப்பெற்ற இந்த ஓவியங்களைப் பாதுகாப்பது எமது எல்லோரினதும் கடமையாகும். இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோயில், நல்லூர் கைலாச பிள்ளையார் கோயில் ஓவியங்கள் இலங்கை சித்திரபாட தரம் 10 கலைத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டமையால், தென்னிலங்கையில் இருந்து பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் வருகை தந்து பார்வையிடத் தொடங்கியிருக்கிறார்கள். இதேபோன்று இந்தக் கோயில் விதானத்து ஓவியங்களும் க.பொ.த. உயர்தர சித்திரபாட கலைத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்பட இருப்பதால், இதுவும் சுற்றுலாத்தலமாகவும், தமிழர்களின் அடையாளத் தலமாகவும் மாறும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்த மாதம் 4 ஆம் திகதி அவரது நினைவு தினம்

# மறைந்தும் மறையாமல் நிலைத்திருக்கும் பிரம்மஸ்ரீ ஸ்ரீ.கிருஷ்ணானந்த சர்மா

நல்லூர் சிவன் ஆலயம் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களின் வழி காட்டலில் பிரம்மஸ்ரீ ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்று முதல் பாரம்பரிய குருமரபில் நல்லூர் சிவன் கோயிலின் ஆதீன கர்த்தாவாக இருந்து ஆலயப் பணிக் காகத் தன்னை முழுமையாக அர்ப் பணித்து செயலாற்றியவர்.

அன்பு, அறிவு, அடக்கம், ஆற்றல், இரக்கம், கருணை, குருபக்தி, பொறுமை முதலான பல குணாதிசயங்கள் கொண்டு, தமது வாழ்க்கையை இறைபணிக்கே அர்ப் பணித்த பெருமகான் அமரர் பிரம்மஸ்ரீ. ஸ்ரீ. கிருஷ் ணானந்த சர்மா, மறைந்தும் மறையாமல் என்றும் எமது நினைவில் நிற்கின்றார். அவரது முதலாம் ஆண்டு நினைவு நாள் 04. 09. 2015 ஆகும்.

யாழ். பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதத் துறையில் முதுநிலை விரிவுரையாளராகவும், நல்லூர் ஸ்ரீகம லாம்பிகா சமேத கைலாசநாத சுவாமி கோயில் தேவஸ் தான குருவாகவும், பரிபாலகராகவும் கடந்த முப்பது வருடங்களாக விளங்கிய பிரம்மஸ்ரீ. ஸ்ரீ. கிருஷ் ணானந்த சர்மாவின் வாழ்வு பெரும்பாலும் நல்லூர் சிவன் கோயிலுடன் இணைந்த வாழ்வாகவே அமைந் தது.

**இதனை இதனால் இவன் முடியும் என்றாய்ந்து**
**அதனை அவன் கண்விடல்**

எனும் கூற்றுக்கு இணங்க சிறுவயதிலேயே பிரம்மஸ்ரீ. ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மாவின் ஆளுமைகண்டு, இவர் தான் எதிர்காலத்தில் சிறந்த முறையில் பரிபாலனம் செய்யக்கூடியவர் என்பதை உணர்ந்து 1984 ஆம் ஆண்டு ஆலயக் கைங்கரியங்களை மேற்கொள்வதற் காக நல்லூர் சிவன் ஆலயம், பிரம்மஸ்ரீ. பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களின் வழிகாட்டலில் பிரம்மஸ்ரீ. ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மாவிடம் ஒப்படைக் கப்பட்டது. அன்று முதல் பாரம்பரிய குருமரபில் நல்லூர் சிவன் கோயிலின் ஆதீன கர்த்தாவாக இருந்து ஆலயப் பணிக்காகத் தன்னை முழுமையாக அர்ப்பணித்துச் செயலாற்றியவர் அவர். நல்லூர் சூழலிலே கம்பீரமாக பொலிவுற்ற நிலையில் ஆலயம் காட்சி அளிக்கின்ற தென்றால் அதற்கு ஸ்ரீ. கிருஷ்ணானந்த சர்மாவின் தன்னலமற்ற சேவையும் தியாக மனப்பான்மையுமே காரணமாகும்.

ஆலயத்தின் பிரகாரங்கள் கோபுரங்கள், சிற்பங்கள் எனப் பல திருப்பணிகளை மேற்கொண்டது மட்டுமல் லாமல் ஆலயத்தின் நித்திய, நைமித்திய கிரியை களை செயற்படுத்துவதில் கண்ணும் கருத்து மாக இருந்தார். நல்லூர் சிவன் கோயிலில் இடம்பெறும் ஸ்ரீசக்கரபூசை, பிரதோசம், நவ ராத்திரி பூசை, கந்தசஷ்டி பூசை, விழாக்களில் பத்ததி படித்தல், பூசைகள் முதலான கருமங் களை நிறைவேற்றுவதில் மிகுந்த பக்தியுடன் ஈடுபட்டவர். நல்ல ஞான அறிவுடன் விளங்கிய மையினால் பேராசிரியர் பிரம்மஸ்ரீ. கா. கைலாசநாதக் குருக்களின் பேரன்புக்கு பாத் திரமானார். பேராசிரியர் அமரர் கைலாச நாதக் குருக்கள் உருவாக்கிய மாணவர்களுள் குறிப்பிடக்கூடியவராக விளங்கியவர் ஸ்ரீ. கிருஷ்ணனானந்த சர்மா ஆவார்.

பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள் அவர்களது ஸ்ரீ வித்யா குருகுலத்திலும், சிவஸ்ரீ. தா.மஹாதேவக் குருக்கள் அவர் களது தர்மசாஸ்தா குருகுலத்திலும் நியாய சிரோன்மணி பிரம்மஸ்ரீ. கி. சுப் பிரமணிய சாஸ்திரிகளிடமும் தமது குருகுலக் கல்வியைப் பெற்று சமயத் துறையிலும் புலமைத்துவம் மிக்க வராக வாழ்ந்தார்.

பேராசிரியர் கைலாசநாதக் குருக் களினதும், அவரது சகோதரர் பிரம் மஸ்ரீ. கா. இரத்தின கைலாசநாதக் குருக்களினதும் வழிகாட்டிலில் நல் லூர் சிவன் கோயில் பரிபாலனத் தில் இளம் வயதிலிருந்தே பங்கு கொண்டார். இந்தப் பெரியார் களின் துணையினால் தமது ஆளு மையை வளர்த்துக் கொண்ட பிரம்மஸ்ரீ. ஸ்ரீ. கிருஷ்ணா னந்த சர்மா ஆலய பரிபால னத்தை சிறப்புற வழிநடத் தியதோடு ஆலய திருப் பணிகளிலும் அதீத பங்கு கொண்டார். ஆலயத்தின் இரு இராஜகோபுரங்களையும் நிர்மாணிப்பதில் அவர் ஆற்றிய பணி மிகவும் மகத்தானது. 1988, 2006 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற கும்பாபிஷேகங்கள் இவரது நெறிப்படுத்தும் ஆளுமையை காணக் கூடியன வாக அமைந்தன. இருந்தும் குருக்கள் கிரியை களில் ஏற்படுத்திய நெறிமுறைகள், மரபுகள் யாவும் சிறிதும் மாறுபடாமல் சிறப்பாக பேணி நடத்தி வைத் தமையானது இவரது சிறப்பியல்புகளாகும்.

நல்லூர் சிவாலயத்தில் கிரியைகள், நவராத்திரி சண்டி ஹோமங்கள், அபிஷேக ஆராதனைகள், யந்திர பூசை கள், ஸ்ரீ சக்கர பூசைகள், மகாநவமி பூசைகள் முதலா னவை மந்திர பூர்வமான கிரியா விஸ்தாரத்துடன் பக்தி யுடன் திறம்பட நடத்தி அடியவர்களை அம்பிகையின் அருளுக்கு ஆற்றுப்படுத்தியவர் இவர்.

நவராத்திரிகால மகாநவமி அன்று அவர் தமது துணைவியார் சகிதம் நடத்தும் பல நூற்றுக் கணக்கான சுமங்கலிகள் கலந்து கொள்ளும் சுமங்கலிப்பூசை, குமாரி பூசை என்பன மிகவும் மகத்தான சேவைகள்.

யாழ். பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருத துறையில் அவ ரது கல்விப்பணியினால் சமஸ்கிருதத்தில் மாண வர்கள் நல்ல பயனடைந்தனர். மேலும் தரமான சமஸ்கிருத, தமிழ், மொழி நூல்களைப் பதிப்பித்து வெளியிட்ட பெரு மையும் அவருக்கு உண்டு. வைதீகக் கிரியைகள் தொடர் பான பல நூல்களை பதிப்பித்து வெளியிட்டுள்ளார். மேலும் பேராசிரியர் கைலாசநாதக் குருக்களது ஞாப கார்த்தமாக ஒரு நூலகத்தை உருவாக்கியுள்ளார்.

இவ்வாறு பல்கலைக்கழகக் கல்விப் பணி, ஆலய பரிபால னம், இறைபணி, தேவஸ்தான குருத்துவப் பணி, பதிப் பாசிரியப் பணி, குருகுலப்பணி, சமய சமூகப் பணிகள் எனப் பல்வேறு பணிகளில் தம்மை ஈடுபடுத்தி சைவ உலகுக்கு அரிய தொண்டாற்றிய பிரம்மஸ்ரீ கிருஷ் ணானந்த சர்மா இன்று எம்முடன் இல்லாது விடினும் அவர் விட்டுச் சென்ற மதிப்புமிக்க பணிகள் யாவும் அவரை என்றென்றும் எமது நெஞ்சங்களிலிருந்து நீக்காதிருக்க வைப்பவை அவர் ஆத்மா ஸ்வர்க்கலோகப் பிராப்தி யடைய கமலாம்பிகை சமேத ஸ்ரீ கைலாசநாத சுவா மியை வேண்டுகிறோம்.

இ.குமாரசாமி சர்மா
வண்ணார்பண்ணை

# ஆன்மிக விடுதலைக்குச் செப்பனிடும் வித்தகம்

## சிந்தனை அரங்கு

கே.எஸ்.சிவஞானராஜா

யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைக் கம்பன் கழகம் நடத்தும் சிந்தனை அரங்கானது, இலக்கியங்களை மையமாகக் கொண்டு, அவற்றின் சாரத்தின் வழியே, நிரந்தரப் பேரின் பத்தைத் தரவல்ல ஆன்மிகப் பாதையைச் செப்பனிட்டு, எமக்கு ஆன்ம விடுதலையளிப்பதையே நோக்காகக் கொண்டு தமிழுக்கும், சமயத்துக்கும், இசைக்கும் பெருந் தொண்டாற்றி வருகிறது. சொல்லப்போனால் யாழ்ப்பாணம், இத்தகு வேலைத் திட்டத்தினையே காலத்தின் தேவையாக வேண்டுகிறது.

நடுவர் கம்பவாரிதி இ.ஜெயராஜாவின் தமிழ் ஆழ, அகலத்தை மட்டுமல்ல, சமயத்தின் முகடுகளையும் யாம் உணர்வதற்கு வாய்ப்பாக, இந்த அரங்கு வழிபுரிகிறது. கம்பராமாயணம் மட்டுமல்ல, திருக்குறள், திருமுறை, பாரதியார் பாடல், சமூக வாழ்வு, ஆன்மிக விடுதலை என்று அனைத்திலுமே கற்றூறிய பேராசானே கம்பவாரிதி. இவரின் ஆன்மிகக் கருத்துக்களை இலங்கையும் இந்தியாவும் வரவேற்கின்றன.

முன்னதாக, வள்ளுவநாடு எப்படியாக இருந்தது, எப்படி இருக்கிறது, எப்படி இருக்க வேண்டும் என்பதனை, குறள் காட்டும் அரசனாக, குறள் காட்டும் அமைச்சனாக, குறள் காட்டும் குடிகளாக முறையே எடுத்தியம்பப்பட்டது. திருக்குறள் ஒரு சட்டப்புத்தகம். இறைவனுக்கும் ஒரு நியாயத்தை உரத்துச் சொல்கிறார் வள்ளுவர் பெருமான். அது என்னவெனில்,

**இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்**
**பரந்து கெடுக உலகியற்றியான்**

இரந்து வாழ்கின்ற ஒரு சமூகம் துன்பப்படுமாயின் அந்தச் சமூகத்தைப் படைத்த இறைவனே அவர்களைப் போல வேயழுந்தி துன்பப்படுவானாக. பரந்து கெடுக உலகியற்றியான் என்று குமுறுகின்ற திருவள்ளுவர் காணும் நாடொன்றை நாம் சிருஷ்டி செய்திருக்கிறோமா? என்பதை உலகம் கவனமாகப் பரிசீலிக்க வேண்டும். ஒவ்வொரு வீடும், உண்மையாகவே, பசியின் கொடுமைக்குள்ளாகியிருக்கும் குடும்பங்களை இனங்கண்டு அவர்களுக்கு அன்னதானம் செய்வார்களாக இருந்தால், அதுவல்லவோ கோடி புண்ணியம் என்று சமூகம் புலம்புவது காதில் ஒலிக்கிறது. உண்மைதானே!

கடந்த வித்தகம் சிந்தனை அரங்கில் தேவார முதலிகள் மூவரது ஆன்மிக வாழ்வானது இன்பம் பயப்பனவாய் அமைந்திருந்தது. துன்பத்திலும் இனிக்கும் என்பதான வாழ்க்கை முறையது. துவண்டு போகாமல் மீண்டும் எழுகின்ற சமய வாழ்வது.

**பாலைக் காட்டி ஆட்கொள்ளப்பட்ட**
**நாயனாரின் பாலித்த வாழ்வு;**
**சூலை காட்டி ஆட்கொள்ளப்பட்ட**
**நாயனாரின் சோபித்த வாழ்வு;**
**ஓலை காட்டி ஆட்கொள்ளப்பட்ட**
**நாயனாரின் ஒருமித்த வாழ்வு;**

என முறையே, சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரையும் கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன், வலம்புரி விஜயசுந்தரம், தமிழருவி சிவகுமாரன் ஆகியோர், அவர்களது தேவார, அற்புத, ஆன்மிக வாழ்வுதனைத் தேனாக இனிக்கத் தமிழை அமுதாகக் குழைத் துத் தந்தார்கள். இவ்வாறானதொரு தெவிட்டாத அரங்கு இதற்கு முன்னர் எவராலும் வடிவமைக்கப்படவில்லை.

மூவரிலும் நாவுக்கரசர் பட்ட துன்பம் சொல்லுந்தரமன்று. கற்றூணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சிய போதும் நமச்சிவாய வைத் துணைகொண்டு தெப்பமாக மிதந்தவர். உழவாரத் திருப்பணியின் போது, கல்லையும், பொன்னையும் ஒன்றாகக் கருதி தூர எறிந்து ஆசையையறுத்த சிவநெறியாளன். இவ் வாறானதொரு சந்தர்ப்பம் எமக்கு ஏற்படுமாயின், மண்ணோடு சேர்த்து அள்ளிவிடுவோம். பிறகு என்ன? அந்தக் காணி என்ன பாடுபட்டிருக்கும்?

நாம் எங்கே நிற்கின்றோம் என்பதனை நிறுத்து அளந்து பார்ப்பதற்கு வித்தகம் சிந் தனை அரங்கு வழிசமைக் கும். இதனாலன்றோ கம் பன் கழகம் இயல், இசை எதை எடுத்தாலும் நிரந் தரமான சுகானுப வத்தை அள்ளித்தரு கிறது. அதனால் நாம் ஆன்ம விடுதலை யடைகிறோ மல்லவா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறியாயான்

# பரிசளிப்பு

## - ஒரு நகைச்சுவைச் சம்பாஷணை





**(மேடையில்) அறிவிப்பாளர் - இது வரை சிறுகதைப் போட்டி முடிவுகளை வெளியிட்டு, பரிசுகளையும் வழங்கிக் கௌரவித்த அம்மையார் அவர்களுக்கு நன்றி. அடுத்ததாக ஓவியப் போட்டி முடிவுகளை வெளிப்படுத்தி, அதற்கான பரிசுகளையும் வழங்கிக் கௌரவிக்க நாம் அழைப்பது**

**பொன்னம்பலம்:** (அவசரமாக மேடையேறி) : தம்பி தம்பி, மன்னிக்கவேணும், ஓவியப் போட்டி என்ற உடனை என்னையறியாமலே இஞ்சை வந்திட்டன். மேடையேறிவிட்டன்..

**அறிவிப்பாளர்:** இது மாணவர்களுக்கு மட்டும். இனி அடுத்த முறை திறந்த போட்டியாக உங்களுக்கும் நடத்தப்படும். இப்போதைக்குப் பாடசாலை மாணவர்களுக்கு மட்டும்.

**பொன்னம்பலம்:** நானும் தம்பி மாணவர்களுக்கான போட்டி பற்றித்தான் கதைக்க வந்தனான்.என்ரை பேரப் பிள்ளையள் அற்புதமாக ஓவியம் வரையுங்கள். அதுகளையும் நீங்கள் ஒருக்கால் பார்த்து, பரிசு கொடுக்க வேணும்.பாராட்ட வேணும்.

**அறிவிப்பாளர்:** போட்டியெல் லாம் முன்னமே முடிஞ்சிட்டுது. இன்றைக்கு பரிச ளிப்பு நிகழ்வு.

**பொன்னம்பலம்:** போட்டியெல்லாம் முடிஞ்சுதோ?...

**அறிவிப்பாளர்:** ஓம்! போட்டி யெல்லாம் முடிஞ்சுது. இன்றைக்குப் பரிசளிப்பு.

**பொன்னம்பலம்:** அப்ப இனிப் பங்குபற்ற ஏலாதோ?

**அறிவிப்பாளர்:** இல்லைஇனி 31 ஆம் ஆண்டுப் போட்டியிலைதான் பங்குபற்றலாம்.

**பொன்னம்பலம்:** 2 ஆயிரத்து முப்பத்தொன்றிலேயோ?... தம்பி நான் 1931 இல பிறந்தனான். 2031 வரை இருப்பனோ தெரியாது.

**அறிவிப்பாளர்:** இது எங்கடை 30 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய போட்டி இனி 31 ஆம் ஆண்டிலும், நடத்துவம்.

**பொன்னம்பலம்:** அப்ப அடுத்த வருசம். அப்ப கட்டாயம் வந்து எங்கடை ஓவியம் பார்ப்பியளோ?

**அறிவிப்பாளர்:** வந்து பார்க்கிறதில்லை

**பொன்னம்பலம்:** என்னதம்பி ஓவியம் வந்து பார்க்க மாட்டியளே?... அப்ப என்ன சுவரோடை பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்து காட்டுறதே? தம்பி நான் ஒரு மன்னன் உமக்குத் தெரியுமோ தெரியாதோ. நான் ஒரு மன்னன். வீடு தேடி வந்து பார்த்துத்தான் விவசாய மன்னன் பட்டம் தந்தவை. கொண்டு போய்க் காட்டுறதில்லை. பிறகு வீட்டுத் தோட்ட மன்னனாகவும், செலக்ற் பண்ணிப் பரிசு பட்டங்கள் தந்தவை. ஒண்டும் கொண்டு போய்க் காட்டுறதில்லை. வந்து பார்த்துத்தான் தீர்ப்பு வழங்கிறவை.

**அறிவிப்பாளர்:** இது அப்பிடியில்லை. விளம்பரப்படுத்துவம். ஓவியம் வரைந்து அனுப்ப வேண்டும். நடுவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.

**பொன்னம்பலம்:** எங்கடை வீட்டுச் சுவருகளிலைதான் என்ரை பேரப் பிள்ளையள் ஓவியம் வரையிறவை. வலு சோக்காக இருக்கும். சோக்காலைதான் வரையிறவை. தம்பி உங்களுக்குச் சொன்னாலென்ன, புது வீட்டுச் சுவரெல்லாம் ஒரே படங்கள், கிறுக்கல்தான். நான் படுகிறபாடு.

**அறிவிப்பாளர்:** உங்கடை காலத்திலை நீங்களும் உப்பிடிச் சுவரெல்லாம் கிறுக்கியிருப்பியள்தானே?

**பொன்னம்பலம்:** ஆர் நானோ? நான் ஒரு ஓவியக் காரன்தான் ஆனால் அப்ப வீட்டுச் சுவருகளிலை கீறிறதில்லை.அப்பர் பேரம்பலம் கையை முறிச்சுப் போடுவார். இப்பத்தை பிள்ளையள் மேல கை வைக்க ஏலுமே?

**அறிவிப்பாளர்:** பிள்ளைகள் என்றால் அப்பிடித்தான். சுவரிலை வரையுங்கள். சுவருக்குப் பெயின்ற் அடிச்சு விட்டால் அந்தக் கிறுக்கல்கள் எல்லாம் மறைஞ்சு போகும்.

**பொன்னம்பலம்:** பெயின்ற் அடிச்சு விட்டால் அது காயிறதுக்கு இடையிலை உடனை கிறுக்குதுகள், வரையுதுகள்.

**அறிவிப்பாளர்:** காயவிட்டு இன்னுமொருக்கால் பெயின்ற் அடிச்சால் கிறுக்கல்கள் மறைஞ்சு போகும். சுவரும் வடிவா இருக்கும்

**பொன்னம்பலம்:** ஏன் தம்பி? ஏதும் பெயின்ற் கடை வைச்சிருக்கிறீரே?

**அறிவிப்பாளர்:** பிள்ளைகள் கிறுக்கத்தான் செய்வார்கள். நாங்கள் தான் அதற்கு ஒரு வடிகால் அமைத்துக் கொடுக்க வேணும். கிறுக்க வேண்டும், படம் வரைய வேண் டும் என்கின்ற உணர்வுகள் ஏற்படு கின்ற போது, ஒரு வரைதற் தாள் மற்றும் வர்ணங்களைக் கொடுத்து, ஓவியம் வரையவிட வேணும். பிள்ளைகளின்ரை ஆளுமை வளர்ச்சி யிலை அது பெரும் தாக்கத்தைச் செலுத்தும். பிள்ளைகள் நன்றாக வருவார்கள். அதனாலதான், பத்திரிகைகள் , சஞ்சிகைகளிலைவர்ணம் தீட்டி மகிழ்வோம், படம் வரைவோம் போன்ற விடயங்களை உள்ளடக்கி மாணவர்களது, உணர்வுகளுக்கு ஓரளவு தீனி போடுகிறார்கள் என்று கூறலாம்.

**பொன்னம்பலம்:** பேப்பரிலை வாற வர்ணம் தீட்டுவோம் பகுதிக்கு என்ரை பேர்த்தியின்ர பேரில படம் கீறி அனுப்புறனாங்கள். அது பத்திரிகைகளிலை வெளிவாறது. பார்த்திருப்பியள்.

**அறிவிப்பாளர்:** நல்லது. என்ன பேரிலை உங்கடை பேர்த்தி படம் வரைஞ்சு அனுப்பிறவ?

**பொன்னம்பலம்:** தம்பி என்ரை பேர் பொன்னம்பலம்.

**அறிவிப்பாளர்:** நான் உங்கடை பேரைக் கேட்கவில்லை. படம் வரைஞ்சு பத்திரிகைக்கு அனுப்புகின்ற பேர்த்தியின்ரை பேரைக் கேட்டனான்.

**பொன்னம்பலம்:** அதைத்தான் சொல்ல வாறன். நீர் சொல்ல விட்டால்தானே?

**அறிவிப்பாளர்:** சொல்லுங்கோ!

**பொன்னம்பலம்:** என்ரை பேர் பொன்னம்பலம். எங்கடை அப்பாவின்ரை பேர் பேரம்பலம்.

**அறிவிப்பாளர்:** பிள்ளையின்ரை பேர கேட்டனான்.

**பொன்னம்பலம்:** அதுதான் சொல்ல வாறன். நீர் விட்டால் தானே.

**அறிவிப்பாளர்:** சரி சொல்லுங்கோ!

**பொன்னம்பலம்:** என்ரை பேர் பொன்னம்பலம். எங்கடை அப்பாவின்ரை பேர் பேரம்பலம். பேரனுக்குத் தன்ரை பேரை வைக்க வேணும் எண்டு என்ரை தகப்பனார் விரும்பியதாலை அவற்றை பேரை – பேரம்பலம் என்கின்ற பேரை– என்ரை மோனுக்கு வைச்சனான். ஓ.. அவ்வளவு நேர்மையான ஆள் நான்.

**அறிவிப்பாளர்:** உங்கடை பேர்த்தியின்ரை பேர் என்ன என்று கேட்டனான்.

**பொன்னம்பலம்:** பார்த்தியோ.. பார்த்தியோ அதைத்தான் சொல்ல வாறன். நீர் சொல்ல விட்டால் தானை?

**அறிவிப்பாளர்:** சரி சொல்லுங்கோ!

**பொன்னம்பலம்:** பேர்த்திக்குப் பேர் பேரம்பலம் தர்ஷ . சுருக்கமாக பேர. தர்ஷ என்று பேர் போட்டு படம் வரைஞ்சு அனுப்புறவ பேர் தரச்சி எண்டுறது எங்கடை பேர்த்திதான்.

**அறிவிப்பாளர்:** அடிக்கடி பத்திரிகையில முதற் பக்கத்தில பார்க்கிறனான். பேரதிர்ச்சி எண்டு வாறது தான். அது உங்கடை பேர்த்தியே? அது சரி படங்களை அவதான் வரைஞ்சு அனுப்புறவவா?

**பொன்னம்பலம்:** ஐயோ தம்பி அதுகளுக்கு அந்தப் பிள்ளையளுக்கு நேரம் எங்கை கிடைக்குது? 2018 ஆம் ஆண்டு பச். ஓ. ஸ்கொலசிப் 2018 இலை எடுக்கிறா. இப்பவே ஸ்பெஷல் கிளாஸஸ். அதாலை நான்தான் படங்களை வர்ணம் தீட்டி, பேர. தர்ஷ பேரிலை அனுப்பிறனான்.

**அறிவிப்பாளர்:** நீங்கள் படங்களைக் கீறிப் போட்டு, பிள்ளையின்ரை பேரிலை அனுப்புறது சரியோ?

**பொன்னம்பலம்:** நான் தம்பி உந்தப் பெயர் புகழுக்கு ஆசைப்பட்ட ஆளில்லை. அந்தக் காலம் தொடக்கம் மொட்டைப் பெட்டிசன் எழுதேக்கையும் சொந்தப் பேர் போடுறதில்லைஎன் சொல்லுங்கோ பார்ப்பம்? நான் பேர் புகழுக்கு ஆசைப்படுகின்ற ஆளில்லை. சும்மா இடக் கையாலை சுப்பையா என்று பேர் போட்டுட்டு அனுப்புவன். அதாலை இந்தப் பொன்னம்பலத்தாருக்கு, இடக்கைச் சுப்பையா எண்ட ஒரு பேரும் இருக்குது..என்னதான் மாய்மாலம் பண்ணி [illegible] இதை உவர்தான் [illegible] ரெண்டு கரெக்டாக் கண்டு பிடிச்சு, என்னை இடக்கைச் சுப்பையா எண்டும் கூப்பிடத் தொடங் கியிட்டுதுகள்.

அறிவிப்பாளர்: என்னதான் இருந்தாலும் ஒரு ஆள் எழுதிப் போட்டு அல்லது படம் கீறிப் போட்டு அதனை இன்னொரு ஆளின்ரை பேரிலை போடுறது அவ்வளவு வடிவில்லை.

**பொன்னம்பலம்:** என்ன தம்பி நான் கீறுற படம் வடிவில்லையோ?

**அறிவிப்பாளர்:** இல்லை ஒரு ஆள் வரைஞ்சிட்டு வேறையொரு ஆளின்ரை பேரிலை அனுப்பிறது அழகில்லை என்று சொல்ல வந்தனான்.

**பொன்னம்பலம்:** தம்பி! ஆடல் , பாடல், சித்திரம் வரைதல் எல்லாம் அழகியல்தான். பிறகு அதை அழகில்லை எண்டு சொல்லுறியள்?

**அறிவிப்பாளர்:** அதை மறுக்கேல்லை நீங்கள் வரைஞ்சிட்டு மற்ற ஆக்களின்ரை பேரைப் போடுறது வடிவில்லை என்று சொல்ல. வந்தனான்.

**பொன்னம்பலம்:** அதுதான் சொல்லிப் போட்டேனே எனக்கு பேர் புகழுக்கு ஆசையில்லையெண்டு.

**அறிவிப்பாளர்:** சரி அதை விடுவம். ..நீங்கள் போய்விட்டு வாங்கோ. உங்களுக்கு விளங்கப்படுத்துற சக்தி எனக்கில்லை.

**பொன்னம்பலம்:** பேரத்தியைப் பற்றிச் சொல்லிப் போட்டு விட்டுட்டன். அவளுக்கு ஏழு எட்டு வயதாகுது.முன் வாய்ப்பல்லு இரண்டும் விழுந்து, தம்பி! உங்களைப் பார்க்கிற மாதிரித்தான் அவவின்ரை வாயும். ஏன் தம்பி உங்கடை அழகுக்கும், வடிவுக்கும் உந்த முன் வாய்ப்பல்லு கொஞ்சம் அழகைக் குறைச்சுக் காட்டுது...இப்பதானை முகச் சீராக்கம், பற் சீராக்கம் எண்டு பல முறைகள் இருக்குது. நீங்களும் ஒருக்கால் பல்லைக் கட்டி, கிளிப் ஒன்று போட்டால், என்னைப்போல, ஒரு எடுப்பான ஆளாய் இருப்பீங்கள். உங்களுக்குப் பிடிக்குதோ தெரியேல்லை, என்னவோ தெரியேல்லை உங்களை எனக்குப் பிடிச்சுப் போயிற்று அதனாலைதான் என்ரை நேரத்தையும் பார்க்காமல், ஒரு சொந்தப் பிள்ளைக்கு புத்திமதி சொல்லுறமாதிரி உங்களுக்கும் சொன்னான். குறை நினைக்கக் கூடாது.

**அறிவிப்பாளர்:** இதிலை என்ன குறை? ஆருக்குத்தான் தாங்கள் வடிவா இருக்கிறதிலை விருப்பமில்லை. நானும் பற் சீராக்க காறரிட்டைப் போய், காட்டி ஒரு கிளிப் போடுவிச்சனான்.. ஒரு நாள் கழற்றி வைச்சிட்டு அங்காலை போக

**பொன்னம்பலம்:** போக.

**அறிவிப்பாளர்:** மூத்த மகள் அந்தக் கிளிப்பை எடுத்து, தன்ரை தலைக்குக் குத்திக்கொண்டு போயிற்றாள்.

**பொன்னம்பலம் :** அட..அட.. நீங்கள் ஒண்டும் சொல்லேல்லையோ?

**அறிவிப்பாளர்:** என்னத்தைச் சொல்லுறது? அது எக்ஸ்பென்சிவ் ஆன கிளிப் எண்டு மூத்த மகளுக்குச் சொன்னன்.

**பொன்னம்பலம்:** ஆ...

அறிவிப்பாளர்: அது ரெண்டாவது மகளுக்குக் கேட்டுட்டுது. தலைக்குக் குத்த அது மாதிரி ஒரு எக்ஸ்பென்சிவ் கிளிப் தனக்கும் வாங்கித் தரச் சொல்லி, இப்ப ரெண்டாவது மகள் ஆக்கினைப்படுத்துறா அதோடை பல்லுக்குக் கிளிப் போடுற [illegible] யாவை – ஆசையை விட்டுட்டன்.

பொன்னம்பலம் : அடப் பாவமே! அப்ப தம்பி சுவரிலை பிள்ளையள் படங் கீறினால், அவரகளைத் தடை செய்யாமல், சுவரிலை வரைய விடவேணுமெண்டு சொல்ல வந்தனிங்கள் என்ன?

**அறிவிப்பாளர்:** Sure . சுவர்.

**பொன்னம்பலம்:** தம்பிக்குச் சுவரிலை தலை ஏதும் அடிபட்டதோ? எல்லாத்துக்கும் சுவர் சுவர் எண்டு சொல்லுறீர்?

**அறிவிப்பாளர்:** ஆக்சுவலி [illegible] வேறை Sure. நீங்கள் சொல்[illegible] சுவர வேறை

**பொன்னம்பலம் :** அச்சுவேலி[illegible] ஒண்டு..மற்றது ஆவரா[illegible] சுவரோ?

**அறிவிப்பாளர்:** பிள்ளைகள் [illegible] பிக்கற் வாங்க வரிசையிலை [illegible] கிறார்கள். நீங்கள் வேறை[illegible] நாளைக்கு வாருங்கோ, [illegible] விளக்கமாய்ச் சொல்லுறன்.

பொன்னம்பலம்: ஓம் தம்[illegible] தம்பி. நன்றி. மைக்கைக் [illegible] உடனை எனக்கும் கொஞ்சம் [illegible] வந்திட்டுது,அதுதான் உங்[illegible] நல்லா மினக்கெடுத்திப் [illegible] டன்.நான் வாறன்.


(பொன்னம் பலத்தார் மேடை[illegible] விட்டு இறங்கி சனங்களுக்கு [illegible] கூப்பி வணக் கம் செலுத்தி[illegible] கின்றார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மாதுளம்பூ

## முதலாவதுகவிதைத் தொகுப்புடன் பழம்பெரும் கவிஞர் ஷெல்லிதாசன்

செ.மகேஷ்




மூத்தபடைப்பாளியும் முற்போக்குச் சிந்தனையாளருமான ஷெல்லிதாசன் வெளியிட்டுள்ள செம்மாதுளம்பூ இவரது முதலாவது கவிதைநூலாகும். நாடறிந்த பழம் பெரும் கவிஞர் தனது முதலாவது நூலை வெளிக்கொணர இத்தனை காலங்கள் தாமதித்தமை உள்ளத்தை நெருடும் வகையில் பலரையும் சிந்திக்கத் தூண்டியுள்ளது. மாதுளம்பூ வெளிவரக் காரணரான நீங்களும் எழுதலாம் கவிதைச் சிற்றிதழின் ஆசிரியர் எஸ்.ஆர்.தனபாலசிங்கம் பாராட்டுக்குரியவராகிறார். புதுக் கவிதைகளின் ஆக்கிரமிப்புக்குள் அமிழ்ந்து எதுகை மோனை தொலைந்த நிலையில் இன்றைய கவிஞர்கள் புற்றீசல் போலப் பரந்து விட்டகோலத்தின் மத்தியில் எதுகை மோனை உவமை உருவகம் படிமம் குறியீடுகள் எனப் பண்பட்ட புதுமை கலந்த கவிதை எடுத்துரைப்பு முறைகளோடு தனது முதலாவது நூலை வெளியிட்டுள்ளார்.

**வயதென்னடாவயதிங்கேஒருவாலிபமென்பதுமனசினிலே**
**உரங்கொள் கைகள் மேலெழுந்தால் ஓர் மலைகூடப் பொடியாகும்**
**வெயிலோமழையோஎனக்கில்லைவியர்வையிற் குளித்தே தினமெழுவேன்**
**கையிலே இருக்கும் காலத்தினைஏழைகண்ணீரைத் துடைத்திடக் கவி புனைவேன்**
**சோம்பலென்பதை நானறியேன் எந்தசொந்தத்தை நம்பியும் நான் வாழேனென**
**வீழும் வரையும் நானோயேன் அதற்குவேண்டும் திடங்கொள் மனசிருக்கு**

கவிஞர் ஷெல்லிதாசனின் 'செம்மாதுளம்பூ' கவிதைத் தொகுப்பின் முதலாவதுகவிதை இது. அவரது இளமையின் இரகசியத்தையும், உள்ளத்தின் உறுதியையும் இந்தக் கவிதை வெளிப்படுத்துகிறது. முற்போக்குச் சிந்தனை கொண்ட கவிஞரின் கவிதைகளில் மக்கள் சமூகம், அவர்தம் வாழ்வவலங்கள் என்பவற்றோடு தொழிலாளர்களின் அவலநிலை,போராட்டம் என்பவை பற்றியும் நிறையவே காணப்படுகின்றன. எழுத்தில் கவிஞர்கள் ஒரேவிடயத்தைத் திரும்பத் திரும்பப் பாடுவதை அவர் விரும்பியதில்லை.

**அழகுத் தமிழை வளர்ப்பது வாய் அழகிய கவிதை புனைவது வாய், எண்ணி எதுகை**
**மோனைக்குள் இயங்கும் கவிஞர் பெருங்குலமே, அகன்ற உலகப் பரப்பினிலே**
**அல்லலுற்றுத் தினமலையும்,**
**மனிதகுலத்தின் அவலங்களைமறந்து**
**தூங்கிப் போனதுமேன்?**
**மயிலைப் பார்த்தால் கன்னியவள்**
**அயலில் வந்து ஆடுவதேன்?**
**கயலைக் கண்டால் அவள்கண்கள்**
**கதவைத் தட்டிமிரளுவதேன்?**
**அயலில் கேட்டுக்**
**கிளிமொழியைஅவளின் பேச்சாய்க்**
**கொள்வதுமேன்?**
**உயர்ந்தகவிஞர் கற்பனைகள்**
**இவற்றைக் கடந்துசெல்லாதோ?**
**பெண்ணினழகைப் பலபுலவர் பிரித்து**
**வகுத்து விதவிதமாய்**
**எண்ணிலாதகாவியங்கள் எழுதிக்**
**குவித்துச் சென்றுவிட்டார்**
**இன்றும் நீங்கள் கண்ணழகை**
**இடையைத் தொடையைக் கன்னியரின்**
**நடையை உடையை**
**முன்னழகைநாடித்தேடிஓடுவதேன்?**




எனக் கேட்பதோடு அரைத்த மாவை அரைப்பதைத் தொலைத்துப் புதிதாய் நவமாய்க் கவிதைகளை ஆக்க முன் வாருங்கள்'என இளைய கவிஞர்களை ஷெல்லிதாசன் அழைக்கிறார்.

**'வரையும் கவிதைக் குவியல்களால் உமக்கு வாய்க்கும் கவிஞர் பட்டமன்றி பயனோயார்க்கும் ஏதுமில்லைபார்க்கப் போனால் பூச்சியந்தான்'** எனத் தனது ஆதங்கத்தை அவரது நூலிலே பூச்சியத்துக்குள்ளே இராச்சியம் என்ற தலைப் பிட்ட கவிதை மூலம் வெளிப்படுத்துகின்றார்.

யாழ். மண்ணிலே பிறந்தவர். தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி கற்றுத் தொழிலின் நிமித்தம் திருகோணமலையில் குடியேறி வாழ்பவர். இவரது மனைவி பாலதேவியும் ஒருகவிஞராகத் திகழ்ந்தவராவார். இராஜம் புஸ்பவனம் அவர்களும் இவரது மைத்துனி என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

இலங்கைவானொலியில் இசை கலந்து பாடப்பட்ட மெல்லிசைப் பாடல்களை எழுதுவதிலும் வல்லவரான ஷெல்லிதாசன் அவ்வாறு எழுதப்பட்ட பாடல்களையும் இந்தத் தொகுப்பிலே சேர்த்துள்ளார்.

இவரது இயற்பெயர் கனகரத்தினம். இவரது தந்தையார் பெயர் பேரம்பலம். தாயார் பெயர் பூரணம். இவரது முயற்சியுடன் கன்னிஎனும் சிற்றிதழ் இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக வெளிவந்தது.

நீண்ட காலமாக ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் பலருடன்.தொடர்புகளைக் கொண்டிருக் கும் ஷெல்லிதாசன், சிறப்பான ஆக்க இலக்கிய முயற்சிகளில் அவர்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கள் குறித்துப் பெருமைப்படுகின்றார். முற்போக்குச் சிந்தனையாளரும் சிறந்த ஆசிரியருமான அமரர் மு.கார்த்திகேசன் அவர்களின் உறவால் விளைந்த உன்னதமான தொடர்புகளை விதந்துரைக்கிறார். தற்பொழுது 11/6,செனயுட் லேன்,பா[illegible] வாழ்ந்துவருகிறார். தொடர்ந்தும் கவிதை இலக்கிய ஆக்கங்[illegible] உலகை மேலும் அலங்கரிப்பார் எனஎதிர்பார்க்கின்றோம்.



# தனி ஒருவன் திரை இசையில்

## இலங்கைச் சிறுமி கரிஷ்மாவின் காதல் கிறிக்கெட்டு



சமீபத்தில் வெளியாகி யாழ். நகரில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் 'தனி ஒருவன்' திரைப்படத்தில் இடம் பெற்றுள்ள காதல் கிறிக்கெட்டு விழுந் திரிச்சு விக்கெட்டு எனும் பாடல் இலங்கையைப் பூர்வீகமாகக் கொண்ட கரிஷ்மா ரவிச்சந்திரனுடையதாகும். தற்பொழுது இவர் கொழும்பில் பெற்றோருடன் தங்கியிருந்து கல்வி கற்று வருகிறார். பதினைந்து வயதே நிரம்பிய இவரால் பாடப்பட்ட காதல் கிறிக்கெட்டு பாடலின் மூலம் இளம் நெஞ்சங்களைத் தனது இசையால் கவர்ந்துள்ளார். சிறுவயதிலிருந்தே பாடுவதில் விருப்பமும் ஆர்வமும் கொண்ட கரிஷ்மா மேலைத்தேய இசையைக் கற்றுக் கொண்டுள்ளார். இந்தியா சென்று அங்கே கர்நாடக இசையையும் கற்றுக் கொண்டுள்ளார். இவரது வீடியோப் பாடல்களை யூ ரியூப் இல் பதிவு செய்து வெளியிட்டு வந்தார். அவற்றைப் பார்த்தும் கேட்டும் இரசித்துச் சினி



மாவில் ஆம்பள படத்துக்குப் பாட வருமாறு ஆதி அவர்கள் கரிஷ்மாவை அழைத்திருந்தார். அப்போது குறித்த காலத்தில் பயணம் செய்ய இயலாமையால் அந்த வாய்ப்பைக் கரிஷ்மா இழந்திருந்தார்.

இவரது இழந்த வாய்ப்பை ஈடுசெய்யும் வகையில் பின்னர் ஹரிஸ் ஜெயராஜ் அவர்களின் அழைப்பின் மூலம் 'என்னை அறிந்தால்' படத்தில் 'ஏன் என்னை..' என்ற பாடலைப் பாடகி சுனிதா சாரதி அவர்களுடன் இணைந்து பாடியுள்ளார். மறுபடியும் ஆதி அவர்களின் இசையமைப்புடன் தற்பொழுது 'தனி ஒருவன்' படத்தில் இவர் பாடிய காதல் கிறிக்கெட்டு என்ற பாடலின் மூலம் முன்னணிப் பாடகிகளில் ஒருவராக முன்னேறியுள்ளார். அடுத்து வரவுள்ள 'அரண்மனை' என்னும் படத்துக்காகவும் இவரது பாடல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அத்துடன் தொடர்ந்தும் பெயரிடப்படாத ஒரு படத்துக்கான பாடல் ஒன்றும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஆங்கிலமொழியிலே அதிகம் பரிச்சயம் உள்ள கரிஷ்மா தற்பொழுது தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெறக் கற்றுக் கொண்டிருக்கிறார். தமிழ் மொழிப் பாடல்கள் மாத்திரமன்றி வேற்று மொழியிலும் பாடல்களை இசைக்க ஆர்வம் தெரிவித்துள்ளார். கொழும்பில் தற்பொழுது கற்று வரும் இவர் மேலும் கல்வி பெற வெளிநாடுகளுக்குச் செல்லவும் விருப்பம் தெரிவிக்கிறார்.



செ.மகேஷ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமணச் சடங்கு

பேராசிரியர்
எஸ்.சிவலிங்கராசா

*(சென்றவாரத் தொடர்ச்சி....)*

"திருமணச் சடங்கு" என்ற இந்தக் கட்டுரைத் தொடரில் "சோறு கொடுப்பித்தல் சடங்கு" பற்றிக் கடந்தவாரம் "புதன்பொய்கை" பகுதியில் விவரித்திருந்தோம்.

பேச்சுத் திருமணம் மற்றும் சோறு கொடுப்பித்தல் சடங்கு ஆகிய இந்த இருவகைத் திருமணங்களிலும் உடனடியாகத் திருமணப் பதிவைச் செய்வதில்லை.

**திருமணப் பதிவு**

உடனடியாகத் திருமணப் பதிவைச் செய்யாதோர் பின்னர் பல்வேறு தேவைகளை ஒட்டி வசதியான நேரத்திலே திருமணப் பதிவுகளைச் செய்து கொள்வார்கள். திருமணம் நடைபெற்று பத்து, இருபது வருடங்களுக்குப் பின்னர் பதிவுத் திருமணம் செய்தவர்களும் இருந்தார்கள்.

**ஓமம் வளர்த்துத் தாலி கட்டும் சடங்கு**

பேச்சுத் திருமணங்களிலே மிகப் பிரதானமானதாகக் கருதப்படுவது பிராமணிய நிலைப்பட்ட ஓமம் வளர்த்துத் தாலி கட்டும் சடங்கே ஆகும். இந்தச் சடங்கு நடை முறைகளிலும் இடத்துக்கு இடம், சமூகத்துக்குச் சமூகம் சிற்சில வேறுபாடுகள் இருந்த போதிலும் பெரும்பாலான நடைமுறைகள் பொதுத்தன்மை உடையனவாகவே காணப்படுகின்றன. பிராமணியத் திருமணச் சடங்குகளைப் பார்க்கும்பொழுது பாரதி குறிப்பிட்ட "சகுன மந்திரத் தாலி மணியெலாம் யாத்தெனைக் கொலை செய்தனர்" அல்லது "யாதுதர்ம நெறியெனக் காட்டிலர்" என்ற பாட லடியே நினைவுக்கு வரும்.

**சாணைக்கூறை போடுதல்**

இற்றைக்கு அறுபது, எழுபது வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திலே நிலவிய திருமண ஒழுங்கு பற்றிய ஒரு செய்தியையும் இந்த இடத்திலே நினைவு கூருவது நன்று. குழந்தைகள் பிறந்த சில நாள்களுக்குள்ளேயே (மைத்துனன், மைத்துனி உறவு) பெரியவர்கள் காலம் வரும் போது இவர்கள் திருமணம் செய்ய வேண்டுமென்று எழுதாத ஒப்பந்தம் செய்வர். இந்தச் சாணைக்கூறை போடப்பட்ட எல்லோரும் பின்னர் திருமணம் செய்வதென்ற நியதியிலும் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளமை குறிப் பிடத்தக்கது. எனினும் சாணைக்கூறை போடுதல் என்ற பெயரால் அழைத்தனர். சாணைக்கூறை போட்டவர்களுக்கு இடையே திருமணம் நடை பெறா விட்டால் முரண்பாடுகள் தோன் றிக் குடும்பப் பிரச்சினைகளும் எழுவதுண்டு. இன்று இந்த வழக்காறு முற்றாக மறைந்து விட்டது.

பேச்சுத் திருமணங்களிலே குடும்ப வசதிக்கேற்ப (பிராமணிய நிலைப்பட்ட) திருமணச் சடங்கு கள் மிகவும் ஆடம்பரமாக நிகழ்வதுண்டு. இன்றைய ஆடம்பரங்களுக்கும் அன்றைய (50, 60 வருடங்களுக்கு முந்திய) ஆடம்பரங்களுக்குமிடையே வேறுபாடுகள் பல இருந்தன.

**அடக்க திருமணச் சடங்கும் ஆடம்பர திருமணச் சடங்கும்**

பேச்சுத் திருமணங்களிலும் அடக்கமான திருமணச் சடங்கு, ஆடம்பரமான திருமணச் சடங்கு என இரண்டு வகைகள் காணப்பட்டன. தத்தமது வசதிக்கேற்ப மணமக்களின் பெற்றோர் திருமணச் சடங்கு ஒழுங்குகளைத் தீர்மானிப்பர்.

பெரும்பாலும் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதிவரை யாழ்ப்பாணச் சமூகத்தின் மேல் மட்டத்தினர், அதிகார வர்க்கத்தினர், அரச உத்தியோகத்தர்கள் (மலேசியா, சிங்கப்பூர் முதலிய இடங்களிலே பணியாற்றியவர்கள்) பிரபல வர்த்தகர்கள், குடாநாட்டுக்கு வெளியே வணிக முயற்சியில் ஈடுபட்ட முதலாளிகள் முதலானோரின் திருமணச் சடங்குகள் பெருமளவுக்கு ஆடம்பரமாக நடைபெற்றமைக்கான சான்றுகள் உள. சமூக மாற்றம், யாழ்ப்பாண மக்கள் இலங்கையில் பல பாகங்களிலும் பரந்து வாழத் தொடங்கியமை, புதிதாக மேற்கிளம்பிய மத்தியதர வர்க்கத்தினரின் வாழ்க்கை முறைகள் முதலியவை திருமணச் சடங்குமுறைமைகளிலும் மாற்றங்களைக்கொண்டு வந்தன. ஆடம்பரத் திருமணங்களிலும் சிற்சில நடைமுறைகளிலே வேறுபாடுகள் இருந்தன. புதிதாக உருவாகிய மத்தியதர வர்க்கத்தினரின் திருமணச் சடங்குகள் அதி விமரிசையாக நடைபெறுவதைப் பாரம்பரிய விழுமியங்களைப் பேணும் யாழ்ப்பாணச் சமூகத்தினர் பெருமளவுக்கு வரவேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**திருமண அழைப்பிதழ்**

பழந்தமிழ் இலக்கியங்களிலே எமக்குப் பரிச்சயமான (திருமணத்திருமுகம்) 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர் (அச்சியந்திரத்தின் பயன்பாட்டுடன்) திருமண அழைப்பிதழாகப் பயன்பாட்டுக்கு வருகின்றது. இன்று திருமண அழைப்பிதழ்கள் பல்வேறு வடிவில், பல்வேறு வகையில், பல்வேறு தரத்தில், பெருஞ்செலவில் பயன்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகின்றது. 20 ஆம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியிலே அச்சிடப்பட்ட திருமண அழைப்பிதழ்களிலும் ஒருவித அழகியல் வெளிப்பாடு காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (தமிழ் அச்சுக்கலை வளர்ச்சியிலே ஈழநாட்டுப் பங்களிப்புப் பற்றி ஆய்வு செய்பவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டு அச்சியந்திரசாலைகளின் செயற்பாடுகள் பற்றியும் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டியது அவசியம்.)

**சம்பந்தக் கலப்பு**

திருமணம் பேசி முடிவுசெய்ததும் இரண்டு குடும்பங்களுக்குமான இறுக்கத்தைப் பேணும் வகையிலே சம்பந் தக் கலப்பு என்னும் நிகழ்வு இடம்பெறும். பெண்வீட்டார்தான் முதலிலே மணமகன் வீட்டுக்குச் செல்லவேண்டும்; செல்வதே வழக்கம். மங்கலகரமான பொருள்களுடன் (வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, எலுமிச்சம்பழம் முதலானவை) சென்று விருந்தயர்ந்து திரும்புவர். சில இடங்களில் கொழுக்கட்டை



அவித்துக் கொண்டு செல்வதும் உண்டு. இரண்டு குடும்பங்களும் பரஸ்பர புரிந்துணர்வுடன், விட்டுக்கொடுப்புடன் பழகுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தும் நிகழ்வாகச் சம்மந்தக் கலப்பு அமையும் எனலாம்.

**பொன் உருக்கல்**

திருமணநாள் குறிக்கப்பட்டதும் (முகூர்த்தம்) பொன் உருக்கல் என்ற நிகழ்வு முக்கியம் பெறும். பொன்னுருக்கும் நிகழ்வு நல்லதொரு நாளில் (பஞ்சாங்கத்திலே உள்ளபடி) மணமகன் வீட்டிலேதான் இடம்பெறும். பொன் உருக்குவதற்குப் பொற்கொல்லர் ஒருவர் அதற்குரிய உபகரணங்களுடன் மணமகன் வீட்டுக்கு வருகைதந்து பொன் உருக்கலுக்கான சடங்காசாரங்களின்படி பொன்னை உருக்குவார். மணமகளின் பெற்றோர்களும் நெருங்கிய உறவினர்களும் பொன்னுருக்கற் சடங்கிலே கலந்து கொண்டு விருந்தயர்ந்து செல்வர். பொன்னுருக்கல் நிகழ்வு நடைபெற்ற பின் மணமக்கள் திருமணம் வரை ஒருவரை ஒருவர் பார்க்கக்கூடாது என்பது வழக்கமாகும். (இன்று இந்த நடைமுறை பெரிதும் பின்பற்றப்படுவதில்லை)

**திருமணச் சடங்கு**

அந்தக் காலத்திலே திருமணச் சடங்குகள் இரவிலேயே நடைபெற்றன. முகூர்த்த நேரமும் பெரும்பாலும் இரவாகவே இருக்கும். பஞ்சாங்கங்களும் இரவு நேரத்திலேதான் முகூர்த்தத்தைக் குறிப்பிட்டிருக்கும். திருமணங்களை ஆடம்பரமாக நடத்துவதற்கு இரவு நேரம் பொருத்தமானதெனக் கருதப்பட்டது. ஆனால் கடந்த முப்பது ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் இரவிலே திருமணச் சடங்குகள் நடைபெறவில்லை. திருமணங்கள் பகலிலேயே நடைபெற்றன. நடைபெறுகின்றன. இந்த விடயத்தைக் குறிப்பிடும்போது போர்க்கால யாழ்ப்பாணச் சூழ்நிலை பற்றிய பாடல் ஒன்றை நினைவு கூரலாம்.

***கோயில் விழா கொண்டாட்டம் எல்லாம் பொழுது***
***சாய்வதற்கு முன்னே நிறைவுபெறும் – தூயநிலா***
***கண்டு மகிழ்ந்து கலந்து உறவாடி***
***உண்ட நிகழ்வெங்கே உரை***

பெரும்பாலான திருமணங்கள் வீடுகளிலேயே நடைபெற்றன. சில திருமணங்கள் கோயில்களில் நடைபெற்றதும் உண்டு. தற்காலத்திலே திருமண மண்டபங்களிலேதான் திருமணங்கள் நடைபெறுகின்றன. யாழ்ப்பாணத்திலே இன்று திருமண மண்டபங்கள் பல உள்ளன. ஆனால் நாற்பது ஐம்பது வருடங்களுக்கு முன்னர் திருமண மண்டபங்களே யாழ்ப்பாணத்தில் இருந்ததில்லை. எத்தகைய ஆடம்பரத் திருமணமாக இருந்தாலும் அது வீட்டிலேயே நடைபெற்றது. பெரிய பந்தல்கள் போட்டு வெள்ளை கட்டி, அலங்காரங்கள் செய்து, மணவறை அமைத்துத் திருமணச் சடங்குகளை நடத்துவர். திருமணச் சடங்கின் பிரதான விடயங்கள் பெண் வீட்டிலேயேதான் நிகழும். தாலிகட்டி அம்மி மிதித்து அருந்ததி காட்டிக் கால் மாறுதல் என்னும் நிகழ்வு இடம்பெறும். திருமணச் சடங்கு முறைமைகள் இடத்துக்கு இடம், கிராமத்துக்குக் கிராமம், சமூகத்துக்கு சமூகம் வேறுபட்டு நிகழும். அதனாலே அந்த முறைகள் பற்றி விரிவாகக் குறிப்பிடாது விடுத்தோம். ஆனால் பொதுவாக ஆடம்பரத் திருமணங்களிலே மங்கல வாத்தியம், ஊர்வலம் என்பன இடம்பெறும். இரவு நேரமாகையால் ஊர்வலம் அழகாகவும் இருக்கும். குடும்பத்தவரின் வசதிக்கேற்ப ஊர்வலம் அமையும். திரு மணமாகாத பெண்ணொருவர், தமது தந்தையார் இறந்த போது புலம்புவதாக அமைந்த கவிஞர் எம்.வீ.கிருஸ்ணாழ்வாரின் பாடலொன்றை இந்த இடத்திலே சுட்டுவது பொருத்தமாக இருக்கும்.

***சோதிபெற நன்றாகச் சோடித்த காரேறி***
***வீதிவரும் பவனி மேதினியிற் காணாமல்***
***காதிற் பறைகேட்கக் கட்டியபூம் பாடையிலே***
***நீதியின்றிப் போய் மறைந்தாய்***
***முறையோ என் ஐயாவே***

யாழ்ப்பாணக் குடாநாட்டிலே ஆடம்பரத் திருமணங்களிலே பலவகையான ஊர்வலங்கள் இருந்தன என்பதற்கு இந்தப் பாடல் சான்றாகும்.

**அறுகரிசி போடுதல்**

திருமணச் சடங்குகள் முறையாக நடைபெற்ற பின்னர், வாழ்த்துதல் என்ற அம்சம் பிரதானமானது. இன்றும் இந்த வழக்கம் உண்டு. அறுகரிசிபோடுதல் என்று இதனைக் கூறுவர். இதனைவிட வாழ்த்துப் பாக்கள் பாடும் வழக்கமும் இருந்தது. வாழ்த்துப் பாடலை எழுதி அச்சிட்டுக் கண்ணாடிச் சட்டத்தினுள் போட்டு மணமக்களுக்கு வழங்குவர். இன்றும் இந்த வழக்கம் உண்டு. இந்த வழக்கம் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னரே பரவலாகியது என்பதும் குறிப்பிடத்தக்கது.

**வாழ்த்துப்பா**

அந்தக்காலப் புலமையாளர்கள் பலர் சிறப்பான வாழ்த்துப் பாக்களைப் பாடியுள்ளனர். வாழ்த்துப் பாவுக்கான முறையியல் ஒன்றும் யாழ்ப்பாணத்திலே நிலவியது என்பதற்கு அந்தக்கால வாழ்த்துமடல்கள் சான்றாகும். ஈழகேசரி பொன்னையாவின் மகளின் திருமணத்துக்குப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை வாழ்த்துப்பா பாடினார். அந்த வாழ்த் துப்பா பின்னர் ஈழகேசரிப் பத்திரிகையிலும் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. பிரா மணிய நடைமுறைகளின்படி (ஆகம முறைப்படி) நடைபெறும் திருமணங்களை நெறிப்படுத்துபவர்களாக ஒளிப் படக் கலைஞர்களே (வீடியோ உட்பட) செயற்படுவதை இன்று அவதானிக்கலாம். ஆனால் இற்றைக்குச் சில ஆண்டு களுக்கு முன்னர் (50 கள் 69 களிற் கூட) சலவை, சவரத் தொழிலாளர்களே திருமண நடைமுறைகளை ஒழுங்கு படுத்துபவர்களாக விளங்கினர். இன்று அந்த முறை முற்றாக மறைந்து விட்டது. நாமும் மறந்து விட்டோம்.

**நாலாஞ்சடங்கு**

திருமணம் நிறைவுபெற்று (தாலிகட்டல், விருந்து முதலியன) மணமகள், மணமகன் வீட்டிலேதான் தங்குவார். மூன்று நாள்கள் மணமகன் வீட்டிலே தங்கி நான்காம் நாள் பெண் வீட்டுக்கு (தமது) வந்து சேருவர். பெண்வீட்டுக்கு வரும் நான்காவது நாளில் நாலாஞ்சடங்கு என்னும் சடங்கு வெகுவிமரிசையாக நடைபெறும். பெரும்பாலும் மாமிசபோசனம், மது வகைகள் முக்கியமாக இடம்பெறும். நாலாஞ்சடங்கு என்ற கொண்டாட்டம் மணமகள் வீட்டிலேயும் மணமகன் வீட்டிலேயும் நடைபெறும். பெரும்பாலும் மணமகன் வீட்டிலேயே சிறப்பாக நடைபெறுவது வழக்கம். இன்றும் இந்த வழக்கம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

**நாட்கடை**

நாலாஞ்சடங்கின் பின்னர் மணமக்கள் கோயில்களுக்குச் சென்று வழிபாடியியற்றுவர். பின்னர் நல்லதொரு நாளிலே நாட்கடை என்ற நடைமுறையின்படி மணமக்கள் கடைக்குச் சென்று புதுப்பானை, சட்டி, உப்பு, மஞ்சள் முதலான பொருள்களை வாங்கி வருவர். அதன் பின்னர் புதுக்குடித்தனம் தொடங்கும்.

திருமண நடைமுறைகள் இன்று வாய்ப்பு வசதிக்கேற்ப மாற்றம் பெற்றுள்ளமையைக் குறிப்பிட வேண்டும்.

**காதல் திருமணம்**

யாழ்ப்பாணத்துத் திருமண நடைமுறைகளிலே காதல் திருமணம் ஓரளவுக்கு இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பழந்தமிழ் மக்களின் அகத்திணை மரபிலே இடம்பெற்ற உடன் போக்கு இங்கும் நடைபெற்றுள்ளது. காதல் திருமணங்களை (உடன்போக்கை) கூடிக்கொண்டோடுதல் அல்லது கூட்டிக்கொண்டோடுதல் என்ற தொடர்களாலேயும் அழைத்தனர். உடன்போக்கு நிகழ்ந்தால் பெண்ணையும் பெண்வீட்டாரையுமே பெருளவுக்கு விமர்சிப்பார்கள். யாழ்ப்பாணத்தில் வழங்கும் பல நாட்டுப் பாடல்கள் இந்தக் கருத்தையே காட்டி நிற்கின்றன.

***தையலியாரிடை மையலிலே – எங்கள்***
***தாண்டவி அண்ணனும் பூண்டுவிட்டார்***
***சீதனமும் வேண்டாம் ஆதனமும் வேண்டாம்***
***சிங்கார நாச்சியைக் கண்டாலே போதும்***

என்றும் வழங்குவதைச் சுட்டிக்காட்டலாம். அன்று காதல் திருமணங்களை வரவேற்காமைக்கு யாழ்ப்பாண சமூகத்தின் கட்டிறுக்கமே பிரதான காரணம் எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலதனம் இருந்தால் சாதிக்கலாம்

## ஓவியக் கலைஞர் பத்மநாதனுடன் ஒரு சந்திப்பு



தட்சா.ஜோ

கலைகள் வாழ்க்கையை ஏதோ ஒரு விதத்தில் அழகாக்குகின்றன. அது நடனமாக இருக்கட்டும், ஓவியமாக இருக்கட்டும், சங்கீதமாக இருக்கட்டும், ஏன் திரைப்படங்கள், குறுந்திரைப்படங்களாகக் கூட இருக்கட்டும். அதில் ஈடுபடுபவர்களுக்கும் சரி, அதனை கண்டுகளிப்பவர்களுக்கும் சரி ஏதோ ஒரு விதத்தில் மன அமைதியை கொடுக்கின்றன இந்தக் கலைகள்.

இப்படியான ஒரு கலைஞர்தான் சுப்பிரமணியன் பத்மநாதன். இவர் சிற்பம் மற்றும் சித்திரக்கலையில் கை தேர்ந்தவர். அலுவலக நூலகத்தில் இவரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. கலைஞனுக்குரிய துடுக்குடன் தமது மன ஆதங்கத்தை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

என்னுடைய அப்பா எஸ்.கே.சுப்பிரமணியம். அவர் சினிமாத்துறையில் இருந்தவர். 1988ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு சினிமாத்துறை நடிகர்களை அழைத்துச்சென்று அங்கு சினிமாப் படங்களை தயாரித்தவர் என்று அவர் கூறியமை அவர் கலைக்குடும்பத்தில் பிறந்தவர் என்ற விடயத்தை சுட்டி நின்றது. எஸ்.கே.சுப்பிரமணியத்தின் சுறத்தலி, சுந்தர பிரிந்தா போன்ற திரைப்படங்கள் இன்றுவரைக்கும் சிங்கள சினிமா வரலாற்றில் பெயர் பெற்ற திரைப்படங்கள் ஆகும்.

ஓவியரும் சிற்பக் கலைஞருமான பத்மநாதன், தமது ஆரம்பக் கல்வியை ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிஷன் கல்லூரியிலும், பின்னர் யாழ்.மத்திய கல்லூரியிலும் கற்றுள்ளார்.

"எனக்கு அரிவரி சொல்லித்தந்தவர் திருமதி சற்குணம். நாலு வரிக்குள்ள எப்பிடி அழகாக எழுத்துக்களை எழுத வேணும் எண்டு சொல்லித்தந்தவ. இன்டைக்கும் என்ர எழுத்துக்கள் வடிவாக இருக்க அவதான் அத்திபாரம். மத்திய கல்லூரியில நெல்லியடியைச் சேர்ந்த கந்தசாமி என்பவர்தான் என்ர சித்திர ஆசிரியர். எனக்குள்ள இருக்கிற ஓவியனை இனங்கண்டவர் அவர்தான். அவருடைய ஊக்கப்படுத்தல் வாழ்நாளில் மறக்கமுடியாத ஒன்று. பிறகு தரம் 5 முதல் சிவப்பிரகாசம் மாஸ்டரிட்ட படிச்சன். அவர் இன்றுவரைக்கும் எனக்கு நல்ல வழிகாட்டியாக இருக்கிறார்,"

என்று தனது ஓவியக் கலைப் பிரவேசம் பற்றியும் ஆசிரியர்கள் பற்றியும் கூறினார் பத்மநாதன். அத்துடன் கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் நடைபெற்ற வர்மசேன என்பவருடைய பகுதிநேர வகுப்புக்களில் கலந்துகொண்டு தைலவர்ணம், சிற்பங்கள் தொடர்பில் மேலதிக விடயங்களை கற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நான் ஓவியக் கலையை மாணவர்களுக்கு சொல்லிக் கொடுக்கத்தொடங்கினது 1974 இல் அப்ப என்னட்ட எட்டுப் பேர் படிச்சவை. அதுக்குப் பிறகு நிறைய மாணவர்களுக்கு ஓவியக்கலையைச் சொல்லிக்கொடுக்கும் வாய்ப்புக் கிடைத்தது. எனது மாணவர்கள் பலர் வெளிநாடுகளில் துறைசார்ந்து இருக்கிறார்கள் என்பதுடன் பல்கலைக்கழகங்களில் கற்பிக்கிறார்கள் என்பதும் என் மனதுக்கு மகிழ்சியான ஒருவிடயம் என்று கூறும் ஓவியர் பத்மநாதன், சிறுவர்களை ஓவியத் துறைக்குள் இழுக்க முயற்சிக்கின்றார். அதன்ஒருபடியாக வர்ணச்சித்திரம், ஒட்டுச் சித்திரம் போன்றவற்றை அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் ஒழுங்கமைக்கும் நிகழ்சிகளில் வளவாளராக கலந்துகொண்டு கற்பித்து வருகின்றார்.

ஆரம்பத்தில் முழுநேரமாக கப்பலில் வேலை பார்த்த பத்மநாதன், தொழில்நிமித்தம் பல வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளார். அப்போதும் கூட ஓவியத்தின் மீதான ஆர்வத்தால் வெளிநாட்டுக்காரர்களிடம் அவர்கள் நாட்டு ஓவியக் கலையின் நுட்பங்களை கற்றுள்ளார். இதன்போதுதான் பட்டுத்துணியில் ஓவியம் வரைவதை இவர் கொரியாக்காரர்களிடமிருந்து கற்றுள்ளார். அதனை நாடு திரும்பியவுடன் இங்குள்ளவர்களுக்குச் சொல்லியும் கொடுத்துள்ளார். அதேவேளை கப்பலில் வெளிநாடு சென்றுவரும்போது இங்குள்ள ஓவியக்கலைஞர்களுக்கு ஓவியத்துக்கான மூலப்பொருள்களையும் வாங்கிவந்து கொடுத்துள்ளார்.

"என்னைப் பொறுத்தவரையில் ஓவியக்கலை இன்னமும் அழிவடையவில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத் துறையின் ஊடாக தரமான முறையில் ஓவியக்கலை கற்பிக்கப்படுகின்றது. பல்கலைக் கழக மாணவர்களுக்காக தென்பகுதியில் இருந்து விரிவுரையாளர்கள் விசேடமாக வரவழைக்கப்படுகின்றார்கள். இது மாணவர்களுக்கு ஓவியத்துறையில் பரந்த அறிவை வளர்க்கும். அத்துடன் கண்காட்சிகள், மேற்படிப்புக்காக மாணவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புதல் போன்ற நடவடிக்கைகளிலும் பல்கலைக்கழகத்தினர் ஈடுபடுகின்றனர். அத்துடன் ரமணி சேர், ராசையா சேர் போன்றவர்களின் வழிகாட்டலில் உருவான மாணவர்கள் யாழ் நுண்கலைப்பீடத்திலேயே கற்று, தற்போது அங்கேயே கற்பிக்கும் அளவுக்கு வளர்ந்துள்ளனர். அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற ஓவியக் கண்காட்சியில் யாழ். பல்கலைக்கழக மாணவர்களும் கலந்து கொண்டமை மகிழ்ச்சியான விடயம். சர்வதேச தரத்திலான கண்காட்சிகளில் பங்கேற்பதால் எமது மாணவர்கள் பல புதிய விடயங்களை அறிந்துகொள்ளமுடியும், என ஓவியக் கலையின் தற்போதைய நிலைபற்றிக் கூறினார்.



ஓவியக் கலை உட்பட எந்தவொரு கலையும் தனி ஒருவருக்குத்தான் சொந்தம் என்றில்லை. ஓவியராக, சிற்பக் கலைஞர்களாக வரவேண்டும் என ஆசைப்படுவர்கள், அந்தத் துறையில் விற்பன்னரை நாடி, ஒருவாக்குதல்(?) விடாமுயற்சியுடன் முயற்சித்தால் நிச்சயம் உச்சத்தை அடையமுடியும் என வளரும் கலைஞர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

> எமது கலை, பண்பாடு, பாரம்பரியங்களையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். வெளிநாடுகளில் இந்தகைய ஆக்கங்கள் விலை சுட்டப்பட்டு விற்கப்படுவதில்லை.

மார்க் நவீன ஓவியங்களை வரைவதற்கு வித்திட்டவர்.

கோயில் திரைச்சீலைகள், சிற்பங்கள், சுவரோவியங்கள், மனித மெய்நிலைகள், திருவுருவப் படங்கள், கட்டவுட்டுகள், பதாகைகள் போன்றவற்றை எல்லாம் வரைந்து வர்ணம் தீட்டக் கற்றுத் தந்து விளம்பர வர்த்தக ஓவியங்களாக என்னை உருவாக்கியவர் மறைந்த மணியம் ஆட்டிஸ்ற்.

சிலைகளை மிக இலகுவாகச் செய்வதெப்படி என்பது ஒரு புதுவிதமுறை. அதில் வீரசிங்கம் (சிங்கு) அவர்கள் என்னை மேப்பாடு அடையச் செய்தார்.

தமக்கு வழிகாட்டியவரை நினைவு கூருவதற்கு அவர் தவறவில்லை. தற்போது தமது இல்லத்தில் மாணவ, மாணவியருக்கு ஓவியம், கைப்பணி போன்றவற்றில் பயிற்சியளித்து வருகின்றார்.

தாம் கொண்டுவந்த ஆக்கங்கள் சிலவற்றையும் காண்பித்தார். பார்வையாளர்களைப் பிரமிக்கச் செய்யும் இந்த ஆக்கங்களை மிக எளிதாகச் செய்ய முடியும் என்றும் இவற்றுக்கான மூலப்பொருள்கள் எமது சூழலிலேயே கிடைப்பது பற்றியும் எடுத்துக் கூறினார்.

இவரது வழி நடத்தலில், மாணவர்கள் ஆக்கிய சில வாழ்த்து அட்டைகள் கண்ணைக் கவர்பவையாக அமைந்திருந்தன. வருமானம் தரத்தக்கவாறு இத்தகைய வாழ்த்து அட்டைகளைத் தயாரித்து விற்பனை செய்யலாம் விழாக்காலங்களில் அவ்வக் காலவிழா சார்ந்தும், பிறந்தநாள், ஆசிரியர்தின, அன்னையர்தின மற்றும் திருமண வாழ்த்து அட்டைகள் தயாரித்தும் விற்கலாம் இவற்றுக்கு நிறைந்த கேள்வி உள்ளது.

நத்தார் மற்றும் புதுவருட வாழ்த்துக்களுக்கு சந்தைப்படுத்தும் வாய்ப்பு மிகப் பிரகாசமாக உள்ளது. ஆனாலும் நீண்ட காலத்துக்கு முன்னரே இவற்றை ஆக்க வேண்டியுள்ளது. இதனால் மூலதன முடக்கம் ஏற்படுகின்றது.

போதிய மூலதன வளமிருப்பின், ஐம்பது, நூறு பேரை ஈடுபடுத்தி – இதனை ஒரு சிறு கைத்தொழிலாகச் செய்ய முடியும்.

சந்தையில் பொருள்களை வழங்கி மூன்று தொடக்கம் ஆறுமாதங்களிலேயே அவற்றுக்கான பணத்தைப் பெறக் கூடியதாக உள்ளமையால், பெரிய அளவில் இவற்றை உற்பத்தி செய்ய முடியாமல் உள்ள ஆதங்கத்தையும் வெளிப்படுத்தினார்.

சிறு அளவில் இத்தகைய வாழ்த்து அட்டைகளைத் தயாரித்து குறித்த கடைகளுக்கு வழங்கி வருவதாகத் தெரிவித்தார்.

சுற்றுலாத்துறை விருத்தியடைந்து வரும் இன்றைய நிலையில், சுற்றுலா விடுதிகளுக்கும் இவற்றை விநியோகிக்கலாம்.

போதிய மூலதனம் கிடைக்குமிடத்து, உற்பத்தித் துறையை ஒரு சாரார் கவனிக்க, சந்தைப்படுத்தல் பணியை இன்னொரு சாரார் பொறுப்பெடுப்பதன் மூலம், வேலைவாய்ப்பைப் பலருக்கு வழங்க முடியும். எமது கலை, பண்பாடு, பாரம்பரியங்களையும் மற்றவர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படும். வெளிநாடுகளில் இந்தகைய ஆக்கங்கள் விலை சுட்டப்பட்டு விற்கப்படுவதில்லை. இந்த ஆக்கங்கள் அவர்களது உணர்வுகளுக்கும், அழகியல் அனுபவங்களுக்கும் நிறைவு ஏற்படுவதையொட்டி பணத்தை வழங்குகின்றனர். பெறுமதியை அவர்களே தீர்மானித்து வைக்கப்பட்டிருக்கும் உண்டியலில் அதற்கான பணத்தை இட்டுச் செல்லும்போக்கும் உள்ளது. அதனால் வரும் நிதி குறிப்பிட்ட ஆக்ககர்த்தா எதிர்பார்ப்பதைவிட மிக அதிகரித்த தொகையாகக் கூட இருக்கும். இதனால் ஊக்கம் பெறும் கலைஞன், மென்மேலும் அற்புதப் படைப்புக்களை ஆக்குகின்றான் என்று தனது உலக அனுபவத்தை பகிர்ந்துகொண்டார். இவைபோன்ற ஆக்கங்களுக்கு இங்குள்ள பெறுமதியைவிட இரண்டு மூன்று மடங்கு கூடுதலாக கொழும்பில் நடைபெற்ற கண்காட்சியின் போது, பணம் கொடுத்து வாங்கினர். நிறைய வேண்டுகைகள் உள்ளன. ஆனால் மேலே கூறப்பட்ட சில புறக் காரணிகளால் அவற்றை நிறைவு செய்ய முடியாமல் உள்ளதாக பத்மநாதன் தனது உள்ளக் கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org